# தமிழ்ப் பேராய்வு
# ஆய்விதழ்

தொகுதி - 10 (பகுதி 1)
Volume - 10 (Issue 1)

ஜூலை / July 2021

# JOURNAL OF TAMIL PERAIVU

Published by
**Department of Indian Studies**
**Faculty of Arts and Social Sciences**
**University of Malaya**

Indexed by MyJurnal
Malaysian Citation Centre

UNIVERSITY OF MALAYA
*The Leader in Research & Innovation*

**ISSN 2289- 8379**
**eISSN 2636-946X**

# Journal of Tamil Peraivu Editorial office

## Office of the Editor – in – Chief

No. 132, Department of Indian Studies, Faculty of Arts and Social Sciences,
University of Malaya, 50603 Kuala Lumpur, Malaysia
Tel: +60379675670
Email: rajanmun@um.edu.my / rajantheran@gmail.com
Website: https://ejournal.um.edu.my/index.php/tamilperaivu/index

**Publisher**

Department of Indian Studies,
Faculty of Arts and Social Sciences,
University of Malaya,
50603 Kuala Lumpur, Malaysia.
Tel: +60379675510

**Sponsored by**

Almaa Herbal Nature Pvt ltd
No.1/8, Pinjala Subramanian street,
T. Nagar, Chennai – 600 017
Tamilnadu, India
mglv@rediffmail.com/ www. Almaaherbal.com

---

The publisher of Tamil Peraivu Aivithal (Journal of Tamil Peraivu), will not be responsible for the statement made by the authors in any articles published in the journal. Under no circumstances will the publisher of this publication be a liable for the loss or damage cost by your reliance on the advice, opinion or information obtained either explicitly or implied through the contents of this publication.

© Department of Indian Studies, Faculty of Arts and Social Sciences, University of Malaya. All rights reserved. No part of this journal may be reproduced in any forms or by any means without publisher's prior permission.

# Editorial Board


2020-2023

## Editor–in–Chief

**Professor Dr. M. Rajantheran, Malaysia**

Indian civilization, Tamil culture and literature, early cultural relations between India and Southeast Asia & culture and life of the Malaysian Indians

## Chief Executive Editor

**Dr. Silllalee S. Kandasamy**

Media, Tamil literature and culture, Malaysian Indians & sociology

## Journal's Web Design and Technical Support

**Dr.Kanmani Munusamy**

Software Engineering, ontology, Data Mediation - Information Technology, Centre of Information Technology, University of Malaya, Kuala Lumpur, Malaysia.

&

**Ms.Vijaya Laxmi Maruthaveeran**

Librarian, Indian Studies Library University of Malaya, Kuala Lumpur, Malaysia.

## Associate-Editing & Ideating

**Bharathi Mutty**

English Education. Lecturer-Universiti Tunku Abdul Rahman, Kampar, Perak, Malaysia.

**Aghalya Darmalingam**

PhD research Scholar, Department of Indian Studies, Universiti Malaya, Kuala Lumpur, Malaysia.

## Editorial Board Members

**Era. Kamarasu,** Professor Dr – Tamil Language, Classical literature, modern literature & culture, Department of Tamil Literature. Tamil University, Tanjavur, Tamil Nadu, India.

**G. Singaravelu,** Professor Dr- Primary Education, Teacher Education, English Education, Head, Department of Education, Syndicate member of the university, Bharathiar University, Coimbatore, Tamil Nadu, India.

**Ira. Kurinji Vendan,** Professor Dr- Tamil literature, Culture & Diaspora. Post graduate section, Arinyar Anna College, University of Pondicherry.

**Jeevendiran Chemen,** Associate Professor Dr- Ethic identity of Mauritian Tamils, Tamil language and Linguistic & Sociology. Mahatma Gandhi Institute, University of Mauritius.

**Kizhambur S. Sankara Subramanian,** Tamil journalism, Tamil Literature and Culture & Tamil Civilization, India.

**K. Chidamparam,** Assistant Professor Dr. - Linguistics, English, Human rights, International Institute of Tamil Studies,CPT Campus,Taramani, Chennai, Tamil Nadu.

**K.Shubashini,** Dr. – Lead IT architect, DXC Technology and President of Tamil Heritage Foundation International (International Organisation for Preserving Tamil Heritage).

**Krishnan Maniam,** Associate Professor, Dr, Modern Literature, Malaysian Tamil Literature, Comparative Literature. Head Department of Indian Studies. University of Malaya, Malaysia.

**Mohanadass Ramasamy,** Senior Lecturer Dr- Language and linguistics, Department of Indian Studies. University of Malaya, Malaysia.

**P. Sivakumar,** Professor Dr – Educational Technology, Environmental Education & Biology Education, Dean, Faculty of Education, Alagappa University, Tamil Nadu, India.

**Paramasivam Muthusamy,** Associate Professor Dr- Tamil language and literature, socio- linguistics, pedagogy and Tamil culture. Department of Foreign Languages. Faculty of Modern Languages and Communication, University Putra Malaysia.

**Ponsamy Tiroumalechetty,** (Retired) Associate Professor Dr – Socio- linguistics, Socio Culture of Tamils. Head, School of Indian Studies, Mahatma Gandhi Institute, Mauritius.

**Rakkappan Velmurugan,** Senior Lecturer Dr- Linguistics, Pedagogy, Tamil language, Literature & Grammar. Asian Languages and Cultures Academic group, National Institute of Education, Nanyang Technological University, Singapore.

**Samikkanu Jabamoney Ishak Samuel,** Associate Professor Dr – Malaysian Tamil Literature, Modern Tamil Literature, Tamil Language and Pedagogy. Tamil unit Coordinator, Sultan Idris Educational University.

**Seethalakshmi,** Associate Professor Dr- Tamil lexicography, teaching Tail as a second language, Tamil Pedagogy, Sociolinguistics & Literature through Mass Media. Department of Asian Languages & Cultures (ALC), Nanyang Technological University, Singapore.

**V. Maheswaran,** Professor Dr- Epigraphy, Tamil culture, folklore, literature. Department of Tamil, University of Peradeniya, Peradeniya, Sri Lanka.

**Vasu Aranganathan,** Dr- History of Tamil language, literature, religion, inscriptions & Teaching and learning of Tamil language. South Asia Studies, University of Pennsylvania, USA.

# PREFACE

The journal of Tamil Peraivu is a prestigious journal of the Indian Studies Department, University Malaya. This is a biannual journal that features research articles by multinational scholars from Malaysia, India, Sri Lanka, Mauritius and Canada. This Tamil Peraivu Vol.10 issue 1 contains a total of fifteen articles.

Dr.S.Saravanan from Tamil Nadu, India has scribed the first research article by the title, 'Tamil Literary Evidences for Iddali Found in Siddha Medical Texts'. In this researcher discusses Tamil Literary Evidences references of Iddali found in Siddha Medical Texts. Moreover, this article also exhibits the notion, Siddha Medical Texts could potentially contribute to the study of Tamil Nadu history.

This has been followed by local duo, Gov. Sivapalan & Dr. S. Manimaran from University Malaya. Researchers presented a comparison study between siddha philosophy and Sufi philosophy. The main aim of this study is to scrutinize the synonymy and anonymity of both schools of thoughts. Besides, this research paper also presents the contribution of these siddha and Sufi philosophies in sprouting spiritual seeking amongst Tamils universally.

Dr. Uma Allaghery, a Mauritian researcher, presented the next article entitled 'Kavadee festival in a Socio - Cultural Perspective'. This article examines one of the most prominent festivals celebrated in Mauritius 'Kavadi festival'. This article describes the evolution of the participating devotees in various aspects namely, fasting mannerism, devotion mannerism and ethics based on their country based culture.

The following article by Dr. S. K. Kanmani Ganesan from TamilNadu, India.this research article specifically examines the traces of Dravidian-Aryan cooking methods found in the diet of ancient Tamil civilization. This in-depth study was established with the aid of ancient Tamil literature and history texts.

'Education in Caṅkam Literature' is another article written by the pair of Dr.R.Selva Subramaniam and Selvamani Baskaran from Malaysia. Through this article researchers have exposed the level of awareness upon the importance of education and accomplishment of high literacy by the ancient Tamil society. Abundant references had been provided to support this by quoting the Cankam Literatures.

Academic world accepts the fact that many Tamil musical-based texts have been no longer known over time. Researchers Manikandan and Manikkam duo from Tamil Nadu, India have pursued their interest in this area of study. He has presented a research article entitled, 'Extinct Tamil Music Books'. This article carries immaculate details of Tamil Musical syllabus, it's development and its endeavours.

Scholar Geethe Sukumara from Canada has presented research on feminism ideas in N.Mageswari's literary work. This work comprehensively probes the work of a local female writer's writings.

Eighth research article in this current issue features an article entitled, 'Multiculturalism as depicted in Theenkoodu Poetry Collection: A Study of Influence Theory'. This systematic study has been conducted and scribed by Malaysian duo Bavani Arumugam@Seiyalu and Dr.Manonmani Devi M.A.R Annamalai. Furthermore, the 'influence theory' from comparative studies method has been deployed to this research in order to extract the findings. Besides, this article also examines multiculturalism, persuasiveness, and linguistic influences of Malaysians catalogued in the mentioned collection of poems.

Following that, a researcher from Tamil Nadu, India Dr. K.Murugesan has written about a famous and ever remembered actor among the Tamil society known as M.G.Ramachanndran. The researcher has put abundant effort in recollecting insights on the actor's political career, acting, noble personage, awards, his success etc. This article sheds lofty inputs on the history of the highly esteemed actor M.G.Ramachandran.

The next article by Sri Lankan researcher Murukaiya Sathees, "Hospitality Virtue as Taught in Manimekala and Islam - A Comparative Perspective", is the tenth article in this journal. Through this article researcher explores the teachings found in Tamil Literature text *Manimekalai* and in the religion of Islam in relevance to the virtue of hospitality and how it has contributed to the world peace.

"Medicinal values in Indian Cuisine''. An article by Sangeetha Sandrakumaran and Mannosh Rama, researchers from Malaysia is designed to illustrate the medicinal properties of Tamil cuisine and its greatness. The next article by Dr. T. Balasubramanian from Tamil Nadu, India however, aimed to study the political journey and his social philanthropy based on historical documents found on Kamarajar, a highly esteemed Indian independence activist and politician who served as the Chief Minister of Madras State (Tamil Nadu).

Article by the pair Dr. Ravindaran Maraya & Dr. Kasturi Raveendran (Malaysia) entitled "Contribution of Malaysian Youth in the Development of Modern Tamil Literature: A Review", is set to talk about Malaysian Tamil literature. This article examines how Malaysian Tamil youth have done their literary Tamil work through various movements and educational institutions in Malaysia. Subsequently, an article by A. Kartter Arokiaraj (India, Tamil Nadu) had presented a literary study of the current education system found in Tamil Nadu, its issues and rights dilemmas.

Lastly, local trio Professor Dr. M Rajantheran, Dr. K Sillalee and K Matana wrote a research article titled, 'Early Contacts between Malaysia & India and Malaysian Indians' Contemporary Identities'. This is the final article presented in this journal. This article examines the early cultural relations between Southeast Asia and the Indian subcontinent, as well as the cultural identity of the current Malaysian Tamils based on the historical perspective.

Tamil Peraivu Journal is committed to publishing high quality theory, research and debate on all aspects of the Indian Studies. Besides, it is upheld by exhilarating large numbers of excellent scholars and budding research students over time. The editorial board would like to extend heartiest gratitude to those who contributed by submitting articles and our respectful juries. Thank you to our generous sponsor Mr. MGL.Velayutham the CEO and Founder of Alma herbal Nature who beared the cost of this print publication.

**Professor Dr.M.Rajantheran**
**Chief Editor**
**20.07.2021**

## முகவுரை

*தமிழ்ப் பேராய்வு ஆய்விதழின் பத்தாவது தொகுப்பின் ஒன்றாவது பகுதியாகிய இவ்விதழை மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறை வெளியீடு செய்கிறது. அறையாண்டிதழாக வெளியீடு காணும் இவ்விதழில் மலேசியா, இந்தியா, இலங்கை, மொரீசியசு, கனடா போன்ற பன்னாட்டு அறிஞர்களின் ஆய்வுக் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளது. இந்தத் தொகுப்பில் மொத்தம் பதினைந்து ஆய்வுக் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.*

*இந்தியா, தமிழ் நாட்டைச் சேர்ந்த மரு.சு.சரவணன்* (Dr.S.Saravanan) *அவர்களின் படைப்பாக அமையும், 'சித்த மருத்துவ நூல்களில் கிடைக்கும் இட்டலி பற்றிய தமிழிலக்கியச் சான்றுகள்'* (Tamil Literary Evidences for *Iddali* Found in Siddha Medical Texts) *இந்த இதழின் முதல் கட்டுரையாக அமைந்துள்ளது. இக்கட்டுரை, தமிழர்களின் பாரம்பரிய உணவாகிய இட்டிலியைப் பற்றியது. தமிழக வரலாற்று ஆய்விற்குச் சித்த மருத்துவ நூல்களும் துணை புரியும் என்ற கருத்தை நிலைநாட்டும் விதமாக இக்கட்டுரையில் சித்த மருத்துவ நூல்களில் கிடைக்கும் இட்டலி பற்றிய குறிப்புகள் விவாதிக்கப்பட்டுள்ளன.*

*'சித்தர் சூஃபி இலக்கியங்களில் சமயம் கடந்த சமரசப் பண்பு'* (Harmony Beyond Religion in Siddhar and Sufi Literatures)*எனும் தலைப்பிலான மலேசியாவைச் சேர்ந்த கோவி.சிவபாலன்* (G.Sivapalan) - *முனைவர் சு.மணிமாறன்* (Dr.S.Manimaran) *ஆகியோரின் கட்டுரையானது சித்தர் தத்துவத்தையும் சூஃபி தத்துவத்தையும் ஒப்பீட்டு முறையில் ஆராய்கின்றது. இவ்விரு தத்துவங்களையும் ஒப்பிட்டு பெறப்படும் ஒற்றுமை வேற்றுமைகளை இனங்கண்டு விளக்கப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். தமிழ் நாட்டில் மட்டும் அல்லாமல் உலக நாடுகள் பலவற்றிலும் வாழும் தமிழர்களிடையே மெய்ஞ்ஞானச் சிந்தனைகள் வேர் விடுவதற்கு சித்தர்களும் சூஃபிகளும் ஆற்றிய மெய்ஞ்ஞான இலக்கிய பங்களிப்பினை இந்த ஆய்வுக் கட்டுரை முன்வைக்கிறது.*

*அடுத்து வருவது மொரீசியசு நாட்டைச் சேர்ந்த ஆய்வாளர் முனைவர் உமா அழகிரி* (Dr Uma Allaghery) *அவர்களின் "மொரீசியசில் தைப்பூசக் காவடித் திருவிழா: சமூகப் பண்பாட்டுக் கூறுகள்"* (*Kavadee* festival in Mauritius from a Socio - Cultural Perspective) *எனும் கட்டுரை. இக்கட்டுரையானது மொரீசியசு நாட்டில் கொண்டாடப்படும் திருவிழாக்களுள் மிக முக்கியமான காவடித் திருவிழா பற்றி ஆய்வு செய்துள்ளது. இப்பண்டிகையில் காவடி விரதத்தின்போது பக்தர்களிடத்தில் ஏற்படும் மாற்றம், விரதத்தை மேற்கொள்ளும் விதம், காவடித் திருவிழா அன்று நிலவும் பக்தி வெள்ளம், கடைப்பிடிக்கும் ஒழுக்கநெறிகள் முதலிவற்றை அந்நாட்டுப் பண்பட்டின் அடிப்படையில் இக்கட்டுரை விளக்கப்படுத்தியுள்ளது. தொடரும் மு.ச.கண்மணி கணேசன்* (Dr.S.Kanmani Ganesan) *(இந்தியா, தமிழ் நாடு) அவர்களின் கட்டுரையானது பண்டைத் தமிழ்ச் சமூகத்தின் உணவுமுறையில் திராவிட ஆரிய நாகரிகக் கலப்பில் இருந்த புழுக்கு சூட்டு ஆகிய முறைகள் இருந்ததை ஆய்வு செய்கிறது. வரலாற்று மற்றும் பழந்தமிழர் இலக்கியங்களைக் கொண்டு இக்கட்டுரை நிறுவப்பட்டுள்ளது.*

*சங்க இலக்கியத்தில் கல்வி* (Education in *Caṅkam* Literature) *எனும் முனைவர் ரா.செல்வ சுப்ரமணியம் - செல்வமணி பாஸ்கரன்* (Selvamani A/L Baskaran) *(மலேசியா) ஆகியோரின் கட்டுரை சங்க இலக்கியத்தின் வாயிலாகப் பழந்தமிழர் கல்வியின் அவசியத்தினை அறிந்து அதனை வாழ்க்கையில் எவ்வாறு கடைப்பிடித்துக் கல்வி கேள்விகளில் சிறந்து ஒழுகி வாழ்ந்தனர் என்ற கருத்தினைச் சங்க இலக்கிய பாடல்களின் வழி ஆய்வு செய்துள்ளது.*

*தொடரும் கட்டுரையில் இந்தியா, தமிழ் நாட்டைச் சேர்ந்த மணிகண்டன் மாணிக்கம்* (Manikandan Manickam) *"அழிவுற்ற இசைத் தமிழ் நூல்கள்"* (Extinct Tamil Music Books) *எனும்*

தலைப்பில் ஆய்வுக் கட்டுரை படைத்துள்ளனர். இக்கட்டுரையில் தமிழில் உள்ள இசைத்தமிழ் குறித்தும் அதன் வளர்ச்சி, எதிர்கொண்ட போராட்டங்கள் ஆயியவற்றை விளக்க்கிடயும் ஆராயப்பட்டுள்ளது.

அடுத்து கனடா (Canada) நாட்டைச் சேர்ந்த கீதா சுகுமாரா (Geetha Sukumara) என்பாரின் "ந.மகேஸ்வரியின் பார்வையில் பெண்ணியம் : ஓர் ஆய்வு" (A Research on Feminism in N.Mageswari's View) எனும் தலைப்பிலான கட்டுரை மலேசிய நாட்டின் எழுத்தாளர் ந.மலேஸ்வரியின் படைப்புகளில் பெண்ணியச் சிந்தனைகள் எவ்வாறு வெளிப்பட்டுள்ளன என்பதனை ஆய்வு செய்துள்ளது.

இத்தொகுப்பில் எட்டாவது கட்டுரையாக இடம்பெறுவது, மலேசியாவைச் சேர்ந்த பவானி ஆறுமுகம்@செய்யாலு (Bavani Arumugam@Seiyalu) - முனைவர் மனோன்மணி தேவி அண்ணாமலை (Dr.Manonmani Devi M.A.R Annamalai) ஆகியோரின் "தேன்கூடு கவிதைத் தொகுப்புச் சித்தரிக்கும் பல்லினச்சூழல்: தாக்கக் கோட்பாட்டின்வழி ஓர் ஆய்வு" (Multiculturalism as depicted in *Theenkoodu* Poetry Collection: A Study of Influence Theory) எனும் தலைப்பிலான ஆய்வுக் கட்டுரையாகும். ஒப்பிலக்கிய ஆய்வில் ஒரு பகுதியாக விளங்கும் 'தாக்கக்கோட்பாடு' (Influence Theory) எனும் கோட்பாட்டின் அடிப்படையில், "தேன்கூடு" கவிதைத் தொகுப்பில் மலேசியர்களின் பல்லினச் சூழல், தூண்டல்நிலை, பிறமொழித்தாக்கம் ஆகியவற்றை இக்கட்டுரை ஆய்வு செய்துள்ளது.

தொடர்ந்து முனைவர் க. முருகேசன் (Dr. K. Murugesan) (இந்தியா, தமிழ் நாடு), தமிழ்நாட்டு மக்களின் மனங்களைக் கவர்ந்த நடிகரும் தமிழ் நாட்டின் முன்னால் முதல் அமைச்சருமாகிய எம்.ஜி.இராமச்சந்திரன் (எம்.ஜி.ஆர்) எனும் மாமனிதருடைய வாழ்க்கையில் அரசியலில், நடிப்பு, உயர்பண்புகள், அவர் பெற்ற விருதுகள், அவரின் சாதனைகள் ஆகியவற்றை ஆய்வு செய்து கட்டுரையாகப் படைத்துள்ளார். இவ்வாய்வுக் கட்டுரை வரலாற்று அடிப்படையில் படைக்கப்பட்டுள்ளது.

அடுத்து இலங்கையைச் சேர்ந்த முருகையா சதீஸ் (Murukaiya Sathees) எனும் ஆய்வாளரின் "மணிமேகலையும், இஸ்லாமும் போதிக்கும் விருந்தோம்பல் அறம் ஓர் ஒப்பியல் நோக்கு" (Hospitality Virtue as Taught in Manimekala and Islam - A Comparative Perspective) எனும் கட்டுரையானது இந்த ஆய்விதழில் பத்தாவது கட்டுரையாக இடம் பெற்றுள்ளது. இக்கட்டுரையில் ஆய்வாளர் தமிழ் இலக்கியமான மணிமேகலையும், மார்க்கமாகிய இஸ்லாமும் இல்வாழ்விற்குரிய விருந்தோம்பல் அறத்தினைப் எவ்வாறு போதிக்கின்றன என்பது பற்றியும் அது எவ்வகையில் உலக சமாதானத்திற்கும் வழிவகை செய்துள்ளது என்பது பற்றியும் ஆராய்ந்து முன்வைத்துள்ளார்.

அதனை அடுத்து "தமிழர் சமையல்களில் மருத்துவம்" (Medicinal Value in Indian Foods) எனும் தலைப்பிலான சங்கீதா சந்திரகுமாரன் (Sangeetha Sandrakumaran) மற்றும் மனோஷ் இராமா (Mannosh Rama) (மலேசியா) ஆகியோரின் கட்டுரையானது, தமிழர்களின் சமையலில் காணக் கிடக்கும் மருத்துவங்களையும் அதன் மகத்துவங்களையும் விளக்கும் வண்ணமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. அடுத்ததான இந்தியா, தமிழ் நாட்டைச் சேர்ந்த முனைவர்.தி.பாலசுப்பிரமணியன் (Dr.T.Balasubramanian) என்பாரின் கட்டுரை காமராஜரின் அரசியல் பயணத்தைப் பற்றியும் அவரின் சமுதாயத் தொண்டு பற்றியும் வரலாற்று ஆவணங்களைக் கொண்டு ஆய்வு செய்து படைக்கப்பட்டுள்ளது.

"தற்கால தமிழ் இலக்கிய வளர்ச்சியின் மலேசிய இளைஞர்களின் பங்களிப்பு: ஒரு பார்வை" (Contribution of Malaysian Youths in the Development of Modern Tamil Literature: A Review) எனும் முனைவர் ரவிந்திரன் மாரையா (Dr. Ravindaran Maraya) & கஸ்தூரி ரவிந்திரன்

(Kasturi Raveendran) *(மலேசியா)* ஆகியோரின் கட்டுரை மலேசியத் தமிழ் இலக்கியத்தைப் பற்றிப் பேசுவதாக அமைந்துள்ளது. இக்கட்டுரை மலேசிய நாட்டில் பல்வேறு இயக்கங்கள், கல்விக் கூடங்கள் வாயிலாக மலேசியத் தமிழ் இளைஞர்கள் எவ்வாறு தங்களின் இலக்கியத் தமிழ்ப் பணிகளைச் செய்துள்ளனர் என்பது பற்றி ஆய்வு செய்துள்ளது. தொடர்ந்து வரும் அ. கார்ட்டர் ஆரோக்கியராஜ் (A. Kartter Arokiaraj) *(இந்தியா, தமிழ் நாடு)* என்பாரின் கட்டுரையானது தமிழகத்தில் உள்ள கல்வி முறையினைப் பற்றியும் அதில் உள்ள சிக்கல்கள், உரிமைப் போராட்டங்கள் ஆகியவை குறித்தும் இலக்கிய அடிப்படையில் ஆய்வு செய்வதாக அமைந்துள்ளது.

மலேசியாவைச் சேர்ந்த பேராசிரியர் முனைவர் மு.இராசேந்திரன் (Professor Dr. M. Rajantheran), முனைவர் க.சில்லாழி (Dr K.Silllalee) - க.மதனா (K.Matana) ஆகியோரின் "மலேசிய இந்தியத் தொண்மைத் தொடர்புகளும் தற்கால அடையாளங்களும்" (Early Contacts between Malaysia & India and Malaysian Indians' Contemporary Identities) எனும் கட்டுரையானது இந்த ஆய்விதழின் இறுதிக் கட்டுரையாக அமைந்துள்ளது. இக்கட்டுரை தென்கிழக்காசியாவிற்கும் இந்தியத் துணைக்கண்டத்திற்கும் இடையே இருந்த தொடக்க காலப் பண்பாட்டுத் தொடர்புகள் குறித்தும், தற்போதைய மலேசியத் தமிழர்களின் பண்பாட்டு அடையாளங்கள் குறித்தும் வரலாற்றுப் பார்வையில் ஆராந்துள்ளது.

'தமிழ்ப் பேராய்வு', பல அறிஞர்களின் சிறந்த ஆய்வுகளைப் பதிவு செய்வதன் மூலம் தொடர்ந்து நிலைநிறுத்தப்படுகிறது. பதிப்பாசிரியர் குழு இவ்வேளையில் இந்த பத்தாவது தமிழ்ப் பேராய்வின் முதல் பகுதியின் வெளியீட்டிற்கு துணை புரிந்த கட்டுரையாளர்கள், மதிப்பீட்டாளர்கள் ஆகியோருக்கு நன்றியினைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்வடைகின்றது. இத்தொகுப்பின் பதிப்புச் செலவை மனமுவந்து ஏற்றுக் கொண்ட அல்மா ஹெர்பல் நேச்சர் நிறுவணத்தில் தோற்றுனரும் தலைமை நிர்வாகியுமாகிய திருமிகு MGL. வேலாயுதம் அவர்களின் தாராள மனதை இவ்விடம் நன்றியுடன் நினைத்துப் பார்க்கின்றோம்.

**பேராசிரியர் முனைவர் மு.இராசேந்திரன்**
**தலைமைப் பதிப்பாசிரியர்**
**20.7.2021**

தமிழ்ப் பேராய்வு ஆய்விதழ் / Journal of Tamil Peraivu
Vol - 10 (Issue 1), July 2021

பொருளடக்கம் / Contents பக்கம் /Page

1 சித்த மருத்துவ நூல்களில் கிடைக்கும் இட்டலி பற்றிய தமிழிலக்கியச் சான்றுகள் 12
Tamil Literary Evidences for Iddali Found in Siddha Medical Texts
முனைவர் மரு.சு.சரவணன் / Dr.S.Saravanan

2 சித்தர் சூஃபி இலக்கியங்களில் சமயம் கடந்த சமரசப் பண்பு 23
Harmony Beyond Religion in Siddhar and Sufi Literatures
கோவி.சிவபாலன் / G.Sivapalan
முனைவர் சு.மணிமாறன் / Dr.S.Manimaran

3 மொரீசியசில் தைப்பூசக் காவடித் திருவிழா: சமூகப் பண்பாட்டுக் கூறுகள் 30
Kavadee festival in Mauritius from a Socio - Cultural Perspective
முனைவர் உமா அழகிரி / Dr Uma Allaghery

4 பண்டைத் தமிழர் உணவில் புழுக்கும் சூட்டும் 38
Puzhukku and Choottu in the Food Habits of the Early Tamils
மு.ச.கண்மணி கணேசன் / Dr.S.Kanmani Ganesan

5 சங்க இலக்கியத்தில் கல்வி 46
Education in Caṅkam Literature
முனைவர் செல்வ சுப்ரமணியம் ராமையா / Dr R.Seiva Subramaniam
செல்வமணி பாஸ்கரன் / Selvamani A/L Baskaran

6 அழிவுற்ற இசைத் தமிழ் நூல்கள் 55
Extinct Tamil Music Books
மணிகண்டன் மாணிக்கம் / Manikandan Manickam

7 ந.மகேஸ்வரியின் பார்வையில் பெண்ணியம் : ஓர் ஆய்வு 62
A Research on Feminism in N.Mageswari's View
கீதா சுகுமாரா / Geetha Sukumara

8 தேன்கூடு கவிதைத் தொகுப்புச் சித்தரிக்கும் பல்லினச்சூழல்: தாக்கக் கோட்பாட்டின்வழி ஓர் ஆய்வு 68
Multiculturalism as depicted in Theenkoodu Poetry Collection: A Study of Influence Theory
பவானி ஆறுமுகம்@செய்யாலு / Bavani Arumugam@Seiyalu
முனைவர் மனோன்மணி தேவி அண்ணாமலை
/ Dr.Manonmani Devi M.A.R Annamalai

9 எம்.ஜி.ஆர். என்னும் உயிரிரக்கப் பண்பாளர் 76
M.G.R: The Compassionate Human Being
முனைவர்.க.முருகேசன் / Dr.K.Murugesan

10 மணிமேகலையும், இஸ்லாமும் போதிக்கும் விருந்தோம்பல் அறம் ஓர் ஒப்பியல் நோக்கு 85
Hospitality Virtue as Taught in Manimekala and Islam - A Comparative Perspective
முருகையா சதீஸ் / Murukaiya Sathees

11 தமிழர் சமையல்களில் மருத்துவம் 93
Medicinal Value in Indian Foods
சங்கீதா த/பெ சந்திரகுமாரன் / Sangeetha D/O Sandrakumaran
மனோஷ் த/பெ இராமா /Mannosh S/O Rama

12 காமராஜரின் அரசியல் பயணமும் சமுதாய வாழ்க்கையும் பற்றி ஒரு ஆய்வு 101
A Study of Kamaraj: Political Journey and Social Life
முனைவர்.தி.பாலசுப்பிரமணியன் / Dr.T.Balasubramanian

13 தற்கால தமிழ் இலக்கிய வளர்ச்சியின் மலேசிய இளைஞர்களின் பங்களிப்பு: ஒரு பார்வை 114
Contribution of Malaysian Youths in the Development of Modern Tamil Literature: A Review
முனைவர் ரவிந்திரன் மாரையா / Dr. Ravindaran Maraya
கஸ்தூரி ரவிந்திரன் / Kasturi Raveendran

14 கல்வி எனது உரிமை 121
Education is My Right
அ. கார்ட்டர் ஆரோக்கியராஜ் / A. Kartter Arokiaraj

15 மலேசிய இந்தியத் தொன்மைத் தொடர்புகளும் தற்கால அடையாளங்களும் 127
Early Contacts between Malaysia & India and Malaysian Indians' Contemporary Identities
பேராசிரியர் முனைவர் மு.இராசேந்திரன் / Professor Dr. M. Rajantheran
முனைவர் க.சில்லாழி / Dr K.Silllalee
க.மதனா / K.Matana

# சித்த மருத்துவ நூல்களில் கிடைக்கும் இட்டலி பற்றிய தமிழிலக்கியச் சான்றுகள்
# Literary Evidences for Iddali Found in Siddha Medical Texts

முனைவர் மரு.சு.சரவணன் / Dr.S.Saravanan[1]

Date of submission: 2020-05-10
Date of acceptance: 2020-12-10
Date of Publication: 2021-07-20
Corresponding author's Name: Dr.S.Saravanan
Email: dr_saravanan_s@yahoo.com

## Abstract

The earliest epigraphic references for the South Indian food *Iddali* appeared during the first half of 16th century. According to food historian K.T.Achaya, the first mention of *Iddali* in Tamil literature was in the '*Machapuranam*' of 17th century. However, many references for *Iddali* are found in the medieval period Siddha medical literature, which have been considered insignificant in Tamil literature throughout the writing history of Tamil Nadu. Three Siddha medical texts, attributed to *Siddhar Theraiyar*, namely *Patharthaguna Sindhamani*, *Theraiyar Kappiyam* and *Theraiyar Tharu*, are found with description of the food properties of *Iddali*. In addition, *Patharthaguna Sindhamani* describes food properties of a special spicy *Iddali*. It is believed that these three texts belong to the beginning of 17th century. In two Siddha medical texts, namely *Bogar Ezhayiram* and *Sattaimuni Vathakaviyam*, the phrase 'as like as *Iddali*' is found repeatedly, and here the physical transformation of *Iddali* from liquid to solid consistency while cooking is used as a metaphor to describe the transformation of liquid metal mercury into solid precipitate during alchemical processes. The authors of these texts, *Bogar* and *Sattaimuni,* are contemporaries and it is believed that *Bogar* lived around 12th-13th centuries. From the literary evidences for *Iddali* found in Siddha medical literature, it could be possibly concluded that the earliest reference for *Iddali* in Tamil is found in Siddha medical texts of the 12th-13th centuries. Systematic review of Siddha medical literature may offer more evidences in rewriting the history of Tamil Nadu.

**Key Words:** *Iddali*, Earlier references in Tamil, Stone inscriptions, Tamil literature, Siddha medical literature.

### அறிமுகம்

இட்டலியும் தோசையும் பிறநாட்டு உணவுக் கூறுகளின் பாதிப்புகளற்ற முழுமையான இந்திய உணவுகள், மேலும் இவை இந்தியாவின் வேறெந்த உணவுகளைக் காட்டிலும் இந்தியத் துணைக்கண்டம் முழுமையும் பிரபலமாக காணப்படும் உணவாகவும் உள்ளது (Sumitpal, 2017). இந்தியாவில் இட்டலி ஒரு தென்னிந்திய உணவாக வகைப்படுத்தப்படுகிறது. செரிப்பதற்கு எளிமையான இட்டலி சிறந்த காலை உணவாகவும் குழந்தைகளுக்கும் நோயாளிகளுக்கும் ஏற்ற உணவாகவும் சிறப்பிடம் பெற்றுள்ளது. தென்னிந்தியா முழுவதும் இட்டலி பரவலாக வழக்கிலிருந்தாலும் தமிழர்கள் இட்டலியை தமிழ்நாட்டிற்கே உரிய உணவாகக் கருதுகின்றனர். 12 முதல் 17ஆம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட

[1] The author is a Research Officer (Siddha) in Central Council for Research in Siddha, Chennai, currently posted at Drugs Policy Section, Ministry of AYUSH, New Delhi, India. dr_saravanan_s@yahoo.com

காலத்தினைச் சேர்ந்த சித்த மருத்துவ நூல்களில் இட்டலி பற்றிய குறிப்புகள் கிடைக்கின்றன. சித்த மருத்துவ நூல்கள் தமிழக வரலாற்று ஆய்வில் மிகச்சிறிய அளவே கருத்தில் கொள்ளப்படுகின்றன. தமிழக வரலாற்று ஆய்விற்கு சித்த மருத்துவ நூல்களும் துணை புரியும் என்ற கருத்தை நிலைநாட்டும் விதமாக இக்கட்டுரையில் சித்த மருத்துவ நூல்களில் கிடைக்கும் இட்டலி பற்றிய குறிப்புகள் விவாதிக்கப்பட்டுள்ளன. தமிழகத்தில் இட்லி / இட்டிலி என மருவிவிட்ட சொல்லை யாழ்ப்பாணத்தில் இன்றும் இட்டளி என்றே வழங்குகின்றனர் (பக்தவத்சல பாரதி, 2014, p.30). இக்கட்டுரையில் சித்த மருத்துவ நூல்களில் வழங்கப்படும் இட்டலி என்ற பதமே பயன்படுத்தப்பட்டுள்ளது.

## தமிழில் கிடைக்கும் இட்டலி பற்றிய ஆய்வுத் தரவுகளின் பின்புலம்

தமிழில் கிடைக்கும் இட்டலி பற்றிய இலக்கிய மற்றும் கல்வெட்டுக் குறிப்புகள் பற்றி பி.ஏ.கிருஷ்ணன் பின்வருமாறு கூறுகிறார்,

> ‘பேராசிரியர் ஆ.இரா.வேங்கடாசலபதி 1718ஆம் நூற்றாண்டுகளுக்கு முன்னால் இட்டலி பற்றிய குறிப்புகளே இலக்கியத்தில் இல்லை என்கிறார்; உணவு வரலாற்றாசிரியர் கே.டி.அசயா தமிழில் இட்டலியைப் பற்றிய முதல் குறிப்பு ‘மச்ச புராண’த்தில் (17ஆம் நூற்றாண்டு) வருகிறது என்கிறார். திருப்பதி தேவஸ்தான வரலாறு, திருப்பதி கோவிலில் இட்டலியும் தோசையும் 15ஆம் நூற்றாண்டிலேயே கடவுளுக்கு படைக்கப்பட்டதெனக் கல்வெட்டுச் சான்றுகள் இருப்பதாகக் கூறுகிறது’ (கிருஷ்ணன், 2014, p.401402).

காஞ்சிபுரம் வரதராஜப்பெருமாள் கோவில் கல்வெட்டுகளில் இட்டலி, தோசை, அதிரசம், பொங்கல், அக்கார அடிசில், வடை, புளியோதரை, எல்லோரை, கடுகோரை, ததியோதனம், கறிஅமுது ஆகிய உணவுப்பொருட்களைப் பற்றிய கல்வெட்டுக் குறிப்புகள் கிடைக்கின்றன (Raman, 1975, p.100). மேலே கூறிய கல்வெட்டுகள் விஜயநகர பேரரசுக்காலத்தைச் சேர்ந்தவை. இட்டலி பற்றிக்கூறும் காலத்தால் முற்பட்ட கல்வெட்டு கி. பி. 1535ஆம் ஆண்டைச் சேர்ந்த விஜயநகர காலக் கல்வெட்டாகும் (Gutiérrez, 2018, p.29).

## ஆய்வுக்களமும் முறைகளும்

இட்டலி பற்றிய குறிப்புகள் கிடைக்கும் ஐந்து சித்த மருத்துவ நூல்கள் (அச்சில் கிடைப்பவை) இந்த ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. இந்நூல்களில் கிடைக்கும் குறிப்புகளை இரண்டு வகையாக வகைப்படுத்தி அணுகப்பட்டுள்ளது. முதலாவது, இட்டலியின் குணங்களைக் கூறும் குறிப்புகள், இரண்டாவது ‘இட்டலி போல’ என்று இட்டலியை உவமையாகப் பயன்படுத்தும் குறிப்புகள். இட்டலியின் குணங்களைக் கூறும் குறிப்புகள் பதார்த்தகுணசிந்தாமணி, தேரையர் காப்பியம், தேரையர் தரு ஆகிய மூன்று நூல்களில் காணக்கிடைக்கின்றன. இட்டலி பற்றிக் கிடைக்கும் இரண்டாவது வகைக் குறிப்புகள், ‘சூதம் எனப்படும் பாதரசம் (Mercury) சேர்த்துச் செய்யப்படும் மருந்து செய்முறைகளை விவரிக்கும் இடங்களில், திரவ நிலையிலுள்ள பாதரசம் கட்டியாக மாறுவதை’க் குறிக்க ‘இட்டலி போல’ என்று உவமையாகப் பயன்படுத்தும் குறிப்புகளாகும். இவ்வகைக் குறிப்புகள் போகர் ஏழாயிரம் மற்றும் சட்டைமுனி வாதகாவியம் ஆகிய இரண்டு நூல்களில் காணக்கிடைக்கின்றன. இட்டலியும் தோசையும் ஒரே மூலப்பொருட்கள் கொண்டு செய்யப்படுவதால், பதார்த்தகுணசிந்தாமணியில் கூறப்படும் தோசையில் சேரும் பொருட்கள் பற்றி இந்நூலின் ஆறு வெவ்வேறு பதிப்புகளின் துணையுடன் விவாதிக்கப்பட்டுள்ளது.

## இட்டலியின் குணங்களைக் கூறும் சித்த மருத்துவ நூல்கள்

### ‘பதார்த்தகுணசிந்தாமணி’ கூறும் இட்டலியின் குணங்கள்

ஏறத்தாழ 1500 பாடல்களை உடைய

இந்நூலில் பெரும்பாலான பாடல்கள் மகடூஉ முன்னிலை எனப்படும் பெண்ணை விளித்துக்கூறும் வகையில் காணப்படுகிறது. தேரையரால் இயற்றப்பட்டதாகக் கருதப்படும் இந்நூல் மருத்துவத்திற்கு பயன்படுத்தப்படும் மூலிகை, தாது (உப்பு, பாஷாணம், உலோகம்) மற்றும் விலங்குப் பொருட்கள் ஆகியவற்றின் மருத்துவ குணங்களைத் தனித்தனிப் பாடல்களில் விளக்குகிறது. மேலும் இந்நூல் எழுதப்பட்ட காலத்தில் வழக்கிலிருந்த உணவுகள், காய்கறிகள், பழங்கள் போன்றவற்றின் நற்குணம் மற்றும் தீக்குணங்களைச் சித்த மருத்துவ அடிப்படையில் கூறும் பாடல்களையும் கொண்டுள்ளது. பொங்கல், கம்புச்சாதம், புளியோதனம், உளுந்தோதனம், தயிரோதனம், உளுந்த வடை, முறுக்கு, அதிரசம், பிட்டு எனப் பலவகை உணவுகளின் குணங்களைக் கூறும் பகுதியில் இரண்டு வகை இட்டலியின் குணம் ஒரே பாடலில் கூறப்படுகிறது. அப்பாடல் அடைப்புக்குறியினுள் பாடல் எண்ணுடன் கீழே தரப்பட்டுள்ளது.

*வெறுமாவின் இட்டலிக்கு வேகம்அறுங் காரம்*

*பெறுமாவி னிட்டலியைப் பேசில் - அறும்அனிலம்*

*ஐயபித் தங்கள் அதிகரிக்கு மோமாரன்*

*நய்யவெய்யுங் கண்ணாய் நவில்*

- (1416) பதார்த்தகுணசிந்தாமணி, சுப்பிரமணிய பண்டிதர் பதிப்பு

பாடலில் வரும் 'வெறுமாவின் இட்டலி' என்பது காரமில்லாத மாவில் செய்யப்பட்ட இட்டலியைக் குறிக்கிறது என்பதை, பாடலில் தொடர்ந்து வரும் 'காரம் பெறு மாவின் இட்டலியை' எனக் காரப்பொருள்கள் சேர்க்கப்பட்ட மாவினால் செய்யப்பட்ட இட்டலியைப் பற்றிக் கூறும் வரியின் மூலம் அறிய முடிகிறது. பதார்த்தகுணசிந்தாமணிக்கு உரை எழுதியவர்கள் காரமில்லாத இட்டலியை சுத்த இட்டலி என்றும், காரமுள்ள இட்டலியை சம்பார இட்டலி எனவும் குறிக்கின்றனர்.

இட்டலியின் குணங்களாக, காரமில்லாத இட்டலி உண்பதினால் 'வேகம் அறும்' எனக் கூறப்பட்டுள்ளதை உரையாசிரியர்கள் பித்தத்தின் வீறு அல்லது வேகம் நீங்கும் என விளக்குகிறார்கள். பாடலில் தொடர்ந்து வரும் காரமுடைய மாவின் இட்டலிக்கு கூறப்படும் குணமான 'அறும் அனிலம்' என்பதை அனிலம் (எனும் வாதம்) நீங்கும் அல்லது கட்டுப்படும் எனவும் 'ஐய பித்தங்கள் அதிகரிக்குமோ' என்பதை ஐயம் (எனும் கபம்) மற்றும் பித்தம் ஆகியவற்றை அதிகரிக்க விடாமல் கட்டுப்பாட்டில் வைக்கும் எனவும் பொருள் கொள்ள முடியும். அதாவது 'மிகினும் குறையினும் நோய் செய்யும்' எனத் திருவள்ளுவர் மற்றும் பண்டைய மருத்துவ நூல்கள் கூறும் வாதம், பித்தம், கபம் ஆகிய மூன்று குற்றங்களை அதிகரிக்காமல் கட்டுப்பாட்டில் வைக்கும் எனப் பொருள் கொள்ளலாம். இட்டலிக்கு நற்குணங்களே கூறப்படுகிறது, தீக்குணங்கள் கூறப்படவில்லை.

## 'தேரையர் காப்பியம்' கூறும் இட்டலியின் குணங்கள்

தேரையரால் எழுதப்பட்ட இந்நூலில் உணவுப்பொருட்களின் குணம், காயகற்ப மருந்துகள், பற்ப செந்தூரம் மற்றும் பலவிதமான மருந்துகளின் செய்முறைகள் ஆகியவை கூறப்படுகின்றன. பாடலுக்கு எண் இடப்படாத இந்நூலில் 'போசன வகைமை' என ஆரம்பிக்கும் பாடலில் புழுங்கிய அரிசி, பொங்கல், கஞ்சி வடித்த சாதம், அடை, தோசை, மோர்க்குழம்பு, பாற்சோறு மற்றும் பல உணவுகளின் குணங்களை ஒற்றை வார்த்தைகளில் கூறும் 12 வரிகளையுடைய பாடலில், ஆறாம் வரியில் 'சுவை தரும் அடை வளி, தோசை நன்று இட்டலி நன்மையாம்' எனவும், பத்தாம் வரியில் 'வளி புட்டு, முப்பிணி மத்தியம் இட்டலி' எனவும் இரண்டு இடங்களில் இட்டலியைப் பற்றிக் குறிப்பிடப்படுகிறது. இவ்வரிகளுக்கு முறையே 'சுவையுடைய அடை உண்பதினால் வளி (வாயு) அதிகரிக்கும், தோசை மற்றும் இட்டலி உண்பது நன்மை தரும்' எனவும் 'புட்டு உண்பதினால் வளி (வாயு) அதிகரிக்கும், இட்டலி உண்பது முப்பிணிகளான வாதம், பித்தம், கபம் இவற்றைச் சமன்படுத்தும்'

எனவும் பொருள் கொள்ளலாம். இந்நூலில் இட்டலிக்குக் கூறப்பட்டுள்ள இரண்டு குணங்களும் *பதார்த்தகுணசிந்தாமணியில்* சுத்த இட்டலி மற்றும் சம்பார இட்டலிக்குக் கூறப்படும் குணங்களோடு ஓரளவு பொருந்திப் போவதைக் காண முடியும்.

### 'தேரையர் தரு' கூறும் இட்டலியின் குணங்கள்

தேரையர் இயற்றியுள்ள இந்நூலில் உணவின் பண்பு, நோய் வகை, நோய் தீர்க்கும் முறை, மருந்து செய் வகை, பத்தியம், மருந்து வேகத்தைத் தணிக்கும் உபசாந்தி, தொக்கணம், சுட்டிகை, கண், மூக்கு, காது இவைகளின் மருந்துகள், பற்ப வகைகள் போன்றவை விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன. இந்நூலிலும் பாடலுக்கு எண்கள் தரப்படவில்லை. இந்நூலில் உணவின் பண்புகளைக் கூறும் இரண்டாவது பாடலின் முதல் வரியாக 'இட்டலி தோசை இன்பம் புட்டு அடை துன்பம்', அதாவது இட்டலியும் தோசையும் நன்மை தரும், புட்டும் அடையும் துன்பம் தரும் எனக் கூறப்பட்டுள்ளது. தேரையர் காப்பியத்திலும் இட்டலி, தோசை நன்மை தரும்; புட்டு, அடை ஆகியவை வளி(வாயு) யினை உண்டாக்கும் (துன்பம் தரும்) எனக் கூறப்பட்டுள்ளதை இங்கு ஒத்து நோக்கலாம்.

### இட்டலியை உவமையாகக் கூறும் சித்த மருத்துவ நூல்கள்

#### *போகர் ஏழாயிரம்*

இந்நூல் 7000 பாடல்களையுடையதாக சித்தர் போகரால் இயற்றப்பட்ட நூலாகும். பழனிமலை தண்டாயுதபாணி கோவிலினுள் போகருடைய சமாதி உள்ளது. அங்கு நோய் தீர்க்கும் குணமுடைய நவபாஷாணத்தால் செய்யப்பட்ட தண்டாயுதபாணி சிலையை செய்து நிறுவியவர் போகர் ஆவார். போகர் ஏழாயிரத்தின் முதல் 3000 பாடல்களை ஆயிரம் பாடல்களுடைய மூன்று பாகங்களாக பழனி தண்டாயுதபானி கோவில் தேவஸ்தானம் வெளியிட்டுள்ளது. இந்நூலில் பல இடங்களில் 'இட்டலி போல்' என்ற சொற்பிரயோகம் உவமைக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. திரவநிலையிலுள்ள உலோகமான சூதம் எனும் பாதரசம் சாதாரண அறை வெப்பநிலையிலேயே ஆவியாகும் தன்மையுடையது, இதைச் சிறிய அளவு சூடாக்கினாலே ஆவியாகி, புகையாக கரையும்.

இத்தகைய பாதரசத்தை ஆவியாகாமல், புகையாமல் கட்டியாக்குவது சித்த மருத்துவ அறிவியல். பாதரசத்தை கட்டியாக்கும் இந்த இயற்பியல் மாற்றத்தை திரவ நிலை யிலுள்ள இட்டலி மாவை வேகவைத்தபின் கட்டியாவதுடன் ஒப்பிட்டுக் கூறும் வரிகள் *போகர் ஏழாயிரத்தில்* அங்கும் இங்குமாக ஆறு பாடல்களில் கிடைக்கின்றன. அவை பின்வருமாறு,

*'இன்னதோர் இட்டலிபோற் கட்டி யாகும்,*

*ஏற்றமாம் சூதமிஃ துருகிடும் பாரே'*

- *(185)* போகர் ஏழாயிரம், இரண்டாம் ஆயிரம்

*'சூதத்தை விட்டுமே சுருக்குப் போடு,*

*புட்டாக இட்டலிபோற் கட்டி யாகும்'*

- *(379)* போகர் ஏழாயிரம், இரண்டாம் ஆயிரம்

*'நீச்சான சூதத்தை விட்டுக் காய்ச்ச,*

*ஏறவிட்டு இட்டலிபோற் கட்டி யாகும்'*

- *(727)* போகர் ஏழாயிரம், இரண்டாம் ஆயிரம்

*'படுமுன்னே சூதம் இட்டலி போலாகும்'*

- *(45)* போகர் ஏழாயிரம், மூன்றாம் ஆயிரம்

*'ஏமென்ற எரித்தாக்கால் இறுகி வெண்ணை,*

*இட்டலிபோல் தானிருக்கும் எடுத்து ருட்டே'*

- *(367)* போகர் ஏழாயிரம், மூன்றாம் ஆயிரம்

*'நலங்காமல் இட்டலி போல் கட்டிப்போகும்'*

*- (528) போகர் ஏழாயிரம், மூன்றாம் ஆயிரம்*

இவற்றில் பெரும்பான்மையான பாடல்களில் கட்டிப்போகும் என இட்டலியின் இயல்பாய் கட்டித்தன்மை கூறப்பட்டாலும் 'புட்டாக இட்டலிபோற் கட்டி யாகும்' என்ற வரியில் அவிக்கப்படும் புட்டின் தன்மையை இட்டலியின் மேல் ஏற்றிக் கூறப்பட்டிருப்பது, புட்டு போலவே இட்டலி அவித்து செய்யப்பட்டும், எளிதில் விண்டு விடக் கூடியதாகவும் இருந்திருக்க வேண்டும் என்ற அனுமானத்திற்கு இடம் தருகிறது.

### சட்டைமுனி வாதகாவியம்

சித்தர்களின் அறிவியலில் வாதம் என்பது இரும்பு, செம்பு போன்ற எளிய உலோகங்களை, வெள்ளி, தங்கம் போன்ற உயர்ந்த உலோகங்களாக மாற்றும் கலை எனப்பொதுவாக அறியப்பட்டிருந்தாலும், இத்தகைய வேதியியல் மாற்றத்தை ஏற்படுத்தும் பொருள்களை மருந்தாகப் பயன்படுத்தி உடலை அழிவுறாமல் நீண்ட காலம் பாதுகாக்கும் அறிவையே வாதம் எனக்கூறலாம். ஆயிரம் பாடல்களையுடைய சட்டைமுனி இயற்றிய வாதகாவியம் இத்தகைய அறிவியலை விரிவாகப் பேசுகிறது. இந்நூலில் 'கானென்ற செயநீரில் சூதம் விட்டு கனல் காட்ட இட்டலி போல் கட்டிப்போகும்' (494) என்ற வரியில் சட்டைமுனியும் இட்டலியை உவமையாகப் பயன்படுத்துவதைக் காணமுடியும்.

இவ்வாறு இட்டலி மாவு சமைத்தபின் கட்டியாவதை உவமையாகப் பயன்படுத்தும் போகர் மற்றும் சட்டைமுனியின் நூலிலுள்ள குறிப்புகள் இட்டலி பற்றிய முக்கியமான தமிழிலக்கியச் சான்றாகக் கிடைக்கிறது.

### விவாதம்

### 'காரம் பெறு மாவின் இட்டலி' எனும் சம்பார இட்டலியில் சேரும் காரப்பொருட்கள்

பதார்த்தகுணசிந்தாமணியில் கூறப்படும் 'காரம் பெறு மாவின் இட்டலி' எனும் சம்பார இட்டலியில் சேரும் காரப்பொருட்கள் பற்றி அறிய இந்நூலில் இட்டலியின் குணத்தைக் கூறும் பாடலுக்கு முன்பாகக் கூறப்படும் சம்பாரத்தோசையின் குணத்தைக் கூறும் பாடல் வரிகள் உதவுகின்றன. இப்பாடல் கீழே தரப்பட்டுள்ளது.

*காயமிள கிஞ்சி கருவேப் பிலைமுதலாந்*

*தூயபல காரம்இட்ட தோசைக்கு வாயுவிலை*

*பித்தகப வேகப் பெருக்கொழியுந் தாதுவுமாஞ்*

*சுத்தவன சத்திருவே சொல்.*

*- (1415) பதார்த்தகுணசிந்தாமணி, சுப்பிரமணிய பண்டிதர் பதிப்பு*

இப்பாடலின் முதல் இரண்டு வரிகளும் சம்பாரத்தோசையில் சேரும் காரங்களைக் கூறுகிறது. அதாவது காயம் எனப்படும் பெருங்காயம், மிளகு, இஞ்சி, கருவேப்பிலை ஆகிய பொருட்கள் சேர்த்து செய்யப்படுவதே சம்பாரத்தோசையாகும். பாடலில் தொடர்ந்து சம்பாரத்தோசை வாயுவினை நீக்கும், அதிகரித்த பித்த, கபத்தைச் சமப்படுத்தும், உடல் தாதுக்களுக்கு வன்மை தரும் எனக் குணங்கள் கூறப்படுகிறது. இப்பாடலின் மூலம் காரம்/சம்பாரம் எனப்படுவது பெருங்காயம், மிளகு, இஞ்சி, கருவேப்பிலை போன்றவற்றின் கூட்டு என அறிய முடிகிறது. இதுவே 'காரம் பெறு மாவின் இட்டலி'க்கும் பொருந்தும் எனக் கொள்ளலாம். கோடையில் வெம்மையைத் தணிக்க அருந்தும் மிளகாய், இஞ்சி, கருவேப்பிலை கலந்து செய்யப்படும் மோரை இன்றும் கேரளத்தில் சம்பாரம் எனக்கூறும் வழக்கைக் கருத்தில் கொண்டால், சம்பாரம் என்ற சொல் காரச்சுவையின் கூட்டைக் குறிக்கப் பயன்படுத்தப்படுவதை அறிய முடிகிறது. பதார்த்தகுணசிந்தாமணியில் கூறப்படும் சம்பாரக்கூட்டில், மிளகினிடத்தை காலமாற்றத்தில் மிளகாய் பிடித்துள்ளது.

### கோயில்களில் பிரசாதமாக சம்பார இட்டலி மற்றும் சம்பாரத்தோசை

பதார்த்தகுணசிந்தாமணி கூறும் காரப்பொருட்கள் சேர்த்துச்

செய்யப்படும் சம்பார இட்டலி மற்றும் சம்பாரத்தோசை தற்காலத்தில் ஏறத்தாழ வழக்கில் இல்லையென்றாலும் சில கோவில்களில் பக்தர்களுக்கு வழங்கப்படும் பிரசாதமாக வழக்கில் உள்ளன. காஞ் சிபுரம் வரதராஜப்பெருமாள் கோயிலில் பிரசாதமாக வழங்கப்படும் கோவில் இட்டலி காரப்பொருட்கள் கலந்து செய்யப்படுகிறது. மாவினை உலர்ந்த மந்தாரை இலையில் வைத்து வேகவைத்து செய்யப்படும் இந்த இட்டலியில் *பதார்த்தகுணசிந்தாமணி* கூறும் சம்பாரப்பொருட்களான பெருங்காயம், மிளகு, இஞ்சி, கருவேப்பிலை ஆகியவை சேர்கிறது; இவற்றோடு வெந்தயம் மற்றும் சீரகமும் சேருகிறது (Lakshmi & Deepa, 2013).

இதேபோல் *பதார்த்தகுணசிந்தாமணியில்* சம்பாரத்தோசை என விவரிக்கப்படும் தோசை, சம்பா தோசை என்று மருவி இன்றளவும் அழகர்மலை கள்ளழகர் கோவிலில் இறைவனுக்குப் படைக்கப்பட்டு பிரசாதமாக வழங்கப்படுகிறது. இந்த சம்பா தோசையிலும் பெருங்காயம், சுக்கு, கருவேப்பிலை, சீரகம் போன்ற காரச்சுவையுடைய பொருட்கள் சேருகின்றன, ஆனால் தோசை இங்கு எண்ணெயில் பொரித்துச் செய்யப்படுகிறது (சின்னதுரை, 2017, p.399). இவ்வாறாக சம்பார இட்டலி, சம்பாரத்தோசை ஆகியவை வைணவத் திருத்தலங்களில் பிரசாதமாக வழங்கப்படுவது 'விஜயநகர ஆட்சிக்காலக் கல்வெட்டுகளில் கிடைக்கும் இட்டலி, தோசை, அதிரசம் போன்ற உணவுவகைக் குறிப்புகள் கோயிற்பண்பாட்டைப் பிரதிபலிப்பதனால் பெருவாரியான மக்களின் உணவுப் பழக்கவழக்கங்களை அறிய இவற்றைப் போதிய சான்றுகளாகக் கொள்ளமுடியாது' (பரமசிவன், 2004, p.16) என்ற கருத்தினை உறுதிப்படுத்தும் விதமாக உள்ளது.

### பதார்த்தகுண சிந்தாமணி கூறும் இட்டலி / தோசையில் சேரும் பொருட்கள்

இட்டலியின் குணங்களைக் கூறும் மூன்று நூல்களின் பாடல் வரிகளில் இட்டலியில் சேரும் பொருட்கள் பற்றிய குறிப்பு இல்லை. ஆனால் இட்டலி மாவிலிருந்து செய்யப்படுகிறது என்பதை இட்டலியின் குணத்தைக் கூறும் *பதார்த்தகுணசிந்தாமணி* பாடலில் காணப்படும் 'வெறுமாவின் இட்டலி' மற்றும் 'காரம் பெறு மாவின் இட்டலி' ஆகிய வரிகளைக் கொண்டு அறிய முடிகிறது.

'காரம் பெறு மாவின் இட்டலி'யில் சேரும் காரப் பொருட்களை அறிய சம்பாரத்தோசையின் குணம் கூறும் பாடல் துணை நின்றதைப் போலவே இட்டலியில் சேரும் பொருட்களை அறிய *பதார்த்தகுணசிந்தாமணியில்* தோசையின் குணத்தைக் கூறும் பாடல் துணை நிற்கிறது. இப்பாடலில் தோசையில் சேரும் பொருட்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பாடலைத் தொடர்ந்து அடுத்த பாடலில் சம்பாரத்தோசையின் குணம் கூறி, அதில் சேரும் சம்பாரப்பொருட்களைப் பற்றிக் கூறியிருப்பதும், இவ்வாறு தோசை மற்றும் சம்பாரத்தோசை ஆகியற்றைத் தனித்தனியாக இரண்டு பாடல்களில் கூறித் தொடர்ச்சியாக இட்டலி மற்றும் சம்பார இட்டலியின் குணத்தை ஒரே பாடலில் அடக்கி அவற்றில் சேரும் பொருட்கள் மற்றும் சம்பாரப்பொருட்களைக் கூறாமல் தவிர்த்திருப்பதைக் காணுகையில், தற்காலத்தைப் போலவே *பதார்த்தகுணசிந்தாமணி* நூல் எழுதப்பட்ட காலத்திலும் இட்டலியும் தோசையும் ஒரே மூலப்பொருட்களிலிருந்தே செய்யப்பட்டிருக்க வேண்டும் என்றும், இதன் காரணமாகவே இரண்டாவது முறையாக கூறாமல் தவிர்த்திருக்க வேண்டும் என்ற அனுமானத்திற்கு இடம் தருகிறது.

இக்கருத்திற்கு துணையாக, *பதார்த்தகுணசிந்தாமணி* கூறும் தோசை மற்றும் இட்டலியின் குணங்கள் சில ஒத்திருப்பதையும், சம்பாரத்தோசை மற்றும் சம்பார இட்டலியின் குணமும் ஏறத்தாழ ஒத்திருப்பதையும், *தேரையர் காப்பியம்* மற்றும் *தேரையர் தரு* ஆகிய நூல்களிலும் தோசையின் குணமும் இட்டலியின் குணமும் அடுத்தடுத்தே கூறியிருப்பதையும் அவற்றிற்கு கூறப்படும் குணங்களும் ஏறத்தாழ ஒத்திருப்பதையும் கூறலாம். தோசையில் சேரும் பொருட்களாக

பதார்த்தகுணசிந்தாமணி கூறுவதை அறிய தோசையின் குணத்தைக் கூறும் பாடலைக் காண்போம்,

*மிகுத்தெழுந்த பித்தத்தை வீறா தடக்கும்*

*அகத்துள் அனிலகபம் ஆற்றுஞ் சகத்திலுறு*

*தேசைப் பெறுமயிலே தேமொழியே மாழத்தின்*

*தோசைக் குணமிதெனச் சொல்*

*- (1414) பதார்த்தகுணசிந்தாமணி,* சுப்பிரமணிய பண்டிதர் பதிப்பு

இப்பாடலில் முதலிரண்டு வரிகளில், தோசை அதிகரித்த பித்தத்தை அதிகரிக்க விடாமல் கட்டுப்படுத்தும், மற்றும் அனிலம் எனப்படும் வாதம் மற்றும் கபத்தை ஆற்றுப்(சமப்)படுத்தும் எனத் தோசையின் குணம் கூறப்படுகிறது. கடைசி இரண்டு வரிகளில் தோசையில் சேரும் பொருள்கள் கூறப்படுகிறது. 'தேமொழியே மாழத்தின் தோசை' என்ற வரியில் மாழம் என்பது மாடம் எனப்படும் உழுந்தைக் குறிக்கும். அதாவது உழுந்தினால் செய்யப்படும் தோசை எனப்பொருள் கொள்ளலாம். ஆனால் 'தேமொழியே மாழத்தின் தோசை' என்ற வரிக்கு பாடபேதமாக பதார்த்தகுணசிந்தாமணியின் வேறு சில பதிப்புகளில் 'தின்னரி சேர் மாழத்தின் தோசை' என்ற வரி இடம் பெறுகிறது, இங்கு அரி என்பது அரிசியைக் குறிக்கிறது, அதாவது அரிசியும் உழுந்தும் சேர்ந்து செய்யப்படுவதே தோசை எனப்பொருள் தருகிறது. இவ்வாறு இருவித பாடபேத வரிகள் இடம்பெறும் பதார்த்தகுணசிந்தாமணியின் பதிப்புகள் பற்றிய விவரம் அடைப்புக்குறி யினுள் பதிப்பிக்கப்பட்ட ஆண்டுடன் கீழே தரப்பட்டுள்ளது.

### 'தேமொழியே மாழத்தின் தோசை' என்ற வரி இடம்பெறும் பதார்த்தகுணசிந்தாமணி பதிப்புகள்

1. *பதார்த்தகுணசிந்தாமணி,* சுப்பிரமணிய பண்டிதர் பதிப்பு (இந்நூலில் பதிப்பு ஆண்டினைக் குறிப்பிடும் பக்கம் இல்லை, நூலைப் பதிப்பித்த சுப்பிரமணிய பண்டிதர் *'தேரையர் நீர்க்குறி நெய்க்குறி சாஸ்திரம்'* என்ற நூலை 1868ல் பதிப்பித்துள்ளதால் இக்காலத்தை ஒட்டிய காலமே இந்நூல் பதிப்பித்த காலமாக இருக்க முடியும்)
2. *பதார்த்தகுணசிந்தாமணி,* தாமரை நூலகம் (1994)
3. *பதார்த்தகுணசிந்தாமணி,* இந்திய மருத்துவம் - ஹோமியோபதித் துறை (2007)

இதுதவிர சித்த மருத்துவக் கல்லூரிப் பாடநூலான *'குணபாடம் மூலிகை வகுப்பு'* (முதல் பதிப்பு1936) நூலில் இடம்பெற்றுள்ள மேலே கூறப்பட்ட தோசையின் குணத்தைக் கூறும் பாடலிலும் 'தேமொழியே மாழத்தின் தோசை' என்ற வரியே இடம்பெற்றுள்ளது.

### 'தின்னரி சேர் மாழத்தின் தோசை' என்ற வரி இடம்பெறும் பதார்த்தகுணசிந்தாமணி பதிப்புகள்

1. *பதார்த்தகுணசிந்தாமணி,* கலை மாது விளக்கம் பிரஸ் (1888)
2. *பதார்த்தகுணசிந்தாமணி,* இரத்தின நாயகர் சன்ஸ் (1932)
3. *பதார்த்தகுணபாடம்,* சரசுவதி மகால் நூலகம் (2006, மூன்றாம் பதிப்பு) (*பதார்த்தகுணசிந்தாமணி* நூலினை பதார்த்த குணபாடம் என்ற தலைப்பிட்டு எழுதப்பட்டுள்ள ஓலைச்சுவடியிலிருந்து பதிப்பிக்கப்பட்ட நூல்)

இவ்வாறு மூன்று பதிப்புகளில் தோசை என்பது உளுந்து மட்டும் சேர்த்து செய்யப்படுவது என்றும், மூன்று பதிப்புகளில் தோசை என்பது அரிசி மற்றும் உளுந்து சேர்த்து செய்யப்படுவது என்றும் காணக்கிடைக்கிறது. இவற்றில் இட்டலியும், தோசையும் உளுந்தினால் மட்டுமே செய்யப்பட்டிருக்கலாம் எனும் கருத்திற்கு ஆதரவாக உணவு வரலாற்றாசிரியர் கே.டி.அசயா கூறும் கருத்தினைக் கீழே காணலாம்,

> 'கி.பி.1025இல் கன்னடக்கவிஞர் சாவுண்டராயா (லோகோபகாரா என்ற நூலில்) இட்டலி உழுந்தை மோரில் ஊறவைத்து நன்கு மாவாக அரைத்து அதில் தயிரிலிருந்து எடுக்கப்படும் நீர், சீரகம், மல்லி, மிளகு,

பெருங்காயம் ஆகியவை சேர்த்துச் செய்யப்படுவது எனச் சந்தேகத்திற்கு இடமின்றிக் கூறுகிறார்; கி.பி.1130இல் எழுதப்பட்ட மானசொல்லாச என்ற சமஸ்கிருத நூலின் படியும் இட்டலி என்பது உளுந்து மட்டும் சேர்த்து செய்யப்படுவது ஆகும்.' (Achaya, 1994, p.125-126).

மேலே கூறப்பட்ட கன்னட மற்றும் சமஸ்கிருத நூலின் வழி பார்க்கையில் பதார்த்தகுணசிந்தாமணியில் தோசை உழுந்தினால் மட்டுமே செய்யப்படுவது எனப்பொருள் தரும் 'தேமொழியே மாழத்தின் தோசை' என்ற பாடபேதமே சரியானதாகத் தோன்றுகிறது. பிற்காலத்தில் உழுந்தினோடு அரிசியும் சேர்த்துச் செய்யும் மாற்றம் ஏற்பட்ட பின் நூலினைப் பிரதி எடுத்தவர்கள் 'தின்னரி சேர் மாழத்தின் தோசை' என மாற்றி எழுதியிருக்கலாம். ஆனாலும் இவ்விரண்டு வரிகளில் எது மூலபாடம்? எது காலப்போக்கில் மாற்றப்பட்டது? என்பதைப் பதார்த்தகுணசிந்தாமணியின் அனைத்து அச்சுப்பதிப்புகள் மற்றும் ஓலைச்சுவடிப் பிரதிகளையும் மூலபாட ஆய்வியல் முறையில் அணுகி முடிவு செய்வதே சாலச்சிறந்தது. பதார்த்தகுணசிந்தாமணியின் பார்வையில் சாவுண்டராயா கூறும் இட்டலி சம்பார இட்டலியாகும்.

## இட்டலி பற்றிக் கூறும் சித்த மருத்துவ நூல்களின் காலம்

மருத்துவச் சித்தர்களின் காலத்தை நிர்ணயிப்பதில் பல இடர்ப்பாடுகள் உள்ளன. உதாரணமாக சித்தர்களுக்கு மரணமில்லை என்ற கருத்தே கால நிர்ணயம் செய்ய ஏற்றதாக இல்லை. இருந்தாலும் இந்நூல்களின் பாடலமைவுகளைக் கருத்தில் கொண்டும் இந்நூல்களில் கிடைக்கும் சில வரலாற்றுச் செய்திகளின் துணை கொண்டும் சித்தர்களின் காலத்தை நிர்ணயம் செய்ய தமிழறிஞர்கள் மற்றும் சித்த மருத்துவ அறிஞர்கள் முயன்றுள்ளனர்.

## பதார்த்தகுணசிந்தாமணி, தேரையர் காப்பியம், தேரையர் தரு ஆகிய நூல்களின் காலம்

இந்நூல்களை இயற்றிய தேரையரின் காலத்தைக் கணக்கிட அவரியற்றிய தேரையர் மகா கரிசல் என்ற நூலில் கிடைக்கும் வேமனா எனும் தெலுங்கு மொழி ஞானப்பாடலாசிரியர் பற்றிய குறிப்புகள் துணை புரிகின்றன. 'உத்தமஞ்சி வாடு சுமி நீ என வேமனர் வடுகில் உரைத்தல் போல' என வேமனாவைப் பற்றியும் வேமனா இயற்றிய பாடல் வரியும் தேரையர் மகா கரிசலில் இடம் பெற்றுள்ளதைக் கொண்டு தேரையர் வேமனாவின் காலத்திற்குப் பின்னராவது அல்லது சமகாலத்திலாவது இருந்தவரெனலாம் (தியாகராஜன், 1974, p.3).

வேமனாவின் காலமாக 15ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியையும், சிலர் 16 ஆம் நூற்றாண்டு எனவும், சிலர் 17ஆம் நூற்றாண்டாகக்கூட இருக்கலாம் எனவும் கூறுகிறார்கள் (William, 2016, p.112). வேமனாவின் நூல்களை ஆராய்ந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்ட சார்லஸ் பிலிப் பிரவுன் என்பவர் வேமனாவின் காலம் 17ஆம் நூற்றாண்டின் துவக்கமே என நம்பப்படுவதாகக் கூறுகிறார் (Philip Brown, 1911, p.iii). எனவே 15 முதல் 17ஆம் நூற்றாண்டிற்கு இடைப்பட்ட காலப்பகுதியை பதார்த்தகுணசிந்தாமணி, தேரையர் காப்பியம் மற்றும் தேரையர் தரு ஆகிய நூல்களின் காலமாகக் கொள்ளலாம்.

## போகர் ஏழாயிரம் மற்றும் சட்டைமுனி வாதகாவியத்தின் காலம்

வாதம், வைத்தியம், யோகம், ஞானம் எனும் பகுப்புகளை உடைய சித்தர் அறிவியலுக்கு மிகச்சிறப்பாகப் பங்காற்றியவர்களைப் பதினெண்சித்தர்கள் எனச் சித்தர்கள் காலத்திலேயே சிறப்பித்து வகைப்படுத்தியுள்ளனர். பதினெண்சித்தர்களில் போகரும், சட்டைமுனியும் அடங்குவர். போகர் நூல்களில் சட்டைமுனியின் நூல்கள் மேற்கோளாகக் கூறப்படுவதாலும், சட்டைமுனி நூலில் போகர் பற்றிக் கூறப்படுவதாலும் இவ்விருவரும் சமகாலத்தவர்களே எனக்கருத முடியும். போகரது காலம் 1213ஆம் நூற்றாண்டாகும் (சண்முகம், 2008, p.17). இக்கருத்தினை மேலும்

வலுப்படுத்தும் விதமாக, அல்லமாபிரபு எனும் கன்னடமொழி வாசனா இலக்கியங்களைப் படைத்த வீரசைவ ஞானியின் வாழ்க்கை வரலாற்றைக் கூறும் பிரபுலிங்கலீலை என்ற கன்னடநூல் உதவுகிறது. அல்லமாபிரபு 12ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்தவர் (Shiva Prakash, 1997, p.178).

பிரபுலிங்கலீலையில் அல்லமாபிரபுவும் கோரக்கரும் கலந்து உரையாடியதற்கான குறிப்புகள் உள்ளன (Ramanujan, 1985, p.146). கோரக்கரும் போகரும் சமகாலத்தவர்கள் என்பதற்கு கோரக்கர் எழுதிய சந்திரரேகை என்ற சித்த மருத்துவ நூல் ஆதாரமாக உள்ளது. இந்நூலில் போகரும் கோரக்கரும் பழனியில் சிலகாலம் இருந்து சித்துவேலைகள் புரிந்தது, பழனியில் போகர் சமாதி நிலையடைந்து கோரக்கரை உரகை எனப்படும் நாகப்பட்டினத்திற்கு செல்லக் கூறுதல், பின்பு போகர் உரகையில் கோரக்கரை சந்தித்து அவருக்கு பொய்கைநல்லூர் என்ற இடத்தில் சமாதியடைய துணை புரிந்தது எனக் கோரக்கரும் போகரும் சிலகாலம் இணைந்து செயல்பட்டிருந்ததற்கான பல சம்பவங்கள் கூறப்பட்டுள்ளன. மேலே கூறியவைகளின் மூலம் போகரும், கோரக்கரும், அல்லமாபிரபுவும் சமகாலத்தவர்கள் என முன்மொழியலாம், அதன் மூலம் அல்லமாபிரபுவின் காலமான 12ஆம் நூற்றாண்டினை ஒட்டிய காலமே போகர் மற்றும் சட்டைமுனியின் காலம் என உறுதிப்படுத்த முடியும்.

### முடிவுரை

தமிழில் இட்டலி பற்றிய காலத்தால் முற்பட்ட குறிப்புகள் 12-13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சித்த மருத்துவ நூல்களான போகர் ஏழாயிரம் மற்றும் சட்டைமுனி வாதகாவியம் ஆகிய நூல்களில் கிடைக்கிறது. இந்நூல்களில் நீர்த்துவமிக்க இட்டலி மாவு வேகவைத்தவுடன் கெட்டியாகும் இயற்பியல் மாற்றம் உவமைக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்நூலாதாரம் கல்வெட்டுகளில் கிடைக்கும் இட்டலி பற்றிய ஆதாரங்களைவிட காலத்தால் முற்பட்டவை. மேலும் இட்டலியின் குணத்தை சிறப்பாக விவரிக்கும் 17ஆம் நூற்றாண்டைக் கால எல்லையாகக் கொண்ட பதார்த்தகுணசிந்தாமணி நூலின் குறிப்புகள் மூலம் காரம் சேர்க்காத மாவினால் செய்யப்பட்ட தோசை / இட்டலி மற்றும் பெருங்காயம், மிளகு, இஞ்சி, கருவேப்பிலை ஆகிய காரம் சேர்ந்த மாவினால் செய்யப்பட்ட சம்பாரத்தோசை / சம்பார இட்டலி என இருவகையான தோசையும், இட்டலியும் வழக்கிலிருந்ததை அறியமுடிகிறது.

இவற்றில் ஏறத்தாழ பொதுவழக்கில் மறைந்துவிட்ட சம்பாரத்தோசை மற்றும் சம்பார இட்டலி ஆகியவை முறையே அழகர்மலை கள்ளழகர் கோவில் மற்றும் காஞ்சிபுரம் வரதராஜப்பெருமாள் கோயில் ஆகிய வழிபாட்டுத்தலங்களில் பக்தர்களுக்குத் தரப்படும் பிரசாதமாக இன்றளவும் வழக்கில் உள்ளன. பதார்த்தகுணசிந்தாமணியில் தோசை, இட்டலியின் உணவுக்குணம் உட்பட இன்றுவரை வழக்கிலுள்ள பல உணவுகள், காய்கறிகள், பழங்கள் ஆகியவற்றின் குணங்கள் சித்த மருத்துவ அடிப்படையில் விளக்கப்பட்டுள்ளதைக் காண்கையில் இந்நூல் இன்றைய உணவு அறிவியல் நூல்களுக்கு முன்னோடியாக உள்ளது என்றால் மிகையில்லை. பதார்த்தகுணசிந்தாமணியின் வெவ்வேறு பதிப்புகளில் தோசை மாவில் சேரும் பொருட்களாகக் கூறும் வரிகள் உழுந்து மட்டும் சேர்த்து செய்யப்படுவது எனவும், அரிசி மற்றும் உளுந்து சேர்த்து செய்யபப்படுவது எனவும் இருவித பாடபேதத்துடன் காணப்படுகிறது.

இதைப்போன்று பாடபேதங்களும் பிழைகளும் பதார்த்தகுணசிந்தாமணியின் வெவ்வேறு பதிப்புகளில் மலிந்து காணப்படுவது இந்நூலிற்கு மூலபாட ஆய்வுப்பதிப்பு வெளியிட வேண்டிய அவசியத்தை உணர்த்துகிறது. தமிழக வரலாற்றில் இட்டலி பற்றி அறிய உதவும் காலத்தால் முற்பட்ட தமிழிலக்கியச் சான்றுகள் சித்தர்கள் இயற்றிய மருத்துவம் தொடர்பான நூல்களில் காணக்கிடைக்கின்றன என்பதன் மூலம் தமிழக வரலாற்றை மீள் ஆய்வு செய்வதற்கு இந்நூல்களாலும் பங்காற்ற இயலும் என உறுதிபட உரைக்க முடியும்.

## References

Achaya, K.T. (1994). *Indian Food, A Historical Companion.* New Delhi: Oxford University Press.

Ananda Kumar, A. (Ed.). (1975). *Theraiyar Kappiyam*. Chennai: Pandithar S.S.Anandam Siddha Maruthuva Aaraichi Nilayam.

*Patharthaguna Sinthamani*. (2007). Chennai: Directorate of Indian Medicine and Homeopathy.

Bakthavathsala Bharathi. (Ed.). (2014). *Tamizhar Unavu*. Nagercoil: Kalachuvadu Pathippagam.

Chinnathurai, S. (2017). *Uravu Sandai Theerkkum Azhagar Kovil Sampa Dosai*. In Vikatan Deepavali Malar. Chennai: Ananda Vikatan Publishers (P.) Limited.

Gangathara Thevar. (Ed.). (1975). *Bogar Ezhayiram, Irandam Ayiram*. Pazhani: Pazhani Thandayuthapani Swami Koil.

Gangathara Thevar. (Ed.). (1975). *Bogar Ezhayiram, Moonram Ayiram*. Pazhani: Pazhani Thandayuthapani Swami Koil.

Gangathara Thevar. (Ed.). (1975). *Bogar Ezhayiram, Muthal Ayiram*. Pazhani: Pazhani Thandayuthapani Swami Koil.

Gutiérrez, Andrea. (2018). "Jewels Set in Stone: Hindu Temple Recipes in Medieval Cola Epigraphy». *Religions* (2018, 9, 270; doi:10.3390/rel9090270).

Kasim Muhaideen Ravuthar. (Ed.). (1888). *Patharthaguna Sinthamani*. Madras: Kalai Maathu Vilakkam Press.

Kasim Muhaideen Ravuthar. (Ed.). (1932). *Patharthaguna Sinthamani*. Chennai: Rathna Nayakar Sons.

Krishnan, P.A. (2014). *Milakaayai Ponra Pandurangan*. In Bakthavathsala Bharathi (Ed.), *Tamizhar Unavu*. Nagercoil: Kalachuvadu Pathippagam.

Lakshmi, K. and Deepa H. Ramakrishnan. (2013, May 11). In Search of Kancheepuram Idli. *The Hindu*. Retrieved from *http:// www.thehindu.com/*

Murugesa Mudaliar, C.S. (1932). *Gunapadam - Mooligai Vaguppu*. Chennai: Government Press Superintendent.

Paramasivan, Tho. (2004). *Panpaattu Asaivukal*. Nagercoil: Kalachuvadu Pathippagam.

Philip Brown, Charles. (1911). *The Verses of Vemana*. Madras: V.Ramasamy Sastrulu & sons.

Ramachandran, S.P. (Ed.). (1994). *Patharthaguna Sinthamani*. Chennai: Thamarai Noolagam.

Raman, K.V. (1975). Sri Varadarajaswami Temple - Kanchi. New Delhi: Abhinav Publications.

Ramanujan, A.K. (1985). *Speaking of Siva*. Middlesex: Penguin Books.

Sethuraghunathan, N. (Ed.). (1975). *Korakkar Chandrarekai* – 200. In *Ezhu Nool Thokuth*i. Pazhani: Pazhani Thandayuthapani Swami Koil.

Shiva Prakash, H.S. (1997). Medieval Kannada Literature. In Ayyappa Paniker, K. (Ed.), *Medieval Indian Literature – An anthology,* (Volume On). Surveys and Selections. New Delhi: Sahitya Akademi.

Shunmugom, N. (2010). *Siddha Mruthuva Suvadikal Vazhi Kurunool Meetturuvaakkam*, Ki.Na. Tamizhial (Quarterly magazine), (October 2010 / pp.16-26).

Sowrirajan, M. (Ed.). (2006, Third edition). *Pathartha Gunapadam*. Thanjavur: Saraswathi Mahal Noolagam.

Subramania Pandithar. (Ed.). (n.d.). *Patharthaguna Sinthamani*. Chennapattinam: Subramania Pandithar.

Subramania Pandithar. (Ed.). (1868). *Theraiyar Neerkuri Neykuri Sasthiram*. Chennapattinam: Asiatic Achukoodam.

Sumitpal. (2017, November 12). A case for idli-dosa as the national food. *The Hindu*. Retrieved from *https://www.thehindu.com/*

Thiagarajan, R. (Ed.). (1974). *Theraiyar Maha Karisal.* Chennai: Pandithar S.S.Anandam Siddha Maruthuva Aaraichi Nilayam.

Thiagarajan, R. (Ed.). (1997). *Theraiyar Tharu*. Chennai: Pandithar S.S.Anandam Siddha Maruthuva Aaraichi Nilayam.

Veluchamy Pillai, R.M.K. (Ed.). (1935). *Sattaimuni Vathakaviyam*. Pazhani: R.M.K.Press.

William J. Jackson. (2016). Vijayanagara Voices: Exploring South Indian History and Hindu Literature. New York: Routledge.

# சித்தர் சூஃபி இலக்கியங்களில் சமயம் கடந்த சமரசப் பண்பு
# Harmony Beyond Religion in Siddhar and Sufi Literatures

கோவி.சிவபாலன் / G.Sivapalan[1]
முனைவர் சு.மணிமாறன் / Dr.S.Manimaran[2]

Date of submission: 2021-05-25
Date of acceptance: 2021-06-20
Date of Publication: 2021-07-20
Corresponding author's Name:
Dr.S.Manimaran
Email: manimaran23@um.edu.my

## Abstract

Siddhar literature is a collection of poems composed by Tamil Siddhars, whereas, Sufi literature is a collection of poems composed by Sufis, the Tamil Muslim sages who resided in South India. Many Sufis have emerged among the Tamil speaking population in Tamil Nadu and Sri Lanka. Their poems, which are composed in the Tamil language, have remarkably similar themes found in Siddhar poems. Thus, the library-research based analytical comparative study aims to identify and further examine these similarities and differences between the Siddhar and Sufi philosophies. Upon comparing both literatures, it was noted that there were several similarities as well as differences between the two literatures. Since Siddhars and Sufis both dedicated their lives to the journey of attaining enlightenment, this could be the reason for the similarities among the themes of their poems. Furthermore, Siddhar poems were widely known among the people even before the times of Sufis. Sufis who were on the journey of enlightenment found these poems to be their guide, which can further explain the influence of Siddhar poems in Sufi literature. In any case, Siddhar and Sufi literatures have contributed in several aspects for the Hindu and Muslim populations in Tamil Nadu: aiding them towards their journey of enlightenment, teaching them to live beyond the confines of castes or religions, being well versed in the ways of Siddha medicine, acquiring religious Tamil literatures of quality, and having access to several meditation and worship locations. However, the impact of Siddhar and Sufi literatures is not only confined to Tamil Nadu but has expanded its influence to several countries that host Tamilians.

**Key Words:** Siddhar Literatures, Sufie Literatures, Guru, Enlightenment, Harmony beyond religion, Siddha Philosophy.

### முன்னுரை

ஆத்ம ஞானம் என்பது மனித குலம் என்று தோன்றியதோ அன்று தொடங்கி அவனோடு இரண்டறக் கலந்து வந்திருக்கின்றது. ஆனால் இது இடம், காலம், சூழலுக்கேற்ப வேறுபட்டு வந்துள்ளது. ஆத்ம ஞானம் என்பது எச்சமயத்தவருக்கும் உரியது ; எந்நாட்டவருக்கும் பொதுவானது. ஆனால், ஒவ்வொரு சமயத்தவரும் அவரவருடைய நெறிமுறைகளுக்கேற்ப ஆத்ம ஞானத்தை வளர்த்து வந்துள்ளனர்.

[1] The author is a Senior Lecturer in the Department of Indian studies, University of Malaya, Kuala Lumpur, Malaysia. gsiva_palan@um.edu.my

[2] The author is a Senior Lecturer in the Department of Indian studies, University of Malaya, Kuala Lumpur, Malaysia. manimaran23@um.edu.my

ஒவ்வொரு நாட்டவரும் அவரவரின் மண்வாசனைக்கேற்ப ஆன்மீகத் தேடலுக்கு வழிகாட்டியுள்ளனர். இவர்களின் வழிவகைகள் வேறாக இருப்பினும் அனைவரது நோக்கமும் ஆன்மீகத் தேடலை மையமாகக் கொண்டே இருந்துள்ளது. எனவே, ஆத்ம ஞானம் என்பது உலகனைத்துக்கும் பொதுவானது என்னுங் கருத்து தெளிவாகிறது.

தமிழகத்தில் ஆன்ம நெறி வளர்த்த பெரியோர்களுள் சித்தர்கள் மிக முக்கிய இடத்தை வகிக்கின்றனர். இச்சித்தர்கள் தங்கள் கருத்துகளைப் பாடல்களாகப் பாடி வைத்துள்ளனர். பொதுவாக சித்தர்களை இந்து சமயத்தோடு சார்த்திப் பார்ப்பதுவே பெரு வழக்காக இருந்து வருகின்றது. சித்தர் குழாத்துள் இருக்கக் கூடிய முஸ்லீம் சித்தர்களைப் (சூஃபி) பற்றிய பார்வை மக்களிடமும் ஆய்வாளர்களிடமும் சற்றுக் குறைவாகவே உள்ளது. தமிழ் முஸ்லீம் சித்தர்கள் படைத்துள்ள யோக, மருத்துவப் பாடல்கள் எல்லாம் விலைமதிக்க முடியாத பெருஞ்செல்வங்களாக விளங்குகின்றன. தம் பாடல்களின் வழி தமிழ்ச் சமுதாயத்தின் ஆன்மத் தெளிவுக்கு அவர்கள் ஆற்றியுள்ள இலக்கியப் பணி போற்றுதற்குரியதாகும். தமிழ் நாட்டு நிலப்பரப்பில் இருந்துகொண்டு சித்தர்களும் சூ·பிகளும் செய்த ஆன்மீகப் பணி மிகப் பெரியதாகும். இவர்களது தத்துவங்கள் இந்து மற்றும் இஸ்லாம் சமயப் பின்னணியைக் கொண்டிருந்தாலும் இவர்களது நோக்கம் ஒன்றையே அடைவாகக் கொண்டுள்ளது. இரு வேறு சமயப் பின்னணியைக் கொண்ட இவ்விரு தத்துவங்களையும் அவற்றின் இலக்கியங்களின் வாயிலாக ஒப்பிட்டுப் பார்க்க வேண்டியது அவசியமாகும்.

## ஆய்வின் பின்னணி

ஆத்ம ஞானத்துக்கு வழிகாட்டிய பெரியோர்கள் ஆத்ம ஞானிகள் என அழைக்கப்பட்டனர். உலகனைத்துமுள்ள ஆத்ம ஞானிகளிடத்தில் இறையனுபவ நிலையைப் பெறுவதில் ஒரு பொதுமைத் தன்மை இருப்பதை நன்குணர முடிகின்றது. எப்படி உலகனைத்தும் உள்ள சமயக் கோட்பாடுகளில் நல்லனவற்றை நன்மை தருவன என இனங்காட்டுவதிலும் தீயவனற்றைத் தீமை தருவன என இனங் காட்டுவதிலும் பொதுமைப் பண்பு காணப்படுகிறதோ அதுபோலவே சமயங்கள் வழிவகுத்துக் காட்டும் ஆத்ம ஞானத்திலும் பொதுமைக் கூறுகள் உள்ளடங்கி இருப்பதை நன்குணரலாம்.

இந்தப் பொதுமைக் கூறுகள் அனைத்தையும் எடுத்துக்கொண்டால், அவை போதிக்கும் நெறிமுறைக்கும், மக்கள் நடைமுறைப்படுத்துவதற்கும் இடையில் பெரிய இடைவெளி இருப்பதை நன்குணர முடிகின்றது. இதற்கு, சமயக் கொள்கைக்கும் நடைமுறையில் மனிதன் வாழுகின்ற வாழ்விற்கும் இடையே காணப்படும் முரண்பாடே காரணம் எனக் கூறலாம். இத்தகைய முரண்பாடுகளைக் களைந்தெறிய, ஒவ்வொரு சமயத்துக்குள்ளேயும் இருந்த ஆன்மீகத் தெளிவு பெற்ற பெரியோர்கள் முயற்சி செய்தார்கள்.

இவர்கள் மனித வாழ்வுக்கு வழிகாட்டும் சமய நெறிகளின் உண்மையான தத்துவங்களை மெய்ஞ்ஞானப் பின்புலத்துடன் வழங்கினார்கள். இவர்கள் இறையனுபவம் பெற்றவர்களாகவும் மெய்ஞ் ஞான பின்புலத்தை அறிந்தவர்களாகவும் இருந்தனர். அவர்கள் தாமுணர்ந்த உள்ளுணர்வை வெளிப்படுத்திக் காட்டவும் முற்படலாயினர். இவ்வெளிப்பாடு அவரவர் சார்ந்த சமயக் கோட்பாடுகளுக்குட்பட்டே அமைந்திருந்தது. இவ்வகையில் இந்து சமயத்தினடிப்படையில் எழுந்த ஆத்ம ஞானக் கருத்துகள் சித்தர் தத்துவம் என்றழைக்கப்படுகின்றன. அதுபோலவே இஸ்லாமிய சமயத்தினடிப்படையில் எழுந்த ஆத்ம ஞானக் கருத்துகள் சூ·பித் தத்துவம் என்றழைக்கப்படுகின்றன.

## ஆய்வு நெறி

இந்த ஆய்வுக் கட்டுரை நூலக ஆய்வு முறையில் திரட்டப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது. கட்டுரையாளரின் வசமிருந்த சில நூல்களைத் தவிர, கோவிட் 19 பெருந்தொற்றுக் காரணமாக நூல்நிலையங்கள்

பயன்பாட்டுக்கு மூடப்பட்டிருக்கும் நிலையில், பெருவாரியான தரவுகள் இணையத்தின் வழியாகவே பெறப்பட்டன. கட்டுரைத் தலைப்புக்கும், நோக்கத்துக்கும் ஏற்ப தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கருத்து முடிவுகள் அடையப்பட்டன.

## முன்னோடி ஆய்வுகள்

இந்த ஆய்வுக்கென நூலோட்டம் மேற்கொண்டபோது சித்தர் இலக்கியங்களையும் சூஃபி இலக்கியங்களையும் பற்றிய சில நூல்களும், பெருவாரியாக இணையத் தரவுகளும் கிடைத்தன. இத்தரவுகள் சித்தர், சூஃபி இலக்கியங்களையும் தத்துவங்களையும் பற்றிய பின்னணியை அறிந்துகொள்வதற்குப் பெரிதும் துணை நின்றன. இவ்விலக்கியங்களில் காணப்படும் சமயம் கடந்த சமரசத் தகவல்களை முன்னிருத்தி ஓரிரண்டு எழுத்துப் படிவங்களில் காணப்பட்ட சிறுகுறிப்புகளைத் தவிர வேறெந்தத் தரவுகளும் கிட்டவில்லை. இவற்றை நோக்க, ஆய்வாளரின் தற்போதைய தலைப்பை ஒட்டி யாதொரு ஆய்வும், எழுத்துப்படைப்பும் இல்லாத வெற்றிடம் இருப்பது தெளிவாகின்றது. தற்போதைய இந்த ஆய்வு அந்த வெற்றிடத்தை நிரப்ப உதவும்.

## கட்டுரையின் நோக்கம்

இக்கட்டுரை சித்தர் இலக்கியங்களையும் சூஃபி இலக்கியங்களையும் ஒப்பீட்டு முறையில் ஆராய்கின்றது. இவ்விரு இலக்கியங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது அவற்றுள் சமயம் கடந்த சமரசப் பண்புகள் நிறைந்திருப்பது தெரிய வருகின்றது. அப்பண்புகளை இனங்கண்டு விளக்கப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## சித்தர்சூஃபி இலக்கியங்கள்

தமிழ்ச் சித்தர்கள் பாடிவைத்த பாடல்கள் சித்தர் இலக்கியம் என அழைக்கப்படுகின்றன. தென் இந்தியாவிலுள்ள தமிழ் நாட்டில் தமிழ் முஸ்லீம்களாகிய சூஃபி மெய்ஞ்ஞானிகள் அதிக எண்ணிக்கையில் இருந்துள்ளனர். அவர்கள் சூஃபி தத்துவக் கருத்துகளை உள்ளடக்கியப் பாடல்களை நிறைய புனைந்திருக்கின்றார்கள். அவை சூஃபி மெய்ஞ் ஞான இலக்கியம் என்றழைக்கப்படுகின்றன. இவ்விலக்கியங்கள் தமிழ் மொழியில் படைக்கப்பட்டுள்ளன. இஸ்லாமிய சூஃபிகளும் தமிழ் நாட்டுச் சித்தர்களும் மெய்ஞ்ஞானக் கருத்துகளின் அடிப்படையில் ஒத்த சிந்தனை உடையவர்கள். இதன் காரணமாக தமிழகத்தில் புது வகையான ஞான இலக்கியங்கள் தமிழ் மொழியில் உருவாகின.

தமிழக சித்தர்களுக்கிணையாக முஸ்லீம் சூஃபிகளும் தமிழ் இலக்கிய படைப்புகளின் மூலமாக தங்களுடைய சூஃபித்துவக் கருத்துக்களை எடுத்துரைக்கத் தொடங்கினார்கள். சித்தர்களும் சூஃபிகளும் தமிழக மக்களுக்காகவே தமிழிலக்கியங்களைப் படைத்தனர். சூஃபித்துவம் தென் இந்தியாவிலும் இலங்கையிலும் பரவியதன் காரணமாக சூஃபித்துவத் தத்துவங்களை அடிப்படையாகக் கொண்ட இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்கள் தோன்றலாயின. வட இந்திய மொழிகளிலும் சூஃபித்துவத் தத்துவங்களை விளக்கும் இஸ்லாமிய இலக்கியங்கள் தோன்றியுள்ள போதிலும் தமிழ் மொழியில்தான் அவை மிகச் சிறந்து விளங்குகின்றன.

## ஆய்வின் வரையறை

இந்த ஒப்பீட்டு ஆய்வை மேற்கொள்வதற்கு சித்தர் இலக்கியப் பாடல்களும் சூஃபி இலக்கியப் பாடல்களும் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்விரு இலக்கியங்களிலும் சமயம் கடந்த சமரசப் பண்புகள் நிறைந்திருக்கின்றன. எனவே இவ்விலக்கியங்கள் வெளிப்படுத்தும் எல்லாக் கருத்துக்களையும் ஆராயாமல் அவைச் சுட்டுகின்ற குருவின் இன்றியமையாமை, இறை ஒருமை, சித்தர்சூஃபி திருத்தலங்கள் ஆகிய கருத்துகளை மட்டுமே இக்கட்டுரை ஆய்வுக்கு உட்படுத்துகின்றது.

## குருவின் இன்றியமையாமை

அனைத்து மனிதனிடத்தும் தெய்வீக ஆற்றல்கள் புதைந்துக் கிடக்கின்றன. அரும்பெரும் காரியங்களைச் செய்து

சாதிக்கின்ற பல வல்லமைகள் மனிதனிடத்து மறைந்து கிடக்கின்றன. அனுக்கிரகம் என்று சொல்லப்படும் அருள் உதவி, சான்றோர் ஒருவரிடமிருந்து நல்ல ஆத்ம சாதகன் ஒருவனுக்குக் கிட்டுமாகில் அவனுடைய தெய்வீக சக்திகள் தோற்றத்திற்கு வருகின்றன. பரம்பொருளை அறிந்து கொண்டு பெருவாழ்வு வாழக்கூடிய விழிப்பு நிலை அவனுக்கு உண்டாகின்றன. ஆத்ம சாதனத்தில் அவனுக்கு முன்னேற்றம் விரைவில் வந்தமைகின்றன. இதனால் ஆத்ம விழிப்பிற்காக ஒருவருக்குக் 'குரு' அவசியமாகின்றார் என்பது வெளிப்படை. எவரிடமும் இல்லாதது என்று எதுவும் இல்லை; எனினும் மெய்க் குருவினைச் சந்தித்து உபதேசம் பெற்றாலன்றி இவ்வுலகில் உய்வினை அடைய இயலாது என்பர் சித்தர் (பெரிய ஞானக் கோவை, *1949,* p.*712).*

ஞான ஒளியை தனித்தே முயன்று பெற்றுவிட முடியாது என்பதை உணர்ந்த சூஃபிகள் அதற்கு முறையான ஞான குருவின் துணை வேண்டும் என்பதையும் சுட்டுகின்றனர். இதற்காக ஞானப் பாதையில் வழிநடத்திச் செல்லக்கூடிய குருவின் துணையைப் பெரிதும் வலியுறுத்துகின்றனர் (அஜ்மல் கான் - உவைஸ், *1997,* p.*230-623).* 'குருவில்லா வித்தை பாழ்' என்பதும் 'தொட்டுக் காட்டாத வித்தை சுட்டுப் போட்டாலும் வராது' என்பதும் முன்னோர்களின் அனுபவத்தின் வாயிலாக எழுந்த பழமொழிகள் ஆகும். இதையே சூஃபிகள், 'குருவற்ற ஞானப் பாதை குணங்களற்ற சீடனை உருவாக்கி விடும்' என்றும் இந்நிலை 'கருவற்ற விதைக்கு ஒப்பாகும்' என்றும் குறிப்பிடுகின்றார்கள் (அஜ்மல் கான் - உவைஸ், *1997,* p.*63).*

சித்தர் நெறியும் சூஃபி நெறியும் தியானம் செய்ய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகின்றன. தியானம் செய்வதற்கு மனதைச் செம்மைப் படுத்தும் வழியைக் குருவிடம் அறிய வேண்டும். மெய்ஞ்ஞான குருவின் துணையோடுதான் ஞானம் பயில வேண்டும். மெய்ஞ்ஞானத்தின் உண்மையான விளக்கத்தை புனித தீர்த்தங்களில் மூழ்கி நீராடுவதாலோ தானம் செய்வதாலோ அல்லது நூறு பிராணாயாமம் செய்வதாலோ அடைய முடியாது. ஆனால் சரியான குருவிடம் உபதேசம் பெற்று, அதைத் தொடர்ந்து சிந்தித்து வருவதனால் அடைந்து விடலாம் (கமலக்கண்ணன், *1997,* p.*134).*

உண்மையில் முத்தி அல்லது மோட்சம் என்பது குரு கொடுக்க சீடன் பெற்றுக்கொள்ளக் கூடியதல்ல.குருவின் உபதேசம் என்பது ஆற்றைக் கடப்பதற்குப் படகில் ஏறி எப்படிச் செல்வதென்று, கரையில் இருந்து கொண்டே வழிகாட்டுவதைப் போன்றதாகும். மெய்ஞ்ஞான குருவை அடைந்து பணிவோடு வேண்டினால், அவர் கருணையோடு பயன் ஏதும் எதிர்பாராமல் உபதேசம் தந்தருள்வார். பிறவியை அறுத்துப் பேரின்பம் பெறுவதற்கான ஞான மார்க்கத்தைக் காட்டியருள்வார். அவ்வாறு உரிய ஆசானிடம் ஞானக் கல்வியைக் கசடறக் கற்று, கற்ற பின்னர் அதற்குத் தக்கவாறு தவ நெறியில் நிற்க வேண்டும் என சித்தர்களும் சூஃபிகளும் அறிவுறுத்துகின்றனர்.

குருவின் இன்றியமையாமையைப் பற்றி வலியுறுத்திக் கூறியுள்ள சித்தர்களும் சூஃபிகளும் போலி குருமார்களிடம் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்துகின்றனர். போலிகுருமார்களின் தாக்கம் இந்து சமயத்தில் சற்று அதிகமாகவே இருந்துள்ளது. இந்து சமய வழிபாட்டு முறையிலுள்ள சடங்கு சம்பிரதாயங்களைக் காரணமாக வைத்தே இதில் அதிகமான போலி குருமார்கள் தோன்றினார்கள். சித்து வேலைகள் செய்து மக்களைக் கவர்வதும், பொருளறியாமல் மந்திரங்களைச் சொல்லுவதும், காம விகார எண்ணங் கொண்டு திரிவதும், தனக்குள் இறையாற்றல் வந்து விட்டதாகப் புலம்புவதும், சாதி பேதம் வளர்ப்பதும் என பல வழிகளிலும் மக்களின் அறியாமையைப் பயன்படுத்தி, அவர்களை அச்சுறுத்தி, பொருள் பறிப்பது ஒன்றையே நோக்கமாகக் கொண்டு செயல்படுபவர்கள் இவர்கள் (பெரிய ஞானக் கோவை, *1949,* pp.*113, 215, 352, 770, 727728).* இப்படி மனம் அடங்காமல் தன்னைக் குருவென்று கூறித் திரிந்த பல போலி குருமார்கள் இறுதியில் காமம் தலைக்கேறி ஒன்றும் இல்லாமல்

மாண்டுபோவார்கள் என்பர் சித்தர் (பெரிய ஞானக் கோவை, *1949*, p.*338*).

சூஃபிகளும் சித்தர்களைப் போன்றே போலிகளைச் சாடியிருக்கின்றனர். பாவி அதிகம் பேசுவான், தன்னை மெய்ஞ்ஞானி என்பான், மந்திரங்கள் சொல்வதாகக் கூறுவான், ஞானம் பல பேசுவான், ஆன்மா அழிந்து விட்டாலும் உடல் அழியாது என்பான், முன்பு கேடான சாதியில் இருந்ததாகவும் இப்போது மேலான 'தீன்' குலத்தில் பிறந்திருப்பதாகவும் கூறுவான், புத்திமதிகள் பல சொல்லி மயக்கிடுவான். மேலும், தன்னால் இறைவனைக் காட்ட முடியும் என்பான், பணம் பொன்னுக்காக ஆசை வைத்து நாவினிக்கப் பேசி மனதைக் கவருவான், பிறகு முழுமையாக நம்மை ஏய்த்து விடுவான் (அஜ்மல் கான் - உவைஸ், *1997*, p.*501*). இவ்வாறாக குருவின் தேவையை மக்களுக்கு உணர்த்திய அதே வேளையில் போலி குருவிடம் வீழ்ந்து விடாமல் இருக்க மக்களை எச்சரிக்கும் போக்கில் சித்தர்களும் சூஃபிகளும் ஒன்றுபோலவே சிந்தித்துள்ளனர்.

## இறை ஒருமை

சித்தர் சூஃபி இலக்கியங்கள் இறை ஒருமையை அதிகமாக வலியுறுத்திப் பாடியுள்ளன. சித்தர்களுடைய பாடல்கள் ஒன்றே கடவுள் என்னும் கொள்கையை உலகுக்கு அறிவுறுத்துகின்றன. சித்தர்களுள் ஒருவரான திருமூலர், 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என உறுதியாக உரைக்கின்றார் (திருமந்திரம், *1962*, ஜீ.*2104*). இக்கருத்தையே அகத்தியரும், 'ஒருவனென்ற தெய்வத்தை வணங்கவேணும்' என்கின்றார் (பெரிய ஞானக் கோவை, *1949*, ஜீ.*307*). உள்ளது ஒரே கடவுள். அது தன்னையே உயிராகவும் உலகமாகவும் தனது மாயா சக்தியால் காட்டும் வல்லமை உடையது. ஒன்றான கடவுளையே உலக மக்கள் தம்முடைய சமய நம்பிக்கைகளுக்கு ஏற்ப பல்வேறு நாமங்களால் வழிபடுகின்றனர் என்பது சித்தர்களின் தெளிவான கருத்து முடிவாகும்.

சூஃபிகளுள் கபீருடைய ஏக இறைச் சிந்தனை மிகவும் சிறப்புக்குரியதாகும். "இந்துக்களுடைய தெய்வம் காசியிலும், இஸ்லாமியர்களுடைய தெய்வம் மெக்காவிலும் இருக்க அனைவருக்கும் பொதுவாகிய தெய்வம் எல்லா உயிர்களின் இதயத்துக்குள்ளேயே இருக்கின்றான்" (வாழ்வியற் களஞ்சியம், *1991*, p.*36*) என்னும் இவருடைய மத இணக்கக் கொள்கைகள் சித்தர்களுடைய ஓரிறைக் கொள்கையை அப்படியே பிரதிபலிக்கின்றன."நம்முடைய ராமர், ரஹீம், கரீம், கேசவன், அல்லா எல்லோருமே அந்த ராமர்தான்! ஐயத்தை ஒழி. ஈசுவரன் ஒருவரே. அவரே உலகம் தாங்கி. இரண்டாமவர் கிடையாது. கடவுள் இருவரல்லர்; ஒருவரே. யார் எப்படிச் சொல்லிக் குழப்பினாலும் இப்பாதையை விட்டு விலகாதே" என்றும் அவர் மக்களை எச்சரிக்கின்றார் (வாழ்வியற் களஞ்சியம், *1991*, p.*37*).

தன்னையறிதல் என்பது சித்தர்கள் வலியுறுத்தும் மிக உயரிய ஆன்மீக அனுபவமாகும். தன்னையறியாதக் காரணத்தால்தான் உலக மக்கள் துன்பத்தில் தத்தளிக்கின்றார்கள். தன்னையறிந்தவர்கள் கேடில்லா வாழ்க்கையை வாழ்வார்கள் என்பது சித்தர்களின் கொள்கையாகும். இக்கொள்கையை, 'தன்னையறியத் தனக்கொரு கேடில்லை, தன்னையறியாமல் தானே கெடுகின்றான்' எனத் திருமூலர் விளக்கப்படுத்துகின்றார். இக்கொள்கை உலக மக்கள் எல்லாருக்கும் பொதுவானது என்பதை, 'எவன் தன்னை அறிந்தானோ, அவன் நிச்சயமாக தன் தலைவனை அறிந்தான்' என்னும் நபிகள் நாயகத்தின் வாக்கால் அறியலாம் (கமலக்கண்ணன், *1997*, p.*61*). தன்னையறிதலின் முக்கியத்துவம் சூஃபி பாடல்களில் அதிகம் வலியுறுத்தப்படுகின்றது.

சித்தர்கள் இறைவனை காதலியாகவும் ஞானகுருவாகவும் தாயாகவும் தந்தையாகவும் இன்னும் பலவாகவும் உருவகப்படுத்திப் பாடுவதுண்டு. இறைவனுக்கும் தமக்குமிடையே யாதொரு கட்டுப்பாடும் இல்லாத நிலையில் அவர்கள் இறைவனைச் சிந்தித்தது போலவே சூஃபிகளும் சிந்தித்திருக்கிறார்கள். குணங்குடி மஸ்தான் என்னும் சூஃபி, தம்முடைய ஞானகுரு தமக்கு

உண்மை ஞானமளித்து காப்பாற்றுமாறு கண்ணீர் மல்கப் பாடியுள்ள பாடல்கள் இனிமை தோய்ந்த சூஃபியப் பாடல்களுக்குச் சிறந்த சான்றாகத் திகழ்கின்றன. குணங்குடி மஸ்தான் சித்தர் பாடல்களில் தோய்ந்த நெஞ்சினை உடையவர். எனவே சூஃபியத் தத்துவத்தை சித்தர் பாடல் அமைப்பில் இவர் பாடியுள்ளார். சித்தர்கள் பயன்படுத்தியுள்ள குறியீடுகளையும் (symbols) பதி, பசு, பாசம், கன்மம், மாயை, நமசிவாய, சிவனடி, போன்ற சைவ சித்தாந்தம் சார்ந்த சொற்களையும் இவர் தனது பாடல்களில் பரவலாகப் பயன்படுத்தியுள்ளார். இன்னும், சித்தர்களுடையப் பாடல்களில் இறைவன் அணு எனவும் குறிக்கப்படுகின்றான். 'அணுவில் அணுவினை ஆதி பிரானை' என்பர் சித்தர். பெண் சூஃபியான இறசூல் பீவியின் பாடல்களில் பல இடங்களில் இறைவன் அணுவுக்குள் அணுவானவன் என்னும் பொருளில் குறிப்பிடப்பட்டுள்ளான். இவரைப் போன்றே இறை ஒருமையைப் பேசும்போது பெரும்பாலான சூஃபிகளுடைய பாடல்களில் சித்தர் பாடல்களின் சாயல் இருப்பதைப் பரவலாகக் காணமுடிகின்றது.

### சித்தர் சூஃபி திருத்தலங்கள்

தமிழ்நாட்டில் இருக்கின்ற புகழ்ப்பெற்ற சமயத் திருத்தலங்கள் சித்தர்களின் சமாதிமீதோ, சமாதியை ஒட்டியோ அமைந்திருக்கும். போகரின் சமாதிமீது பழனி முருகன் கோயில் அமைந்திருப்பது இதற்குச் சான்றாகும். இது போன்றே திருவண்ணாமலை, திருப்பரங்குன்றம், மதுரை மீனாட்சி அம்மன் ஆலயம் என நூற்றுக்கணக்கான ஆலயங்கள் பதினெண் சித்தர்கள், ஏனைய சித்தர்கள் என பல நூறு சித்தர்களுடன் தொடர்புபடுத்தப்படுகின்றன. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் சமாதியான சித்தராயினும் இருபத்தொன்றாம் நூற்றாண்டில் சமாதிகண்ட சித்தராயினும், சித்தர்களின் சமாதிகள் எப்போதும் மக்களை ஈர்க்கின்ற ஆன்மீக மையங்களாக உருமாற்றம் பெற்றுவருவதை இன்றும் தமிழ்நாட்டில் காணமுடிகிறது. சித்தர்களின் சமாதி போன்றே சூஃபிகளின் சமாதிகளும் தமிழ்நாட்டில் புகழ்பெற்றவையாக விளங்குகின்றன.

சூஃபித்துவத்தின் தோற்றத்தோடு இறை நேசர்கள் (wali) குழாமும் உருவானது எனலாம். வலிமார் (wali) என இந்த இறை நேசர்கள் அழைக்கப்பட்டனர். சூஃபித்துவ வழிகாட்டிகளாய்த் திகழ்ந்த இத்தகைய இறை நேசர் பெயரால் நினைவுச் சின்னங்கள் தோன்றின. இறை நேசர்களின் சமாதிகள் காலவோட்டத்தில் திருத்தலங்களாக உருவாகின. முஸ்லீம்கள் மட்டுமின்றி பிற மதத்தவரும் ஆண்டுதோறும் புனித யாத்திரை மேற்கொள்ளும் புனிதத் தலங்களாக இவைத் திகழ்ந்தன. தமிழகத்தில் உள்ள நாகூர், முத்துப்பேட்டை போன்ற இடங்களில் உள்ள சூஃபிகளின் சமாதிகளை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம் (நயினார் முகம்மது, 1978, p.133). இலங்கையிலும் இத்தகைய புனிதத் தலங்கள் பல உள்ளன. தங்களுக்கு ஏற்பட்டுள்ள உலகியல் துன்பங்களும் சிக்கல்களும் தீரவேண்டும் என்பதற்காக பொதுமக்கள் இத்தலங்களுக்குச் செல்கின்றார்கள். ஆன்மீகத் தேடல் உள்ளவர்களும் இங்கே செல்வதுண்டு. இவ்விடங்களில் சமாதி கொண்டுள்ள ஞானியர்கள் தங்களுக்கு எல்லா நிலைகளிலும் உதவக்கூடிய பேராற்றலைப் பெற்றுள்ளார்கள் என்னும் நம்பிக்கையே பொதுமக்கள் இத்தலங்களுக்குச் செல்வதற்குக் காரணமாக அமைகின்றன.

### முடிவுரை

பொதுவாகவே சூஃபித்துவம் தமிழ் நாட்டுக்கு வந்து சேர்ந்த பின்னர் தமிழ் நாட்டின் மண் வாசனை சூஃபித்துவத்தில் கலந்துள்ளதை சூஃபி இலக்கியங்களின் வழி அறியமுடிகின்றது. இது பல ஆறுகள் பொதுக்கடலில் கலப்பதைப் போன்றது. இத்தகைய கலப்பை சமரசப் பண்பு என அழைக்கலாம். தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் தமிழ் பேசும் மக்களிடையே பல சூஃபி ஞானியர் தோன்றி உள்ளனர். தமிழ் மொழியில் பாடப்பட்டுள்ள அவர்களது பாடல்களில் முன்பிருந்த தமிழ்ச் சித்தர்களின் பாடல்களில் காணப் பெறுகின்ற கருத்துகள் பரவலாகக் காணப்படுகின்றன. சித்தர்களும் சூஃபிகளும் மெய்ஞ்ஞானம்

பெறுவது ஒன்றையே தங்கள் வாழ்க்கையின் நோக்கமாகக் கொண்டு வாழ்ந்தவர்கள். எனவேதான் சூஃபிகளின் பாடல்களில் இயல்பாகவே சித்தர்களின் தாக்கம் வந்து அமைந்து விடுகின்றது.

அதுமட்டும் அல்லாமல் தமிழ் நாட்டில் வாழ்ந்த சூஃபிகளின் காலத்துக்கு முன்பே சித்தர் பாடல்கள் மக்களிடையே புழக்கத்தில் இருந்தன. மெய்ஞ்ஞானத் தேடலில் ஈடுபட்டிருந்த சூஃபிகள் இச்சித்தர்ப் பாடல்களில் ஆழ்ந்ததன் காரணமாக சித்தர் தாக்கம் சூஃபிகளின் பாடல்களில் வெளிப்பட்டுள்ளன. எவ்வாறாயினும் இம்மெய்ஞ்ஞானியர்களின் வரவால் தமிழகத்து இந்துக்களும் முஸ்லீம்களும் மெய்ஞ்ஞானத் தேடலின் பக்கம் தங்களது பார்வையைத் திருப்பவும், சாதி சமய பேதமின்றி வாழவும், சித்த மருத்துவ முறைகளைப் பரவலாக அறிந்திருக்கவும், நல்ல ஆன்மீகத் தமிழ் இலக்கியங்களைப் பெற்றிருக்கவும், சிறந்த தியான வழிபாட்டுத் தலங்களைக் கொண்டிருக்கவும் வழி ஏற்பட்டுள்ளது. இம்மெய்ஞ்ஞானியர்கள் விதைத்த ஆன்மீகம் என்னும் விதை இன்று மிகப் பெரிய சித்தர்சூஃபிய சிந்தனையாளர் கூட்டத்தை உருவாக்கியுள்ளது. தமிழ் நாட்டில் மட்டும் அல்லாமல் உலக நாடுகள் பலவற்றில் வாழும் தமிழர்களிடையே மெய்ஞ்ஞானச் சிந்தனைகள் வேர் விடுவதற்கு சித்தர்களும் சூஃபிகளும் விட்டுச் சென்றுள்ள மெய்ஞ் ஞான இலக்கியங்கள் பெரும்பங்காற்றி வருகின்றன.

## References

Ajmal Khan, M., P, & Uvais, M., P. (1997). *Islamiya Tamil Ilakiya Varalaru.* Madurai: Madurai Kamraj University.

Kamalakannan, P. (1997). *Thirupukazh Kaattum Mukthi Neri.* Chennai: Vanathi Publications.

Narayanan, K. (1988). *Sithar Thathuvam.* Chennai: Tamil Puthagalayam.

Nayinar Muhamad , S. (1978). *Islamiyath Tamil Ilakkiya Kaddurai Koovai.* Thiruchy: Islamiyath Tamil Ilakkiyak Kalagam.

Saravanamuthupillai, V. (Ed). (1949). *Periya Ngana Kovai.* Chennai: Ratna Naikar & Sons.

Subramaniam, N, & Kausalya Subramaniam. (1993). *Inthiya Sinthanai Marabu.* Chennai: South Asian Books.

*Thirumanthiram.* (1962). Chennai: Saiva Sithantha Nurpathippuk Kazhagam.

*Vazjviyal Kalanjiyam.* (1991). (Vol, 6). Thanjavur: Thanjavur Tamil University.

# மொரீசியசில் தைப்பூசக் காவடித் திருவிழா: சமூகப் பண்பாட்டுக் கூறுகள்

# *Kavadee* festival in Mauritius from a Socio - Cultural Perspective

முனைவர் உமா அழகிரி / Dr Uma Allaghery[1]

**Abstract**

Thai *Pusa Kavadee* festival is celebrated with great fervour nationally in Mauritius. Records indicate that the *Kavadee* procession was held for the first time in 1874 at Port Louis, the capital city of Mauritius. This article describes the Kavadee festival, which falls within the month of *Thai*, in Mauritius from a socio-cultural perspective. This qualitative paper adapts a descriptive mode in explaining the participant observations made by the researcher. The findings show that almost all the Mauritian Hindus are directly or indirectly involved in the *Kavadee* festival. Their contributions during this festival include modes of fasting, special prayers, pilgrimage, and upholding good conducts, which are also the major considerations discussed in this paper. The reasons for carrying the *Kavadee*, its importance and the impact it has among the Mauritian Hindus are highlighted in this paper as well.

Date of submission: 2021-06-02
Date of acceptance: 2021-06-20
Date of Publication: 2021-07-20
Corresponding author's Name:
Dr Uma Allaghery
Email: u.allaghery@gmail.com

**Key Words:** Thaip Pusak Kavadee, procession, socio - cultural, participant observation, mode of fasting, pilgrimage, good conducts

## முன்னுரை

உலக வாழ் தமிழர்களின் வாழ்வில் திருவிழாக்கள் ஒரு முக்கியமான இடம் பெற்று வருகிறது. அத்திருவிழாக்களுள் காவடித் திருவிழா குறிப்பிடத்தகுந்தது. மொரீசியசில் முருகப் பெருமான் தமிழர்களால் மட்டுமல்லாமல் தமிழர் அல்லாதோர் பலரால் போற்றி வணங்கப்படுகிறான். மொரீசியசில் உள்ள பெரும்பாலான கோவில்கள் முருகனுக்குரியது. தமிழருக்குரிய திருவிழாவாக விளங்கிய தைப்பூசக் காவடி காலப்போக்கில் ஒரு பொதுவான திருவிழாவாக ஆகிவிட்டது. இது நாட்டளவில் பரவலாகக் கொண்டாடப்படுகிறது. இது தமிழினத்துக்குப் பெருமை சேர்க்கிறது. மொரீசியசில் தைப்பூசக் காவடியைச் சமூக அளவில் கொண்டாடும் முறையையும் பண்பாட்டு அளவில் ஏற்படும் வளர்ச்சியையும் இக்கட்டுரை விளக்குகிறது. மொரீசியசு சமூகத்தில் முருகப்பெருமான் பெறுமிடத்தையும் தமிழ்ப் பண்பாட்டின் வெளிப்பாட்டையும் அறிவது இக்கட்டுரையின் முதன்மை நோக்கம் ஆகும்.

## முந்தய ஆய்வு

மொரீசியசில் காவடித் திருவிழா பெரிய அளவில் கொண்டாடப்படுகிறது. இதைப் பற்றிப் பல கட்டுரைகள் எழுதப்பட்டன. ஒரு சில இங்குக் குறிப்பிடப்படுகின்றன. "மொரீசியசில் பண்பாட்டுக் கூறுகள்வழி தமிழ்மொழி கற்பித்தல்", "மொரீசியசில் முருகப்பெருமானும் திருப்புகழ்ப்

[1] The author is a lecturer in the Department of Tamil Studies, Mahatma Gandhi Institute, Mauritius. u.allaghery@gmail.com

பாடல்களும் பெறுமிடம்", "மொரீசியசில் முருக வழிபாடு" ஆகிய கட்டுரைகள் முந்தய ஆய்வுகளாக விளங்குகின்றன. இவை தமிழ் மொழியிலும் பிரஞ்சு மொழியிலும் எழுதப்பட்டுள்ளன. இவை முனைவர் உமா அழகிரியால் எழுதப்பட்ட கட்டுரைகள் ஆகும். இதற்கு முன் இத்தலைப்பை ஒட்டிக் கட்டுரை எழுதப்படவில்லை.

## தரவுகளும் ஆய்வு நெறியும்

மொரீசியசில் தைப்பூசக் காவடித் திருவிழா: சமூகப் பண்பாட்டுக் கூறுகள் என்ற தலைப்பு கொண்டுள்ள இவ்வாய்வுக் கட்டுரை தரப்பகுப்பாய்வு (qualitative) நெறியின் அடிப்படையில் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. "குறிப்பிட்ட ஒரு நோக்கத்தை மனத்தில் வைத்துக்கொண்டு ஒன்றை நுணுக்கமாக நோக்குவது உற்றுநோக்குவது உற்றுநோக்கல் எனப்படும்", (முத்துச்சண்முகன், வேங்கடராமன், 2013). "உற்றுநோக்கலை இரு வகையாகப் பிரிக்கப்படும். அவற்றுள் ஒன்று உற்று நோக்கல் அல்லது உடனிருந்து நோக்குதல்" (Participant observation), (முத்துச்சண்முகன், வேங்கடராமன், 2013) என்பது ஆகும். பங்குபெறும் உற்றுநோக்கல் அல்லது உடனிருந்து நோக்குதல் என்பதில் ஆய்வாளர் தாமும் ஒருவராக இருந்து அப்பொருளில் தம்மையும் கலந்து, வாழ்ந்து, பெறும் அனுபவம் இவ்வகையில் சிறப்பான ஒன்று. இவ்வகையைக் கொண்டு இவ்வாய்வுக் கட்டுரை எழுதப்பட்டுள்ளது. இப்பணிக்குப் பண்பு சார் நூலக ஆய்வும் விளக்கவியல் ஆய்வுமுறையும் உடனிருந்து நோக்குதல் ஆய்வும் பின்பற்றப்பட்டுள்ளன.

## மொரீசியசில் காவடித் திருவிழா

மொரீசியசில் தைப்பூசக் காவடி முதன் முதலில் கிட்டத்தட்ட 1874ஆம் ஆண்டில் போட்லூயி என்னும் தலைநகரத்தில் நடைபெற்றது எனக் கூறப்படுகிறது. மொரீசியசில் கிட்டத்தட்ட இருநூறு கோவில்கள் எழுப்பப்பட்டன. அவற்றுள் அதிகமானவை முருகப் பெருமானுடைய கோவில்கள். மொரீசியசு தமிழர்களுக்குக் குலத் தெய்வமாக விளங்குகின்றவன் முருகப் பெருமானேதான் என்று கூறுவது மிகையாகாது. 'சிவ சுப்பிரமணியர் கோவில்', 'அருள்மிகு தண்டாயுதப்பாணி கோவில்', 'திருத்தணி முருகன் கோவில்', 'அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோவில்' முதலியவை முருகன் கோவில்களுக்குப் பெற்றுள்ள பெயர்கள் ஆகும். பால முருகன், வேல் வடிவம், முருகப்பெருமான் வள்ளி தெய்வயானையுடன் கொண்டுள்ள வடிவம், ஆண்டிக் கோல வடிவம், ஆறுமுகம் ஆகிய வடிவங்கள் கொண்ட கற் சிலைகள் கோவில்களில் வைக்கப்பட்டுள்ளன. தைப்பூசம், பங்குனி உத்திரம், சித்தரைப் பௌர்ணமி, வைகாசி விசாகம், ஆடிக் கிருத்திகை, ஆவணி மூலம் முதலிய நன்னாள் அன்று காவடித் திருவிழா கோவில்களில் இடம்பெறும். அவற்றுள் தைப்பூசம் மற்றும் சித்திரைப் பௌர்ணமி காவடி பெரும் அளவில் கொண்டாடப்படுகின்றன.

ஆய்வாளரின் உடனிருந்து நோக்குதல் முறை மேற்கொள்ளப்பட்டுள்ளது; கண்டுள்ள சமூகப் பண்பாட்டுக் கூறுகள் கீழ்வருமாறு தொகுக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

## விரதம் இருத்தல்

"விரதம் இருப்பது என்பது வழிபாட்டிற்கு மிக முக்கியமான ஒரு கூறாகக் கருதப்படுகிறது" (பொன்னையா, பால்தம்புராஜ், 2014). விரதம் இருத்தல் என்பது தமிழர்களிடத்தில் காணப்படும் ஒரு சிறந்த பழக்கம் ஆகும். திருவிழாவின்போதும் சமயச் சடங்குகளின்போதும் தமிழர்கள் நோன்பு மேற்கொள்வார்கள். உண்ணா விரதம், மௌன விரதம், மரக்கறி சாப்பிடுதல் என இவை போன்ற விரதங்கள் பொதுவானவை. காவடித் திருவிழாவின்போது காவடிகளையும் பால்குடங்களையும் எடுக்கின்றவர்கள் பொதுவாக விரதம் இருப்பது வழக்கம். அவர்கள் மரக்கறி உணவு வகைகளைச் சாப்பிடுவார்கள்; வெளிச் சாப்பாடு சாப்பிடாமல் வீட்டில் சமைத்த சாப்பாட்டை மட்டும் உட்கொள்வார்கள். ஒரு சிலர் உண்ணா நோன்பு மேற்கொண்டு இரவு நேரத்தில் சாப்பாடு சாப்பிடுபவர்களும் இருக்கிறார்கள். விரதம் இருந்தால் உடல்நலம் சீராகும். சாப்பாடு அளவில் மட்டுமல்லாமல் கட்டில்மேல் தூங்காமல் பாய் விரித்துத்

தரையில் தூங்குவார்கள். கள் உண்ணாமை, புகை பிடிக்காமை ஆகிய பழக்கத்தைக் காவடித் திருவிழா விரதத்தின்போது ஒருசிலர் கைவிடுவார்கள். புகை பிடித்தல் என்ற தீய பழக்கத்தை விட்டுவிடாமல் இருப்பவர்களும் இருக்கிறார்கள். காவடித் திருவிழா சமயத்தில் பக்தர்கள் முருகப்பெருமானுடைய பேரருளைக் கிடைக்கத் தியாகம் செய்கிறார்கள்; ஒழுக்க நெறியைப் பின்பற்ற முயற்சி செய்கிறார்கள்.

### பக்திப் பரவசம்

மொரீசியசில் தைப்பூச நாளன்று ஒரு பொது விடுமுறை நாள். அன்றைக்கு பக்தர்கள் விடியற்காலையில் ஆற்றங்கரையில் கூடுவார்கள். ஆற்றங்கரையில் குளித்துக் காவி நீற ஆடையை உடுத்திக்கொள்வார்கள். ஆற்றங்கரையில் வண்ண வண்ணக் காவடிகள் வரிசை வரிசையாக வைத்தல், சாம்பிராணி போடுதல், ஊதுவத்தி ஏற்றுதல், கற்பூரம் கொளுத்துதல், பக்திப் பாடல்கள் ஒலித்தலும் பாடுதலும், முருகப் பெருமான்மீது சிந்தை வைத்துத் தியானித்தல், அலகு குத்துதல், வேல் அபிடேகம் செய்தல், அர்ச்சனைப் பொருட்களைத் தயாரித்தல் முதலியவை கண்கொள்ளாக் காட்சியாக அமையும். நாட்டளவில் கொண்டாடப்படும் தைப்பூசக் காவடித் திருவிழா ஊர்தோறும் பக்தர்கள் பால்குடங்களையும் காவடிகளையும் எடுத்து வீதி வலமாகக் கோவிலை நோக்கிச் செல்வார்கள். வீதியில் ஒரு சிலர் பானகம் பகிர்ந்துகொள்வார்கள்; வேறு சிலர் பழங்களையும் பலகாரங்களையும் கொடுப்பார்கள். ஈதல் நமக்கு மகிழ்ச்சி தருகிறது; மனநிறைவு ஏற்படுகிறது. ஈகையின் சிறப்பினைப் பற்றி,

> "யாவர்க்கும் ஆம் இறைவனுக்கு ஒரு பச்சிலை
>
> யாவர்க்கும் ஆம் பசுவுக்கு ஒரு வாயுறை
>
> யாவர்க்கும் ஆம் உண்ணும்போது ஒரு கைப்பிடி
>
> யாவர்க்கும் ஆம் பிறர்க்கு இன்னுரை தானே" - (திருமந்திரம், முதல் தந்திரம் 16, பாடல் 252)

என்று திருமூலர் ஈகை செய்யும் முறைகளை மிக அழகாக விளக்கம் தருகிறார்.

தெருவெல்லாம் சூடாக இருக்கும்; வழியைத் தணிந்துகொள்ளக் கால்நடையாக வருகின்றவர்களுக்கு நீரும் மஞ்சள் நீரும் ஊற்றுவார்கள். இது மக்களுடைய மனிதாபிமானத் தன்மையைச் சுட்டிக்காட்டுகிறது. பெண்கள் கும்மியும் கோலாட்டமும் அடிப்பார்கள். நாட்டளவில் ஆயிரக்கணக்கான மக்கள் திரு உலாவில் கலந்துகொள்வதைக் காணலாம். எங்கும் முருகப் பெருமானுடைய பக்திப் பொங்கும் பாடல்களைக் கேட்கலாம். ஒரே பக்தி வெள்ளம் நாட்டளவில் நிகழ்வதை உணரலாம்.

### வணிக லாபம்

எந்த விழாவாகவோ அல்லது திருவிழாவாகவோ இருந்தாலும் தேவையான பொருட்களை வாங்குவது அவசியம். அச்சமயத்தில் வணிகர்கள் நல்ல லாபம் செய்வார்கள். திருவிழாவுக்குத் தேவையான பொருட்களின் விலை அதிகரிக்கும். பீன்சு, பலாக்காய், தேங்காய், வாழைப்பழம், பால், பூக்கள் போன்ற முதன்மையான பொருட்களின் விலை உயரும். மக்கள் வேறு வழியில்லாமல் அவற்றை வாங்குவது உண்டு. இவ்வாறு வாணிப லாபம் அதிகரிக்கும்; நாட்டின் பொருளாதாரமும் உயரும் என்பது திண்ணம். மக்களுக்குத் தேவையான பொருட்கள் கிடைக்குமாறு வணிகர்கள் எடுக்கும் முயற்சியைப் பாராட்டத்தக்கது.

### அன்னதானம்

மணிமேகலையில் அன்னதானம் சிறப்பிக்கப்படுகிறது. சீத்தலைச் சாதனார் மணிமேகலை என்னும் பாத்திரத்தின் வாயிலாக இவ்வறச் செயலைச் சுட்டிக்காட்டுகிறார். தைப்பூசக் காவடித் திருவிழாவின்போது கோவிலில் கொடியேற்றம் முதல் கொடி இறக்கம் வரை பெரும்பாலான கோவில்களில் அன்னதானம் வழங்கப்படும். 'பிரியாணி', அறு சுவை உணவு, சர்க்கரைப் பொங்கல், சுண்டல், பானகம், புளிச்சாதம் முதலியவை பூசைக்குப் பிறகு பக்தர்களுக்கு வழங்கப்படும். காவடித் திருவிழா அன்று ஒரு

சிலர் கோவிலுக்கு வருகின்ற அனைவருக்கும் உணவு அளிப்பது வழக்கம். ஒரு சிலர் சாப்பிடுவதோடு வீட்டுக்குக்கூட எடுத்துப் போவதும் உண்டு. தமிழர் அல்லாதோர்க்கு ரசம் மிகவும் பிடிக்கும். அதனால் அவர்கள் புட்டிகளில் வீட்டுக்குக் கொண்டு போவார்கள். அன்றைக்கு சாம்பார், ரசம், வாழைக்காய், உருளைக்கிழங்கு, பீன்சு, பறங்கிக்காய், பலாக்காய் என்ற அறுசுவை உணவோடு பாயசம், அப்பளம் மற்றும் வடை முருகப்பெருமானுக்குப் படையலாக வைத்த பிறகு எல்லாருக்கும் பகிர்ந்துகொள்வார்கள். உணவு வகைகளைப் பரம்பரைப் பரம்பரையாகப் பேணிக் காக்க அன்னதானம் உதவுகிறது. மேலும் மக்களிடத்தில் உள்ள விருந்தோம்பல் பண்பை இதனால் அறிய முடிகிறது.

### வேற்றின மக்களின் ஈடுபாடு

மொரீசியசில் நாளடைவில் தமிழர் அல்லாதோர் பலர் முருகப் பெருமானைப் பய பக்தியோடு வணங்கத் தொடங்கினார்கள்; இந்திக்காரர், தெலுங்கர், மாராட்டியர், கிறித்துவர் ஆகியோர் பத்து நாட்கள் விரதம் இருந்து காவடி தூங்குவார்கள்; பத்து நாட்களாக நடைபெறும் சிறப்பு வழிபாடுகளில் கலந்துகொள்வார்கள்; அவர்கள் தேவைப்படும்போதெல்லாம் கோவிலில் உதவி செய்வார்கள். ஊர்வலத்தின்போது தேரை அலங்காரம் செய்தல், கோவில் வளாகத்தை அலங்காரம் செய்தலும் தோரணம் கட்டுதலும், அன்னதானம் வழங்குதல், கோவிலைச் சுத்தம் செய்தல் ஆகியவற்றில் பங்கு எடுத்துக் கொள்வார்கள். தைப்பூசக் காவடியில் மட்டுமல்லாமல் சித்திரைக் காவடியிலும் வேற்றின மக்கள் காவடிகளையும் பால்குடங்களையும் எடுப்பதைப் பெருகிக் கொண்டே வருகிறது எனலாம். தமிழர் வழிபாட்டு முறைகளில் அவர்கள் காட்டும் அக்கறையை இது புலப்படுத்துகிறது. காவடியை அலங்காரம் செய்வதற்கு முருகப்பெருமானுடைய பல்வேறு படங்களை வாங்கிக் கொண்டு காவடித் திருநாளன்று தங்கள் காவடிகளில் கட்டிவிடுவார்கள். கண்கண்ட தெய்வமான முருகப்பெருமான்மீது அவர்கள் கொண்டுள்ள நம்பிக்கையை இது பிரதிபலிக்கிறது. மேலும் நாட்டில் இன ஒற்றுமை உணர்வை வலுப்படுத்துகிறது; அமைதியும் நிலவச் செய்கிறது.

### சிறப்பு வழிபாடு

நம் அன்றாட வாழ்வில் வழிபாடு பிரிக்க முடியாத ஒரு கூறு ஆகும். முருக வழிபாடு தமிழரின் பண்பாடு, மொழி, தத்துவம் ஆகியவற்றோடு இணைந்துள்ளது எனலாம். மொரீசியசு தமிழர் பொதுவாக வெள்ளிக்கிழமைதோறும் மாலையில் நடைபெறும் வழிபாட்டில் கலந்துகொள்வது உண்டு. ஆனால் திருவிழாக் காலங்களில் பத்து நாட்களாக நடத்தப்படும் சிறப்பு வழிபாடுகளில் கலந்துகொள்வதைக் கவனிக்கலாம். காவடி மற்றும் பால்குடங்களை எடுக்கின்றவர்கள் கண்டிப்பாக மாலையில் ஆறு மணி தொடங்கி எட்டு மணி வரை நடைபெறும் வேள்வி, மலர் வழிபாடு, தீபாராதனை, கோவில் வலம் ஆகிய முக்கியச் சடங்குகளில் கலந்துகொள்கிறார்கள். இது புற வழிபாட்டின் முக்கியத்துவமும் முருகப்பெருமானுடைய பேருளைப் பெறவும் அவர்களுடைய வேண்டுதல் நிறைவேறவும் காட்டுகிறது.

### ஊர்வலம்

கொடி ஏற்றத்துக்கு மூன்றாவது, ஐந்தாவது அல்லது ஏழாவது நாள் ஊர்கள்தோறும் ஊர்வலம் நடைபெறும். இது பொதுவாக மாலை நேரத்தில் செய்வது உண்டு. ஊர்வலத்தின்போது மக்கள் தங்கள் வீட்டு வாசலில் அர்ச்சனை செய்வார்கள். இது கோவிலுக்கு வர முடியாதவர்களுக்கு முருகப்பெருமானை வணங்க வழி அமைகிறது. ஊர்க்காரர்களுக்கு முருகப்பெருமானுடைய ஆசி கிடைக்க இது உதவுகிறது எனலாம். அன்றைக்கு ஊர்க்காரர்கள் பலர் ஊர்வலத்தில் கலந்துகொண்டு வருவதால் கோவிலில் கூட்டமாக இருக்கும். காவடித் திருவிழா நிகழும் என்று ஊர்வலத்தின் மூலமாக அறியாதோர்க்கு அறிய வைக்க உதவுகிறது.

### சங்கங்களின் பங்கு

தைப்பூசக் காவடித் திருவிழாவின்போது

மொரீசியசு தமிழ்க் கோவில்கள் கூட்டிணைப்பு, மொரீசியசு கலை மற்றும் பண்பாட்டு மையம் ஆகிய சங்கங்களின் பங்கு உயரியது. தைப்பூசக் காவடித் திருவிழாவினை முன்னிட்டு தொலைக்காட்சி மற்றும் வானொலி நிகழ்ச்சிகளைப் பற்றி மொரீசியசு தமிழ்க் கோவில்கள் கூட்டிணைப்பின் சங்கத்தினர் திட்டமிடுகிறார்கள். தமிழகத்திலிருந்து ஓதுவார் அல்லது பாடகர் குழு மொரீசியசுக்கு வந்து கோவில்தோறும் சென்று கலைநிகழ்ச்சிகளை வழங்க ஏற்பாடு செய்யப்படுகிறது. மொரீசியசு தமிழ்க் கோவில்கள் கூட்டிணைப்பின் பதிவுப்படி கிட்டத்தட்ட நூற்றிருபத்தைந்து கோவில்களில் தைப்பூசக் காவடி கொண்டாடப்பட்டது (பேட்டி:25ஆம் ஜனுவரி 2021). மொரீசியசு தமிழ்க் கலை மற்றும் பண்பாட்டு மையத்தின் கலைஞர்களும் கோவில்தோறும் சென்று கச்சேரியை வழங்குவார்கள். மேலும் மொரீசியசு தமிழ்க் கோவில்கள் கூட்டிணைப்பு கோவில்களுக்குப் பல வசதிகள் அளித்துவருகிறது. தைப்பூசக் காவடித் திருவிழா சீரும் சிறப்புமாக அமைவதற்கு சங்கங்களின் பங்கு போற்றத்தக்கது.

### அரசு ஆதரவு

தைப்பூசக் காவடித் திருவிழாவின்போது அரசாங்கம் பல வகையில் உதவி அளித்து வருகிறது. தண்ணீர் மற்றும் மீன்சார வசதிகள் அளித்தல், தெருக்களைப் பழுதுபார்த்தல், ஆற்றங்கரையையும் சுற்றுப்புறத்தையும் சுத்தம் செய்தல் முதலியவை பார்த்துக்கொள்கிறது. தைப்பூசக்காவடித் திருவிழா மிக முக்கியமான ஒரு திருவிழா, அதனால் அரசாங்கத்தினர் தமிழினத்துக்கு முடிந்த அளவில் ஆதரவு அளித்து வருகிறார்கள். அவர்களும் காவடித் திருவிழாவில் கலந்துகொள்கிறார்கள்.

### ஊடகத்தின் பங்கு

தைப்பூசக் காவடித் திருவிழாக் காலத்தில் வானொலி தமிழ் நிகழ்ச்சியில் திருப்புகழ்ப் பாடல்களும், அவனாசிப் பத்து, ஆறுமுக சுவாமி பேரில் அலங்கார விருத்தம், ஆறுமுக சுவாமி ஆசிரிய விருத்தம், கதிர்காம மாலை, காவடிச் சிந்து முதலியவையும் ஒலிபரப்பப்படும். தத்துவ உரைகளும் வழங்கப்படும். தொலைக்காட்சியில் கலைநிகழ்ச்சிகளும் உரைகளும் ஒளிபரப்பப்படும். நாட்டளவில் கோவில்களில் நடைபெறும் கொடி ஏற்றம், சிறப்பு வழிபாடு, கொடி இறக்கம் முதலியவை நிகழ்ச்சித் தொகுப்பாக வழங்கப்படும். தனியார் வானொலியிலும் காவடித் தொடர்பான நிகழ்ச்சி அளிக்கப்படும். பொதுவாக உரைகளின் வாயிலாகக் காவடித் திருவிழாவின் முக்கியத்துவம், அதைக் கொண்டாடும் முறை, முருகப்பெருமானின் பெருமை முதலியவற்றைப் பற்றி விளக்கங்கள் தரப்படும். மாலையில் செய்தி ஒளிபரப்பில் நாட்டின் நான்கு திசைகளில் நடைபெற்றுள்ள காவடித் திருவிழாவின் ஊர்வலத்தையும் சிறப்பு வழிபாட்டையும் காட்டப்படும்.

### மொழி மற்றும் இசையின் வளர்ச்சி

தமிழ் மொழியில் வழிபாடு செய்தல், தமிழில் உரைகளை ஆற்றுதல், திருப்புகழ்ப் பாடல்கள், கந்தர் அனுபூதி, கந்தர் அலங்காரம், முருகப்பெருமானைப் போற்றும் பக்தி ததும்பும் பாடல்கள் பாடுதல் ஆகியவற்றால் தமிழ் மொழியின் இனிமையைக் கேட்கும் வாய்ப்பு கிடைக்கிறது. காவடிப் பொருட்களை விற்கும் இடங்களில் முருகப்பெருமானுடைய பாடல்கள் இசைக்கப்படுகின்றன. தமிழில் உரைகள் ஆற்றப்படுகின்றன; தத்துவக் கருத்துக்களின் விளக்கங்கள் தரப்படுகின்றன. தமிழில் சிறப்பு நிகழ்ச்சிகள் வழங்கப்படுகின்றன. இவ்வகையில் தமிழ் மொழியும் தமிழிசையும் பெரும் அளவில் கேட்கப்படுகின்றன.

### காவடி வடிவங்கள்

பால், தேன், இளநீர், சர்க்கரை, பன்னீர் முதலியவை அபிடேகப் பொருட்கள் ஆகும். மொரீசியசில் அதிகப் பக்தர்கள் பால் செம்புகளைக் காவடிகளின் இரு பக்கங்களில் கட்டுவது உண்டு. வண்ண வண்ணப் பூக்கள், மரு, பச்சைத் துளசி, தர்ப்பை, எலுமிச்சம், மணி, காவி நிறத் துணி, தென்னங்குறுத்து முதலியவற்றால் காவடிச் அலங்காரம் செய்யப்படுகிறது. மயில் வடிவம், கோவில் வடிவம், பிரணவப் பொருளான ஓம் என்னும் வடிவம், தேர்

முதலிய வடிவங்களைக் கொண்டு காவடிகள் கட்டப்படுகின்றன. காவடித் திருவிழாவின் முந்திய தினம் காவடிகளைக் கட்டத் தொடங்கப்படுகிறது. ஒரு சிலர் இரவு முழுதும் கண் விழித்துக் காவடிகளைக் கட்டுவார்கள். அவ்விரவு எட்டு நாற்பது மணி தொடங்கி, காலையில் ஐந்து மணி வரை வானொலியில் முருகப்பெருமான் பற்றிய பாடல்கள் ஒலிபரப்பப்படும். மக்கள் வானொலியைக் கேட்டுக் காவடிகளைக் கட்டுவதோடு முருகப்பெருமானை மனதார நினைத்தால் பயன் அடைவார்கள். பெண்மணிகள் குடங்களில் பொதுவாகப் பால் சுமந்து கொண்டு வருவதன் பழக்கம் நம்மிடத்தில் இருக்கிறது. காவடி மற்றும் பால்குடங்களை எடுக்காதவர்கள் ஒரு சிலர் காவடித்திருவிழா அன்று விடியற்காலையில் கோவில் வலம் வந்து பால் அபிடேகம் செய்வார்கள். எனவே அன்றைக்கு முருகனுக்கு வேண்டுதல் செய்யப் பலவகையில் அமைகின்றன. முருகப்பெருமானுடைய பேரருளைப் பெற எல்லாருக்கும் வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

### யாத்திரை

பத்து நாட்கள் விரதத்தின்போது பக்தர்கள் தங்கள் ஊர்க் கோவிலுக்குப் போவது வழக்கம். ஆனால் பொதுவாக, சனி ஞாயிற்றுக்கிழமைகளில் பலர் நாட்டிலுள்ள வெவ்வேறான முருகன் கோவில்களுக்கு யாத்திரையாகப் போவார்கள். அபிடேகத்திலும் சிறப்பு வழிபாடுகளிலும் ஊர் வலங்களிலும் கலந்துகொண்டு அர்ச்சனை செய்வார்கள்; கலியுக வரதனைப் போற்றிப் பாடுவார்கள்; அன்னதானம் வழங்குவார்கள். திருவிழாவின் பத்து நாட்களில் விரும்பும் கோவில்களுக்குச் செல்வதற்கு இது ஒரு தனி வாய்ப்பு எனலாம்.

### ஆடை அணிகலன்கள்

புடவை, பாவாடை, வேட்டி முதலிய தமிழர் ஆடை வகைகளைக் கோவில்தோறும் காணலாம். கோவில் உறுப்பினர்கள் பெரும்பாலோர் வேட்டியைக் கட்டுவார்கள். பெண்மணிகள் புடவைகளைக் கட்டுதல், பலவகை அணிகலன்களை அணிதல், தலைமுடியில் பூக்களைச் சூட்டுதல் ஆகிய பழக்கங்களைத் திருவிழாக் காலங்களில் கடைப்பிடித்து வருவதைக் காணலாம். பொதுவாக வேலைக்குப் போகின்ற பெண்மணிகள் பலர் புடவையைத் தவிர வேறு ஆடைகளை அணிந்துகொள்வார்கள். திருவிழாக் காலங்களில் தங்கள் பண்பாட்டுக்குரிய அடையாளத்தைப் பேணிக் காத்து வருகிறார்கள்.

### இன அடையாளம்

மொரீசியசில் தமிழர்கள் காவடித் திருவிழாவைக் கொண்டாட அதிக அளவில் ஏற்பாடு செய்கிறார்கள். கோவில் சங்கத்தினர் காவடித் திருவிழா சிறப்பாக அமைவதற்குப் பல வகை முயற்சிகள் எடுக்கிறார்கள். காவடித் திருவிழா தமிழர்களுக்குரியது என்று பொது மக்களுக்கு அறிந்த ஒன்று ஆகும். காவடித் திருவிழா முருகப்பெருமானுக்குரியது. முருகப்பெருமான் தமிழ்க் கடவுள். முருகப்பெருமானைப் போற்றும் நாள் தைப்பூசம் உகந்த நாள் ஆகும். மொரீசியசில் அன்றைக்கு ஒரு பொது விடுமுறை நாளாகும். இவ்வகையில் தமிழர் என்ற ஓர் இனம் உண்டு என்று அடையாளம் கிடைக்கிறது. நாட்டின் வளர்ச்சிக்குத் தமிழர்களுடைய பங்கு உண்டு என்றும் தமிழர் பண்பாடு சிறப்புத் தன்மை வாய்ந்தது என்று இது சுட்டிக்காட்டுகிறது.

### காணிக்கை

பாவங்களை நீக்கவும், நல்வாழ்க்கை அமையவும், பேரருளைப் பெறவும் மக்கள் காணிக்கையாக ஒரு பொருளைத் தருவார்கள். மொரீசியசு தமிழர் பொதுவாக, கைக்குழந்தையுடைய முடியை தைப்பூசத் தினம் அன்று முருகப்பெருமானுக்குக் காணிக்கையாகக் கொடுப்பார்கள்; காணிக்கையைக் கொடுத்த பிறகு சந்தனம் தலையில் பூசிக் கோவிலுக்குச் சென்று அர்ச்சனை செய்வார்கள். குழந்தைக்கு நல் வாழ்க்கை அமையப் பெற்றோர் வேண்டிக் கொள்வார்கள். வேறு சிலர் பணத்தை அல்லது உணவுப் பொருட்களைக் கோவில்களுக்குக் காணிக்கையாக வழங்குவதும் உண்டு.

### தத்துவக் கருத்துகளைக் கேட்டறிதல்

கந்த புராணம் முதலிய கதைகளைக்

கேட்டறிய முடியும். அக்கதைகளைப் பற்றிச் சிந்தனை செய்ய முடிகிறது. ஆன்மீக நெறியில் முருகப்பெருமானுடைய பங்கு யாது என்று அறிய வாய்ப்பு உண்டு. முருகப்பெருமானைப் பற்றி விரிவாக அறியலாம். சிறுவர்களுக்கும் பெரியவர்களுக்கு முருகப்பெருமானைப் பற்றி கருத்தரங்கு மூலமாக விளக்கம் அளிக்கப்படுகிறது. காவடித் திருவிழா கொண்டாடப் பல சடங்குகள் உள்ளன. அச்சடங்குகளின் பொருள் யாது என அறியலாம். முருகப்பெருமானின் தனித் தன்மைகள், பெருமை, வீரச் செயல்கள் முதலியவை அறியலாம்; மேற்கொண்டு சிந்திக்கலாம்.

### பக்தர்கள் காவடிகளை எடுப்பதன் காரணங்கள்

காவடித் திருவிழா ஒரு மிகவும் முக்கியத் திருவிழாவாகும். இது சமூக அளவில் ஒரு விழிப்புணர்வு கொண்டு வருகிறது. காவடி எப்போது இருக்கும் என்று ஒரு சிலர் ஆவலுடன் கேட்டுக்கொள்வார்கள்; ஏனென்றால் அவர்கள் காவடி எடுக்காவிட்டாலும் விரதம் இருப்பார்கள். பொதுவாக, தைப்பூசக் காவடிக்கு அடுத்து மகா சிவராத்திரி வரும். எனவே ஒரு சிலர் தொடர்ச்சியாக மகா சிவராத்திரி வரை விரதம் இருப்பார்கள். காவடித் திருவிழா மற்றும் மகா சிவராத்திரி பெரும் அளவில் மொரீசியசில் கொண்டாடப்படுகின்றன. மொரீசியசில் பக்தர்கள் காவடிகளையும் பால்குடங்களையும் எடுப்பதன் காரணங்கள் இக்கட்டுரையில் தொகுக்கப்படுகின்றன. அவை பின்வருமாறு காண்க:

1. ஆங்கிலப் புத்தாண்டின் தொடக்கத்தில் முதல் முக்கியத் திருவிழாவாக இருத்தல்
2. தமிழர் புற வழிபாட்டு முறைகள் அவர்களைக் கவர்தல்
3. வேண்டுதலுக்கு இணங்கி இருத்தல்
4. கடவுள் நம்பிக்கைக் கொண்டவர்களாக இருத்தல்
5. முருகப் பெருமானுடைய பேரருளைப் பெறுதல்
6. ஒரு நல்வாழ்க்கை அமைதல்; உலக வாழ்க்கையில் மேம்பாடு அடைதல்
7. நோயற்ற வாழ்வை வாழ்தல்
8. ஒரு நோயைக் குணப்படுத்துதல்
9. தேர்வுகளில் நல்ல தேர்ச்சி பெறுதல்
10. நல்ல உயர்ந்த உத்தியோகத்தில் இருத்தல்
11. இறையன்பு இருத்தல்
12. ஆன்ம மேம்பாட்டிற்கு வணங்குதல்

### முடிவுரை

மொரீசியசில் காவடித் திருவிழா, விரதம் இருத்தல், பக்திப் பரவசம், வணிக லாபம், அன்னதானம், வேற்றின மக்களின் ஈடுபாடு, சிறப்பு வழிபாடு, சங்கங்களின் பங்கு, அரசு ஆதரவு, ஊடகத்தின் பங்கு, மொழி மற்றும் இசையின் வளர்ச்சி, காவடி வடிவங்கள், யாத்திரை, ஆடை அணிகலன்கள், இன அடையாளம், காணிக்கை, தத்துவக் கருத்துக்களைக் கேட்டறிதல், பக்தர்கள் காவடிகளை எடுப்பதன் காரணங்கள் ஆகியவை இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளன. காவடித் திருவிழாவால் சமூக மற்றும் பண்பாட்டு நிலைகளில் பல நன்மைகள் கிடைக்கின்றன. நாட்டில் ஒற்றுமையுணர்வும் பரஸ்பர உணர்வும் சிந்தனையும் நிலைநாட்டுகின்றன; அன்பு நெறியை வலுவாக்க வழி அமைக்கிறது.

## References


BalaSubramanian, K. V. (2012). Aiviyal Nerigal. Anuradha Chennai: Publications.

Bhulorkarambai, A. (2014). Ayal Nadugalil Muruga Vazhipadu. Palnorkkup parvaiyil Murugat Tatthuvam II.

Muthusanmugan & Venkataramen S. (2013). Ilakkiya Araicchi Nerigal. Chennai: New Century Book House Pvt. Ltd.

Nandivarman, T., Siddantha Raththinam. (2014). Thirumuraigal Katthum Anbuneru, Sydney Murugan Saivaneri Manadu.

Nallasivam, K. (2014). Thirumuraigal Katthum Manithaneyam. Sydney Murugan Saivaneri Manadu.

Ponnaih Kartheges & Kingston PalthambuRaj. (2014). Thaippusat Thiruvizhavil Sinargalin idupadu. Proceedings of the International Conference on Murugabhakti.

Ramakrishnan S. (1992). Kriyavin Tarkalat Tamil Akarati, Fine Press, Chennai

Ravikumar, T. Dr., (2014), Thirumular Unartthum Samuganeri. Sydney Murugan Saivaneri Conference.

Uma Allaghery. (2010). Murugan Vazhipadu, Thondan, Thiruvalluvar Andu 2041, Thirpagai (Virothi), Suravam (Thai) 2010

Uma Allaghery. (2016). Morisiyasil Panpattu Kurugal Vazhi Tamizh Mozhi Karppittal. Chennai: 11th Ulaga Tamizh Asiriyar Manadu.

Uma Allaghery. (2019). Morisiyasil Thamizhar Kalaiyum Panpadum, Kalait Tamizh Aivuk Kalangal, Pannarttu karuttarangam, Katturai Thoguppu Chennai: International Institute of Tamil Studies.

https://www.mauritiusinsideout.com/thaipoosam-cavadee.html

https://arunprasathgs.blogspot.com/2011/01/blog-post.html

# பண்டைத் தமிழர் உணவில் புழுக்கும் சூட்டும்

# *Puzhukku* and *Choottu* in the Food Habits of the Early Tamils

மு.ச.கண்மணி கணேசன் / Dr.S.Kanmani Ganesan[1]

## Abstract

Food habits are integral in deriving the culture of a society. The research paper entitled "Who are the Dravidians" by Dr.Andrae'e F.Sjoberg concludes that the Dravidian society was multifaceted on accounts of linguistics, archaeology, racial evidence and culture. This paper aims to investigate the abovementioned conclusion by narrowing the focus on the food habits of that society. According to Dr.George L.Hart in his paper "Early evidence for caste in South India", fish was considered as a lower grade food and it acted as proof of communal segregation in the early Tamil society. This statement should be further scrutinised using the data available in the *Sangam* literature. The book '*Thamizhaka Varalaarum, Makkalum, Panpaadum*' by Dr.K.K.Pillai briefly summarizes the food habits of the early Tamils. In addition to analyzing the food habits, it is essential to study the social and economic backgrounds of those people to form a clearer picture. In this sociologically approached research, the eight anthologies and the ten idylls in '*Thamizhaka Varalaarum, Makkalum, Panpaadum*' serve as the primary source while the commentaries, views of the archaeologists and the opinions of researchers in food science serve as the secondary source. It could be inferred that the culture of the early Tamils during the Sangam age was a blend of Aryan and Dravidian civilisations as far as the food habits were concerned

Date of submission: 2021-02-10
Date of acceptance: 2021-03-05
Date of Publication: 2021-07-20
Corresponding author's Name:
Dr.S.Kanmani Ganesan
Email: kanmanitamilskc@gmail.com

**Key Words:** *choottu, puzhukku, pongal, punkam, vaadoon, varai*

### முன்னுரை

உணவுமுறை பற்றிய ஆய்வு பண்பாட்டின் ஒரு கூறாகிய உணவுப் பழக்கவழக்கத்தை வரைய உதவும். தொகையிலக்கியத்தில் இடம்பெறும்; தமிழர் சுவைத்த சூட்டுகள், புழுக்குகள், சமைத்த சூழல், உண்ட முறை ஆகியவை உணர்த்தும் சமூகநிலையும் பண்பாட்டுக் கூறுகளும் என்னென்ன எனக் காண முனைகிறது இக்கட்டுரை.

### ஆய்வு முன்னோடிகள்

'தமிழக வரலாறும் மக்களும் பண்பாடும்' என்ற நூலில் முனைவர் கே.கே.பிள்ளை சங்ககால உணவு குறித்த கருத்துக்களைச் சுருக்கமாகத் தொகுத்துள்ளார். இ.பிரகாஷின் 'சங்க இலக்கியத்தில் விருந்தோம்பல்' என்ற கட்டுரை (வல்லமை, மின்னிதழ், 26.09.2016); விருந்தோம்பும் விழுமியத்திற்கு மட்டுமே சிறப்பளிக்கிறது. முனைவர் பா.உமாராணி எழுதிய 'குறுந்தொகையில் பாலைநில உணவுகள் சுட்டும் சூழல் அமைவு' எனும் கட்டுரை (வல்லமை, மின்னிதழ், 8.1.2018) பிற நாட்டுப் பாலைவனச் சூழல்களோடு ஒப்பிடுகிறது. மு.மங்கையர்க்கரசி 'பாணாற்றுப்படைகளில் உணவுப் பண்பாடு' (வல்லமை, மின்னிதழ், 20.08.2018) எனும் தலைப்பில் எழுதிய கட்டுரை ஐவகை நிலம்

[1] The author is a retired Principal& Head of the Department of Tamil in Srikaliswari College, Sivakasi. Tamilnad. kanmanitamilskc@gmail.com

சார்ந்து விளக்குகிறது. 'குறிஞ்சிநில மக்களின் உணவு' என்ற முனைவர் ப.கோமளாவின் கட்டுரை (முத்துக்கமலம், மின்னிதழ், 2019, p.1618) வாழும் நிலம் உணவுப் பழக்கத்தை வரையறுப்பதை விதந்து ஓதுகிறது. எனவே பண்டைத் தமிழர் உணவுமுறை சமூக பொருளாதார நிலையுடன் தொடர்புறுத்திக் காட்டப் பெற வேண்டிய தேவை உள்ளது.

தொகைநூற் செய்திகள் முதல்நிலைத் தரவுகளாக அமைய; உரையாசிரியர், உணவகவியலாளர், அகழ்வாய்வு அறிஞர், பிற ஆய்வாளர் ஆகியோர் கருத்துக்கள் இரண்டாம்நிலைத் தரவுகளாகின்றன. சமூகவியல் நோக்கில் ஆய்வு அமைகிறது.

## புழுக்கு வகைகள்; உண்ணுமுறை; செய்முறை; உண்டோர்

நீரில் வேகவைத்த உணவு புழுக்கு எனப்பட்டது. 'உவித்த, உவியல்' ஆகிய சொற்களும் 'வேக வைத்த' என்ற பொருளில் பயின்று வந்தன. புல்லரிசி, நெல், வரகு, தினை ஆகிய தானியங்கள்; பயறு; மீன், ஆமை, ஆடு, பசு, மான் போன்றவற்றின் இறைச்சி ஆகியன புழுக்கி உண்ணப்பட்டன. புழுக்கு என்ற சொல் அவிக்கை, புழுங்க வைத்த உணவு, குழைந்த பருப்பு, பருப்புச் சோறு எனப் பொருள்படும். (வலைத்தமிழ் அகராதி). இன்றும் அவித்த நெல்லின் அரிசி 'புழுங்கலரிசி' என வழங்குகிறது.

## திணைமாந்தரும் அடுப்புகளும்

திணைமாந்தர் கற்களை அடுப்பாகக் கூட்டிச் சமைத்தனர். ஏற்கனவே வழிச் சென்ற உமணர் சமைத்த கல் அடுப்பில் மழவரும் மணம் பொருந்த ஊனைப் புழுக்கி உண்ட செய்தியில் (அகநானூறு களிற்றியானை நிரை, 2009, p.302, பா.119) அடுப்பு, சமைத்தவர், சமையல்முறை, உணவின் மணம் எல்லாம் வெளிப்படை. ஆயர் சுனைநீரை உலையாக ஊற்றி வரகைக் கல் அடுப்பில் புழுக்கி உண்ட நிகழ்ச்சி அகம்.393ல் உள்ளது. எயிற்றியர் ஆழ்ந்த கிணற்றில் அரிதில் தோண்டிக் கிடைத்த ஊற்றில் இருந்து உவரி நீரை எடுத்துக்; கரம்பை நிலத்தைப் பாரைகளால் தோண்டிப்; புல்லரிசியை வாரி; விளிம்பு உடைந்த பானையிலிட்டு; முரிந்த அடுப்பிலேற்றி; வேக வைத்ததை பெரு.94100ல் புலவர் கூறுகிறார். எயினர் சமைத்த அடுப்பு முரிந்து இருந்ததால்; அது சுடுமண் அடுப்பு என்பது உறுதி. நீருக்காக எயினர் எடுத்த முயற்சி அவர் வாழ்வின் விளிம்பு நிலையையும்; விளிம்பற்ற பானையும் முரிந்த அடுப்பும் தாழ்ந்த பொருளாதாரத்தையும் காட்டுகின்றன. சிந்து சமவெளி அகழ்வாய்வில் கிடைத்த மூன்று குமிழ்களுடன் கூடிய சுடுமண் அடுப்பு திராவிட நாகரிகத்தின் தடயம் என்பர் (Vivek, 2018, p.809).

## புன்செய்த் தானியப் புழுக்கு

திணைமாந்தர் உண்ட புன்செய்த் தானியங்களின் புழுக்கு 'புன்கம்' எனப்பட்டது. ஆயரின் வரகுச்சோறு 'வரகின்ஞ் புழுக்கிய பொங்கு அவிழ் புன்கம்' என அகம்.393ல் குறிப்பிடப் பட்டுள்ளது. புறம்.34 'புன்புல வரகின்ஞ் புன்கம்' என்கிறது. வேக வைத்த தினையை 'உவித்த புன்கம்' எனச் சொல்வது புறம்.168. தினைப்புழுக்கை அகம்.237 'மென்தினைப் புன்கம்' என்று அழைக்கிறது. வரகுடன் வேங்கைப் பூவை ஒத்த மஞ்சள் நிறத் துவரையைப் புழுக்கிக் கடைந்து தரும் வழக்கம் பெரு.195ல் இடம் பெறும் செய்தி. 'அவரை வான் புழுக்கு அட்டிப் பயில்வுற்று' எனும் அடியில் உள்ள 'பயில்வுறுதல்' கடைதலைச் சுட்டும். பண்டு 'அவரை' பயறுவகைகளுக்குரிய பொதுப்பெயராக வழங்கியது. வேளிர் வந்தேறும் முன்னர் திணைமாந்தர் உண்ட புன்செய்ப் பயன்களாக மாங்குடிகிழார் சொல்வனவற்றுள்; பயறுகள் 'அவரை' எனப்படுகின்றன.

"கருங்கால் வரகே இருங்கதிர்த் தினையே

சிறுகொடிக் கொள்ளே பொறிகிளர் அவரையோடு

இந்நான்கல்லது உணாவும் இல்லை" என்ற பட்டியல்"

(புறம், 2007, p.267, பா.335)

பற்றி 'முல்லை நிலத்துச் சிற்றூரில் வாழும் மக்களின் வாழ்க்கைக்கூறு' என்கிறார் ஔவை சு.துரைசாமிப்பிள்ளை. ஆனால்

தொல்தமிழகத்துச் சமூக நிலையை நுணுகி ஆராயும் போது; வருணத்தார் வந்தேறும் முன் தமிழகத்தில் வாழ்ந்த திணைமாந்தரின் பூக்கோள் முறை, உணவு, குடி, வழிபாடு ஆகிய பண்பாட்டுக் கூறுகளைப் புலவர் விதந்துரைக்கிறார் என்பதே பொருந்துகிறது. புதிதாகப் புகுந்த நான்கு வருணங்களால் திணை மாந்தரின் புன்செய்ப் பயனாகிய உணவுமுறை மாற்றம் அடைந்தது. நெற்பயிருக்காக உழுவித்த வேளிர் வந்தேறிகள் என்ற முடிபும் இக்கருத்தை உறுதி செய்யத் துணையாகிறது (இராகவையங்கார், *1913,* pp.*1 33*). நான்கு என்ற எண்ணுக்கு இப்பாட்டில் அவர் அளித்திருக்கும் சிறப்பிடம் குறிப்பிடத் தக்கது. நடுகல் வழிபாடு மட்டுமே இருந்த நிலை மாறி; நெல்லைப் பலியாகத் தூவிக் கடவுளை வழிபடுவதும் முன்னர் இல்லை என்று பாடலை முடிப்பது நாகரிகக்கலப்பை நயமாக எடுத்துரைக்கும் போக்காகும்.

### நெல்லரிசிப் புழுக்கு

நெல்லரிசிச்சோறு பொருளாதார மேம்பாட்டின் அடையாளமாக இருந்தது. திணைமாந்தர் சுருங்கிய பொருளாதாரம் காரணமாகப் பழைய சோறும் பருத்துச் சிவந்த நெல்லரிசிப் புழுக்கும் உண்டனர். வேந்தரும் வேளிரும் விருந்தளித்த நெல்லுச்சோறு நீளமாக, வெண்மையாக, முரியாது இருந்தது. கிள்ளி வளவனிடம் உண்ண விரும்பிய விருந்து பற்றிப் *புறம்.399*ல் பேசும் ஐயூர் முடவனார் நீராகாரத்தை உலையாக ஊற்றிச் சமைத்த; பாதிரிப் பூங்கொத்து மொட்டுகள் ஒருங்கு இதழ் விரிந்தாற் போலத் தோன்றும் வெண்மையான முரியாத நெல்லரிசிச்சோறுக்கு ஆசைப்படுவதைக் காண்கிறோம். குறுநில மன்னனாகிய தொண்டைமான் இளந்திரையன் செந்நெல் அரிசியைப் புழுக்கி விருந்து அளித்தான். 'பெருஞ் செந்நெல்லின் தெரிகொள் அரிசித் திரள்நெடும் புழுக்கல்' எனப் *பெரு.474*ல் அவ்வரிசியின் நீளம் பேசப்படுகிறது.

அக்காலக் கைக்குத்தல் அரிசியில் தவிட்டுச்சத்து நீங்காமல்; வெந்த சோறு எண்ணெய்ப் பசையுடன் இருந்ததை;

"மைப்பறப் புழுக்கின் நெய்க்கனி வெண் சோறு"

*(அகநானூறு மணிமிடை பவளம், 2007,* p.*40, பா.136)*

என்ற மணவிருந்தின் வருணனை காட்டுகிறது. ந.மு.வேங்கடசாமி நாட்டாரும் ரா.வேங்கடாசலம் பிள்ளையும் 'இறைச்சி கூட்டி ஆக்கிய வெள்ளிய சோறு' என உரை கூறியுள்ளனர். ஆனால் ஆலையில் இயந்திரத்தால் தவிடு நீக்கி வெண்மை கூட்டும் அரிசியை விடக்; கைக்குத்தல் அரிசியில் சோறு ஆக்கினால் அது எண்ணெய்ப் பசையுடன் (rice bran oil) இருப்பது அனுபவத்தில் காணும் உண்மை. இங்கு இடம்பெறும் புழுக்கு ஊன்புழுக்கு அன்று; அதனால் நெய் ஊனிலிருந்து உருகிய கொழுப்பும் அன்று. பாடல் தோன்றிய காலம் கைக்குத்தலரிசி மட்டும் புழங்கிய காலமாதலால் நெல்லரிசிப்புழுக்கு என்பதே பொருந்தும்.

*பெரு.131-133*ல் எயினர் மேட்டு நிலத்தில் விளைந்த நெல்லின் சிவந்த பருத்த அரிசிச் சோற்றை விருந்தினர்க்கு அளிக்கின்றனர். உழவர் *புறம்.395*ல் பழையசோறு உண்கின்றனர். *நற்.60*ல் உழவன் பழஞ் சோற்றுடன் நீராகாரத்தை வயிறுமுட்டக் குடிக்கிறான். இரண்டு வேளையும் வரகுச்சோறே உண்ட பாணர்க்குக் கிள்ளிவளவன் அரிசிச் சோறாம் 'அமலை' உண்ணுமளவு பொருள் கொடுத்தான் என்கிறது *புறம்.34*. ஆரியர் நெல்லைப் புழுக்குவதை ஆரியரல்லாதாரிடம் கற்றனர் (Dayal Harjani aka Daduzen, 2018, p.10) என ஆய்வாளர் சொல்வது திராவிடரைக் குறிக்கிறது.

### ஊன் புழுக்குகள்

வேந்தரும் வேளிரும் திணைமாந்தரும் ஊன்புழுக்குகளைக் கள்ளோடும் தானியப் புழுக்குகளோடும் சேர்த்துண்ணும் துணை உணவாகப் பயன்படுத்தினர். ஊன் புழுக்கு பற்றிய குறிப்புகள் *அகம்.159,172,315* ஆகிய பல பாடல்களில் உள்ளன. *அகம்.309* அதைப் 'புலவுப்புழுக்கு' என்றும்; *புறம்.152* 'நிணப்புழுக்கு' என்றும் சுட்டுகின்றன. ஊனை வெட்டிச் சமைப்பதை; 'எறிக திற்றி ஏற்றுமின் புழுக்கே' எனச் சேரன் புகழ் பாடும் *பதிற்றுப்பத்து.18* சொல்கிறது. அருகம்புல்லால்

திரித்த பழுதையைத் தின்றது செம்மறிக் கிடாய்; அதன் பருத்த தொடைக்கறியைப் பதமாகப் புழுக்கித் தின்னுமாறு இரவலரைக் கரிகாலன் வேண்டியதை *பொரு.102-103* புகழ்கிறது. திணைமாந்தர் தலைவன் வல்வில் ஓரி தன்னை நாடி வந்தோர்க்குத் தானே வேட்டையாடிய மானிறைச்சிப் புழுக்குடன் மதுவை அளித்தான் எனப் *புறம்.152* பாடுகிறது. குறவர் மான்கறி வேக வைத்த புலால் நாறும் பானையைப் புறத்தே கழுவாமல் அடுப்பிலேற்றிச் சமைத்ததைப் *புறம்.168* காட்சிப்படுத்துகிறது. பலமுறை அடுப்பிலேற்றிய பானை கரிப்பிடித்து இருக்கும். அதனால் வெளிப்புறம் கழுவத் தேவைப்படாது. புகார் நகரில் போர் மறவர் வயலாமையின் ஊனைப் புழுக்கி உண்டமை *பட்டினப்பாலை.64*ல் உள்ளது. *புறம்.399*ல் ஐயூர் முடவனார் கிள்ளி வளவனிடம் மாங்காய்ப்புளி கூட்டிய வரால் மீனோடு விருந்துண்ண விரும்புவதால் அது புழுக்கு; அதாவது இன்றைய குழம்பு என்பது பெற்றோம். உழவன் வரால்மீனைச் சொட்டானமாக ஊற்றிப் பழைய சோறு உண்டதை *நற்.60* கூறுகிறது.

### வாடூன் புழுக்கு

வாடூன் என்பது வெய்யிலில் காய வைத்துப் பதப்படுத்திய ஊனாகும். எயினர் பெரு.94-100ல் புல்லரிசிச் சோற்றை மிசையப் புழுக்கிய வாடூன் அளித்தனர். வாடூனுக்குரிய விளக்கம் பின்வருமாறு:

*"சுவல்விளை நெல்லின் செவ்வவிழ்ச் சொன்றி*

*ஞமலி தந்த மனவுச்சூல் உடும்பின்*

*வறை கால் யாத்தது"* (பத்துப்பாட்டு, 2007)

பெரு.131133, p.80). வேட்டையில் கிடைத்த மிகுந்த ஊனை வெட்டி; இரண்டு கம்புகளை ஊன்றி அவற்றை மேலே இணைக்கும் கயிற்றில் கோத்துக்; காய வைப்பது 'கால் யாத்தது' எனப் புனையப் பெற்றுள்ளது. இன்றும் பெரிதாக வெட்டிய இறைச்சியை மிகுதியான உப்பும் விரலி மஞ்சளும் தடவி; ஊசியால் குத்திக் கயிற்றுக் கொடியில் கோத்துக் கட்டித் தொங்க விட்டே உணக்குவர். இது பறவைகள் கொத்திச் செல்வதிலிருந்து பாதுகாக்கும் நடவடிக்கை ஆகும். நன்கு காய்ந்த பின் சிறுசிறு துண்டுகளாக அறுத்து மீண்டும் வெய்யிலில் வைப்பர். இவ்வாறு பதப்படுத்திய உடும்புக்கறியின் உப்புக்கண்டமே எயினர் தந்த உணவில் இடம் பெற்றதெனலாம். கொடிக்கறி, கறிவத்தல் என்ற பெயர்களிலும் இன்றும் இறைச்சி இம்முறையில் பதப்படுத்தப்படுகிறது. வேட்டைநாய் இழுத்து வந்த உடும்பு பற்றிய செய்தி ஆதலால்; பொ.வே.சோமசுந்தரனார் அந்நாயைக் கட்டிப் போட்டு இருந்ததாக உரை கூறியுள்ளார். ஆனால் 'ஞமலி கால் யாத்த'தாகப் பாடற்பகுதியில் இல்லை; 'உடும்பின் வறை கால்யாத்தது' என்றே உள்ளது.

எயிற்றியர் 'அட்ட வாடூன் புழுக்கல்' (*பத்துப்பாட்டு, 2007, பெரு.100*, p.72) கருவாடு எனப் பொருள் கூறுகிறார் பொ.வே.சோம சுந்தரனார். வேட்டைச் சமுதாயத்தினராகிய எயினர் மிகுதியாக விலங்கிறைச்சி கிடைக்கும் போது அதைப் பதப்படுத்தப் பின்பற்றிய முறை ஒன்று இருக்க; கருவாடு எனச் சொல்வதில் காரணகாரியத் தொடர்பில்லை. எயிற்றியர் உப்புக்கண்டத்தையே புழுக்கி அளித்தனர் என்பது உறுதி.

### அறுவடைத் திருநாளும் புழுக்கும்

நெல்லரிசியோடு வெல்லம் சேர்த்துப் புழுக்கிக் கட்டிபோட்டுக் கொடுக்கும் பொங்கலைக்; 'கட்டிப் புழுக்கிற் கொங்கர் கோவே' (*பதிற்றுப்பத்து, 2007*, p.427, *பா.90*) என்று சேரன் புகழுக்குக் காரணமாகக் கூறியுள்ளனர். கட்டிபோட்டுக் கொடுக்கும் வேக வைத்த பண்டமாகத் தமிழகத்தில் இன்று வரை சர்க்கரைப் பொங்கல் வழங்குகிறது. இது அக்கால அறுவடைக் கொண்டாட்டத்தின் பாரம்பரியம் என்பது நெல்அறுவடை, தண்ணுமை இசை, உழவர் மகிழ்ச்சி என அப்பாடல் தொடர்வதால் உறுதிப்படுகிறது. மரையாவின் பாலை உலையாக ஊற்றிச் சமைத்த தினைப்புழுக்கைத் தேக்கின் இலையில் குவித்துண்ட அறுவடைக் கொண்டாட்டம் திணைமாந்தரின் பால் பொங்கலாகப் *புறம்.168*ல் உள்ளது.

### ஈமச் சடங்கில் புழுக்கு

'உப்பிலாஅ அவிப்புழுக்கல்' என *புறம்.363* குறிப்பது உயிர்நீத்தார்க்கு ஈமச்சடங்கின்

போது மண்ணில் போடும் உப்பிலா நெல்லரிசிச் சோறாகும்.

### சூட்டின் வகைகள்: உண்ணுமுறை, செய்முறை, உண்டோர்

தாளித்து எண்ணெயில் பொரிப்பது, தாளிதமின்றி எண்ணெயில் முழுக வறுப்பது, நேரடியாக நெருப்பில் சுடுவதென மூன்று வகைச் சூட்டுகளை இலக்கியம் பேசுகிறது. சமைக்கும் முறையை அடியொட்டிச் 'சூட்டு' என்ற பெயரும்; பொரிக்கறியாக உண்டதால் 'கருனை' என்ற பெயரும் வழங்கின. மீன், முயல், பன்றி, ஆடு, மான், முள்ளம் பன்றி, உடும்பு, ஆகியவற்றின் ஊனைச் சூட்டாக்கிக் கள்ளோடும் உணவோடும் உண்டனர். சூட்டு என்றால் 'சுடப்பட்டது; சூட்டிறைச்சி' ஆகும் *(தமிழ் அகராதி).*

### தாளித்துப் பொரித்த சூட்டு

தாளிதத்தோடு எண்ணெயில் பொரித்த சூட்டிறைச்சியை வேந்தரும் வேளிரும் விருந்தாக அளித்தனர். கிள்ளி வளவனின் வள்ளன்மை பேசும் *புறம்.397;* 'நெய்உறப் பொரித்த குய்யுடை நெடுஞ்சூடு' எனத் தாளித்துப் பொரித்த ஊனை விளக்குகிறது. நல்லியக்கோடன் என்ற குறுநில மன்னன் நாடி வந்தோர்க்கு; 'அரவு வெகுண்டன்ன தேறலொடு சூடு' தந்தான் என்கிறது *புறம்.376.* வீரியமாகப் போதை தரும் தேறலும் இறைச்சிப் பொரிக்கறியும் தந்தான் என்பதாம். வாட்டாற்று எழினி ஆதன் எனும் வேள் அளித்த விருந்தைக்; 'கொழுந்தடிய சூடு என்கோ' எனப் *புறம்.396ல்* பாராட்டி மகிழ்கிறார் புலவர். ஐயூர் முடவனாரின் *புறம்.399* கிள்ளி வளவனிடம் உண்ண விரும்பிய விருந்தில் வரால்மீன் குழம்பைத் தொடர்ந்து பருந்துண்டுகளாக வெட்டிய சுறாமீனைச் சொல்வது அது பொரித்த சூட்டு என்பதைக் குறிப்பாக உணர்த்துகிறது. எண்ணெயில் பொரித்து உண்ணும் பழக்கம் திராவிட நாகரிகம். 'ஆரியர் வெண்ணெயையே பயன்படுத்தினர்' என ஆய்வாளர் கூறுவது குறிப்பிடத் தக்கது (Colleen Taylor Sen, 2018).

### நெருப்பில் இட்டுச் சுடல்

சோழநாட்டு வீரர் பாண்டிய நாட்டிற்குள் நுழைந்து போர் செய்யும் போது அங்கு கிடைத்த பனங்கிழங்கைச் சுட்டுத் தின்றதைக் கூறுகிறது *புறம்.225.*

### நெருப்பில் சுட்ட விலங்கிறைச்சி

நெருப்பிலிட்டுச் சுட்டு உண்ணும் ஆரிய நாகரிகம் மேலானதாகக் கருதப்பட்டது. தொகையிலக்கியம் தோன்றிய காலத்தில் நால்வருணத்தார் தமிழகம் வந்து கலந்து விட்டதால் திணைமாந்தரும் சுட்டு உண்டனர். வேந்தரும் வேளிரும் ஊனைச் சுட்டு விருந்தளித்தனர். கிடாய்க்கறியைச் சூட்டுக்கோலால் கிழித்துச் சுட்டமையை 'விடை வீழ்த்துச் சூடு கிழிப்ப' என்ற *புறம்.366ன்* தொடர் மூலம் அறிகிறோம். 'சூடுகிழிப்ப' என்பது 'சூட்டுக்கோலால் கிழித்து' எனப் பொருள்படும். இரும்புக் கம்பியில் கோத்துச் சுட்ட ஊன் சூட்டு 'காழிற்சுட்ட கோழூன் கொழுங்குறை' என்ற *பொரு.105* தொடராலும் விளக்கம் பெறுகிறது. வேளாண் காவலர் வீழ்த்திய பன்றியைச் சுடவேண்டிய பக்குவத்தை; மலைபடுகடாம். *247-249ல்* கூத்தருக்கு எடுத்துச் சொல்லும் காரணம்; இவ்வுணவு முறை நாகரிகக் கலப்பால் ஏற்பட்டது என்றெண்ண இடம் ஏற்படுகிறது. வரகுச்சோற்றில் பாலும் தேனும் கலந்து 'குறு முயல் கொழுஞ்சூடு கிழித்த' ஒத்த துணை உணவோடு பாணர் உண்டனர் *(புறம், 2007,* p.*95, பா.34).* வேட்டுவன் தீயில் சுடும் முள்ளம்பன்றி ஊனின் மணம் 'கொள்ளி வைத்த கொழுநிண நாற்றம்' எனப் *புறம்.325ல்* புனைவு பெற்றுள்ளது. கரும்பு வெல்லமும் நெல்லரிசி அவலும் சேர்த்து விருந்தளித்த குறுநில மன்னரைப் பாடும் *அகம்.237ம்;* சோழன் தந்த விருந்தைப் பாடும் *புறம்.393ம்* ஊன்சூட்டைச் சிறப்பிக்கின்றன. இறைச்சியைத் தீயில் சுட்டு உண்பது ஆரியநாகரிகம் என்பர் அகழ்வாய்வாளர் *(*Zubin D'Souza, *2014).* ஹரப்பா அகழ்வாய்வில் கிடைத்துள்ள சூட்டடுப்பு ஆரியநாகரிகத்தின் தடயம் என்ற கருத்தும் உள்ளது. *(*Dumpukht, 2010).

### நெருப்பில் சுட்ட மீனும் கருவாடும்

வாடூன், பச்சூன் என இருவகை மீன் ஊனையும் நெருப்பில் சுட்டு உண்டனர். பச்சைமீன் சூட்டு திணைமாந்தர் உணவாகும். வலைஞர் பச்சைமீனைச்

சுட்டு வழிச்சென்ற பாணர்க்குக் கள்ளை அளித்தமையைப் *பெரு.275-282* 'தண்மீன் சூட்டு' என அழைக்கிறது. பெருஞ்செய் நெல்லின் கொக்குகிர் நிமிரலுக்குரிய இணை 'பசுங்கண் கருனைச் சூட்டு' ஆகும். இது புறம்.395 பாடும் பிடவூர் கிழான்மகன் பெருஞ் சாத்தன் என்ற திணைமாந்தர் தலைவன் தந்த துணைஉணவான சுட்ட பச்சைமீன் ஆகும். புகார்ப் பரதவரோடு நெருங்கி வாழ்ந்த கிள்ளி வளவன் கருவாட்டை இரும்பு நாராசத்தில் குத்திச் சுட்டு விருந்து அளித்ததை; 'சூடுகிழித்து வாடூன் மிசைய' என்கிறது - *புறம்.396.*

## வறுத்த சூட்டு

எண்ணெயில் மூழ்க வறுத்தெடுத்த இறைச்சி பரல் கற்கள் போல் காட்சி அளித்தது. *பொரு.115* 'பரல்வறைக் கருனை' எனப் புனைகிறது. *மதுரைக்காஞ்சி.756* 'நெய் கனிந்து வறை ஆர்ப்ப' என்றும்; *புறம்.386* 'நெய் துள்ளிய வறை முகக்கவும்' என்றும்; *புறம்.398* 'மான் வறைக் கருனை' என்றும் பேசுவதெல்லாம் எண்ணெயில் வறுத்த பதப்படுத்திய ஊனாகும். அவை முறையே; கரிகாலன், நெடுஞ்செழியன், கிள்ளிவளவன், சேரன் வஞ்சன் ஆகிய வேந்தர் விருந்தோம்பும் முறையில் இடம் பெறுகின்றன. எயினக் குறும்பில் விருந்தாக 'உடும்பின் வறை கால் யாத்தது' பெறலாம் என்று *பெரு.131-133* ஆற்றுப்படுத்துகிறது.

## வழிபாட்டிலும் பணியாளர் விருந்திலும் சூட்டும் புழுக்கும்

ஊர்மன்றில் நின்ற முதுமரத்து அணங்கிற்குப் புழுக்கும் சூட்டும் படைத்தனர். தலைவனை இரவுக்குறியில் சந்திக்கும் போது அம்மரத்தில் தங்கி இருந்த கூகை குளறி இடையூறு செய்யக் கூடாது என்று கெஞ்சும் தலைவி கூகையிடம் பேசுபவளாகக்;

*"மையூன் தெரிந்த நெய் வெண் புழுக்கல்*
*எலிவான் சூட்டோடு மலியப் பேணுதும்"*
*(நற்., 2007, p.105, பா.83)*

என்கிறாள். பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் இப்பாடல் அடிக்கு 'கிடாய்க்கறியும் நெய்யும் கலந்த வெண்சோறும் எலிச்சூட்டும்' என உரை கூறுவதை ஏற்றுக்கொள்ள இயலவில்லை. ஏனெனில் 'நிணம்பொதி வழுக்கு'ம் வெண்மையாகத் தோன்றும் என்பதைப் *புறம்.207,393* ஆகிய பாடல்கள் உரைக்கின்றன. வெண்மேகம் தவழும் மலைக்கு உவமையாக;

*"நிணம்பொதி வழுக்கில் தோன்றும் மழைதலை*
*வைத்தவர் மணிநெடுங் குன்றே"*
*(ஐங்குறுநூறு, 2009, p.303, பா.207)*

என்றமைவதும் அதே பொருளது. ஊனிலிருந்து உருகி வழியும் நெய்யைக் குறிஞ்சிப்பாட்டு; 'பன்நிணம் ஒழுகிய நெய்மலி அடிசில்' *(பத்துப்பாட்டு, 2008, p.21)* என்கிறது. *மதுரைக்காஞ்சி.755* 'நிணவூன் சுட்டு உருக்கமைய' எனச் சொல்வதும் அப்பொருளதே . ஆகவே 'மையூன் தெரிந்த நெய்வெண் புழுக்கல்' செம்மறியின் வெந்த கறியே.

வெட்சி வீரர் ஆநிரை கவர்ந்து; கரந்தையாரைத் துரத்திய பின்; 'தெய்வம் சேர்ந்த பராரை வேம்பிற் கொழுப்பா எறிந்து குருதி தூஉய்ப் புலவுப்புழுக்கு' உண்டனர் *(அகநானூறு, 2008, p.23, பா. 309).* முதிய பருத்த வேப்ப மரத்தடியில் பசுவைப் பலியிட்டுக் குருதியைப் படைத்து வழிபட்ட பின் அப்புலாலை வேகவைத்து உண்டமை பெறுகிறோம்.

கோப்பெருஞ்சோழன் வேளாண் பணியாளர்க்கு; 'வெங்கள் யாமைப் புழுக்கிற்ஞ் ஆரல் கொழுஞ்சூடு' அளித்தான். கள், ஆரல்மீன் சூட்டு, ஆமைப்புழுக்கு மூன்றும் ஒத்த உணவுத்தொகுப்பு ஆகிறது. *புறம்.212. பட்டினப்பாலை.63*ல் வேந்தனின் போர்மறவர் தம்முள் போட்டியிடும் முன் இறால்மீன் சூட்டு உண்கின்றனர்.

பிசிராந்தையார் வாழ்விடத்தை ஒட்டிய காட்டில் அவரை கொய்யும் வேளாண் பணியாளர்க்கு வரகுச்சோறும் ஆய்மகள் வேளைக்கீரையோடு தயிர் சேர்த்து அட்ட புளிமிதவையும் வயிறாரக் கிடைக்கும் என்கிறது *புறம்.215.*

## மீன் உணவின் பெறுமதி

பொருளாதாரத்தில் சுருங்கிய திணைமாந்தர் புழுக்கிய மீனை உண்டனர்.

இவ்உண்ணுமுறை இழிந்ததாகக் கருதப்பட்டது. அகம்.110ல் 'இழிந்த கொழுமீன் வல்சி' என்றும்; இழிந்த மீன் என்னும் பொருளில் 'புலவு மீன்' என்றும் (*கலித்தொகை, 2007,* p.*406 பா.131*) பரதவப்பெண்கள் கூறக் காரணம்; திணைமாந்தராகிய அவர்கள் புழுக்கி உண்டமுறை ஆரியரின் சுட்டு உண்ணும் முறையைக் காட்டிலும் தாழ்ந்ததாகக் கருத்தப்பட்டமை எனலாம். உழவர் வாளைமீன்களை வேகவைத்து உண்டதை; 'நெடுவாளைப் பல் உவியல்' எனப் *புறம்.395* குறிப்பிடுகிறது. நற்.60 உழவன் புழுக்கிய வரால்மீனோடு பழைய சோறு உண்டதைக் கூறுகிறது. 'எளிய மக்கள் அவித்துண்டனர்' எனப் பிற ஆய்வாளரும் கூறியுள்ளனர் (பரமசிவன் தொ, மின்னிதழ், ஜுலை17-2013). பொருளாதாரத்தில் மேம்பட்ட வேந்தர் பொரிக்கறியாக மீனை விருந்தில் அளித்தனர். எண்ணெயில் பொரித்தமீன் மேலானதாகக் கருதப்பட்டது. அதனால் தான் *புறம்.399*ல் ஐயூர் முடவனார் கிள்ளி வளவனிடம் சென்று சுறாமீன் பொரியலையும் சேர்த்துண்ண ஏங்குகிறார். *புறம்.249* அகல்நாட்டு மன்னன் ஆரல், வாளை, வரால், ஆமை அனைத்தையும் ஒருங்கு விருந்தாக்கியதைப் பெருமையாகப் பேசுவதும் கருதத்தக்கது. 'மீனை உண்ணும் வழக்கம் ஆரியர் திராவிடரிடமிருந்து பெற்றது' (Sankaran, *2014*). நெருப்பில் சுட்ட மீனூன் வேந்தன் விருந்தாக அளித்த மேலான உணவு என்று *புறம்.396* கூறுவது நோக்கத்தக்கது. சோழன் கருவாட்டை ஆரிய மரபின்படி இரும்பு நாராசத்தில் குத்தித் தீயில் சுட்டளித்தான். முனைவர் ஜார்ஜ் ஹார்ட் *1987,* p.*5*); பண்டைத் தமிழகத்து ஜாதி வேறுபாட்டை; *அகம்.110, கலி.131* ஆகிய இரண்டு பாடல்கள் மூலம்; இழிந்த மீனுணவு எனப் பொதுப்படக் காரணம் கூறி நிறுவுவது தவறான கோணத்தை நல்குகிறது. பண்டைத் தமிழகத்தில் மீனுணவைச் சூட்டாகவும் புழுக்காகவும் உண்ணும் முறையே ஜாதிப் பாகுபாட்டைக் கோடிட்டுக் காட்டுகிறது.

## முடிவுரை

திணைமாந்தர் கற்களை அடுப்பாகக் கூட்டிச் சமைத்தனர். சுடுமண் அடுப்பு திராவிட நாகரிகத்தின் அடையாளமாகும். திணைமாந்தர் உண்ட புன்செய்த் தானியங்களின் புழுக்கு 'புன்கம்' எனப்பட்டது. நெல்லரிசிச்சோறு பொருளாதார மேம்பாட்டின் அடையாளமாக இருந்தது. திணைமாந்தர் தாழ்ந்த பொருளாதாரம் காரணமாகப் பழைய சோறும் பருத்துச் சிவந்த நெல்லரிசிப் புழுக்கும் உண்டனர். வேந்தரும் குறுநில மன்னரும் விருந்தளித்த சோற்றில் நெல்லரிசி நீளமாக வெண்மையாக இருந்தது. வேந்தர், மன்னர், திணைமாந்தர் அனைவரும் ஊன் புழுக்குகளைக் கள்ளோடும் தானியப் புழுக்குகளோடும் உண்டனர். திணைமாந்தர் மீனின் வாடூனைப் புழுக்கி உண்ண; வேந்தர் நெருப்பில் சுட்டு அளித்தனர். சர்க்கரைப் பொங்கல் 'கட்டிப்புழுக்கு' என்று பெயர் பெற்றது. இறப்புச் சடங்கிலும் நெல்லரிசிப் புழுக்கிற்கு இடமிருந்தது. எண்ணெயில் பொரித்துண்ணும் பழக்கம் திராவிடருடையது. தாளித்து எண்ணெயில் பொரித்த சூட்டை வளமாக வாழ்ந்த வேந்தரும் வேளிரும் விருந்தாக அளித்தனர்.

பொரிக்கறி ஆகும் சூட்டைக் 'கருனை' என்றனர். வறுத்த சூட்டு 'வறை' எனப்பட்டது. நெருப்பில் நேரடியாகச் சுட்டு உண்ணும் ஆரியநாகரிகம் மேலானதாகக் கருதப்பட்டது. தொகைநூற் காலத்தில் நால்வருணத்தாரும் தமிழகத்தில் கலந்து வாழ்ந்தமையால் நாகரிகக்கலப்பு ஏற்பட்டுத் திணைமாந்தரும் சுட்டு உண்டனர். பச்சைமீன் சூட்டு திணைமாந்தர் உணவாகும். மீனுணவைப் புழுக்காக உண்ணும் முறை இழிவாகக் கருதப்பட்டது. தீயில் சுட்ட விலங்கிறைச்சியை வேந்தன், வேளிர், பொதுமக்கள் அனைவரும் உண்டனர். அணங்கு வழிபாட்டிலும் விருந்திலும் பணியாளர்க்கு அளித்த உணவிலும் சூட்டும் புழுக்கும் இடம் பெற்றன.

### சுருக்கக் குறியீட்டு விளக்கம்

1) அகம்.அகநானூறு;

2) நற்.நற்றிணை;

3) புறம்.புறநானூறு;

4) பெரு.பெரும்பாணாற்றுப்படை;

பொரு. பொருநராற்றுப்படை.

## References

*Aingurunooru*. (2009). Chennai: Kazhaka Veliyeedu.

*Akanaanooru Kalirriyaanai Nirai*. (2009) Chennai: Kazhaka Veliyeedu.

*Akanaanooru Manimidai Pavalam*. (2007). Chennai: Kazhaka Veliyeedu.

*Akanaanooru Niththilakkovai*. (2008). Chennai: Kazhaka Veliyeedu.

Colleen Taylor Sen. (2018). "Tracing India's Food Journey from the Vedas", Tracing India's Food Journey - From the Vedas. https://www.livehistoryindia.com/story/history-in-a-dish/tracing-indias-food- journey-from-the-vedas/

Dayal N., Harjani aka Daduzen. (2018). *Sindhi Roots & Rituals* (Part l). Chennai: Notion Press.

Dumpukht. (2010). *Aryan cuisine, History of Tandoor*.

George L., Hart. (1987). "Early Evidence for Caste in South India" https://tamilnation.org/caste/hart.pdf

*Kaliththokai*. (2007). Chennai: Kazhaka Veliyeedu.

*Narrinai*. (2007). Chennai: Kazhaka Veliyeedu.

Paramasivan,Tho. (July17, 2013). "Thamizhar unavu". *Thinnai* e-*Magazine*.

*Pathirruppaththu.* (2007). Chennai: Kazhaka Veliyeedu.

*Paththuppaattu.* (2007). (Part I). Chennai: Kazhaka Veliyeedu.

*Paththuppaattu*. (2008). (Part II). Chennai: Kazhaka Veliyeedu.

*Puranaanooru*. (2007). (Part I). Chennai: Kazhaka Veliyeedu.

*Puranaanooru*. (2007). (Part II). Chennai: Kazhaka Veliyeedu.

Ragavaiyangar, Mu. (1913). *Velir Varalaaru.* Madurai: Mathuraith Thamizhch Changam-Chenthamizh pirasuram.

Sankaran, T., M., (2014). "Culture and food habits go together"

*Valaitamil Dictionary.*

Vivek. (2018). "Food Habits in Ancient India before the Arrival of Aryans*", Journal of Emerging Technologies and Innovative Research*. (Vol.5, Issue. 5, pp.806-809).

Zubin D'Souza. (2014). "The Origins of the Tandoor",*The origins of the Tandoor* Navhindtimes.in.

# சங்க இலக்கியத்தில் கல்வி
# Education in *Caṅkam* Literature

முனைவர் செல்வ சுப்ரமணியம் ராமையா / Dr R.Seiva Subramaniam[1]
செல்வமணி பாஸ்கரன் / Selvamani A/L Baskaran[2]

Date of submission: 2021-05-13
Date of acceptance: 2021-5-30
Date of Publication: 2021-07-20
Corresponding author's Name:
Dr R.Seiva Subramaniam
Email: selvas3098@gmail.com

## Abstract

The aims of education vary according to time and geographical setting; it also depends heavily on the politics, economy, social systems, and the philosophy of life prevailing at a particular time and place. Changes in the ideals and values accepted by the society calls for the corresponding changes in the education system. Therefore, good aims of education are related to the situations of life. Any organized education system must meet the real situations of a community. A child is not to be educated in a vacuum but taught the realities of the society since he is a member of the community as well. Understanding the ancient educational system can be accomplished via literature since the value of literature as a source of history, especially the ancient one, can hardly be exaggerated as it truly reflects the life and thought of the people of a specific time frame. The Caṅkam literature, which is the earliest known literature of South India that connotes the ancient Tamil literature, is the historical evidence of indigenous literary developments in South India and it offers insight into some aspects of the ancient Tamil culture, secular and religious beliefs, and the people themselves. One of the important aspects that we can amass from Caṅkam literature is the significance of education, notably to a child in mastering his multiple intelligences. The poems speak about the ways in which the early Tamils prioritized both formal and informal education. These poems are not just the earliest evidence of the Tamil ingenuity but this work hails as the best literary production in the 2,000-year journey of Tamil literature.

**Key Words:** Canka literature, Education, Social Child Development, Multiple of Intelligence, Sanggam literature

### முன்னுரை

21ஆம் நூற்றாண்டில் கல்வித் துறை பரிணாம வளர்ச்சிகளை அடைந்துள்ளதை நம்மால் காண முடிகின்றது. ஒரு மனிதனின் சிந்தனைத் திறன், அறிவாற்றல் மற்றும் சுய ஒழுக்கம் ஒவ்வொரு நாட்டின் வளர்ச்சியை வித்திடும் (மலேசியா கல்வி அமைச்சு, 2017). அவ்வகையில் நம் நாட்டின் தற்போதைய கல்வி திட்டமான 21ஆம் நூற்றாண்டின் கற்றல் கற்பித்தல் மாணவர்களின் அறிவாற்றலை மேம்படுத்தும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது. இதனை முறையாகச் செயல்படுத்த நம் நாட்டின் கலைத்திட்டமும் ஆசிரியர்களும் பெரும் பங்காற்றுகின்றனர். கல்வி என்பது மாணவர்களின் அறிவாற்றல், உடல், உள்ளம், மற்றும் ஆன்மீக வளர்ச்சிக்கு வித்திடும் ஓர் அறிவுச்சுரங்கமாக விளங்குகின்றது

[1] The author is a Lecturer in Tengku Ampuan Afzan Teacher Training Institute in Kuala Lipis Pahang. selvas3098@gmail.com.

[2] The author is a Secondary School Teacher In SMK Tuanku Muhammad Kuala Pilah, Negeri Sembilan. selvajohor6868@gmail.com.

(தேசிய கல்வித் தத்துவம், 2010). கல்வி இன்றைய சமூகத்தின் வாழ்வாதாரமாக மாறி விட்டது என்றால் அது மிகையாகாது. இக்கருத்தினையே மலேசிய தேசியக் கல்வித் தத்துவமும் பின்வருமாறு விவரிக்கின்றது,

> "மலேசியக் கல்வியானது இறைநம்பிக்கை, இறைவழி நிற்றல் எனும் அடிப்படையில் அறிவாற்றல், ஆன்மிகம், உள்ளம், உடல் ஆகியவை ஒன்றிணைந்து சமன்நிலையும் இயைபும் பெறத் தனிமனிதரின் ஆற்றலை முழுமையாக மேம்படுத்தும் ஒரு தொடர் முயற்சியாகும். இம்முயற்சியானது அறிவு, சால்பு, நன்னெறி, பொறுப்புணர்ச்சி, நல்வாழ்வு பெறும் ஆற்றல் ஆகியவற்றைப் பெற்றுக் குடும்பத்திற்கும் சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் ஒருமைப்பாட்டையும் செழிப்பையும் நல்கும் மலேசியரை உருவாக்கும் நோக்கத்தைக் கொண்டதாகும்.
>
> மூலம் கல்விச் சட்டம் 1996,(சட்டம் 550)

அவ்வகையில் கல்வியை மக்களிடம் கொண்டுச் செல்லும் சாதனமாக மொழி திகழ்கிறது. ஒரு மொழியின் வாயிலாகப் படைக்கப்படும் இலக்கியங்கள், மனிதன் தனது வாழ்நாளில் கடைப்பிடிக்கும் ஒரு நெறியினை நமக்கு படம் பிடித்துக் காட்டும் ஆற்றல் கொண்டது. ஆகவே, இலக்கியமானது மனிதனின் வாழ்க்கையைச் செம்மைபடுத்தும் வகையிலும் அமையும்.

தமிழ் இலக்கியம் ஏறக்குறைய இருபத்தைந்து நூற்றாண்டுகளின் வரலாறு உடையது. அவ்வாறு பழங்காலத்தில் தோன்றி வளர்ந்து இன்று வரையிலும் காக்கப்பட்டு வருகின்ற இலக்கியமே சங்க இலக்கியமாகும் (வரதராசன், 2011). செம்மொழி இலக்கியங்களில் கல்வி பற்றிய செய்திகள் பல காணப்படுகின்றன. சங்க காலத்தில் கற்றறிந்த புலவர்கள் அவையாகத் தமிழ்ச்சங்கங்கள் அமைந்திருந்தன. பெண்பாற் புலவர்கள் முப்பதுக்கும் மேலாக இருந்தமைக்கான சான்றுகள் உள்ளன. இவ்வகையில் கல்வி நிலையில் சிறப்புற்ற சமுதாயமாக இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகவே தமிழினம் இருந்துள்ளது. சங்ககால கல்வி நிலையை விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

## கட்டுரையின் நோக்கம்

சங்க இலக்கியத்தில் கல்வி என்ற ஆய்வுக் கட்டுரையானது, கீழ்க்காணும் நோக்கத்தை அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது.

i. சங்க இலக்கியம் பாடல்கள் வழி பழந்தமிழர் கல்விக்கு அளித்த முக்கியத்துவத்தை அறிதல்; பகுத்தாய்தல்.

ii. சங்க கல்வி முறை எவ்வாறு இன்றைய காலத்தின் கல்வி முறையோடு பொருந்தியுள்ளது என்பதனை ஒப்பிடுதல்.

## ஆய்வு முன்னோடிகள்

சங்க இலக்கியம் தொடர்பாகப் பல்வேறு ஆய்வுகள் இருந்தாலும் கல்வி தொடர்பாக உள்ள ஆய்வுகள் மிகக் குறைவே. அப்படியே அவற்றில் இருந்தாலும் பெரும்பாலான ஆய்வுகள் சங்க இலக்கிய பாடல்களின் விளக்கவுரையாகத் தான் அமைந்திருக்கின்றன. அதுவும் இன்றைய காலக்கட்டத்தின் கல்வித் திட்டத்தோடு ஒப்பிட்டு மேற்கொண்ட ஆய்வுகளைக் காண்பது மிக அரிது. பெரும்பாலான ஆய்வுகள் சங்கப் பாடல்களின் விளக்கவுரையாக மட்டுமே அமைந்திருக்கின்றன. அவ்வகையில் ஒரு சில ஆய்வுகள் இந்தக் கட்டுரைக்கு ஆய்வின் முன்னோடிகளாக அமைந்தன.

*Heritage of the Tamils: Education & Vocation* (S.V.Subramanian & V.R.Madhavan, 1986) என்ற ஆய்வானது சங்கக் கால மக்களின் கல்வி முறையினைப் பல்வேறு துணை தலைப்புகளின் விவரிக்கின்றது. அவை, *Education of the Sangam Tamils, Teachers and teaching- Learning process in ancient Tamil Educational system, The ancient Indian Education of North India and Tamil Nadu- A Comparative Study, Life Oriented Education of the Tamils, Vedic Education and Tamil Education- A comparative Study, Physical Education of the Tamils dan*

*Curriculum of ancient Tamil's Educational system and its uses* போன்றவை அடங்கும். இக்கட்டுரைகள் இந்த ஆய்விற்கு மிகவும் துணைப்புரிந்தன.

*Pendidikan dalam peradapan india pada zaman klasik* (AYA Durai.L, 2003) என்ற ஆய்வானது இந்திய மண்ணில் காலங் காலமாய் இருந்து வந்த கல்வி முறையினை விளக்கும் ஆய்வாக அமைகிறது. வேத காலம் தொடங்கி புராண காலம் வரை இந்திய மண்ணின் கல்வி வளர்ச்சியை விவரிக்கின்றது. இந்த ஆய்வின் வாயிலாக சங்க காலத்தில் இடம் பெற்ற கல்வி முறையினை நம்மால் அறிந்து கொள்ள முடிகின்றது.

உலக தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் வெளியீடான *Journal Of Tamil Studies* என்ற ஆய்வுக் கோப்பையில் 1972 தொடங்கி 2010 ஆண்டு வரையில் வெளியிடப்பட்ட பல்வேறு ஆய்வுகள் இடம் பெற்றுள்ளன. அவற்றில் ஒரு சில ஆய்வுகள் சங்க கால கல்வி பற்றிய பல்வேறு ஆய்வுகள் இடம் பெற்றுள்ளன. (<http://www.ulakaththamizh.org/JOTSissues.aspx>). அவற்றில் *Guide To Murukan, Contripution Of The Tamil To Culture, Tamil Literature Through The Ages, Education And Arts Of Early Tamils,* மற்றும் தமிழர் வழிபாடு போன்ற ஆய்வுகள் அடங்கும்.

## கட்டுரையின் வரையரை

சங்க இலக்கியமும் கல்வியும் என்ற ஆய்வானது மிக ஆழமும் அகலமும் கொண்ட ஆய்வுக்குரியப் பொருளாகும். இத்தகைய ஆய்வுகள் மிகப் பெரிய ஆய்வுகளுக்கு இட்டுச்செல்வதோடு அதிக காலத்தையும் எடுத்துக் கொள்ளும். அதே வேளை ஆய்வின் முடிவுகளோ பல நூல்களுக்குள் அடங்கும் வண்ணம் எண்ணிக்கையில் விரியும் தன்மைக் கொண்டன. இதற்குக் காரணம் கல்வி என்று சொல்லும்போது சமயம், அறிவியல், மருத்துவம், வானவியல், கணிதம், பாதுகாப்பு, பொருளாதாரம், கலை, விவசாயம், என பல்வேறு துறைகளோடு நெருங்கிய தொடர்புடையது. கல்வியறிவு பெற்ற சமுதாயத்தினால் மட்டுமே பல்வேறு உபகாரணங்களையும், ஆயுதங்களையும், ஏன் தத்துவங்களையும் கண்டுப்பிடிக்க முடிந்திருக்க முடியும் என்பதே இதற்குச் சான்றாகும்.

இதனைக் கருத்தில் கொண்டு இந்த ஆய்வுக் கட்டுரையானது சங்க இலக்கியங்களில் காணப்படும் ஒரு சில பாடல்களை மட்டும் உதாரணமாக எடுத்துக் கொண்டு, சங்க கால மக்கள் கல்வி பற்றி எம்மாதிரியான சிந்தனைகளைப் பெற்றிருந்தனர் என்ற வரையறைக்கு உட்பட்டு, ஒரு சில எடுத்துக்காட்டுகளையும் மதிப்பீட்டுகளை மட்டுமே இந்த ஆய்வு முன்வைக்கின்றது. இதன் வாயிலாக, சங்க காலத்தில் கல்விக்கு, குறிப்பாகப் பழந்தமிழர் எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்துள்ளனர் என்ற மதிப்பீடும் இடம்பெறுகிறது. அதேவேளை சங்க கல்விக்கும் இன்றைய தேசிய கல்வி தத்துவத்திற்கும் உள்ள நெருங்கிய தொடர்பினையும் பகுத்தாய்கிறது.

## கல்வி: ஒரு விளக்கம்

காட்டுமிராண்டியான மனிதன் விலங்குகளிலிருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்ள எழுப்பிய ஒலி கருத்துடன் கூடியதல்ல. இந்நிலையில் மற்றவர்களின் துணையை நாடிய போது கூடி வாழும் நிலை ஏற்பட்டது. அப்போதுதான் ஒருவர் கருத்தை மற்றவர் புரிந்து கொள்ள மொழிப்பயன்பாடு அவர்களுக்கு இன்றியமையாததாயிற்று. இயற்கையை எதிர்த்து வாழவேண்டிய மனிதனுக்கு கூரிய அறிவும் சீரிய உணர்வும் மிகுந்து தேவையாயிற்று. எனவே அவன் தனக்கு வேண்டிய அறிவை இயற்கையிடமிருந்தே கற்றான். எனவே மாந்தனின் முதல் ஆசிரியர் இயற்கையே; அக்கல்வியின் வாயிலாக வாழ்கைக்குத் தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொள்ள துணிந்தான் (Venkat Araman, 1986).

மனித வாழ்வினை மேம்படுத்தி நல்ல ஒழுக்கத்தையும் மனவலிமையையும் விரிந்த அறிவையும் சுயவலிமையையும் தருவது கல்வியாகும். கல்வி 'வாழ்வின் அணியாகவும் தாழ்வின் துணையாகவும் விளங்குவது' எனக் கல்வியின் சிறப்புரைப்பர் அரிஸ்டாட்டில்.

மலேசிய நாட்டின் தேசியக் கலைத்திட்டமும் அறிவு, திறன், நெறிமுறை, பண்பு, கலாச்சாரக் கூறுகள், நம்பிக்கை ஆகியவற்றை உள்ளடக்கிய கல்வித்திட்டமாகத் திகழ்கிறது. இத்திட்டம் மாணவர்கள் உடல், ஆன்மிகம், அறிவு, உள்ளம் ஆகியவற்றின் வளர்ச்சியை முழுமையாகப் பெற்றிருக்க வகை செய்வதோடு மாணவர்களுக்கு வேண்டிய பண்புகளை விதைத்து அவற்றை மேம்படுத்தவும் அவர்கள் அறிவைப் பெறவும் வழிவகுக்கும் வகையில் அமைந்திருக்கின்றது (Dokumen Standard Kurikulum Pentaksiran, 2017).

## சங்க இலக்கியத்தில் கல்வியைப் பற்றிய குறிப்புகள்

சங்க இலக்கியத்தில் காணப்படும் கல்வி பற்றிய குறிப்புகளை நாம் மதிப்பீடு செய்யும் முதன் முதலில் கல்வி சம்பந்தமான பாடல்களின் வரிகளை அடையாளம் காண்பது சிறப்பாகும். அதன் பிறகே, கிடைக்கப்பெறும் குறிப்புகளின் வாயிலாக நம்மால் சங்க இலக்கியம் காட்டும் கல்வி பற்றிய மதிப்பீட்டை வெளிப்படுத்த முடியும். அந்த வகையில்,

*‘ஈன்றுபுறந் தருதல் என்றலைக் கடனே*

*சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே’ (புறம் 312)*

என்ற பாடல் வரிகளின் வாயிலாக ஒரு குழந்தையைச் சான்றோனாக்கும் கடமை தந்தையைச் சாரும் என்ற உண்மையை உரக்கமாக பகிர்கின்றது. ஒரு குழந்தைக்குக் கல்வி புகட்டுவது முழுக்க முழுக்க ஆசிரியரின் கடைமையாகும் என்ற கருத்தினை அன்றே தகர்த்து, ஆசிரியரோடு பெற்றோரும் இணைந்து செயல்பட்டால்தான் அக்குழந்தை கல்வி கேள்விகளில் சிறப்பர் என்ற கருத்தை உலகிற்கு முன் வைத்த பெருமை தமிழரையேச் சாரும். இதன் விளைவே இன்று பள்ளிகளில் இயங்கும் பெற்றோர் ஆசிரியர் சங்கங்கள்.

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதுப் போல, பழந்தமிழர் கல்வியைப் பற்றி எம்மாதிரியான சிந்தனைகள் கொண்டிருந்தனர் என்பதற்கு மிக்க சரியான எடுத்துக்காட்டு புறநானூற்றில் இடப்பெற்றுள்ளது.

*“உற்றுழி உதவியும், உறுபொருள் கொடுத்தும்,*

*பிற்றைநிலை முனியாது, கற்றல் நன்றே!*

*பிறப்பு ஓர் அன்ன உடன்வயிற்று உள்ளும்,*

*சிறப்பின் பாலால், தாயும் மனம் திரியும்;*

*ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்,*

*மூத்தோன் வருக’ என்னாது, அவருள்*

*அறிவுடை யோன் ஆறு அரசும் செல்லும்;*

*வேற்றுமை தெரிந்த நாற்பால் உள்ளும்,*

*கீழ்ப்பால் ஒருவன் கற்பின்,*

*மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே*
*(புறம் 183)*

தமக்குக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்க்குத் தேவைப்படும் பொழுது உதவி செய்தும், மிகுந்த அளவு பொருள் கொடுத்தும், ஆசிரியரிடம் பணிவோடு, வெறுப்பின்றி கல்வி கற்றல் நன்று. ஒரே தாயின் வயிற்றில் பிறந்த பிள்ளைகளுள், அவர்களின் கல்விச் சிறப்புக்கேற்ப தாயின் மனநிலையும் மாறுபடும். ஒரே குடும்பத்தில் பிறந்த பலருள்ளும் “மூத்தவன் வருக” என்று கூறாமல் அறிவுடையவனையே அரசனும் தேடிச் செல்வான். கீழ்க்குலத்தில் உள்ள ஒருவன் கல்வி கற்றவனாக இருந்தால், மேற்குலத்தில் உள்ள ஒருவன் அவனிடம் கல்வி கற்கச் செல்வான் என்று பாடல் விளக்கம் அளிக்கின்றது (Shiza Mozhi, 2014). இந்தப் பாடல் வழி நான்கு செய்திகள் தெரிய வருகின்றன.

i. கல்வியைப் போதிக்கும் ஆசிரியரின் நலனைப் பாதுக்காக்க வேண்டும்.

ii. பெற்ற தாயும் கற்றறிந்த பிள்ளையினையே விரும்புவாள்.

iii. ஒருவருக்கு மதிப்பும் மரியாதையும் அவர் கற்ற கல்வியால்தான் கிட்டுமே தவிர வயதிற்காக அல்ல.

iv. கல்வியறிவு பெற்றவனை அனைவரும் நாடுவர்.

ஆகவே கல்வியறிவு என்பது மிகவும் போற்றத்தக்க அம்சமாக பழந்தமிழர் வாழ்வில் இருந்திருக்கின்றது. கல்வியறிவு வேண்டி கல்விச்சாலைக்குச் செல்லும் பிள்ளைகளுக்குக் கல்வியின் அவசியம் நன்கு உணர்த்தப்படுகின்றது. ஆசிரியர்களுக்கான

உரிய மரியாதை, கல்வி கற்றல்தான் மதிப்பும் மரியாதையும் கிட்டும் என்ற சிந்தனை சங்க காலத்தில் நம்மால் காண முடிகின்றது. அதனாலே பரிசில் வேண்டி வரும் புலவர் பெருமக்களை, மன்னன் முன் சென்று வரவேற்றான் என பல்வேறு குறிப்புகள் சங்க இலக்கியத்தில் உண்டு. புலவர் பெருமக்களும் தங்களின் அறிவுத்திறனால் அறிவுரைகள் வழங்கி மன்னனை நல்வழிப்படுத்திய சம்பவங்களும் சங்க இலக்கியத்தில் சான்றாக பல உள்ளன (Bavani, 2014).

மனிதனின் அறிவு வளர்ச்சிக்குக் கல்வி மிக அவசியம். அக்கல்வியானது அதிகாரப் பூர்வமாகவும், மறைமுகமாகவும் சங்க காலத்தில் வழங்கப்பட்டுள்ளது. குழந்தைக்கான அதிகாரப்பூர்வமற்ற கல்வி குடும்ப உறுப்பினர்கள் மூலமாகவும், அதிகாரப்பூர்வக் கல்வி கல்விச்சாலைகள் மூலமாகவும் நடைப்பெற்றது (Shiza Mozhi, 2014, p.437). குழந்தைகளுக்கு வழங்கப்பட்ட கல்வி கற்கும் முறைப் பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியங்களில் பல்வேறு இடங்களில் காண முடிகின்றது. அதன் விவரங்கள் பின்வரும் அட்டவணை 4-இல் விளக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 1: கல்வி முறை**

| அ. அதிகாரப்பூர்வக் கல்வி | | |
|---|---|---|
| **குறிப்பு** | **பாடல் வரிகள்** | **விளக்கம்** |
| தாய்மொழிக் கல்வி | *பரி 11: 87-88* | குழந்தைகளுக்குக் கல்விச்சாலையில் தமிழ் எழுத்துகள் சிறு வயது முதற்கொண்டே அறிமுகம் செய்யப்படுகின்றன. |
| மாணவர் கடமை | *புறம் 183: 1-2* | ஆசிரியர் கற்றுத்தரும் கல்வியை மாணவர்கள் ஆழமாகக் கற்றுத் தெளிவடைய வேண்டும். இதனால் ஆசிரியரின் பாரம் குறையும். ஆசிரியரின் கோபத்திற்கு ஆளாகக் கூடாது. |
| கேள்விக் கேட்கும் திறன் | *புறம் 237:5* | மாணவர்கள் கேள்விக் கேட்கும் திறன வளர்த்துக் கொள்வதன் வாயிலாக கற்கும் கல்வியைப் பிழையில்லாமல் கற்க முடியும். |
| மதச்சார்புடைய கல்வி மடங்கள் | *மதுரை - 468-488 பட்டின 53-55* | புத்த மதம் மற்றும் ஜைன மதத்தைப் போதிக்கும் கல்வி மடங்கள் வேத அறிவை மாணவர்களுக்கு போத்தித்தல் |
| கல்வி கற்காத குழந்தைகள் | *அகம் - 127: 15* | சிறு வயது முதற்கொண்டே முறையான கல்வியறிவு பெறாத குழந்தைகள் தவறான செயல்களில் ஈடுபடுதல் |

| ஆ. அதிகாரப்பூர்வமற்றக் கல்வி | | |
|---|---|---|
| வீர உணர்வும் நாட்டுப்பற்றும் | *புறம்-74:1-2, 86:4-6, 8-9:5,1-10* | குழந்தைகளுக்கு சிறு வயது முதற்கொண்டே வீர உணர்வு நாட்டுப்பற்றும் குடும்ப உறுப்பினர்களால் ஊட்டப்படுகிறது. இதனாலே சிறு வயதிலும் நாட்டைக் காக்க வேண்டி பிள்ளைகள் போர்களம் செல்லவும் துணிகின்றனர். |

| | | |
|---|---|---|
| பெரியோரை மதித்தல் | பதிற்று 7-9:3,70: 20 -22, சிறு- 23 | பெரியோரைக் கண்டதும் இரு கரம் கூப்பி வணக்கம் சொல்லி மரியாதையைப் புலப்படுத்த வேண்டும். |
| நல்ல பழக்க வழக்கங்கள் | குறிஞ்சி- 13-18 அகம் -304:19 புறம் - 187:1-4, 214:1-2 கலி - 133: 6-14 நற்றிணை 110: 11-13 | ஒருவர் எப்பொழுதும் நல்ல பழக்க வழக்கங்களைக் கடைப்பிடித்து தனது நன்னடத்தையைப் பாதுகாக்க வேண்டும். இல்லையினில் அவரை இந்தச் சமூகம் ஒதுக்கி வைத்து விடும். |
| உண்மை பேசுதல் | ஐங் - 287: 3-4, 472:3 -5 நற்றி 310:10-11, 283: 68, 1:1 | பொய் பேசுதல் மிக இழிவான செயலாகக் கருதப்படுகிறது. விளையாட்டிற்காகக் கூட பொய் பேசக் கூடாது என்று வலியுறுத்தப்படுகிறது. உண்மையை மட்டும் பேசினால் யாருக்கும் பயப்படத் தேவையில்லை. |
| மற்றவரோடு பகிர்தல் | பதிற்று 38: 13-16 புறம் - 46: 3-4, 182 நற்றி- 186: 8, 210: 5-9 | குழந்தைகள் தங்களுடைய உணவு, விளையாட்டுக் கருவிகள் போன்றவற்றை மற்றவரோடு பகிர்ந்துக் கொள்ள ஊக்குவிக்கப்படுகின்றனர். |
| கர்மப் பலன் | புறம் 176:78,192:11 194:6-7, 236:10-12 குறுந் 366:11-12 | ஒருவர் செய்யும் செயலுக்கு ஏற்பவே அவரின் கர்மப் பலனும் அமையும். நல்லது செய்தால் நன்மையும் தீயவைச் செய்தால் தீமையும் தான் கிடைக்கும். |
| தர்மம் செய்தல் | பரி- 10: 87-88 புறம் 29:20-26,72:17-19, பதிற்று 20:21-27, 6:16 20 கலி 2:11-19, 14:14 1527: | தர்மம் செய்யும் செயல் மிகவும் ஊக்குவிக்கப் படுகிறது. பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு தர்மம் செய்வதன் அவசியத்தை வலியுறுத்துகின்றனர். |
| இறை வழிபாடு | மதுரை 461-466 பரி 8:125-126,17:35-39, | பெற்றோர்கள் கோவிலுக்குச் செல்லும்போது தங்கள் குழந்தைகளையும் அழைத்துச் சென்று வழிபாடு மேற்கொள்கின்றனர். |
| புறம் பேசுதல் | மலை 77-80 கலி 43:18-19 | பிறரைப் பற்றி புறம் பேசுதல் இழிவான செயலாகக் கருதப்படுகிறது. |
| செய்நன்றி மறத்தல் | புறம் 34: 5-7 குறுந்தொகை 115: 1 கலி 34: 45, 149: 4-12 | செய்நன்றி மறத்தல் பெரிய பாவமாகக் கருதப்படுகிறது. அதேவேளை மற்றவருக்கு உதவும் வாய்பிற்காகக் காத்திருப்பதே உத்தமம். |
| சோம்பலை தவிர்தல் | நற்றிணை252:4, 214:1 -2 அகம் 173:13, 231:1 -3 புறம் 182:3 பதிற்று 70:1 | ஒருவரின் ஏழ்மைக்கு காரணம் சோம்பலேயாகும். ஆகவே வாழ்க்கையில் வெற்றிப் பெற சோம்பலைத் தவிர்க்க வேண்டும் |

### V. விளையாட்டு முறை

குழந்தைகள் என்றாலே விளையாட மிகவும் விரும்புவர். விளையாட்டு என்பது உடல் வளர்ச்சிக்கும், அறிவு வளர்ச்சிக்கும் மிக முக்கியப் பங்கு வகிக்கின்றது (Sangar, 2011, p.155). பண்டையக் காலத்தில் குழந்தைகள் விளையாடிய விளையாட்டுகளைப் பற்றிய குறிப்புகளை சங்க இலக்கியங்களில் காண முடிகின்றது. அப்படிச் சங்க காலத்தில் குழந்தைகளால் விளையாடப்பட்ட விளையாட்டுகளை பின்வருமாறு பிரிக்கலாம்.

i. தனியாள் விளையாட்டு

ii. குழு விளையாட்டு

iii. ஆண் குழந்தைகள் விளையாட்டு

iv. பெண் குழந்தைகள் விளையாட்டு

v. இருபாலரும் விளையாடும் விளையாட்டு

vi. உடல் உறுப்புகள் பயன்படுத்தும் விளையாட்டுகள்

vii. அறிவுத் திறனைப் பயன்படுத்தும் விளையாட்டு

viii. நீர் விளையாட்டு

விளையாட்டின் வாயிலாக கல்வியைக் கற்பிற்கலாம் என்பதால்தான் இன்றைய மாணவர்களுக்கு விளையாட்டு ஒரு பாடமாகவும், புறப்பாட நடவடிக்கையாகவும் பள்ளிகளில் கற்றுத் தரப்பட்டு வருகின்றன. ஒரு மாணவனுக்கு ஒரு விளையாட்டு *"Satu Murid Satu Sukan"* (Yahya Don & Siti Noor Ismail. (2016). என்ற கல்விக் கொள்கையின் வாயிலாக மாணவர்களின் அகம் மற்றும் புற வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. இதனை அன்றே வாழ்வில் கடைப்பிடித்து வாழ்ந்தவர்கள் தமிழர்கள் ஆவர்.

### சங்க இலக்கியத்தில் கல்வி பற்றிய மதிப்பீடு

சங்க இலக்கியத்தில் மேற்காணும் குறிப்புகளை அலசி ஆராய்ந்தால், பண்டைத்தமிழர்கள் கல்விக்கு அதுவும் குழந்தையின் வளர்ப்பின் போது எந்த அளவு முக்கியம் அளித்தார்கள் என்ற உண்மை விளங்கும். ஒரு குழந்தைக்குத் தேவையான அடிப்படை அறிவு, திறன் மற்றும் பண்புகள் வீட்டிலேயே மறைமுகமாகவும், நேரிடையாகவும் போதிக்கப்படுகின்றன. எது செய்யத்தக்கவை, வீட்டில் உள்ள பெரியோரும் இக்குழந்தைகளுக்கு முன் உதாரணமாய் இருக்க எது செய்யத் தகாதவை என்ற நன்னெறிப் பண்புகள் மிக கவனமாக இளம் வயதிலேயே விதைக்கப்படுகின்றன. (Salini, 1995, p.10).

அதேவேளை வாழ்க்கைக்குத் தேவையான திறன்கள் சிறு சிறு வீட்டு வேலைகள் செய்வதன் வாயிலாகவும், பெற்றோருக்கு வேலை செய்யும் இடத்தில் உதவி செய்வதன் வாயிலாகவும் கிடைக்கப் பெறுகின்றன. இதனால் வருங்காலத்தில் பெரியவர் ஆனதும் தனது சுய காலில் இவர்களால் நிற்க முடிகின்றது; தன்னம்பிக்கையையும் இது வளர்க்கிறது. அவ்வகையில் மறைமுகமாகப் போதிக்கப்படும் கல்வியானது வாழ்க்கைக் கல்வியாக அமைந்து விடுகின்றது.

ஆண் பிள்ளைகளுக்கு நிகராக பெண் பிள்ளைகளுக்கும் கல்வி கற்கும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது (Gloria Sundaramathy, 1975: 62). இதற்குத் தக்க சான்று 473 சங்க காலப் புலவர்களில் 43 பேர் பெண் புலவர்கள். இது உலகில் தோன்றிய ஏனைய நாகரீகங்களான சீனம், கிரேக்கம் போன்றவற்றைக் காட்டிலும் மிக அதிகம் என்ற கூற்றினைக் கீழ்க்காணும் அட்டவணை விவரிக்கின்றது.

அட்டவணை 2: பெண் புலவர்களின் எண்ணிக்கை

| காலம் | இடம் | மொழி | பெண் புலவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1500 கி.மு | வட இந்தியா | சமஸ் கிருதம் | 28 |
| 600 கி.மு | கிரேக்கம் | கிரேக்கம் | 1 |
| 600-500 கி.மு | வட இந்தியா | பாலி | 73 |
| 500-300 கி.மு | கிரேக்கம் | கிரேக்கம் | 6 |
| 200 கி.மு | வட இந்தியா | ப்ரக்திரம் | 11 |
| 100 கி.மு | இத்தாலி | லத்தீன் | 1 |
| 100 கி.மு | சீனா | சீனம் | 3 |
| 300- 200 கி.மு | தமிழகம் | தமிழ் | 41 |

மூலம்: விணீஸீவீ, 1981, ஜீ.275

அதேவேளை ஆன்மிக வளர்ச்சிக்கும் முக்கியத்துவம் அளித்துக் குழந்தைகளுக்குச் சிறு வயது முதற்கொண்டு சமய அறிவு போதிக்கப்பட்டுள்ளது. கோவில் வழிப்பாட்டில் இசைப்பயிற்சியும் அளித்து புத்தாக்கச் சிந்தனை தட்டியெழுப்பப் பட்டுள்ளது. அதேவேளை விளையாட்டுகளின் மூலமாக அறிவுக்கும், உடல் வளர்ச்சிக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது (Kathir Mahadevan, 1981, p.164).

### முடிவுரை

இன்றைய வாழ்க்கைச் சூழல் மிகவும் சவால்மிக்கது. இச்சவால்மிக்க வாழ்க்கையைத் திறம்பட நகர்த்திச் செல்வதற்குக் கல்விதான் உறுதுணையாக இருந்து வருகிறது. காலத்தின் வளர்ச்சி, தேவைக்கேற்பவும் கல்வியும் இன்றும் பல்வேறு பரிணாமங்களைத் தாண்டி வளர்ச்சியடைந்தும் வருகிறது. காலங்கள் மாறினாலும் கல்வியின் தேவை, அவசியம், முக்கியத்துவம் என்பதில் எந்தவொரு மாற்றத்தையும் நம்மால் காண முடியவில்லை என்று தான் சொல்ல வேண்டும். கல்வியின் நோக்கமே சமசீரான மாந்தனை உருவாக்குவதுதான். இந்தக் கொள்கைதான் அன்றைய கல்வி முறையிலும் இன்றைய கல்வி முறையிலும் நம்மால் காண முடிகின்றது. வாழ்க்கை கல்வியாக இருந்த கல்வி, வாழ்நாள் கல்வியாக இருக்க வேண்டும் என்ற சிந்தனை இன்று ஏற்றுக் கொள்ளப்பட்ட நியதியாகும். இந்த நியதியை அன்றே பழந்தமிழர் வாழ்வில் கடைப்பிடித்து ஒழுகினர். அக வாழ்க்கைக்குத் தேவையான இறை மாண்பு, நன்னெறிகள், தத்துவங்களும் புற வாழ்க்கைக்குத் தேவையான அறிவியல், கணிதம், போர் முறைகள், கலைகள் என கல்வியறிவில் சிறந்து விளங்கினர். இதற்குச் சான்றாக அமைவது சங்க இலக்கியப் பாடல்களே.

## References


Aya Durai, L. (2003). *Pendidikan dalam peradapan india pada zaman klasik*. Kuala Lumpur: Universiti Malaya.

Bahagian Pembangunan Kurikulum. (2017). *Kurikulum standard sekolah rendah: Bahasa Tamil*

Kuala Lumpur: Kementerian Pelajaran Malaysia.

Bavani, M. (2014). Caṅkakāla tamiḻakattil eḻuttaṟivu. In R. Krishna Moorthy, R. Vengkadesan & M. Rajantheran (Eds.), *Payaṉpāṭṭiyal Pārvaiyil Tamiḻ Ilakkiyaṅkaḷum Āvaṇaṅkaḷum* (Vol. 2, pp. 869-873). Chennai: Semmuthai Pathipakam.

Gloria Sundaramathy, L. (1975). The women poets in cankam age. In *Journal Of Tamil Studies* (Vol. 8, pp. 62-79). Chennai: International Institute of Tamil Studies.

Devaneyappavanar, N. (2009). *Paṇṭait tamiḻ nākarikamum paṇpāṭum*. Chennai: Poombukar Pathippakam.

Mani, P.S. (1981). *Sangakala avaiyarum ulaga penpard pulavarkalum.* Chennai: Ulaga Tamil Araichi Niruvanam.

Gloria Sundaramathy, L. (1975). The women poets in cankam age. In *Journal Of Tamil Studies* (Vol. 8, pp. 62-79). Chennai: International Institute of Tamil Studies.

Kathir Mahadevan, C. (1981). *Cultural heritage of ancient tamils*. Madras: Lakshmi Publications.

Sangar, M. (2011). *Budaya masyarakat tamil zaman sangam berdasarkan teks paripatal*. Kuala Lumpur: Universiti Malaya.

Salini, I. (1995). *Caṅkat tamiḻariṉ maṉitanēya maṇineṟikaḷ*. Chennai: International Institute of Tamil Studies.

Shiza Mozhi, T. (2014). Kalvi vaḷarccikku vaḻikāṭṭiya ilakkiyaṅkaḷ. In R. Krishna Moorthy, R. Vengkadesan & M. Rajantheran (Eds.), *Payaṉpāṭṭiyal Pārvaiyil Tamiḻ Ilakkiyaṅkaḷum Āvaṇaṅkaḷum* (Vol. 1, pp. 437-442). Chennai: Semmuthai Pathipakam.

Subramania Pillay, G. (1986). The Main Aims and Ideals of the Tamil Educational System. In S. Subramanian & V. Madhavan (Eds.), *Heritage Of The Tamils: Education & Vocation* (pp. 329-337). Chennai: International Institute of Tamil Studies.

Subramanian, V. (1986). The growth and develoment of textile industry of the tamils. In S. Subramanian & V. Madhavan (Eds.), *Heritage Of The Tamils: Education & Vocation* (pp. 329-337). Chennai: International Institute of Tamil Studies.

Varatharasan, M. (2011). *Tamiḻ ilakkiya varalāṟu*. (23 ed.). Chennai: Sakhitya Akademi.

Venkat Araman,R. (1986). Educational of the Sangam. In S. Subramanian & V. Madhavan (Eds.), *Heritage Of The Tamils: Education & Vocation* (pp. 329-337). Chennai: International Institute of Tamil Studies.

Yahya Don & Siti Noor Ismail. (2016). *Kokurikulum dan Penjajaran Konstruktif di Sekolah*. UUM Press.

http://www.ulakaththamizh.org/JOTSissues.aspx.

# அழிவுற்ற இசைத் தமிழ் நூல்கள்
# Extinct Tamil Music Books

மணிகண்டன் மாணிக்கம் / Manikandan Manickam[1]

## Abstract

Tamil is the only language in the world that has the epithet of *Muthamizh*. The language is divided into three categories: physics, music, and drama. The second category, Tamil music, has been growing for a long time. It is said that music has no end. Since then, music has evolved and gone through several stages, from the beginning to the present. All music listeners have a great sense of pride. Sound was born even before life was created and it was pure. Later, the sound was developed into Tamil music by incorporating voice, and instruments. This music was inspired by the natural senses, intellect, and energy of the Tamils. In the Middle Ages, there was a ban on Tamil music, which was unique to the country, and it was prohibited from being spread to other countries. As a result, various musical texts were destroyed. Dissolved religious libraries containing Tamil music texts were also consumed by fire. These destroyed musical texts, which remain unnoticed by the Tamil world today, can be divided into two categories: Tamil literature and classical Tamil grammar.

Date of submission: 2020-04-10
Date of acceptance: 2020-12-05
Date of Publication: 2021-07-20
Corresponding author'sName:
Manikandan Manickam
Email: alagappamani@gmail.com

**Key Words:** Tamil Language, Tamil literature, Tamil Music, Tamil Music Books, Tamil Culture

### முன்னுரை

முத்தமிழ் என்ற அடைச்சிறப்பை உலகில் தமிழ் மொழி மட்டுமே கொண்டுள்ளது. இம்மொழி இயல், இசை, நாடகம் என்ற மூன்றாக வகைப்படுத்தப்பெற்று வளர்ந்து வருகிறது. இவற்றுள் இரண்டாவதாக வைக்கப்பெற்றுள்ள தமிழர் இசை பன்னெடுங்காலமாகச் சிறப்புற்று வளர்ந்து வருகின்றது. இசைக்கு மயங்காத உயிர்கள் இல்லை என்பார்கள். அதற்கேற்ப அன்று முதல் இன்று வரை இசையானது தோற்றம் பெற்று பல்வேறு படிநிலைகளைக் கடந்து வந்துள்ளது. கேட்போரையெல்லாம் இன்புறச் செய்யும் பெருமை கொண்டது. உயிர் பிறந்திடும் முன்னே ஒலி பிறந்தது. அந்த ஒலி பிறக்கின்ற போதே இசையாய் உருவெடுத்தது. அந்த இசை தமிழர்களின் இயற்கை உணர்வாலும் அறிவாலும் ஆற்றலாலும் குரல் இசை, கருவி இசை என உருப்பெற்றுத் தமிழர் இசையாக வளர்ந்தது. பண்டைக்காலம் தொட்டே தனித்த தன்மையுடன் விளங்கி பிற தேசத்திற்கும் பரவி வந்த தமிழர் இசைக்குஇடைக்காலத்தில் ஒரு தடை ஏற்பட்டது. அவ்வாறு ஏற்பட்டதன் விளைவாக பல்வேறு இசைத்தமிழ் நூல்கள் அழிவிற்கு உட்படுத்தப்பட்டன. சமய நம்பிக்கை பண்பாட்டு அழிப்பு போன்றவற்றால் இசைத்தமிழ் நூலகள் அயலவர்களால் தீயினுக்கு இறையாக்கப்பட்டன.மறைந்து போன இசைத்தமிழ் நூல்களை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். இசைத்தமிழ் இலக்கியங்கள், இசைத்தமிழ் இலக்கணங்கள்

[1] The author is a Research Associate, in the Department of Tamil, Alagappa University, Karaikudi, Tamil Nadu, India. alagappamani@gmail.com

என வகைப்படுத்தப்பட்டவற்றினை இன்றும் தமிழ் உலகம் காணக்கிடைக்காத நிலையே நீடிக்கின்றது.

### இசைத்தமிழ்ச் செய்யுட்டுறைக் கோவை

இப்பெயரையுடைய ஒரு நூல் இருந்ததாக குணசேகரரின் யாப்பருங்கலக் காரிகை உரைப்பாயிரம் தெரிவிக்கின்றது "அந்நேல் இந்நூல் என்ன பெயர்த்தோ எனின்........ இசைத்தமிழ்ச் செய்யுட்டுறைக் கோவயே போலவும் அருமறை யகத்து அட்டக ஒத்தின் வகுக்கக் கோறு போலவும் உரூபாவ தாரத்திற்கு நீதகச் சுலோகமே போலவும் முதல் நினப்பு உணர்த்திய இலக்கியதாய்ச் ........... செய்யப்பட்டமையான், யாப்பருங்கலக் காரிகை என்றும் பெயர்த்தது. இதன் மூலம் இசைத்தமிழ் செய்யுட்டுறைக் கோவை என்னும் நூல் இசைத்தமிழ் செய்யுளிலக்கணத்தைக் கூறுகிறது என்பதும், இந்த நூலில் பாட்டுக்களின் முதல் நினைப்பை உணர்த்தும் செய்யுள்களும் இருந்தன என்பதும் தெரிகின்றன. இந்நூலினைப் பற்றிய செய்திகள் மேலும் கிடைக்கப்பெறவில்லை (Vetric Celvann, 1986).

### இசை நுணுக்கம்

இசை நுணுக்கத்தினை இயற்றியவர் சிகண்டி என்னும் முனிவர் ஆவார். அநாகுலன் என்றும் பாண்டியனுக்கும் திலோத்தமை என்ற தெய்வமகளுக்கும் பிறந்த சாரகுமாரன் என்பவன் இசைநூல் அறிவதற்காக இந்நூல் இயற்றப்பட்டது. இதனைச் சிலப்பதிகாரம் உரைப்பாயிரத்தில் அடியார்க்கு நல்லார் கூறுவதிலிருந்து அறிய முடிகிறது. 'இனித் தேவவிருடியாகிய குறுமுனிபாற் கேட்ட மாணாக்கர் பன்னிவருட் சிகண்டி என்றும் அருந்தவமுனி, இடைச்சங்கத்து அநாகுலன் என்றும் தெய்வப்பாண்டியன் தேரேறி விசும்பி செல்வோன். திலோத்தமை என்னும் தெய்வமகளைக் கண்டு தேரிற் கூடினவிடத்துச் சனித்தானத் தேவரும் முனிவரும் சரியா நிற்கத் தோன்றியமையிற் சாரகுமாரனென அப்பெயர் பெற்ற குமாரன் இசையறிதற்குச் செய்த இசை நுணுக்கம்' என்று அவர் எழுதுவதனைக் காணமுடிகின்றது (Aranthai Manian, 2020).

அகத்தியம், தொல்காப்பியம், மாபுராணம், இசை நுணுக்கம்;, பூதபுராணம் என்பன இடைச்சங்கத்தாருடைய நூல்கள் என இறையனார் அகப்பொருள் உரைப்பாயிரம் பகர்கின்றது. மேலும் இசை நுணுக்கம் என்ற நூலில் இருந்து அடியார்க்கு நல்லார் பல மேற்கோள்களைக் காட்டுகின்றார்.

"வேங்கடங் குமரி தீம்புனற் பௌவாமன்

நிந்நான் கெல்லை தமிழது வழக்கே"

என்றார் சிகண்டியாருமாகலின்"

(சாமிநாதய்யர், 2008).

"இடைப்பிங் கலையிரண்டு மேலும் பிராணன்

புடைநின் றபானன்மலம் போக்கும் தடையின்றி

யுண்டனகீ ழாக்கு முதானன், சாமனனெங்குங்

கொண்டறிவு மாறிரதக் கூறு

கூர்ம னிமைப்புவிழி கோணாகன், விக்கலாம்

பேர்வில் வியானன், பெரிதியக்கும் போர்மலியுங்

கோபங் கிருகரனாங் கோப்பி னுடம்பெரிப்பத்

தேவதத்த னாடுமென்று தேர்

ஒழிந்த தனஞ்சயன்பே ரோதி னுயிர்போய்க்

கழிந்தாலும் பின்னுடலைக் காட்டி யழிந்தழிய

முந்தா நெதிப்பித்து முன்னியவன் மாவின்றிப்

பின்னா வெடித்துவிடும் பேர்ந்து"

(சாமிநாதய்யர், 2008).

எனவும் இசை நுணுக்கமுடைய சிகண்டியாரும் கூறினார்கள்.

அன்றி இசைப்பா, இசையளவுபா வென்றும் இரு பகுதியுள் இஃது

இசைப்பாவின் பகுதியென்ப, அது பத்து வகைப்படும். செந்துறை, வெண்டுறை, பெருந்தேவபாணி, சிறுதேவபாணி, முத்தகம், பெருவண்ணம், ஆற்றுவரி, கானல்வரி, வரிமுரண், தலைப்போகு மண்டிலம்.

*"செந்துறை, வெண்டுறை, தேவாபாணியரண்டும்*

*வந்தன முந்தகமே வண்ணமே சந்தருவத்*

*தாற்றுவரி, கானல், வரிமுன் மண்டிலமாத்*

*தோற்று மிசையுசைப்பாச் சுட்டு*

என்றார் இசை நுணுக்கமுடைய சிகண்டியாரென்க" (சாமிநாதய்யர், 2008).

சிகண்டி என்பவரைப்பற்றி பௌத்த சமய நூல்களில் ஒரு செய்தி காணக்கிடைக்கின்றது. சக்கன் (இந்திரன்) உடைய தேர்ப்பாகனான மாதவியின் மகன் சிகண்டி என்பவன், இந்தச் சிகண்டியின் மீது திரும்படு (துரும்புரு) என்னும் கந்தருவனுடைய மகளான பத்தா சூரியவச்சரா என்னும் மங்கை காதல் கொண்டிருந்தாள்.

பஞ்சசிகா என்னும் காந்தருவன் பதினாறு வயதினுடைய அழகிய இளைஞன் இசைக்கலையில் தேர்ந்தவன். சக்கனுடைய (இந்திரனுடைய) இசைப்புலவனவாக இருந்தவன் பஞ்சசிகா. பத்தவச்சாவின் மேல் காதல் கொண்டு அக்காதலைப் பற்றி இசைப்பாட்டு ஒன்றை இயற்றினான். அவன் அப்பாடலை அவளிடம் பாடினான். அதனைக் கேட்ட அவள் அதில் புத்தர் பிறந்த சாக்கிய குலத்தின் சிறப்புகள் கூறப்பட்டிருந்தபடியால் தான் காதலித்திருந்த சிகண்டியை மணஞ்செய்து கொள்ளாமல், பஞ்சசிகாவை மணஞ்செய்து கொண்டாள். இந்தக்கதை சிகண்டினம் இசை வைக்க ஆசிரியன் சிண்டியும் ஒருவரா அல்லது இருவரா என்பது ஆய்வுக்குரியது.

## இந்திரகாளியம்

அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார உரை சிறப்புப் பாயிரப்பகுதியில் இந்திர காளியம் என்னும் நூலைக் குறிப்பிடுகின்றார். "பாரசவ முனிவரில் யாமளேந்திரர் செய்த இந்திரகாளியம்" என்று அவர் கூறுகிறார். எனவே, இந்நூலாசிரியர் பாரசவ இனத்தினைச் சேர்ந்தவர் என்றும் யாமளேந்திரர் என்பது அவர் பெயர் என்றும் கருத இடமுண்டு. இந்திரகாளியம் என்பது இசைத்தமிழ் நூலாகும்.

"பாரசவன் என்பது கொற்றவை (துர்க்கை)யைப் பூசை செய்கிறவர்களுக்குப் பெயராகும் என்னை? தேவிக்குத் திருவுடையாக உபாசக பாரசவன் சார்த்துவன கௌசிகப் பட்டாடைகளேயோ? அன்றியும் தேவியைப் பூசிக்கும் பாரசவன் அமுது செய்விப்பன அறுசுவையடிசிலேயோ" என வரும் தக்கயாகப் பரணி, யாமளேந்திரர் என்னும் பெயரும் இவருடைய இயற்பெயர் அன்று. சிறப்புப் பெயராகும் என்னை? தேவியைப் பற்றிக் கூறும் நூல்களுக்கு யாமளநூல் என்பது பெயர். இதனைத் தக்கயாகப் பரணி உரையினால் அறியலாம். யாமள சாத்திரத்தினாற் சொல்லப்படுகின்ற ஈசுவரியின் பதினெண் கணநாதரானும் விரும்பப்படுகின்ற கோயில்" என்று அவ்வுரை கூறுவதிலிருந்து அறியலாம். எனவே இந்திரகாளியம் என்னும் இசைத்தமிழ் நூலை இயற்றிய பாரசவ முனிவராகிய யாமளேந்திரர் என்பவர் தேவியைப் பூசை செய்யும் குடும்பத்தைச் சேர்ந்தவர் என்பது தெரிகின்றது. இந்திரகாளியம் சிலப்பதிகார உரை எழுத அடியார்க்கு நல்லார்க்கு உதவியாய் இருந்தது என்பதனைத் தவிர வேறு செய்திகள் புலப்படவில்லை (Arunachalam, 2005).

## குலோத்துங்கன் இசைநூல்

குலோத்துங்கச்சோழன் சோழ அரசர்களில் பெயர் பெற்றவன். இவனுக்கு விசயதரன், செயங்கொண்டான் என்னும் சிறப்புப் பெயர்களும் உண்டு. கலிங்கப் போரை வென்றவன் இவனே. அதனால் கலிங்கத்துப்பரணி என்னும் நூலைச் செயங்கொண்டார் என்னும் புலவரால் பாடப்பெற்ற பெருமையை உடையவன். இவன் இசைக்கலையில் வல்லவன் என்றும், இசைத்தமிழ் நூல் ஒன்றை இயற்றினான் என்றும் கலிங்கத்துப்பரணி கூறுகிறது.

*"வாழி சோழகுல சேரன் வகுத்த வசையின்*

*மதுர வாரியென லாகுமிசை மாத ரிதெனா*

*வேழு பாருலகொ டேழிசை வளர்க்க வுரியான்*

*யானை மீது பிரி யாதுட னிருந்து வரவே"*

*(செயங்கொண்டார் 'கலிங்கத்துப்பரணி' அவதாரம் 45)*

*"தாள முஞ்செல அம்பிழை யாவகை*

*தான்வ குத்துன் தன்னெதில் பாடியே*

*காள முங்களி றும்பெறும் பாணர்தங்*

*கல்வி யிற்பிழை கண்டனன் கேட்கவே"[5]*

*(செயங்கொண்டார் 'கலிங்கத்துப்பரணி' அவதாரம் 45)*

இதன் மூலமாக இவன் இசைக்கலையை நன்கு அறிந்தவன் என்பதும் இசைக்கலையில் வல்லவரான பாணர்களின் இசையிலும் இவன் பிழைகண்டவன் என்பதும், இசைநூல் ஒன்றை இயற்றினான் என்பதும் வகுத்த இசைநூல் முறைப்படி இசைபாடி இவனிடம் பாணர்கள் பரிசு பெற்றார்கள் என்பதும் அறியப்படுகின்றன. எனினும் இவன் இயற்றிய நூலின் பெயர் மற்றும் அது தொடர்பான செய்திகளும் அறியப்படவில்லை.

### சிற்றிசை பேரிசை

இப்பெயருள்ள இரண்டு நூல்களின் பெயரை இறையனார் அகப்பொருள் உரையாசிரியர் குறிப்பிடுகிறார். "அவர்களால் (கடைச்சங்கத்தவரால்) பாடப்பட்டன. நெடுந்தொகை நானூறும், குறுந்தொகை நானூறும், நற்றிணை நானூறும், புறநானூறும், ஐங்குறுநூறும், பதிற்றுப்பத்தும், நூற்றைம்பது கலியும், எழுபது பரிபாடலும், கூத்தும், வரியும், சிற்றிசையும், பேரிசையும் என்று இத்தொடக்கத்தன என்பது இறையனார் அகப்பொருள் உரைப்பாயிரம், இதில் கூறப்பெற்றுள்ள நெடுந்தொகை நற்றிணை, ஐங்குறுநூறு, கலித்தொகை என்னும் நூல்கள் இப்போதும் உள்ளன. புறநானூற்றில் சில பாடல்கள் தவிர, மற்ற பாடல்கள் கிடைத்துள்ளன பதிற்றுப்பத்தில் முதல் பத்தும், கடைசிப்பத்தும் தவிர, ஏனைய எட்டுப் பத்துக்களும் கிடைத்துள்ளன. சிற்றிசை, பேரிசை என்னும் நூல்கள் கிடைக்கவில்லை.

சிற்றிசை, பேரிசை என்பன இசைத்தமிழ் நூல்கள் என்பது இவற்றின் பெயரினால் தெரிகிறது. தொல்பொருள் செய்யுளியலில் *153*ஆம் சூத்திர உரையில் பேராசிரியர் "கந்தருவ மார்க்கத்து (இசைத்தமிழ்) வரியும் சிற்றிசையும் பேரிசையும் முதலாயின போலச் செந்துறைப் பகுதிக்கே யுரியவாகிவருவனவும், கூத்தநூலுள் வெண்குறையும் அராகத்திற்கே யுரியவாகி வருவனவும், ஈண்டுக்கூறிய செய்யுள் போல வேறு பாடப்பெறும் வழக்கின என்பது கருத்து" என்று எழுதுகின்றார் (Aranthai Manian, 2020).

தொல்பொருள் செய்யுளில் *172*ஆம் சூத்திர உரையில் இனம்பூரணர் "பண்ணத் தோற்றுவித்தலாற் பண்ணத்தி என்றார். அவையாவன சிற்றிசையும் பேரிசையும் முதலாக இசைத்தமிழில் ஓதப்படுவன" என்று எழுதுகிறார். இவர்கள் கூறுகிற சிற்றிசை, பேரிசை, வரி என்பன இவரின் பகுதிகள். இவை சிற்றிசை, பேரிசை என்று நூலின் பெயர்களைக் குறிப்பன அல்ல. ஆனால் மேலே இறையனார் அகப்பொருள் உரைப்பாயிரத்தில் குறிப்பிடப்பட்;ட சிற்றிசை, பேரிசை என்பன இசையைப் பற்றிய நூல்கள் என்பது ஐயமற விளங்குகிறது. இவ்வாறே கூத்து, வரி என்று இறையனார் அகப்பொருள் உரைப்பாயிரம் குறிப்பது நாடகத்தையும், வரிக்கூத்தையும் குறிக்கின்ற இரண்டு நூல்கள் என்பது தெரிகின்றது (Perumal, 1985).

### பஞ்சபாரதீயம்

இப்பெயருடைய நூல் ஒன்று இருந்தது என்பது சிலப்பதிகாரத்திற்கு அடியார்க்கு நல்லார் எழுதிய உரையினால் தெரிகிறது. இந்நூலை இயற்றியவர் நாரதன் என்பவர். இந்நூல் அடியார்க்கு நல்லார் காலத்திலேயே மறைந்துவிட்டது. இதிலிருந்து ஒரே ஒரு செய்யுளை அடியார்க்கு நல்லார் மேற்கோள் காட்டியிருக்கிறார். இவர் சிலப்பதிகார

உரைப்பாயிரத்தில் இந்நூலைப்பற்றி எழுதுவதாவது.

“இனி இசைத்தமிழ் நூலாகிய பெருநாரை, பெருங்குருகு பிறவும் தேவவிருடி நாரதன் செய்த பஞ்ச பாரதீயம் முதலாவுள்ள தொன்னூல்களுமிறந்தன” சிலப்பதிகாரம் வேனிற்காதை “செம்பகை யார்ப்பே கூட மதிர்வே. வெம்பகை நீக்கும் வரகுளி யறிந்து” என்னும் அடிகளுக்கு உரைகூறிய அடியார்க்கு நல்லார் இந்நூலிலிருந்து:

*“இன்னிசை வழிய தன்றி யிசைத்தல்செம் பகைய தாகும்*

*சொன்னமாத் திரையி னோங்க விசைத்திடுஞ் சுருதி யார்ப்பே*

*மன்னிய விசைவ ராது மழுங்குதல் கூட மாகும்)*

*நன்னுதல் சிதற வுந்த லதிர்வென நாட்டி னாரே” (சாமிநாதய்யர், 2008).*

என்னும் செய்யுளை மேற்கோள் காட்டுகிறார்.

**பஞ்சமரபு**

இஃதோர் இசைத்தமிழ் நூல், அறிவனார் என்பவர் இந்நூலாசிரியர் “அறிவனார் செய்த பஞ்சமரபு” என்று அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார உரைச்சிறப்புப்பாயிரத்தில் கூறுகிறார். இந்நூலினின்று ஒரு சூத்திரத்தை அடியார்க்கு நல்லார் மேற்கோள் காட்டுகிறார். “இன்னும் சுத்தம் சாளகம் தமிழென்றும் சாதியோசைகள் மூன்றுடனும் கிரியைக (தாளங்கள்)ளுடனும் பொருந்தும் இசைப்பாக்கள் ஒன்பது வகையென்ப. அவை சிந்து, திரிபதை, சவலை, சமபாதவிருத்தம், செந்துறை, வெண்டுறை, பெருந்தேவபாணி, சிறுதேவபாணி என்று கூறுகிறார்.

*“செப்பரிய சிந்து திரிபாதை சீர்ச்சவலை*

*தப்பொன்று மில்லாச் சமபாதம் பெய்ப்படியுஞ்*

*செந்துறை வெண்குறை தேவபாணி வண்ணமென்ப*

*வைந்தொடியா யின்னிசையின் பா”*
*(சாமிநாதய்யர், 2008).*

இவ்வாறு இப்பாடல் கூறுகிறது.

**பதினாறு படலம்**

பதினாறு படலம் என்றும் பெயருள்ள இசைத்தமிழ் நூல் ஒன்று இருந்தது என்பது சிலம்பு உரையாசிரியர் உரையிலிருந்து தெரிகிறது. பதினாறு படலம் பல ஒத்துகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது என்பதும் தெரிகிறது.

*“தெருட்ட லென்றது செப்புங் கலை*

*யுருட்டி வருவ தென்றே மற்றே*

*வொன்றன் பாட்டு மடையென்ற நோக்கின்*

*வல்லோ ராய்ந்த நூலே யாயினும்*

*வல்லோர் பயிற்றுங் கட்டுரை யாயினும்*

*பாட்டொழிந் துலகினி லொழிந்த செய்கையும்*

*வேட்டது கொண்டு விதியுற நாடி”*
(Manickam, Manikandan, 2019)

என்னும் இவை இசைத்தமிழ் நூல்கள் என்று பதினாறு படலத்துள் காணப்பெறுகின்றன.

**பெருநாரை பெருங்குருகு**

இவை இரண்டும் இசைத்தமிழ் நூல்கள் என்று அடியார்க்கு நல்லார் தம்முடைய சிலப்பதிகாரப் பாயிரவுரையில் குறிப்பிடுகின்றார். இசைத்தமிழ் நூல்களில் பெருநாரை பெருங்குருகும் பிறவும், தேவவிருடி நாரதன் செய்த பஞ்ச பாரதீய முதலாவுள்ள தொன்னூல்களுமிறந்தன” என்று அவர் எழுவது காணமுடிகிறது. இறையனார் அகப்பொருள் உரையாசிரியர் குறிப்பிடுகின்ற முதுநாரை, முதுகுருகு என்னும் நூல்கள் பெருநாரை பெருங்குருகு போலும் என எண்ணத் தோன்றுகிறது.

தலைச்சங்கத்தினரால் பாடப்பெற்ற எத்தனையோ பரிபாடல்களுடன் முதுநாரையும், முதுகுருகும் களிரியாவிரையுமென இத்தொடக்கத்தன

என்று அவ்வுரையாசிரியர் கூறுகிறார்;. இந்நூல்களைப் பற்றி வேறு செய்திகள் கிடைக்கப்பெறவில்லை (Perumal, 1985).

## வாய்ப்பியம்

யாப்பருங்கால விருத்தியுரையில் வாய்ப்பியம் என்னும் நூல் கூறப்பெறுகிறது. இந்நூலாசிரியரை வாய்ப்பியனார் என்றும், வார்ப்பியமுடையார் என்றும் கூறுகிறார். யாப்பருங்கல விருத்திரையுரைகாரர் வாய்ப்பியம், இசைத்தமிழ் இலக்கணத்தைக் கூறுகின்ற நூல் ஆகும். மேலும் இந்நூல் பற்றிய வேறு செய்திகள் கிடைத்திலது.

பாவகைகளை வெண்பா, ஆசிரியம், கலிப்பா, வஞ்சிப்பா என முறைப்படுத்தி வைத்துள்ளனர். வெள்ளையென்றும், பாவென்றும், நின்று வெண்பா என்றும் கூறப்பெறுகிறது. மேலும், வேதியர், அரசர், வணிகர், சூத்திரர் என்று சாதிமேல் இப்பாவகைகள் இணைத்து வழங்கியுள்ளனர் என்பதனை, வழங்குவாருமுளர்.

*"வெண்பா முதலா நால்வகைப் பாவும்*

*எஞ்சா நால்வகை வருணம் போலப்*

*பாவினற் தியற்கையு மதனோ ரற்றே"*

(Manickam, Manikandan, 2019)

என்றும்,

*"மன்னவ னென்ப தாசிரி யம்மே*

*வெண்பா முதலா நால்வகைப் பாவு*

*மெஞ்சா நாற்பால் வருணர்க் குரிய"* (யாப்பருங்கல விருத்தி செய்யுளியல்)

யாப்பருங்கல விருத்தி விரித்துக்கூறுகிறது. மேலும், ஒவ்வொரு பண்ணுக்குமான தொடர்பினை,

*"சாராரி பியந்தை நேர்ந்த திறமே*

*பெயர்திறம் யாழையாழ்*

*சாதாரி நான்குஞ் செவ்வழியாழ்த் திறனே"*

*"மதுவிரி வாகையும்*

*பொதுவியற் படலமும் புறமா கும்மே"*

*'எப்பொரு ளேறு மொருபொருள் விளங்கச்*

*செப்பி நிற்பது பெயர்ச்சொல் லாகும்"*

*'வழுவின் மூவகைக் காலமொடு சிவணித்*

*தொழில்பட வருவது தொழிற்சொல் லாகும்"*

*'சுடுபொன் மருங்கிற் பற்றா சேய்ப்ப*

*விடைநின் றிசைப்ப திடைச் சொல்லாகும்"*

*'மருவிய சொல்லொரு மருவாச் சொற்கொணர்ந்த*

*துரிமையோ பியற்றுவ துரிச்சொல் லாரும்"* (யாப்பருங்கல விருத்தி செய்யுளியல்)

என்று யாப்பருங்கல விருத்தி ஒழிபியல் கூறுகின்றது.

## நிறைவாக

"காலத்தால பல்வேறு மாற்றங்களையும் அழிவுகளையும் தன்பால் கொண்ட தமிழர் இசை இன்றும் பல இசை ஆர்வலர்களாலும் இசை அறிஞர்களாலும் புத்துயிர் பெற்று வருகிறது"[12] இருப்பினும் இசைத்தமிழ் குறித்த ஆய்வுகள், நூலகள் காலத்தின் தேவை, தமிழர் பண்பாட்டின் மீட்டுருவாக்கமாக அமைகிறது. உலகில் உள்ள ஒவ்வொரு தமிழனும், தமிழ் அமைப்புகளும், தமிழர்களைச் சார்ந்த அரசமமைப்புகளும் தமிழ் வளர்ச்சிக்கும், தமிழ் இசை வளர்ச்சிக்கும் பணியாற்ற வேண்டியதும், பாதுகாக்க வேண்டியதும் இன்றியமையாத கடமையாகும்.

## References

Aranthai Manian. (2020). *Tamil Isai Marabu*. Pustaka Digital Media.

Arunachalam M. (2005). *Patinmunram Nurrantu*. Ti Parkkar.

Manickam, M. Manikandan. (2019). "Tamilisaiyum Ulaka Isaiyum", *Aayutha Ezhuthu Pannaddu Tamizhiyal Aayvithazh*. (Vol.7, No.4, pp.109-112).

Manickam, M. Manikandan. (2019). Karunadaga Sangeetham Endra Sol Thondriya Varalaru. *Aayutha Ezhuthu Pannaddu Tamizhiyal Aayvithazh*. (Vol.7, No.4, pp.88-95).

Manikandan, M. (2019). "Evaluation of the causes of Tamil Music Decline" *Journal of the Gujarat Research Society*, (Vol.21, No.16, pp.385-390).

Perumal, E., N, (1985). *Tamilar Isai*. International Tamil Studies.

Saminatha Aiyar, U., Ve. (2008). *Silapathigaram*. Chennai: U.Ve.Saminatha Aiyar Nuul Nilauam.

Seyangkondar. (1959). *Kalingthuparani*. Chennai: Thirunelveli Saiva Sithantha Nuurpathippuk Ka lagam.

Vetric Celvann. (1986). *Icaiyiyal.* Manivasagar Pathipagam.

*Yapperungkala Viruthi Seyyuliyal.*

# ந.மகேஸ்வரியின் பார்வையில் பெண்ணியம்: ஓர் ஆய்வு
# A Research on Feminism in N.Mageswari’s View

கீதா சுகுமாரா / Geetha Sukumara[1]
முனைவர் சு.மணிமாறன் / Dr.S.Manimaran[2]
இணைப்பேராசிரியர் முனைவர் கிருஷ்ணன் மணியம் / Associate Professor Dr.Krishanan Maniam[3]

## Abstract

This research aims to identify the portrayal of the Indian women and the struggles they faced in the short stories by N. Mageswari. In addition, this study also serves as an assessment to the authorship N. Mageswari. This study also provides an opportunity to identify the image of women more clearly and to recognize their position in the social structure of Indian society. This approach creates awareness among women about the rights they have in the society. As this paper is centred on feminism, the depiction of women and the hurdles they encounter within their community are the main focus. Emphasis is given to women’s freedom and their tribulations of life. Apart from describing the problems handled by women in these short stories, this paper also addresses the actions to be taken to curb these issues.

Date of submission: 2020-02-20
Date of acceptance: 2021-04-22
Date of Publication: 2021-07-20
Corresponding author’s Name:
Geetha Sukumara
Email: geethasukumara83@gmail.com

**Key Words:** N.Mageswari, Feminism, women awareness, Tamil short stories, Malaysian Tamil literatures

### முன்னுரை

அரை நூற்றாண்டு கால இலக்கிய அனுபவம் கொண்ட சிறந்த பெண் எழுத்தாளர் ந.மகேஸ்வரி. சிறுகதைகள் மலேசிய இலக்கியத்தின் எல்லா நிலைகளிலும் தடம் பார்த்து, கால் பதித்து இலக்கிய வளர்ச்சிக்கு தன்னை அர்ப்பணித்துக் கொண்ட இவர் பெண் எழுத்தாளர்களில் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கவர். இவரது தலைமுறை கதைகள் ஒரு கால கட்டத்தில் பல பெண்களின் பிரியத்துக்கு உகந்த எழுத்தாளியான அன்றைய சூடாமணியின் நடையில் இரசிக்க இயல்கிறது. சுலபமான நடை, இலகுவாக படித்துப் புரிந்து கொள்ள முடிந்த கதையோட்டங்கள், இவரது ஐம்பது ஆண்டுகால எழுத்து அனுபவத்தில் மனதைக் கவர்ந்த ஒரு நல்ல விசயம் இவர் காலத்தோடு வளர்ந்திருக்கிறார். பெண்ணுக்குறிய சிக்கல்களை அதன் தடம் மாறாமல், ஆழமும் அனர்த்தமும் குன்றாமல், நிஜத்தில் இருந்து விலகாமலும் அதே வேளையில் வர்ணனைகள் ஜோடனைகளின்றி யதார்த்தத் தன்மையினின்று வழுவாமல்

[1] The author is a master’s research scholar in the Department of Indian Studies, University Malaya, Kuala Lumpur, Malaysia.

[2] The author is a Senior Lecturer in the Department of Indian studies, University of Malaya, Kuala Lumpur, Malaysia. manimaran23@um.edu.my

[3] The author is an former Associate Professor in the Department of Indian Studies, University of Malaya, Kuala Lumpur, Malaysia. krishanan@um.edu.my

சிறுகதையின் இலக்கணத்தையும் கதையின் சுயத்தையும் நிலைநிறுத்தி கதைகளை படைத்துள்ளார் ந.மகேஸ்வரி. பெண் எழுத்து எனும் ஒரு வட்டத்தை விட்டு வெளியே வராமல் அதற்கான ஒழுங்குகளை மிக கெட்டியாகப் பிடித்துக் கொண்டு படைக்கப்பட்டுள்ள பெரும்பாலான கதைகள் தான் ந.மகேஸ்வரியின் எழுத்து எனும் அடையாளத்தைப் பிரபலிக்கிறது. ந.மகேஸ்வரியின் சிறுகதைகளில் காணப்படும் பெண்ணியத்தை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பெண்ணியம் பற்றிய ஆய்வுகள் வாசகர்களுக்கும் எதிர்கால ஆராய்ச்சியாளர்களுக்கும் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தும். அதே நேரத்தில், விமர்சகர்கள் கோட்பாட்டைப் பயன்படுத்துவதில் நுண்ணறிவு மற்றும் நுண்ணறிவுகளைப் பெற இந்த ஆய்வு மிகவும் முக்கியம். அதே நேரத்தில், இந்த ஆய்வறிக்கை, சமுதாயத்தின் மதிப்பைப் பற்றி படிப்பவருக்கு ஒரு படிப்பையும், சமுதாயத்தைச் சுற்றியுள்ள பிரச்சினைகளின் தாக்கத்தையும் அளிக்கும் என்று ஆராய்ச்சியாளர் நம்புகிறார். பெண்ணியம் பற்றிய இந்த ஆய்வானது சிறுகதைகளையும் பெண்ணியம் பற்றியும் ஆய்வு மேற்கொள்ளும் ஆய்வாளர்களுக்கு துணைகோளாக அமையும். ந.மகேஸ்வரி அதிகம் பெண்களுக்கும் பெண்ணியத்திற்கும் முக்கியத்துவம் தந்து, காலத்திற்கு ஏற்றவாறு எழுதுவதால் இவ்வாய்விற்கு அவருடைய சிறுகதைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

ஷொவால்டர் அறிமுகப்படுத்திய ஜினொகிரித்திக் கூறுகளைப் பயன்படுத்தி இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஜினோகிரித்திக் கோட்பாடு மனோவியல் கோட்பாடு, உளவியல், உயிரியல், கலாச்சாரம் மற்றும் மொழி ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்துள்ளது. இலக்கிய வேலைகளை மறுபரிசீலனை செய்வதற்கும், கடந்த தசாப்தங்களில் இருந்த தசாப்தங்களாக அது உருவாக்கிய முன்னேற்றங்களை அடிப்படையாகக் கொண்டதுமான செயல்முறையால் பின்னணியினர் ஆரம்பிக்க வேண்டும் என்று ஷாலல்ட்டர் நம்புகிறார். ஜினோகிரிக் கோட்பாடு இலக்கிய விமர்சகரின் ஒழுக்கத்திற்கான ஒரு மாற்று ஆகும், அது முழுமையாக ஆண்களால் தீர்மானிக்கப்படுகிறது. பெண்களின் அனுபவத்தை பெண்களின் இலக்கிய உருவாக்கம் மதிப்பீடு மற்றும் செயல்முறைக்கு அடிப்படையாகக் கொண்டதாக ஜினோகிரித்திக் வலியுறுத்துகிறது (Showalter, Elaine, 1985).

வர்ஜீனியா வூல்ஃப் (1925) நவீன பெண்ணிய விமர்சனத்தில் ஒரு முக்கியமான பயனியராக ஆனார். வூல்ஃப் பெண்கள் இலக்கியம் பெண்கள் கருத்துக்களை ஆராய ஒரு குறிப்பிட்ட சந்தர்ப்பத்தை உருவாக்குகிறது என்று கூறுகிறது. வுல்ப் கூற்றுப்படி, பெண்களின் எழுத்து வித்தியாசமானது, ஏனென்றால் அவை மனிதர்களுடன் உளவியல் ரீதியான அம்சங்களில் வேறுபடுகின்றன, ஆனால் அவை ஆண்கள் தங்கள் வெவ்வேறு சமூக அனுபவங்களுக்கு உட்பட்டுள்ளன.

## இலக்கிய ஆய்வு

ஷோவால்டர் தனது *"Women and Fiction"* (1969) என்ற தலைப்பில் வெளியான தனது கட்டுரையில் இக்கோட்பாடு தொடர்பான தனது கருத்துக்களைச் சற்று மாற்றியதுள்ளார். ஷோவால்டரின் பெண்ணின் எழுதும் உயிரியலும் இந்த மாதிரியில் தனது விவாதங்களைப் பற்றி விவாதிக்க மெக்டாவின் லுக் ஆஃப் சிக்ஸூஸின் கருத்தை பயன்படுத்தியது. இந்த உயிரியல் அம்சம் விமர்சனம் என்பது உடலின் அல்லது உயிரியலின் அம்சத்தால் வரையறுக்கப்பட்ட உரை வேறுபாடுகளைக் காணும் அணுகுமுறை ஆகும். பெண்களை எழுதும் நோக்கில் பெண்களை அழைத்து வரும்படி எழுத வேண்டும் என்று அவர் வாதிடுகிறார்.

அறிவுறுத்தப்பட்ட மாதிரிகளின் அடிப்படையில், ஜினோரிக் கோட்பாட்டில் ஷாவால்டரால் வழங்கப்பட்ட, பெண்களும், மனிதர்களும் தங்கள் நிலைப்பாட்டை மற்றும் பாத்திரத்தை அறிந்து கொள்வதற்கு இது உதவும் என்றும் நம்பப்படுகிறது. இந்த

ஆய்வு பெண் இலக்கிய படைப்பாற்றல் கோட்பாட்டின் புதிய மற்றும் உயர்ந்த இலட்சியங்களை விரிவாக விவரிக்கிறது.

விர்கினியா வுல்ப் என்பவரும் பெண்ணியம் பற்றிய தனது கருத்துக்களை நிறைய பதிவு செய்துள்ளார். இவர் பெண்ணின் உடல் அமைப்பு ஆண்களின் உடல் அமைப்பை விட வேறுபட்டுள்ளதால் அவர்களின் சமுதாய நோக்கும் வேறுபட்டுள்ளது என கருதுகிறார். பெண்ணியம் மற்றும் பெண்கள் சார்பான எழுத்துக்கள் சமுதாய அனுபவத்தைக் கொண்டே நிர்ணயிக்கப்படுகின்றது என இவர் கருதுகிறார். இவரும் தன் எழுத்துக்களில் ஷோவால்டரின் கோட்பாட்டுக்களைப் பயன்படுத்தியுள்ளார்.

இவரை தொடர்ந்து சிசோஸ் என்பவரும் ஷோவால்டரின் பெண்ணியக் கோட்பாட்டுக்களை தனது *"The Lough of the Medusa"(1976)* என்ற பதிவில் தனது விவாத்தை வைத்துள்ளார். இவரும் உடல் அமைப்பு எழுத்துக்கு துணை வகிக்கிறது என்ற தனது கருத்தை முன் வைத்துள்ளார். பெண்ணியம் பற்றிய இவருடைய கருத்துக்கள் இவ்வாய்விற்கான கோட்பாட்டுக்களை உட்படுத்தியுள்ளது. கில்பெர்ட் மற்றும் குபார் உடலமைப்புகளைக் கொண்டு எழுத்தைத் தீர்மானிப்பதை கேளி செய்துள்ளனர்.

ஹெலன் சீயீவின் சிந்தனை பெண் எழுத்தானது, பெண்மொழி, பெண் உடல் மொழி என்ற கருத்தாக்கங்களாகும். அம்பையின் மொழிநடையில் .பெண்மொழி, பெண் உடலை குறியீடாகக் கொண்டுள்ள (2002) பாமா ,மொழி நடையில் தலித் பெண்களின் கலகக்குரலை பெண் மொழியாக்கியுள்ளார். சல்மாவின் மொழி நடையில் இஸ்லாமிய பெண் மொழி வெளிப்பாட்டை அறிய முடிகின்றது. அம்பை, பாமா, சல்மா ஆகிய மூவரில் அம்பையின் மொழிநடை பொது நிலையில் அனைத்து பெண்களுக்குமான விடுதலையை முன் வைக்கும் பெண் மொழி வெளிப்பட்டுள்ளது. பாமா, சல்மா கதைகளில் அவரவர் சமூகம் சார்ந்த, மதம் சார்ந்த நிலையில் பெண் உடல் மொழி வெளிப்படுவதைக் காணலாம். தமிழ் இக்கால இலக்கிய வடிவான சிறுகதைகளில் பெண்ணியச் சிந்தனைகள் பல பரிமாணங்களை அடைந்துள்ளன என்பதையும் பெண் மொழியில் அனுபவம் சார்ந்த நிலைப்பாடு ஆழமாக வெளிப்பட்டு வரும் நிலையையும் இவ்வாய்வின் மூலம் கண்டறிய முடிகின்றது. (அஸ்வினி கிருத்திகா, 2009).

பெண்ணியம் பற்றிய பொதுவான விவாதங்களில் 'பெண் எழுத்துகள்' என்ற காலவரிசைத் தரவுகள் பெண்ணியச் சிந்தனைகளின் துவக்கமாகும் என்பர். இவ்வகையில் வெர்ஜினியா வுல்ஃ;ப் என்ற பெண் இலக்கியவாதியின் A Room of One's (1929) Own என்ற திறனாய்வு நூல் மிக அதிக அளவில் மேற்கோள் காட்டப்பெறுகிறது. பெண்ணியச் சிந்தனையின் இலக்கிய முன்னோடியாக அமைந்துள்ள இம்மதிப்பீட்டு மாதிரியின்படி பெண் எழுத்தாளர்களின் படைப்புகள் பெண் பற்றிய புதுமொழிகளையும் பெண்களின் சுயபுரிதல்களுக்கான எண்ணவோட்டங்களையும் பெண் விடுதலைக்கான சமுதாயப் போராட்டங்களையும் பெண் அல்லது பெண்மை பற்றிய புதிய அடையாளங்களாக முன்வைக்கின்றன . இக்கருத்தின் அடியொற்றியே 'பெண் எழுத்துகள் என்னும் பகுப்பின்கீழ் உலகின் பல இலக்கியங்களில் மற்றும் மொழி சார்ந்த கலாச்சாரப் படைப்புகளில் சிறுகதைகளாக, புதினங்களாக, நாடகங்களாக உருமாறும் உத்திகளை பெண்ணியச் சிந்தனைகளின் காலவரிசைப் பட்டியலாகக் காணமுடிகிறது. பெரும்பாலான கதைகள் குடும்ப அமைப்பில் இருக்கும் அடக்குமுறைகளைப் பேசுகின்றன. வரலாற்றில் பெண் அடிமைத்தனத்திற்கும், உற்பத்தி உறவுகளுக்கும் இரத்த சம்பந்தமான உறவுகளை உள்வாங்கிக்கொண்டு கதைகள் எழுதப்பட்டுள்ளன.

## ஆய்வு முறை

இவ்வாய்விற்கு ஷோவால்டரின் பெண்ணியக் கோட்பாடு முக்கியக் கோளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஜினோகிரித்திக் எனப்படும் அவரின் கோட்பட்டைப் பயன்படுத்தி இவ்வாய்வு

மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவை பின்வருமாறு பிரிக்கப்பட்டுள்ளது (Showalter, Elaine, 1981).

அ) பெண்களின் எழுத்தும் அவர்களின் உடலமைப்பும்.

ஆ) பெண்களின் எழுத்தும் அவர்களின் மொழியும்

இ) பெண்களின் எழுத்தும் அவர்களின் மன்நிலையும்

ஈ) பெண்களின் எழுத்தும் அவர்களின் கலாச்சாரமும்.

இவை ஒவ்வொன்றும் பெண்களைப் பற்றியும் அவர்களின் எழுத்தைப் பற்றியும் தெளிவாக விவரித்துள்ளது .

**தற்காலத் தமிழ் இலக்கியத்தில் பெண்கள்**

இன்றைய பெண்களின் பாத்திரம் கடந்த காலத்தின் பெண் தன்மைக்கு மிகவும் குறிப்பிடத்தக்க மாறுபட்டதாக உள்ளது. பிரபல எழுத்தாளரான ந.மகேஸ்வரி 2003ல் சிறுகதைகளின் முதல் தொகுப்பை வெளியிட்டார். கடந்த காலத்தில் வாழ்க்கையின் அனுபவம் அதிக முக்கியத்துவத்தையும், நம்பகத்தன்மையின் விளைவாக அவரது எழுத்துக்களில் நிரூபிக்கப்பட்டுள்ளது. இன்றைய பெண்களின் பிரச்சினைகளை நா.மகேஸ்வரி மேலும் விவாதித்ததாக இந்த கதையின் தொகுப்பு மூலம் நாம் பார்க்கலாம்.

தன் பாத்திரத்தின் பலத்தைக் காட்ட பல விதமான பெண் எழுத்துக்களை அவர் உருவாக்கியுள்ளார்.

வாழ்க்கையில் பல்வேறு தடைகளைச் சகித்துக்கொள்ளத் தயாராக உள்ள ஒரு தாய் பாத்திரத்தின் சித்திரத்தை அவர் பெரும்பாலான கதைகளில் படைத்திருக்கிறார். கதையின் பெரும்பகுதி ஒரு கதையாக மட்டுமே காணப்படுகிறது, ஆனால் இது ஏற்கனவே ஒரு சிக்கல் ஏற்பட்டுள்ள வாழ்க்கையை காண்பிக்கும் ஒரு லென்ஸ் ஆகும். பெண்களின் கதாபாத்திரம் பெண்கள் தங்களை முன்னெடுத்துச் செல்ல நினைப்பதாகக் காட்டுகிறது. ‘ஊர்த்தி கோண்டே நெஞ்சம்‘ (1989) என்ற சிறுகதையில் அம்மா பெருமாளை பாத்திரம் மற்றும் ‘சிந்தானைல் ஒரு சில்ரிப்பு’ (1986) என்ற கட்டுரையில் அம்மா தங்கம்மாவின் பாத்திரம் ஆகியவை அவரது மகனைப் பராமரிப்பதற்கு சிரமப்படும் தாய் என்று விவரிக்கப்பட்டுள்ளது. ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் எழுதப்பட்ட கதையின் கருப்பொருள்களையும் சதிகளையும் பார்த்தால், சிறுகதையின் கூறுகள் இன்றைய சமுதாயத்தின் வாழ்க்கைக்கு இணக்கமாக இருக்கின்றன.

**கலாச்சார முன்னோடிகளாக பெண்கள்**

ந.மகேஸ்வரியின் கதை மாந்தர்கள் காலத்தை வென்ற, கலாச்சார முன்னோடிகளாகப் படைக்கப்பட்டுள்ள விதம் சற்று தொய்வையே காட்டுகிறது எனலாம். 1976ஆம் ஆண்டில் வெளியான அந்தரங்கம் அவளோடு (தாய்மைக்கு ஒரு தவம்) சிறுகதைத் தொகுப்பில் ந.மகேஸ்வரி கதைக்குக் கருவாக தாம்பத்திய சிக்கலைக் கையாண்டிருக்கும் விதமானது அவரது ஆளுமைக்கு மிக சிறந்த சான்றாக அமைந்துள்ளது எனலாம். பொதுவாக பெண்கள் இவ்வாறான கருவை கதையாக எழுதக்கூடாது என்ற கூற்றுகள் பரவலாக பேசப்பட்டு வந்த காலத்தில் அவரது படைப்பானது ஒரு துணிச்சலான அணுகுமுறையே ஆகும்.

பெண்ணின் குறைபாடுகளை வெளிச்சம் போட்டு காட்ட துணியும் இந்த சமூகம் ஆணின் குறைபாடுகளை மட்டும் மறைத்து வைத்து பெண்ணுக்கு அநியாயம் இழைக்கும் கதைகள் ஏராளம். இந்தக் கலாச்சாரத்தை உடைக்கும் விதமாக அமைந்த ந.மகேஸ்வரியின் இச்சிறுகதை மிக நயமாக, நாசுக்காக அப்பிரச்சினையை அணுகியுள்ளது எனலாம். ந.மகேஸ்வரி பயன்படுத்தியுள்ள வசனங்கள் ஆணின் குறைபாடுகளை மூடகமாக உணர்த்தியுள்ளன.

> “நீங்கள் நினைப்பது போல் வெறுமனே அவர் மீது கொண்ட அனுதாபத்தின் காரணமாகவோ பழி தீர்த்துகொள்ளவோ இங்கு

வரவில்லை. அவர் செய்திருக்கும் காரியத்திற்கு இது நல்ல தண்டனை என்று எல்லோரையும் போல் நானும் நினைத்துருப்பேன். ஆனால், அவர் வஞ் சனையாக ஏமாற்றப்பட்டிருக்கிறார் என்பதை அறிந்து கொண்டதால் தான் என்னையும் மீறி ஓடி வந்தேன்." ஜேம்சுக்கு அவள் பேச்சு இன்னும் வியப்பாக இருந்தது. (பக்கம் 134&135)

சாந்தியின் பேச்சு மூடகமாக எதையோ உணர்த்தினாலும் அது என்ன என்பது வெளிப்படையாகத் தெரியாமல் இருக்கிறது. வஞ்சனையாக ஏமாற்றப்பட்டிருக்கிறார் என்ற பதமானது சாந்திக்கு மட்டும் தெரிந்த உண்மை என்ன என்ற கேள்வியை நம்முள் ஏற்படுத்துகிறது. அந்த குறை, ஏமாளியாகப்பட்டிருக்கிறார், நான் வற்புறுத்துவதைவிட இந்த முறையில் சுலபமாக செய்து விடலாம் என்ற வரிகளின் தாம்பத்யம் தான் என்ன? 1976 ஆம் ஆண்டிலேயே பெண்களின் தாம்பத்திய பிரச்சினைகளை இதை விட நாசுக்காக யாராலும் சொல்லி விட முடியாது. கலாச்சாரத்திற்கும் பண்பாட்டிற்கும் எவ்வகையிலும் இழுக்கு நேர்ந்து விடாமல் மிகவும் கவனமாக கையாளப்பட்டிருக்கும் இக்கதையில் பெண்கள் கலாச்சார முன்னோடிகளாக, அதே நேரத்தில் ஒருவரது குறையை மிக நாகரீகமாய் கையாளும் குணமுள்ளவர்கள் என்பதை குன்றின் மேலிட்ட விளக்காய் காட்டுகிறது எனலாம். ஆண்கள் போல் மனைவியின் பிள்ளை பெற முடியாத குறையைச் சுட்டிக்காட்டி மறுமணம் செய்யத்துடிக்கும் ஆண்களை விட பெண்கள் வலிமையானவர்கள் என்பதையும் இக்கதையின் வாயிலாக கதாசிரியர் உணர்த்தியுள்ளார்.

மேலும், சதா சர்வ காலமும், சலசலக்கும் மனிதர்களின் கூப்பாடுகளும் தனித்து வாழும் பெண்களுக்கெதிராய் பல விதமான அவதூறுகளையும், அவமரியாதைகளையும், பாதுகாப்பற்ற சந்தேகப் பார்வைகளையும் வீசிக்கொண்டு தான் இருக்கின்றன. இதற்கெல்லாம் சளைத்தவர்களாய், தோற்றுப் போகிறவர்களாய் அவர்களும் இன்றளவும் இருந்ததில்லை என்ற நிஜத்தை நாம் ஒப்புக்கொள்ள தான் வேண்டும். தனித்து வாழும் பெண்களுக்கெதிராக இந்தச் சமூகம் பிரயோகிக்கும் மற்றுமொரு ஆயுதம் அவர்கள் பால் வீசப்டும் அவதூறான வார்த்தைகளும் அவர்களின் துணிச்சலை ஆட்டிப்பார்க்கும் விதமான பேச்சுகளுமே ஆகும். இருந்த போதிலும் கலாச்சார முன்னோடிகளாகத் திகழும் இவர்கள் அவ்வாறான அவதூறுகள் அஞ்சாமல் இந்த சமூகத்தை எதிர்த்துக் கொண்டு நீதியாக நேர்மையாக வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள். மேலும், காலமும் சுற்றியுள்ள மனிதர்களும் இவர்களிடம் ஒரு பக்குவத்தையும் நெஞ் சுரத்தையும் ஏற்படுத்தி விடுகிறது.

"நீ ரொம்ப மாறிட்ட இந்திரா! பாரதியார் சொன்ன புதுமை பெண்ணாட்டம் இருக்கப் பார்க்கிறே"

"பாரதிதாசன் சொன்ன தமிழச்சியா தன்மானத்தோட தலை நிமிர்ந்து நிற்கிறேன். எதிர்காலத்திலே நம்ம பெண்களுக்கு ஏதாவது செய்யமோன்னு ஆசையாயிருக்கு".

போன்ற உரையாடல்களின் வாயிலாகப் பெண்கள் தன்னை வளர்த்துக் கொள்ளும் தருணத்தில் பிறரையும் வாழ வைக்க வேண்டும் என்ற பரந்த நோக்கோடும், எதிர்காலவியல் அறிந்தவர்களாகவும் திகழ்கிறார்கள். தன்னையும் தன்னை சுற்றியுள்ளவர்களையும் புரிந்து கொண்டு வாழும் இது போன்ற பெண்கள் ஆத்ம தரிசனம் மிக்கவர்களாக வளர்ந்து விடுகிறார்கள். பெண்மை, மென்மை என்பது மெய்யானால், துன்பமும் துயரமும், விரக்திகளும், ஏமாற்றங்களும், அவமானங்களும் அவர்களை ஆத்ம தரிசனமிக்கவர்களாய் மாற்றி தூர நோக்குச் சிந்தனையுடன் செயல்படும் தீரர்களாக அடையாளப்படுத்துகிறது. பேச்சிலும் செயலிலும் சிந்தனையிலும் எண்ணங்களிலும் வாழ்க்கை முறையிலும் அவர்கள் முற்றிலும் நிறைமொழி மாந்தர்களாக மாறி விடுகிறார்கள்.

## அநியாயங்களுக்கு எதிராகக் குரல் எழுப்பும் பெண்கள்

ந.மகேஸ்வரியின் கதைகளில் சில பெண் கதாபாத்திரங்கள் தனக்கும்

தன்னை சார்ந்தவர்களுக்கும் அநியாயங்கள் நிகழும் போது அதனை எதிர்த்து குரல் எழுப்புகிறவர்களாகப் படைக்கப்பட்டுள்ளனர். இது போன்ற பாத்திரங்கள் எழுச்சி பெண்களாகச் சித்தரிக்கப்பட்டுள்ளனர். 1995இல் வெளிவந்த "பெண் நீ புல் வேலியல்ல" என்ற கதையில் தன் தோழி வெளிநாட்டு ஆடவரைக் காதலித்து ஏமாந்து போய் விட கூடாது என தீவிரமாக இருக்கும் உமா எழுச்சி பெண்ணாக உருவமைக்கப்பட்டுள்ளார். அவர் தன் தோழியைக் கடிந்துகொள்ளும் விதம் மிக அருமையாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது.

மேலும், நினைவுகளைச் சுமந்தபடி எனும் கதையில் திருமணம் செய்து கொள்ளாமல் துணிச்சலாக வாழும் ஒரு எழுச்சி பெண்ணாக இந்திரா சித்தரிக்கப்பட்டுள்ளார். இவர் மிக துணிச்சலான பெண்ணாகவும் தன் குடும்பத்திற்காகத் தியாகம் செய்யும் பெண்ணாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளார். இவர் தனித்து வாழும் பெண்களுக்கு ஏற்படும் இடர்பாடுகளை ஒரு பொருட்டாக கருதவில்லை. "கண்ணீர் சிந்தும் கனவுகள்" என்னும் கதையில் ஆசிரியை ஆனந்தி எதையும் எதிர்த்து கேள்வி கேட்கும் ஒரு பெண்ணாகப் படைக்கப்பட்டுள்ளார். தன் மாணவியைக் கண்டிக்கும் போதும் அவளின் காதலனை அதட்டும் போதும் துணிச்சலான பெண்ணாகக் காண்பிக்கப்பட்டுள்ளார்.

### முடிவுரை

பெண்ணியவாதிகள் கூட வியந்து போகுமளவுக்குத் தீவிர பெண்ணியம் பேசும் கதைகளாக வீட்டிலே சும்மாதான், அந்தரங்கம் அவளோடு போன்ற கதைகளைக் குறிப்பிடலாம். அதீத பெண்ணியம் பேசும் கதைகளாக இருப்பினும், கச்சிதமும் கலை வடிவமும், செவ்விலகிய மரபும் குன்றாமல் சொல்ல வேண்டிய கதைக்கான கருவை படிம அழகோடு சொல்லும் விதம் பெருமிதம் கொள்ளச் செய்கிறது. கனிவும் ஈரமும் பண்பாட்டு விழுமியங்களுக்கும் வடிவங்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்து எழுதியுள்ளார் என்றே குறிப்பிட வேண்டும். பண்பாட்டுச் சிறப்புகளுக்குச் சீரான, ஈடான அமைப்புகளை வடிவங்களைக் கதையின் நடைக்கேற்ப நனிச்சிறப்போடு படைத்துள்ளார்.

ந.மகேஸ்வரிக்கு காலத்தின் மீதான பயணம் சாத்தியப்பட்டிருப்பது இன்றைய காலச் சூழலும்,பெண்கள் எதிர்நோக்கும் சிக்கல்களும் நிருபணமாக்கிக்கொண்டிருக்கிறது. இவரது கதைகள் முழுக்க முழுக்க பெண்மொழி, பெண்களின் அந்தரங்கமும், மிருதுவின் மாதுரியமும், ஆழ்மனக் கடலலைகளின் கொந்தளிப்பும், சமூகப் பிரச்சனையோடு வரும் வீரியமிக்க சாட்டைவாள் கோபமுமாகப் பலதரப்பட்ட கோணங்களில் கதைகளினூடே வெளிப்படுத்தியுள்ளார். பெண்கள் வெளிப்படையாக எழுத தொடங்கியிருக்கும் இந்தக் காலத்தில் பெண்கள் உலகத்தை சிரத்தையுடன் கவனித்து, அக, புற வாழ்க்கையில் ஏற்படும் சிக்கல்களுக்கான தெளிவை முன்னிறுத்தி எழுதி இடைவெளிகளை நிரப்பும் ஆற்றல் கொண்ட எழுத்துகள் கூறியுள்ளன.

## References

Agnes, Michael. (1999). *Webster's New World College Dictionary*. (4th. Ed.). New York: Mac Millan.

Asmah Haji Omar, Dato. (1992). *Kajian dan Perkembangan Bahasa Melayu*. Kuala Lumpur: Dewan Bahasa Dan Pustaka.

Asmah Haji Omar. (1992). *Bahasa dan Alam Pemikiran Melayu*. Cet. Ke 2. Kuala Lumpur: Dewan Bahasa Dan Pustaka.

Best Wiliams. (1993). *Gender and Culture*. Belmont: Wadsworth Thomson Learning.

Elaine Chakka. (2008). *Language The Social Mirror*. Heinly Cengage Learning.

Holmes, Janet and Meyerhoff, M. (2003). (eds). *The Handbook Of Language and Gender*. Black Well : Oxford.

Holmes, Janet. (1995). *Women, Men and Politeness*. London: Longman.

Ian Rreid. (1982). *The Short Story*. London : Methnen.

Krishnan Maniam, (1993). *Cerpen Tamil dan Melayu* (1957-1970): Perbandingan Tema dan Struktur: M.A Kuala Lumpur: Universiti Malaya.

Krishnan, M. (1993). *Cerpen Tamil dan Melayu (1959-1970)*. Kuala Lumpur: Dewan Bahasa dan Pustaka.

*Magesawari, N. (1985) Kannir sinthum kanavukal. I movie nws, Kuala Lumpur.*

Mageswari,N. (1975), *Unakaga oru Nenjam. Kuala Lumpur.*

Mageswari,N. *Thaimaiku oru thavam. Kuala Lumpur.*

Mannar Mannan, M. (1984/1985) *Jalan ke Puncak dan Terupuluthi: Satu Kajian Bandingan Cerpen Melayu dan Cerpen Tamil,* Ilmiah Sarjana Muda. Kuala Lumpur: Universiti Malaya.

Othman Puteh, Ramli Isin. (2003). *Sejarah Kesusasteraan Melayu Moden : Cerpen*. Kuala Lumpur : Dewan Bahasa Dan Pustaka.

Showalter, Elaine, (ed). (1985). *New feminist criticism: essays on women, literature, and theory*. New York: Pantheon Books.

Showalter, Elaine. (1979). *"Toward a Feminist Poetics," Women's Writing and Writing About Women*. London: Croom Helm.

Showalter, Elaine. (1981). *"Feminist Criticism in the Wilderness," Critical Inquiry 8*. University of Chicago: Winter.

Showalter, Elaine. (2001). *Inventing herself: claiming a feminist intellectual heritage*. New York: Scribner.

Talbot Mary, M. (1998). Language and Gender. Cambridge : Polity Press.

Talbot Mary, M., Karen Atkinson and David Atkinson. (2003). *Language and Power in the Modern World*. Edinburgh : University Press.

Vallarasi, Ko. (2004). *Sirukhathaigal Magalir* Pirachanaigal, (1975-1990). Chennai: The Parker.

Vijayalatcumi, Ca. (2002). *Tamilk kavithaikalil pennurimai*. Madras : The Parker.

# தேன்கூடு கவிதைத் தொகுப்புச் சித்தரிக்கும் பல்லினச்சூழல்: தாக்கக் கோட்பாட்டின்வழி ஓர் ஆய்வு

# Multiculturalism as depicted in *Theenkoodu* Poetry Collection: A Study of Influence Theory

பவானி ஆறுமுகம்@செய்யாலு / Bavani Arumugam@Seiyalu[1]

முனைவர் மனோன்மணி தேவி அண்ணாமலை / Dr.Manonmani Devi M.A.R Annamalai[2]

## Abstract

Seeni Naina Mohammed, an established figure in traditional poetry, is noted for creating his work that centres around the community he lives. *Theenkoodu*, a collection of more than 200 classical poems of this prolific writer from 1958 to 2011, was published in 2011. The poems featured in this collection show the diversity of Malaysia. It has a broad vision of context, language, culture, and governance. Since a literature is said to be closely related to another literature that has appeared before its subtext, strategy, syntax, and fiction, comparative studies have found that the literary traditions of a language tend to ignore a literature that is being created as entirely unrelated to its predecessors. Thus, the purpose of this article is to explore the multiculturalism, persuasion, and transliteration of Malaysians in contemporary Tamil literature in *Theenkoodu* poetry collection based on the approach of 'Influence Theory', which is part of the comparative study.

Date of submission: 2021-02-10
Date of acceptance: 2021-02-27
Date of Publication: 2021-07-20
Corresponding author's Name:
Dr.Manonmani Devi M.A.R Annamalai
Email: manonmanidevi@fbk.upsi.edu.

**Key Words:** Influence Theory, Malaysia, Multiculturalism, Theenkoodu Poetry Collection

### முன்னுரை

தமிழர்கள் தாங்கள் புலம்பெயர்ந்து சென்ற நாடுகளில் எல்லாம் தமிழிலக்கியத்தை வளர்த்தனர். புலம்பெயர்ந்த தமிழர்களின் இலக்கிய முயற்சி என்பது கவிதை, சிறுகதை, நாவல், நாடகம், கட்டுரை, ஓவியம் என பல்வகையில் பரவி நிற்கிறது (Bharathiyar, 1995 & Murasu Nedumaran, 2001). அவ்வகையில், புலம்பெயர்ந்த தமிழரான இறையருட்கவிஞர் செ. சீனி நைனா முகம்மது அவர்கள் பல்வேறு வகையில் தமிழ் இலக்கியத்தை மலேசிய மண்ணில் வாழவும் வளரவும் வழிவகுத்துள்ளார். இவர் மரபுவழி வந்த இலக்கிய இலக்கண அறிவுடையவர். மலேசியத் திருநாட்டின் மதிப்புறு கவிஞர். மரபு கவிதை உலகில் தனக்கென ஓரிடத்தை நிலை நிறுத்திக்கொண்ட இவர், தான்வாழும் சமூகத்தை உற்று நோக்கிய ஒரு படைப்பாளியாவார். 1958 முதல் 2011ஆம் ஆண்டு வரை இவர் எழுதிய 200க்கும் மேற்பட்ட மரபு கவிதைகள் அடங்கிய 'தேன்கூடு' எனும் கவிதைத் தொகுப்பு நூல் 2011ஆம் ஆண்டு வெளியீடு கண்டது. இக்கவிதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள பல கவிதைகளில் மலேசியர்களின்

[1] The author is a freelance writer and PhD holder from Tamil Language Program, Sultan Idris Education University, Malaysia. bavani1722@gmail.com

[2] The co-author is a lecturer in Tamil Language Programme, Sultan Idris Education University, Malaysia. manonmanidevi@fbk.upsi.edu.my

பல்லினச்சூழல், மொழிசார்ந்தும், பண்பாடு சார்ந்தும் ஆங்காங்கே வெளிப்பட்டுள்ளமையைக் காண முடிகிறது.

மரபும் திறனும் என்ற கட்டுரையில் "நாம் எதையும் பார்த்து எழுதுவதில்லை. நம் படைப்பு மாறிய மனிதனின் எழுத்தாகும். நாம் கடன்வாங்கவில்லை. நாம் விரைவுபடுத்தப்பட்டு ஒரு மரபுத் தொடர்ச்சியைத் தாங்குபவர்களாக ஆகியிருக்கிறோம். எக்கவிஞனும் அல்லது கலைஞனும் தானே தனித்து நிற்பது என்பதில்லை; அவனைத் தனியே நீங்கள் மதிப்பிடமுடியாது. ஒப்பாய்வுக்காக அவனை நீங்கள் முன்னையவர்களுடன் வைத்தே பார்க்கவேண்டும்" என்கின்றார் டி.எசு. எலியட் என்ற அறிஞர். ஓர் இலக்கியம் அதன் அடிக்கருத்து, உத்தி, யாப்பமைப்பு, புனைவுநிலை ஆகியவற்றில் அதற்கு முன்பு தோன்றிய மற்றொரு இலக்கியத்துடன் ஏதேனும் ஒரு வகையில் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கும். இவ்வாறாகத் தனக்கு முந்தைய இலக்கியங்களில் தொடர்பில்லாமல் முற்றிலும் புதிதாகப் படைக்கப்படுகின்ற ஓர் இலக்கியத்தை அம்மொழியின் இலக்கிய மரபுகள் ஏற்றுக்கொள்ளாமல் புறக்கணித்துவிடுகின்றன என்பது ஒப்பிலக்கிய ஆய்வுகளின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது (Balasupramanyan, 1972).

## ஆய்வின் நோக்கம்

தற்காலத் தமிழிலக்கியமான 'தேன்கூடு' கவிதைத்தொகுப்பில் மலேசியச்சூழல் அடிக்கருத்துச் சார்ந்தும் புனைவுநிலை சார்ந்தும் எவ்வகையில் ஒற்றுமை கொண்டுள்ளது என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். மேலும், இக்கட்டுரையின் வழி ஓர் இலக்கியம் மற்றொரு இலக்கியத்தின் மீது செலுத்துகின்ற தாக்கத்தினால் இலக்கிய மரபின் புதிய இலக்கிய வகைகள் உருவாவதைத் தெரிந்துகொள்ள வாய்ப்புக் கிடைக்கின்றது.

## முந்தைய ஆய்வுகள்

தமிழ் இலக்கியங்களில் வாழ்விடத் தாக்கங்கள் குறித்துச் சில ஆய்வுகள் ஆங்காங்கே ஆராயப்பட்டுள்ளன. Parvathy *(2015)* தமது ஆய்வில், மலேசியத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம் எனும் நூல், மலேசியத் தமிழர்களின் வாழ்க்கையைப் பிரதிபலிக்கின்றது எனக் கூறுகின்றார். அவ்வகையில், பண்பாடு, தமிழ்மொழியின் மேன்மை, தமிழர் ஒற்றுமை, நாட்டுப்பற்று, எழுச்சிக் கவிதைகள், மலேசியாவில் தமிழர் நிலை எனும் கருத்துகள் இக்கவிதைகளில் இடம்பெற்றுள்ளன எனக் குறிப்பிடுகிறார்.

மாறாக, Puspavalli *(2015)*, வாழ்விடத்தாக்கங்கள் கவிதைகளில் மட்டுமின்றிச் சிறுகதைகளிலும் காண முடிகிறது என்கிறார். தோட்டப்புற மக்களின் வாழ்க்கை சிக்கல்கள், இந்தியர்களின் வாழ்வியல் அவலங்கள், பெண்ணியச் சிந்தனை என இந்தியச் சமுதாயத்தின் சிக்கலைகளை மையமாகக் கொண்ட சிறுகதைகளைத் தவிர்த்து, மலேசியாவில் வாழும் இளையோரின் வாழ்விடத்தாக்கங்களைப் பற்றி இவர் ஆராய்ந்துள்ளார். அவ்வகையில், நகர்ப்புற வாழ்க்கை வசதிக்கு ஏக்கம், பொழுது போக்குச் சாதனங்களின் தாக்கம், கட்டுப்பாடற்ற சுதந்திரப் போக்கு என கருத்துக்களின் அடிப்படையில் வாழ்விடத்தாக்கங்களைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், சொல்லிசைப்பாடல்களிலும் வாழ்விடத்தாக்கங்களைக் காணமுடிகின்றது (Arul Nathan & Vijaya Seelan, 2015). இவர்கள், பிறமொழித்தாக்கத்தினால் தமிழ்மொழிக்கு ஏற்படும் விளைவுகளைப் பற்றிக் குறிப்பிடுகின்றனர். அதாவது, தமிழ்மொழியில் ஆங்கிலமும் மலாய் மொழியின் கலப்பும் அதிகரிக்கும்போது இது மொழிச்சிதைவுக்கு வித்திடுகின்றது என்கிறார்கள்.

எனவே, முந்தைய ஆய்வுகள்படி இலக்கியங்களில் வாழ்வியல் தாக்கங்களை ஆராய்வது என்பது ஒரு முக்கியக் கருதுகோளாக அமைகிறது. அவ்வகையில், இவ்வாய்வில் ஒப்பிலக்கிய ஆய்வில் ஒரு பகுதியாக விளங்கும் 'தாக்கக்கோட்பாடு' (Influence Theory) எனும் அணுகுமுறையின் அடிப்படையில் தேன்கூடு கவிதைத்தொகுப்பில் காணப்படும்

மலேசிய மக்களின் பல்லினச்சூழல் ஆராயப்பட்டுள்ளது.

## ஆய்வுக்கோட்பாடு

இவ்வாய்வில் 'தாக்கக்கோட்பாடு' (Influence Theory) எனும் அணுகுமுறை பயன்படுத்தப்பட்டுள்ளது. செல்வாக்குக் கொள்கை அல்லது தாக்கம் கொள்ளுதல் (Influence Theory) என்பதே தாக்கக் கோட்பாட்டின் விரிவாக்கம் ஆகும் (Panjangam, 2011). தாக்கம் என்பது 'Influence' என்ற ஆங்கிலச்சொல்லின் பெயர்ப்பாக ஆளப்படுகிறது. பிரெஞ்சு நாட்டு ஒப்பீட்டறிஞர் 'ஜோசப் டெக்ஸ்டு' என்பவர் இக்கோட்பாட்டின் தந்தை என்று போற்றப்படுகிறார் (Jeyaboss, 2009). ஓர் இலக்கியம் பிறமொழி இலக்கியங்களிலிருந்து கொண்டது எது, அவற்றுக்குக் கொடுத்தது எவ்வளவு என ஆராயும் 'கொள்வினை, கொடுப்பினை பற்றிய ஆய்வே தாக்கக்கோட்பாடு எனப்படுகிறது (Bhagavathi, 2007 & Sethupillai, 1968). இக்கோட்பாடு பல துறைகளிலும் அதன் பரிணாமத்தை வெளிப்படுத்தினாலும் இலக்கியத் துறையில்தான் இக்கோட்பாட்டின் தாக்கத்தை நன்கு அறிய முடியும். காலங்காலமாய்ப் படைப்பாளர்களின் சிந்தனையில் உதித்த உலக இலக்கியங்கள் அனைத்தும் இந்தத் தாக்கக் கோட்பாட்டின் அடிப்படையில் அமைந்து வருகின்றன (Panjangam, 2011).

Eliot (1962) என்பவர், பாரம்பரியமும் தனித்தன்மையும் (tradition and Individual talent) என்ற கட்டுரையில், "ஒரு படைப்பாளியின் மனத்தில் அவன் அதுகாறும் அறிந்துள்ள இலக்கியங்களின் கூறுகள் சொற்றொடர்கள் அடைந்துள்ள உணர்வுகள், உணர்ச்சிகள் என்பன அவனை அறியாமலேயே ஒரு புதிய படிவம் பெற்று இலக்கியமாகி விடுகிறது. இத்தகைய படைப்பின் போது படைப்பாளி வேதனைப்படுவதாகவும் அவன் மனம் படைப்பில் ஈடுபடுவதாகவும் சுட்டுவார். மேலும், ஒருவன் முழுமையான படைப்பாளியாக வேண்டுமெனில் வேதனைப்படும் அவனுக்கும் படைக்கும் மனத்திற்கும் அதிக இடைவெளி வேண்டும்" என்று கூறுவது நோக்கத்தக்கது (Devaneya Pavanar, 2011).

மேலும், ஓர் இலக்கியம் மக்கள் மத்தியில் தன் செல்வாக்கைப் பெற வேண்டுமாயின் அதற்கென்று தனி 'தகுதி' இருப்பது அவசியம். அந்த இலக்கியம் பெற்ற அந்தத் தகுதியே உலக இலக்கிய நோக்கு என்று அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர் (David, 1969). ஆக, படைப்பாளர்களின் படைப்புகள் உலக இலக்கிய நோக்கினைப் பெற, இலக்கியங்கள் ஒன்றின் மீது ஒன்று தத்தம் ஆதிக்கத்தைச் செலுத்தும் ஆரோக்கியமான நிலை உருவாகி இருக்கும் என்பது திண்ணம்.

தாக்கக் கோட்பாட்டின் வழி இலக்கியங்கள் உருவாக ஏழு வழிகள் உள்ளன என்று ஒப்பிலக்கிய அறிஞர்கள் கருதுகின்றனர். அவை, 1.கடன் வாங்கல் 2.எடுத்தாளல் 3.பிறமொழித்தாக்கம் 4.தூண்டல் 5.ஏற்றல் 6.நேர்முகத்தாக்கம்/ மறைமுகத்தாக்கம் 7.எதிர்முகத்தாக்கம் என்பவையே ஆகும். இவற்றுள், தூண்டல் என்பது தாம் வாழும் வாழ்விடத்தின் மரபும் சாயலும் ஒருவரின் படைப்பில் வெளிப்படுவதையும் மொழித்தாக்கம் என்பது ஒரு நாட்டில் வசிக்கும் பல மொழியினரின் பயன்பாட்டுச்சொற்கள் ஒருவரது படைப்பில் வெளிப்படுவதையும் குறிக்கிறது. எனவே, தேன்கூடு கவிதைத்தொகுப்பில், இத்தூண்டல் வழியிலும் மொழித்தாக்கம் எனும் வழியிலும் மலேசிய மக்களின் பல்லினச்சூழல், கையாளப்பட்டுள்ள வகைமையை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## ஆய்வு அணுகுமுறை

இவ்வாய்வு பண்புசார் (qualitative) அணுகுமுறை அடிப்படையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. அவ்வகையில், ஆவணப் பகுப்பாய்வு (document analysis) எனும் அணுகுமுறையின் வழி தரவுச் சேகரிப்பு முறையாகத் தேன்கூடு கவிதைத் தொகுப்பு நூல் பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும், இவ்வாய்வில் தேன்கூடு கவிதைத் தொகுப்புக் காட்டும் பல்லினச்சூழல், கருப்பொருள், பகுப்பாய்வு (thematic analysis)

*வழி விளக்க வடிவ முறையினால்* (descriptive) *விளக்கப்பட்டுள்ளது.*

## ஆய்வுப் பகுப்பாய்வு

*இறைசிந்தனை, இயற்கை, மொழி, இலக்கியம், கலை, பெண்மை, தாய்மை, காதல், நாடு, இனம், குமுகாயம், பல்சுவை, வாழ்த்து, பாராட்டு, இரங்கல் என்று பல்வேறு கருப்பொருள்களில் இக்கவிஞர் கவிதைகள் புனைந்துள்ளார். அக்கவிதைகளில் கவிஞரின் வாழ்விடமான மலேசியச் சூழலின் தாக்கத்தை ஆங்காங்கே காண முடிகிறது.*

*எனவே, இப்பகுப்பாய்வில் தேன்கூடு கவிதைத் தொகுப்பில் காணப்படும் தாக்கக் கோட்பாட்டின் வழி பல்லினச்சூழலை விவரிக்கப்பட்டுள்ளது. அவ்வகையில், மொழித்தாக்கம், மூவின மக்கள், கலையும் பண்பாடும் போன்ற கருப்பொருளில் விளக்கப்படுத்தப்பட்டுள்ளது.*

## தேன்கூடு கவிதைத் தொகுப்பில் மலாய்மொழியின் பயன்பாடு (மொழித்தாக்கம்)

*மலேசியத் திருநாட்டின் தேசிய மொழி மலாய்மொழியாகும். மலேசியத் தமிழர்கள் மலாய்மொழியும் கற்றல் வேண்டும் என்று கவிஞர் கூறியுள்ள நிலையைக் காணமுடிகிறது.*

*"தமிழின்றேல் உயிரில்லை அதனால் திண்ணம்*

*தமிழ்கற்போம் எனினும்நாம் வாழும் நாட்டில்*

*அமைகின்ற மன்பதையில் சிறப்பு வேண்டின்*

*அழகெளிய மலாய்மொழியும் கற்றல் வேண்டும்"*

*(தேன்கூடு: பண்டமாரான் தமிழர் திருநாள்)*

*அதோடு, புலம்பெயர்ந்த தமிழரான சீனி நைனா முகம்மது தமது கவிதைப்படைப்பில் ஆங்காங்கே மலாய்மொழியைப் பயன்படுத்தியுள்ளமை காண முடிகிறது.*

*"சற்றே இளைபாறி 'நாசிக்கண் டார்'உண்டால்*

*சல்லாப நினைவுகள்*

*எல்லார்க்கும் வந்திடும்"*

*(தேன்கூடு: எப்போதும் அழகுதான்)*

*"அந்தியில் ஏராளம் அங்காடி கள்வந்து*

*அங்கங்கே வீதியைக்*

*'கங்கு' செய் வதுமுண்டு"*

*(தேன்கூடு: எப்போதும் அழகுதான்)*

*இக்கவிதையில் பயன்படுத்தப்பட்டுள்ள "நாசி கண்டார்" என்ற சொல்லும் 'கங்கு' என்ற சொல்லும் மலாய்மொழியின் பயன்பாடாகும். நாசி கண்டார் என்பது மலாய் இனத்தவரின் உணவாகும். இவ்வுணவு மலேசியர்கள் அனைவரும் விரும்பி உண்டும் ஓர் உணவு. கவிஞர் தாம் வாழும் பினாங்குத்தீவில் மிகவும் பிரசித்திப்பெற்ற மலாய் இனத்தவரின் பண்பாட்டு உணவைக் குறிப்பிட்டுள்ளார். அத்தோடு, கங்கு என்றால் தமிழில் தொந்தரவு என்று பொருள்படும். இச்சொற்களின் பயன்பாடு கவிஞரின் வாழ்விடத்தாக்கத்தின் விளைவு என்றே கூறவேண்டும்.*

## தமிழ் இலக்கியங்களைச் சீன, மலாய், ஆங்கில மொழியில் பெயர்த்தல் வேண்டும்

*இந்நாட்டு இளைஞர்கள் ஆங்கிலமும் சீனமொழியும் மலாய்மொழியும் கற்றல் அவசியம் என்று ஒரு கவிதையில் வலியுறுத்துகிறார். அப்படிச் செய்த பின்னர் தமிழின் சிறப்பைப் பிறமொழியில் கொண்டுசெல்ல வேண்டும் என்று பரிந்துரை செய்கிறார்.*

*"ஆங்கிலமும், சீனமுடன்*

*அவசியமாய் மலாய்மொழியும்*

*பாங்குறவே பயின்றவற்றில்*

*பழந்தமிழின் இலக்கியங்கள்*

*தீங்குறவே மொழிபெயர்த்துச்*

*செந்தமிழின் அருமையினை*

*ஈங்கிருக்கும் பிறமொழியோர்*

*எளிதுணரச் செய்யவேண்டும்"*

**மூவின மக்கள் (தூண்டல்)**

மலேசிய மக்கள் மூவினமாக வாழும் சூழலை விளக்க கவிஞர் கையாண்டுள்ள உவமைகள் நம்மைப் பூரிக்கவைக்கின்றன. மூவினமும் ஒருசோலையிலே பூத்திருக்கும் மூன்றுவகைப்பூக்கள் என்கின்றார். மேலும், மூவின மக்களும் ஒற்றுமையும் புரிந்துணர்வும் கொண்டு வாழ்கிறார்கள் என்பதைக் குறிப்பிட இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழைப்போன்று இணங்கி வாழ்கிறார்கள் என்று மிக நயமாக எடுத்துரைக்கிறார். தொடர்ந்து, பசும்பாலில் அரிசியும் இனிப்பும் கலந்து அறம்பொருள் இன்பம் பொங்குவது போல மூவினமும் ஒற்றுமையாக வாழ்வதை தக்கச் சொல்லாட்சி கொண்டு விளக்கியுள்ள திறனானது கவிஞர் தம் வாழ்விடத்தின் மீது கொண்டுள்ள பற்றைப் பறைசாற்றுவதாக அமைந்துள்ளது.

'மூவகைப்பூப் பூத்திருக்கும் மோகனஞ்சூழ் சோலையெங்கள்

மூவினத்தார் வாழ்ந்திருக்கும் மாமலைய நன்னாடு;'

*(தேன்கூடுபல்கலை வண்ணம்!)*

*'மூன்று தமிழைப் போன்றிணங்கும்*

*மூன்றி னங்களில் நேயம்*

*முந்தும் நெஞ்சினில்'*

*(தேன்கூடுஎங்கள் நாடு! இல்லை ஈடு!)*

*'ஆவினற் பாலில் அரிசியில் இனிப்பில்*

*அறம்பொருள் இன்பம் பொங்குதுபார்!*

*மூவினம் அதுபோல் முதலவன் அருளால்'*

*(தேன்கூடு மூவினப்பொங்கல்)*

**கலையும் பண்பாடும் (தூண்டல்)**

இம்மூவின மக்களும் ஓர் இனத்தாரின் கலையையும் பண்பாட்டையும் வாழ்வியல் கூறுகளையும் பிற இனத்தவர் பற்றோடு கற்றுக்கொண்டு ஒரு தாய்வயிற்றுப் பிள்ளைகள் போல நல்லிணக்கத்தோடு வாழும் நிலையைக் கவிஞர் தம் கவிதையில் மிக எளிமையான ஏற்ற சொல்லாட்சியைக் கையாண்டு கீழ்க்கண்ட கவிதை வரிகளில் பதிவு செய்துள்ளார்.

*'சேலை உடுத்தியெழில் சீனக் குமரியர்கள்*

*சாலை மிசைவருங்கால் சாயாத நெஞ் சமில்லை*

*எங்கள்மலை மாதர் இடைநோகா தாடுகின்ற*

*சிங்கார 'சோகட்டை' செந்தமிழர் தாம்விழைவார்!*

*கன்னித் தமிழ்நங்கை கட்டான மேனிமலர்*

*இன்னும் அழகாம் எழிலார் மலாயுடையில்;*

*நற்றமிழர் ஆவலுடன் "நாகநட னம்"புரிவர்;*

*பற்றுடனே சீனர் பரதக் கலைபயில்வார்;*

*சின்னஇரு குச்சிகளால் சீனர்அமு துண்ணுதலை*

*இன்னும் அழகாக இந்தமிழர் கையாள்வார்*

*பன்னாளாய்க் குச்சி பழகிவந்த சீனநண்பர்*

*தந்நற் கரத்தால் தமிழன்போல் சோறுண்பார்;'*

*(தேன்கூடு பல்கலை வண்ணம்)*

இவ்வாறாக, மலேசியாவில் வாழும் மூவினமும் எக்கலைக்கு யாருரியர் என்ற பேதங்கள் இல்லாமல் நாதக்கலப்பிலெழும் நல்லிசைபோல் எண்ணத்தாலும் கலையாலும் இனத்தாலும் மொழியாலும் ஒன்றிணைந்து அன்பாக வாழும் நிலையைக் கவிஞர் தம் கவிதைகளில் பதிவுசெய்துள்ளார்.

**சீனச் சமூகத்தைத் தமிழச் சமூகத்துடன் ஒப்பிடுதல் (தூண்டல்)**

மலேசியாவில் தமிழ்ப்பள்ளியில் பயிலும் மாணவர்கள் 6 ஆண்டுகள் கற்ற பின்னர் யூ.பி.எசு.ஆர் எனும் அரசாங்கத்தேர்வில்

*7Aக்கள் பெற வேண்டும் என்று பெற்றோர்களும் ஆசிரியர்களும் எதிர்பார்க்கின்றனர். அவ்வாறு அவர்கள் 7Aக்கள் பெறாத நிலையில் அம்மாணவர்கள் இச்சமுதாயத்தால் புறக்கணிக்கப்படுகின்றனர். இந்நிலை கண்டு வேதனையுறும் கவிஞர் இச்சமுதாயத்தைச் சாடுகிறார். தம் கருத்தை அம்மாணவர்கள் மீது ஏற்றிப்பாடுகிறார்.*

*'ஏழு 'ஏ'க்கள் எடுத்தால்தான் வெற்றியா? நாங்க*

*'இ'யைத்தாண்டி 'சி' எடுத்தால் எங்கபடிப்பு வெட்டியா?*

*ஆளுக்காளு குத்துறாங்க ஈட்டியா எங்க*

*ஐயாமாரே! கல்வியென்ன நூறுமீட்டர் போட்டியா?'*

*(தேன்கூடு எங்க படிப்பு வெட்டியா?)*

*தேர்வில் 7கிக்கள் எடுக்கும் மாணவர்களுக்குப் பெற்றோர்களும் பொது அமைப்புகளும் பரிசுகளையும் பாராட்டுகளையும் அள்ளிக் குவித்த வண்ணம் இருக்கிறார்கள். ஆனால் குறைவான கிக்கள் எடுக்கும் மாணவர்களை யாரும் கண்டுகொள்வதில்லை. ஆனால், இந்நிலை இந்தியச் சமுதாயத்தில் மட்டும்தான் நிகழ்கிறது என்பதை உற்றுநோக்கிய கவிஞர் தம் எண்ணத்தைக் கீழ்க்காணுமாறு பதிவுசெய்கிறார்.*

*'சீன மலாய்ப் பிள்ளைகளும் 'ஏ'க்கள் எடுக்கி றாங்க அதைச்*

*செய்தியாக்கி குடும்பப்படம் யாருபோடு றாங்க!*

*மாணவரை மதிப்பிடத்தான் தேர்வுநடத்து றாங்க! அதை*

*மலையில்ஏறும் சாதனையாய் மாத்துறீங்க நீங்க!'*

*(தேன்கூடு எடுக்கும் போட்டி!)*

## நிறைவுரை

*தாக்கத்திற்கு உட்படுதல் ஒவ்வொரு எழுத்தாளரிடமும் வெவ்வேறு விதமாக வெளிப்படுகின்றது. சிலர் போலச் செய்கின்றனர்; சிலர் தழுவுகின்றனர்; சிலர் மொழிபெயர்க்கின்றனர்; சிலர் ஒட்டுச்சேர்க்கை முறையைக் கையாளுகின்றனர்; சிலர் திருடவும் செய்வது செய்கின்றனர்; சிலர் கடன் வாங்குகின்றனர்; சிலர் மறு உருவாக்கம் செய்கின்றனர்; சிலர் தாக்கத்திற்கு உள்ளாகி இருப்பதே தெரியாமல் நையாண்டி செய்வது போலச் செயல்படுகின்றனர்.*

*கவிஞர் சீனி நைனா முகம்மது சிந்தனையில் வாழ்விடத்தின் தாக்கம் வேரூன்றி உள்ள நிலையை அவரது 'தேன்கூடு' கவிதைத் தொகுப்பு நமக்கு நன்கு பறைசாற்றியுள்ளது. ஆண்டுகள் பல கடந்தாலும் சிறந்த கருத்துகள் என்றும் அழிவதில்லை, உயர்ந்த எண்ணங்கள் என்றும் மறைவதில்லை. இந்த அழியாத உண்மையைத் 'தேன்கூடு' கவிதைத்தொகுப்பில் மலேசியச் சூழலின் செல்வாக்கும் தாக்கமும் மிகுந்திருப்பதைக் கொண்டே தெள்ளிதின் உணர முடிகிறது. சிறந்த கருத்துகளுக்கு என்றும் நிலைபெற்று நீடு வாழும் நிலைத்த தன்மை உண்டு. முன்னோர் அடிச்சுவட்டில் வெற்றி நடைபோட்ட இறையருட்கவிஞர் சீனி நைனா முகம்மது அவர்கள் இம்மண்ணுலகைவிட்டு மறைந்தாலும் வள்ளுவனின் உயர்கருத்துக்களைத் தம் கவிதைகளில் எடுத்தாண்ட இவரது பாட்டுத்திறன் இவ்வையத்தைப் பாலித்திடும் என்பதில் ஐயமில்லை.*

# References

Arul Nathan, V., & Vijaya Seelan, M. (2015). Inraiya Malaysia Mannin Mainthargalin Sollisai Paadalgalil Puttakkamum Vaalvidaththaakkamum. In A. Manonmani Devi, I.S. Samikkanu Jabamoney, P. Kartheges, S. Veeralaksmi, T.Kingston Pal, J. Franklin, Muniisvaran, S. Ilangkumaran, & K. Kaminy. *Pulampeyarthor Tamil Ilakkkiyam*. (pp. 118-124). Tanjong Malim : Sultan Idris Education University.

Balasupramanyan, M.P. (1972). *Nangavathu Karutharanggu Malar*, University Of Kerala Thurai Saarpu Publication, India Palgalaikkalaga Tamilaasiriyar Manram.

Bhagavathi, K. (2007). *Tiranaivu Anugumuraikal*, Internasional Institute of Tamil Studies, Chennai.

Bharathiyar. (1995). *Bharathiyar Kavithaigal*, Sri Hindu Publication, Chennai.

David, N.M. (1969). *The Function of Literature*, Lawrence & Wishart London.

Devaneya Pavanar, N. (2011). *Thirukkural Maraburai,* Hindu Publication, Chennai.

Eliot,T.S.,(1962). "*Tradition and Individual Talent*" English Critical Texts, D.J. Enright and

chikers ed. London O.U P.

Jeyaboss, M. (2009). '*Kaviyarasu Kannadhasan Kavithaikalil Sanga Ilakkiya Selvakku"* Kannathasan Publication, Chennai.

Manonmani Devi, M.A.R., & Bavani, A. (2015). Iraiyarutkavinjar Seeni Naina Mohamed Kavithaigalil Vaazhvidaththaakkam. In A. Manonmani Devi, I.S. Samikkanu Jabamoney, P. Kartheges, S. Veeralaksmi, T.Kingston Pal, J. Franklin, Muniisvaran, S. Ilangkumaran, & K. Kaminy. *Pulampeyarthor Tamil Ilakkkiyam*. (pp. 20-25). Tanjong Malim : Sultan Idris Education University.

Murasu Nedumaran. (2001). *Malaysiath Tamilk Kavithaik Kalanjiyam*. Puthucheri : University of Puthuvai.

Panjangam, K. (2011). *Ilakkiyamum Thiranaivu Koodpaadukalum*, Annam Publication, Tanjavoor.

Parvathy, N. (2015). Malaysiyath Tamil kavithaik kalanchiyam endra Maanavar Patippil Kaanakkidakkum Malaysiayath Tamilarin Vaalvidaththaakkam. In A. Manonmani Devi, I.S. Samikkanu Jabamoney, P. Kartheges, S. Veeralaksmi, T.Kingston Pal, J. Franklin, Muniisvaran, S. Ilangkumaran, & K. Kaminy. Pulampeyarthor Tamil Ilakkkiyam. (pp. 86-91). Tanjong Malim : Sultan Idris Education University.

Puspavalli, S. (2015). Malaysia Ilaiyoor Sirukathaigalil Kaanappadum Vaalvidaththaakkam. In A. Manonmani Devi, I.S. Samikkanu Jabamoney, P. Kartheges, S. Veeralaksmi, T.Kingston Pal, J. Franklin, Muniisvaran, S. Ilangkumaran, & K. Kaminy. Pulampeyarthor Tamil Ilakkkiyam. (pp. 224-229). Tanjong Malim : Sultan Idris Education University.

Seeni Naina Mohamed, S. (2011). *Thenkudu,* Ungal Kural Enterprise, Malaysia.

Sethupillai, R.P. (1968). *Tamil Inbam*, Palaniyappa Brothers, Chennai.

# எம்.ஜி.ஆர். என்னும் உயிரிரக்கப் பண்பாளர்
# M.G.R: The Compassionate Human Being

முனைவர்.க.முருகேசன் / Dr.K.Murugesan[1]

Date of submission: 2020-10-27
Date of acceptance: 2020-11-30
Date of Publication: 2021-07-20
Corresponding author's Name: Dr.K.Murugesan
Email: murugu.kanakasabai@gmail.com

## Abstract

M.G.Ramachandiran (M.G.R) was one of the popular Tamil actors who had stolen the hearts of millions of people. Apart from his talents in acting, he was also well-known for being a compassionate man, an impeccable political leader, and a conscientious political activist, which earned him the sobriquet "Hideki Takahashi of India". He was known for his morality in domestic life, and legalized the "Widow Remarriage Act", an action that astutely reflected his progressive thinking. He founded the Tamil University to honour *Tamizh Thaai.* This immaculate personality is still known for his genuine political life as he never expected any favour from the others. He was honoured with the most prestigious *"Bharat Ratna"* award by the Indian Government. Though M.G.R. was an actor by profession, he never "acted" in his political life. This paper helps us to understand many aspects of M.G.R. like the values and principles formulated by him in his private and political life, his familial norms, and his humanitarian deeds to name a few.

**Key Words:** M.G.Ramachandran, ill-effects of poverty, political activist, Hideki Takahashi of India, familial norms.

### முன்னுரை

*மருதூர் கோபாலன் ராமச்சந்திரன் (எம்.ஜி.ஆர்) சனவரித் திங்கள் 17ஆம் நாள் 1917ஆம் ஆண்டு கோபால மேனன், சத்தியபாமா இணையருக்குக் கண்டி பிரித்தானிய இலங்கை (தற்போதைய இலங்கை) "நாவலப்பிட்டி" எனும் ஊரில் மகனாகப் பிறந்தார் தன் தந்தையார் கோபாலமேனன் வழக்கறிஞர் தொழில் செய்து உயிருடன் இருந்தவரை வறுமையை அறியாதவராக இருந்தார் தன் தந்தையின் மறைவுக்குப் பிறகு கும்பகோணம் ஆனையடியில் உள்ள பள்ளியில் சிலகாலம் பயின்றார். கல்வியில் வெற்றி கொள்ளும் வயதில் வறுமை இவரை வென்றதால் தம் பள்ளிப் படிப்புக்குப் பாதியில் விடை கொடுத்தார்.*

*"இலர்பலர் ஆகிய காரணம் நோற்பார்*
*சிலர்பலர் நோலா தவர்"* (Tirukkural -270, P.61)

இல்லாதவர்கள் வறியவர்கள் உலகில் நிறைந்திருப்பதற்குக் காரணம் தவ உணர்வுடையோர் சிலராகவும் அவ்வுணர்வு இல்லாதவர் பலராகவும் இருப்பது தான். இவ்வாக்கு எம்.ஜி.ஆருக்கு முழுவதும் பொருந்தியது.

*"கொடிது கொடிது*

*இளமையில் வறுமை கொடிது"*

என்ற ஆன்றோரின் வாக்குக்கு எம்.ஜி.ஆர் நேரடி விளக்கமானார் வறுமையில் உணவிற்குக் கூட அல்லல்படும் அவல நிலைக்கு ஆளானார். படிப்பை நிறுத்திய பிறகு தம் சகோதரர் எம்.ஜி. சக்ரபாணியுடன்

[1] The author is an Assistant Professor and Research Advisor, Department of Tamil, National College (Autonomous) Thiruchirappalli, Tamil Nadu, India .9976225551 murugu.kanakasabai@gmail.com.

நாடகக் குழுக்களில் சிறுசிறு வேடமும், பெண் தோற்றத்தில் அரிதாரம் கொண்டார். ஆனாலும் வறுமையும் பசியும் தீர்ந்தபாடில்லை. ஒருமுறை நாடகக் குழுவில் அன்றைக்கு நாடகத்தில் யாரெல்லாம் காட்சியில் நடிக்கிறார்களோ அவர்களுக்கு மட்டும் உணவிடும் வழக்கமிருந்தது. சிறுவனான எம்.ஜி.ஆர் உணவிடும் வரிசையில் உணவுக்காக அமர்ந்திருந்தார். உணவிட்டு வருபவர் இவரை இனம்கண்டு உனக்கு இன்றைக்கு நாடகக்காட்சி. இல்லையே நீ ஏன் இங்கு அமர்ந்திருக்கிறாய் என்று அவரை எழுந்து போகச் செய்தார். பசிப்பிணி என்னும் பாவி" எம்.ஜி.ஆரை வாட்டி வதைத்தாலும் எந்த மறுப்பும் சொல்லாமல் எழுந்து சென்றார். இந்நிகழ்ச்சி "பசுமரத்தாணிபோல" அவருடைய மனத்தில்பதிந்தது. தொடர் முயற்சியால் நாடகத்தில் புகழ்பெற்று திரைநட்சத்திரமாய் மின்னி மிளிர்ந்து, ஏழைகளின் உற்றத் தோழனாக மனிதநோயப் பண்பாளராக தம்மை வடிவமைத்துக் கொண்ட எம்.ஜி.ஆரின் பன்முக விழுமிய குணப் பண்பை வெளிக் கொணர்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## ஆய்வு முன்னோடிகள்

எம்.ஜி.ஆர்.தானே தயாரித்து நடித்த நாடோடி மன்னன் திரைப்படத்தினைப் பற்றிய புத்தகம். "நான் ஏன் பிறந்தேன்" ஆனந்த விகடனின் சுயசரிதைத்தொடர் இவ்விரண்டும் முற்றுபெறாத நிலையில் உள்ளது. இவ்விரண்டிலும் உள்ள கருத்துக்கள் இக்கட்டுரை ஒட்டிய தரவுகள் பெறுவதற்குக் காரணமாக இருந்தது ."எனது வாழக்கைப் பாதையிலே" தொடரும் இவ்வாய்விற்கு முன்னோடி நூல்களாகிறது. காந்தியைச் சந்தித்த எம்.ஜி.ஆர்.கே.பி.ராமகிருஷ்ணன் (Nerkanal M.G.R.life history) திராவிட நாடு இதழ் (Date 10.8.1952 P.3), எம்.ஜி.ஆரின் வாழ்க்கை வரலாறு, எல்.ஆர். ஜெகதீசன் ஆளும் அரிதாரம் (Tamil BBC seeing date 7.6.2021), எஸ்.வி.நாடாள வந்த ஜானகியின் கதை (Devi weekly journal 20.1.1988 P.4), வள்ளல் எம்.ஜி.ஆர்.வாழ்க்கை வரலாறு (M.G.R. Muthu) மேற்கண்ட தரவுகளின் உதவியோடு இவ்வாய்வு நிகழ்த்தப்பட்டுள்ளது.

## கருமமே கண்ணாயினார்

காந்தியடிகளின் கருத்தால் ஈர்க்கப்பட்ட எம்.ஜி.ஆர் அதன் விளைவால் இந்திய தேசிய காங்கிரசில் இணைந்தார். தன் முதல் திரைப்படம் 1936 "சதிலீலாவதி" யில் அறிமுகமாகி திரையில் தோன்றினார். பின்னர் அறிஞர் அண்ணாவின் சொல்லாற்றலால் ஈர்க்கப்பட்டு திமுகவில் தம்மை இணைத்துக் கொண்டு,

*"மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்*

*எவ்வெவர் தீமையும் மேற்கொளார் செவ்வி*

*அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார்*

*கருமமே கண்ணாயி னார்"* (Needhineri Villakkam-53 )

தம்தொடர் உழைப்பால் உயர்வு கண்டு உத்தமப் பண்புடன் திகழ்ந்தார். மேலும்,

*"வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்*

*உள்ளத் தனைய துயர்வு"* (Tirukkural -595, P.127)

என்ற குறளுக்குத் தம் உழைப்பினால் நேரடி விளக்கமானார். தம்மால் படிக்க இயலாத கல்வியை யார் கற்க முன்வந்தாலும் அவர் தாராளமாக பொருள் தந்து உதவினார். இவருடைய உதவியால் கல்வி பயின்றோர் பலர். அவர்களுள் சிலர் திமுகவின் பொதுச்செயலாளர், துரைமுருகன், நடிகை கோவை சரளா ஆகியோரைக் குறிப்பிடலாம்.

## இந்தியாவின் ஹிதேகி தகஹாஷி

1970ஆம் ஆண்டு செப்டம்பர் 4ஆம் தேதி தம் குழுவுடன் "உலகம் சுற்றும் வாலிபன்" படப்பிடிப்பிற்காக ஜப்பான் சென்றார். அங்கு எக்ஸ்போ என்ற கண்காட்சி எட்டு லட்சம் பேர் உள்ளே போய்விட்டார்கள். இனி உள்ளே செல்ல இயலாது என்ற நிலையில் திரு.மணியன் அவர்கள் ஜப்பானில் புகழ்பெற்ற திரை நட்சத்திரமான "ஹிதேகி தகஹாஷி" புகழ்பெற்ற இவருடைய பெயருடன் ஜப்பான் மொழியில் இவர்

"இந்தோகா ஹிதேகி தகஹாஷி" என்று எம்.ஜி.ஆரைக் காட்டி கூறிய உடன் அனுமதி கிடைத்தது ("M.G.R.100 The Hindu Tamil News Paper 24th march 2016) தாம் கண்ட காட்சியைத் தம் மக்களும் காண அவற்றுள் பலவற்றைத் தம் திரைப்படத்தில் காட்சிப் படுத்தினார். தமக்கு உதவிய மணியன் அவர்களுக்கு "உதயம் புரொடக்சன்ஸ்" என்ற திரைப்படத் தயாரிப்பு நிறுவனம் தொடங்கவும், "இதயவீணை, சிரித்து வாழ வேண்டும், பல்லாண்டு வாழ்க" போன்ற நூறு நாட்கள் ஓடிய திரைப்படங்களில் நடித்தும் கொடுத்தார் இதனை,

*"உதவி வரைத்தன்று உதவி உதவி*

*செயப்பட்டார் சால்பின் வரைத்து* (Tirukkural -105, P.29)

உதவுவதற்கு அளவில்லை உதவி பெறப்பட்டவரின் பெருமையின் அளவே செய்த உதவியின் அளவாகும் என்ற வள்ளுவரின் வாக்கிற்கு ஏற்ப வாழ்ந்தவர் நம்முடன் விரிந்து நிற்கிறார்.

### அறமெனப்பட்டதே இல்வாழ்க்கை

அறமெனப்பட்டதே இல்வாழ்க்கை என்பார் அறம் என்பதற்குக் கடமை, நோன்பு, தருமம், கற்பு, இல்லறம் துறவறம், நல்வினை, அறக்கடவுள், தருமதேவன் என விளக்கமளிக்கிறது கழகத் தமிழ் அகராசி அறத்திற்கு விளக்கமளிக்கும் தொல்காப்பியர்.

*"காமம் சான்ற கடைகோட் காலை*

*ஏமம் சான்ற மக்களோடு துவன்றி*

*அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்*

*சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே"*

-(Tolkappiyam,porulathikaram, karpiyal, Noorpa 1138 )

இல்லற வாழ்க்கையின் இறுதிக் காலத்தில், பெருமை பொருந்திய மக்களோடும், அறம் புரிகின்ற சுற்றத்தோடு கூடியிருந்து தலைவனும் தலைவியும் சிறப்பாக போற்றப்படுகின்ற பண்புகளை இடைவிடாது நினைத்துக் கொண்டிருத்தல் மனையறத்தின் பயனாகும்.

1942 தங்கமணி, 1962 சதானந்தவதி முதலிருவர் இறந்த பின்பு 1966 ஜானகி அம்மையாரைப் பதிவுத் திருமணம் செய்து கொண்டு இல்லறக் கடனை சிறந்தோங்கச் செய்தார். மற்றவர்களை நல்வழிச் செலுத்தித் தானும் நல்வழியில் இவ்வாழ்க்கை மேற்கொள்பவன் துறவில் ஈடுபட்டுத் தவம் செய்வோரிலும் மேலான புகழ்பெறுவர் இதனை,

*"ஆற்றின் ஒழுக்கி அறன்இழுக்கா இல்வாழ்க்கை*

*நோற்பாரின் நோன்மை உடைத்து"* -(Tirukkural -48, P.17)

என்ற குறட்பாவின் வழி தம் வாழ்நாளெல்லாம் வாழ்ந்தவர் எம்.ஜி.ஆர்.

தம் சுற்றத்தாருக்கு வருகின்ற துன்பத்தைப் போக்கி அவர்களுக்கு உதவ வேண்டும் என்பதையும் தான் சார்ந்த இனத்தாரும் தம்மைப் போல வயிறார உண்ணுதல் வேண்டும் என்பதையும் நொதுமலாளர் நம்மோடு உறவினராய்ப் பழகுதல் வேண்டும் என்பதை.

*"கேள் கெடு ஊன்றவும் கிளைஞர் ஆரவும்*

*கேள் அல் கேளிர் கெழீஇயதை ஒழுகவும்*

*ஆள்வினைக்கு எதிரிய ஊக்கமொடு புகல்சிறந்து"* -(Akananuru: 93:1-3 P.221)

என்ற அகநானூற்றுப் பாடலுக்கு நற்சான்றாய் விளங்கியதோடு தம் சுற்றத்தையும் போற்றிக் காத்த இல்லற மாண்புடையராகத் திகழ்கிறார்.

வறுமையில் இல்லாதவர்க்கும், இறந்து மடிந்தவர்க்கும் குடும்பம் நடத்துபவன் துணையானவன். இல்லார்க்கு ஈதலால், இரப்போரைப் பேணலால் இறந்தோர்க்கு இரங்குதலால் இல்வாழ்பவன் இவர்களுக்குத் துணையாவான் இக்கருத்தை.

*"துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்*

*இல்வாழ் வான்என்பான் துணை"* (Tirukkural-42 ,P.17)

எம்.ஜி.ஆர் அவர்கள் தாம் வாழ்ந்த காலம் வரை அறவோர்க்கு அளித்தும், அந்தணரை ஓம்பியும், துறவோரை கனிவுடன் எதிர்கொண்டும், விருந்தினரை

"ஊட்டுதல் வேண்டும் தாய்போல" என்ற பாவேந்தரின் வரிக்கு இலக்கணமாக இல்லறக் கடமையாற்றியவர் தான் பொன்மனச் செம்மல். மேலும்,

*"அறன்கடை படாஅ வாழ்க்கையும் என்றும்*

*பிறன்கடைச் செலாஅச் செல்வமும் இரண்டும்*

*பொருளின் ஆகும் புனையினை என்று நம்"* (Akananuru: 156:1-3 P.362)

அறவழியில் இவ்வாழ்க்கை வாழவும், வறுமையில் இரந்தும் வேறு ஒருவருடைய வாயிலில் சென்று பணிந்தும், பெறாமல் தன்னுடைய முயற்சியால் பெறும் செல்வமே சிறந்ததாகும். அத்தகைய தம் முயற்சியில் உன்னதமான வாழ்வினை வாழ்ந்தவர் எம்.ஜி.ஆர்.

கொல்கத்தா தமிழ்ச் சங்க திறப்பு விழாவிற்குச் சென்ற எம்.ஜி.ஆர் சங்க நிர்வாகிகளுடன் நடந்து சென்றார். சாலையில் கொய்யாப் பழம் விற்றுக் கொண்டிருந்த வயதான தமிழ்ப் பெண்ணிடம் "பழம் என்ன விலை" என்று ஜாலியாகக் கேட்டார். அந்த மூதாட்டியும் சளைக்கவில்லை எம்.ஜி.ஆரைப் பார்த்த மகிழ்ச்சியில் அந்த மூதாட்டி "உனக்குப் போய் விலை சொல்ல முடியுமாய்யா? எல்லாமே உனக்குத் தான் எடுத்துக்கோ" என்று கூறினார்.

அந்த மூதாட்டி நினைத்துப் பார்க்காத தொகையை அவர் கையில் திணித்த எம்.ஜி.ஆர் கூடையில் இருந்த பழங்களை எடுத்து அருகே இருந்தவர்களுக்குக் கொடுத்துவிட்டு அந்த மூதாட்டியிடமும் பழத்தைக் கொடுத்து "நீ சாப்பிடு" என்றார் அந்த மூதாட்டிக்கு அழுகையே வந்து விட்டது. "நீ நல்லா இருக்கனும் ராசா" என்று கூறிச் கொண்டே காலில் விழ முயன்றவரை தடுத்து அணைத்து ஆறுதல் கூறினார் எம்.ஜி.ஆர்! எம்.ஜி.ஆரின் இச்செயல்,

*"பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை*

*வழிஎஞ்சல் எஞ்ஞான்றும் இல்"* (Tirukkural-44,P.17)

தீய வழியில் அல்லாமல் நல்வழியில் பொருளைச் சேர்க்க வேண்டும். அப்படிச் சேர்த்த பொருளின் பயனைப் பகிர்ந்துண்டு வாழ வேண்டும். அத்தகைய வாழ்க்கை அமைவதாயின் அவ்வாழ்க்கையில் ஒரு தும்பமுமில்லை என்ற குறளுக்கு இலக்கணமாகத் திகழ்ந்தார்.

சென்னையில் மழை பாதிப்பு நேரங்களில் எம்.ஜி.ஆரின் வீட்டில் பெரிய, பெரிய அண்டாக்களில் சோறு வடிக்கப்படும். பொட்டலங்களாகக் கட்டி கொடுக்கப்பட்டால் ஆறிவிடும் என்பதால், பாதிக்கப்பட்ட மக்கள் தங்கி இருக்கும் இடத்துக்கு வேன்களிலும், கார்களிலும் உணவு எடுத்துச் செல்லப்பட்டு சூடாக வழங்கப்படும். சில நேரங்களில் எம்.ஜி.ஆரே சென்று பசியோடு இருக்கும் மக்களுக்கு உணவு பரிமாறியதும் உண்டு இந்நிகழ்வு,

*"புணர்ந்தோர் புன்கண் அருளலும் உணர்ந்தோர்க்கு*

*ஒத்தன்று மன்னால்"* (Akananuru: 108:1-3 P.256)

தம்முடன் இருக்கும் சுற்றத்தினரின் துன்பத்தினை நீக்கி, அருளும் பண்பு அறிவுடையோர்க்கே உரியதாகும். அப்பண்புடைய சிலராக எம்.ஜி.ஆர் திகழ்ந்தார்.

கோடம்பாக்கம் ரயில்வே கேட்டில் எம்.ஜி.ஆரின் கார் காத்திருந்தது. நல்ல மழை பெய்து கொண்டிருந்தது. ரிக்ஷாக்காரர் ஒருவர் மழையில் நனைந்து கொண்டே முகத்தில் வழியும் தண்ணீரை துடைத்தபடி இருந்தார். இது எம்.ஜி.ஆரை வெகுவாகப் பாதித்தது. தனது அண்ணன் சக்ராபாணியிடம் ரிக்ஷாக்காரின் நிலையைச் சொல்லி எம்.ஜி.ஆர் வருத்தப்பட்டார். அவர் இயல்பாகவே கொஞ்சம் வேடிக்கையாக பேசக் கூடியவர் பாவம் தான். ஆனால் அதற்காக ரிக்ஷாக்காரர்கள் ரெயின் கோட் போட்டுக் கொண்டா ரிக்ஷாவை ஓட்டுவார்கள்? என்று கேட்டார். மழைக்குப் பதில் சொல்வது போல, எம்.ஜி.ஆரின் மூளையில் மின்னல் அடித்தது. ஏன் கூடாது? என்று எம்.ஜி.ஆர் கேட்ட தருணம்தான்,

*ரிக்ஷாக்காரர்களுக்கு இலவசமாக ரெயின் கோட் வழங்கி வாழ்வளித்தார் இக்கூற்று.*

*"எவரொருவருடைய உள்ளம், பிறருக்காக இரக்கம்*

*கொள்கிறதோ, அவரே மகாத்மா"*

*இக்கூற்று எம்.ஜி.ஆருக்கு மிகவும் பொருத்தமானதாகும்.*

**விருந்தோம்பல்**

*இல்லறக் கடமைகளுள் இன்றியமையாதது விருந்தோம்பல் அகநானூறு விருந்தோம்பல் இல்லறக் கடமையாக வலியுறுத்துகிறது. தலைவன் போரிலே வெற்றி பெற்று வீடு திரும்பினான். வீட்டை அடைந்ததும் தேரினை விரைவாகச் செலுத்திய பாகனைத் தன் தோளுடன் அணைத்துக் கொண்டான் தலைவி விருந்து பேணும் வாய்ப்பினைப் பெற்றாள் இதனை,*

*"வரைமருள் மார்பின் அளிப்பனன் முயங்கி*

*மனைக் கொண்டு புக்கனன் நெடுந்தகை*

*விருந்தேர் பெற்றனள் திருந்திழை யோளே"* (Akananuru: 384:12-14 P.860)

*அகநானூற்றுப் பாடல் சுட்டுகிறது தலைவன் தேர்ப்பாகனைத் தன்னுடைய வேலையாள் என்று எண்ணாது விருந்தினராக வீட்டிற்குள் அழைத்துச் செல்கிறான். இப்பாடல் உணர்த்தும் செய்தியை உணர்ந்திருந்தாரோ என்னவோ? எந்த வேளை உணவருந்தினாலும் தன்னுடன் பலரை அமர்த்தி உணவருந்துவதை வழக்கமாகக் கொண்டார் எம்.ஜி.ஆர்.*

*வள்ளுவரும், இன்முகம் காட்டி விருந்தினர்களை உபசரிப்பவன் வீட்டில் மனைமாட்சி, மங்கலம் வளரும் இதனை,*

*"அகனமர்ந்து செய்யான் உறையும் முகனமர்ந்து*

*நல்விருந்து ஓம்புவான் இல்"* (Tirukkural -84, P.25)

*குறளில் வள்ளுவர் வலியுறுத்துகிறார்.*

*பசி என்ற கொடிய நெருப்பை ஆகாரம் என்ற உணவை இட்டு அவிழ்ப்பதே ஜீவகாருண்யமாகும். எம்.ஜி.ஆர் மிகச் சிறந்த கருணையாளராக விளங்கினார் உயர்திணை உயிர்களிடத்து மட்டுமல்லாது அஃறிணை உயிர்களிடத்தும் அன்பு பாராட்டிய பெருமைக்குரியவர்.*

*தாம் வளர்ந்த ராஜா, ராணி ஆகிய பெயரில் இரண்டு சிங்கங்களை வளர்த்தார். ராணி இறந்தவுடன் ராஜா சிங்கத்தை வண்டலூர் உயிரியல் பூங்காவில் வளர்த்தார். முதுமையின் காரணமாக இறந்த போது முறையான அனுமதியுடன் ஆவணங்களை சமர்ப்பித்து உடலை பாடம் செய்து தம் தியாகராய நகர் இல்லத்தில் வைத்திருந்தார்.*

*எம்.ஜி.ஆர் விலங்குகளின் மீது அளவுகடந்த அன்பு வைத்திருந்தார். ஆடு, மாடு, கோழி, நாய், கரடி முதலியவற்றை வளர்த்ததோடு கவனித்துக் கொள்ள தனியாக கால்நடை மருத்துவரையும் நியமித்து இருந்தார். இந்நிகழ்வு,*

*"அன்பிலார் எல்லாம் தனக்குரியார் அன்புடையார்*

*என்பும் உரியர் பிறருக்கு"* (Tirukkural -72, P.23)

*என்ற குறளுக்கு இலக்கணமாய்த் திகழும் எம்.ஜி.ஆரின் ஆளுமையை விளக்க முற்படுகிறது.*

*சண்டைக் காட்சிகளைப் படமாக்கும்போது படத்தின் ஸ்டன்ட் இயக்குநரை விட எம்.ஜி.ஆர் அதிக அக்கறை எடுத்துக் கொள்வார். உடன் நடிக்கும் கலைஞர்களுக்கு ஆலோசனைகள் சொல்வார். கேமராவை வேகமாக ஓடவிட்டு திரையில் பார்க்கும் போது வேகமாக நடப்பது போன்ற டெக்னிக் எல்லாம் கிடையாது. முழு வேகத்துடன் எம்.ஜி.ஆர் சண்டையிடுவார்.*

*"அன்னமிட்ட கை" படத்தில் ஸ்டன்ட் கலைஞர்களோடு எம்.ஜி.ஆர் மோதும் சிலம்பச் சண்டைக் காட்சி மைசூர் அருகே பாண்டவ புரம் என்ற இடத்தில் படமாக்கப்பட்டது. எம்.ஜி.ஆர் விரைவாக குச்சியைச் சுழற்றிக் கொண்டே வந்தார் திருமலை என்ற ஸ்டான்ட் கலைஞர் கவனக் குறைவால் அவரது கட்டை விரலில் பலத்த*

அடிபட்டு விட்டது உடனே படப்பிடிப்பை நிறுத்திவிட்டு தனது குடும்ப மருத்துவரை அழைத்து சிகிச்சை அளிக்கச் செய்தார். இச்செயல்,

"அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு

என்போடு இயைந்த தொடர்பு" (Tirukkural -73,P.23)

உயிரும் உடலும் இணைந்த சேர்க்கை அன்போடு கூடிவாழ்வதற்கே என்பார்கள். அதாவது பிறவி எடுத்ததன் பயனே பிறருக்கு உதவுவதற்காக என்பதாகும். இக்குறளுக்கு அணிசேர்ப்பதாகவே மேற்கண்ட நிகழ்வினைப் பொருத்திப் பார்க்கலாம்.

இன்னா செய்பவருக்கும் இனியவை செய்யும் பண்பாளர் எம்.ஜி.ஆர் என்பதற்குச் சான்றாய் ஒரு நிகழ்வு, எம்.ஜி.ஆர் படங்களில் சந்திரபாபு இடம் பெறுவார். "எண்ணங்கள் ஏப்பங்கள் அல்ல. அப்படியே வெளியே விடுவதற்கு" என நயமான உவமையை அறிஞர் அண்ணா கூறுவதுண்டு.

சந்திரபாபு எம்.ஜி.ஆர் பற்றியும் அவருடைய நடிப்பு பற்றியும் கிண்டல் செய்வார். சந்திரபாபு படத்தில் எம்.ஜி.ஆர் நடிப்பதாக இருந்தது. இரண்டு நாள் படப்பிடிப்புடன் படம் நின்று விட்டது. வறுமையில் சிக்கிய பாபுவை ஒருநாள் எம்.ஜி.ஆர் சந்தித்தார். தனது பழைய நண்பன், கஷ்டப்படுவதைப் பொறுத்துக் கொள்ள முடியாத எம்.ஜி.ஆர் "பறக்கும் பாவை" "கண்ணன் என் காதலன்" தனது சொந்தப் படமான "அடிமைப் பெண்" படத்தில் நடிக்க வாய்ப்பும் அதற்காக பெருந்தொகையையும் ஊதியமாகக் கொடுத்தார். இந்நிகழ்வு,

"இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண

நன்னயம் செய்து விடல்" (Tirukkural-314,P.71)

துன்பம் செய்தவரைத் தண்டித்தல், அவர் வெட்கமடையுமாறு நன்மை செய்து, அதையும் அப்பொழுதெ மறந்து விடுவதுதான் இப் பண்பினை வெளிப்படும் எம்.ஜி.ஆரின் செயல் சிறப்புடையதாகும்.

## கைம்பெண் திருமணம்

சமூகத்தில் புரையோடிக்கிடந்த சடங்கு சம்ரதாயங்களை வேரறுத்து பல புதுமைகளைத் தம் திரைப்படங்களிலும், தான் அரியணை ஏறிய பிறகு ஆட்சியிலும் புகுத்திய பெருமைக்குரியவர் எம்.ஜி.இராமச்சந்திரனாவார். இவரது ஆட்சிக் காலத்தில் கொண்டு வந்த அளப்பரிய திட்டங்களில் முத்தாய்ப்பானது விதவை மற்றும் ஆதரவற்ற பெண்களின் திருமணத்திற்கு உதவி செய்த திட்டமாகும். இதனால் காலங்காலமாக கடைபிடித்து வந்த மூடநம்பிக்கையைச் சாடுகிறார். இவரது இத்திட்டத்திற்கு விதைபோட்ட பெருமைக்குரியவர் பாவேந்தராவார்.

"கோரிக்கை அற்றுக் கிடக்குதண்ணே இங்கு

வேரிற் பழுத்த பலா" (Bharathidhasan, Kaimaipzhi, P.93)

காதலுற்ற பெண்களின் திருமணக் கனவை கானல் நீராக கரைந்து போகச் செய்யாமல் மழைநீரால் குளிர்விப்பது போல தாலிக்குத் தங்கம் வழங்கி அவர்களின் காதலை கற்பியல் நிலைக்கு கொண்டு சென்றவர் எம்.ஜி.ஆராவார்.

## தமிழன்னைக்கு அணிசூட்டியவர்

1921 ஆம் ஆண்டு தமிழ் மொழிக்கு எனத் தனியே ஒரு பல்கலைக்கழகம் தொடங்க வேண்டுமென தீர்மானம் நிறைவேற்றிய தமிழவேள் உமா மகேசுவரனாரின் வேண்டுகோளினை அறுபதாண்டுகள் கழித்து அக்கோரிக்கையை நிறைவேற்றி தம் ஆட்சிக் காலத்தில் தமிழன்னைக்குப் புதிய அணிகலனாக தஞ்சாவூர்த் தமிழ்ப் பல்கலைக்கழகத்தை நிறுவி அழகு பார்த்தவர் ("M.G.R.100 The Hindu Tamil News Paper 11th june 2016)

"பொருப்பிலே பிறந்து தென்னன்
புகழிலே கிடந்து சங்கத்து
இருப்பிலே இருந்து வைகை
ஏட்டிலே தவழ்ந்த பேதை
நெருப்பிலே நின்று கற்றோர்
நினைவிலே நடந்தோர் என

*மருப்பிலே பயின்ற பாவை*

*மருங்கிலே வளரு கின்றாள்"* (Villibaratham ,paayiram -1)

இச்செய்யுளால் அழகு பெரும் தமிழன்னைக்குப்புதிய அணியைச் சூட்டி மகிழ்கிறார்

*"நெல்லும் உயிரன்றே, நீரும் உயிரன்றே*

*மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்"* (Purananuru: puliyur keziganurai,P.200)

ஒரு நாட்டை வழி நடத்தக் கூடியவருக்கானத் தகுதிகள் அனைத்தும் பெற்ற பெருமைக்கொண்ட எம்.ஜி.ஆர் 1981 ஆகஸ்ட் மாதம் தமிழ்ப் பல்கலைக் கழக உருவாக்க ஆய்வுக் கூட்டம் நடத்தி ஆயிரம் ஏக்கர் நிலம் ஒதுக்க தீர்மானித்ததால் 1981 ஆகஸ்ட் மாதம் தமிழக ஆளுநர் மூலம் "தமிழ்ப் பல்கலைகழக அவசரச் சட்டம் 1981" இயற்றி 972.7 ஏக்கர் நிலம் ஒதுக்கி கையப்படுத்தி பணிகளை ஆரம்பிக்க காரணகர்த்தாவாகியவர்.

தமிழிலக்கியம், இலக்கணம், மொழியில், கடலியல், சித்தமருத்துவம், நாட்டுப்புறவியல், கட்டடக் கலை, கைவினைக் கலை, நாடகம், இயற்பியல், சுவடியியல், கல்வெட்டியல் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் நிபுணத்துவம் பெருவதற்கு வழி அமைத்துக் கொடுத்தார். இதனை,

"எவன் ஒருவன் வலிமையைப் போன்ற வலிமையாகவும் அதே நேரத்தில் ஒரு பெண்ணின் இதயத்தைப் பெற்றிருக்கிறானோ, அவனே உண்மையான மனிதன்" (ஃஷிவீஸ்மீளீணீஸீணீஸீபீலீணீஷ்) என்ற விவேகானந்தரின் கூற்று எம்.ஜி.ஆருக்குச் சாலப் பொருந்தியது.

வெற்றியும் தோல்வியும் எம்.ஜி.ஆரை எந்த விதத்திலும் பாதிக்காதவாறு பார்த்துக் கொண்டார். தன் நாடோடி மன்னன் படம் குறித்த கேள்விக்கு இப்படம் வெற்றியடைந்தால் நான் மன்னன். தோல்வியடைந்தால் நான் நாடோடி என்று பதிலளித்தார். இப்பதில் இவரின் பண்பட்ட குணத்தை வெளிப்படுத்துகிறது.

*"கத்தி என்னை வெட்டாது*

*அம்பு என்னை துளைக்காது*

*நெருப்பு என்னை எரிக்காது*

*காற்று உலர்த்தாது; நான் சர்வ சக்தி*

*வாய்ந்தவன், சர்வ ஞானமுடைந்தவன்"* (Vivekanandhar)

விவேகானந்தரின் கூற்று எம்.ஜி.ஆர்க்குப் பொருந்துவதோடு நிலையாமைக் கொள்கைக்குச் சான்றாய் விளங்குகிறது.

எல்லோரையும் தனது சொந்தங்களாகக் கருதிய எம்.ஜி.ஆர் தாம் நடித்த தொழிலாளி படத்தில் அவர் பாடி நடித்த பாடலில்.

*"ஆண்டவன் உலகத்தின் முதலாளி*

*அவனுக்கு நானொரு தொழிலாளி*

*அன்னை உலகின் மடியின் மேலே*

*அனைவரும் எனது கூட்டாளி"* (Thozhilali filim song)

என்று பாடியதோடு மட்டுமல்லாமல் தம் வாழ்நாளில் அவற்றைக் கடைபிடிக்கவும் செய்தார்

"உங்களால் இந்த உலகை மாற்ற பயன்படுத்த முடிந்த மிகவும் சக்திவாய்ந்த ஆயுதம் கல்வியாகும்" (Nelson Mondelah)

அத்தகைய கல்வியை அனைவரும் பெற வேண்டி இலவச சீருடை, காலணி, பற்பொடி, பாடநூல் முதலியவற்றைத் தந்து ஏழைகளின் அறிவாயுதத்தை கூர்மையாக்கிய சமூக நீதி காவலராகத் திகழ்ந்தவர் எம்.ஜி.ஆர்.

### விருதுகளை அலங்கரித்தவர்

"நல்ல பண்புகள் என்பவை சின்னஞ் சிறு தியாகங்கள் செய்வதால் உருவாக்கும்" (மகாத்மா காந்தியடிகள்) தம் வாழ்நாளில் பிறருக்காக வாழ்ந்த வாழ்க்கைக்கு எம்.ஜி.ஆருக்குப் பல விருதுகள் தம்மைத் தேடி வந்தது.

1. பாரத் விருது (இந்திய அரசு)
2. அண்ணா விருது (தமிழ்நாடு அரசு)
3. பாரத ரத்னா (இந்திய அரசு)
4. பத்ம ஸ்ரீ (இந்திய அரசு) ஏற்க மறுப்பு
5. சிறப்பு முனைவர் பட்டம் அரிசேனா பல்கலைக்கழகம், சென்னைப்

பல்கலைக்கழகம், தமிழ்ப் பல்கலைக்கழகம், காமராசர் பல்கலைக்கழகம் ஏற்க மறுப்பு, சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ஏற்க மறுப்பு

6. வெள்ளியானை விருது (இந்திய சாரணர் இயக்கம்)

**பெற்ற பட்டங்கள்**

- இதயக்கனி (அறிஞர் அண்ணா)

ஜூ புரட்சி நடிகர் (கலைஞர் மு.கருணாநிதி)

- நடிக மன்னன் (சி.சுப்ரமணியம்)
- மக்கள் நடிகர் (நாகர்கோயில் ரசிகர்கள்)
- பல்கலை வேந்தர் (சிங்கைவாழ் ரசிகர்கள்)
- மக்கள் கலைஞர் (காரைக்குடி ரசிகர்கள்)
- கலையரசன் (விழுப்புரம் முத்தமிழ் மன்றம்)
- கலைச்சுடர் (மதுரை தேகப் பயிற்சிக் கலை மன்றம்)
- கலை மன்னர் (சென்னை ரசிகர்கள்)
- கலை வேந்தர் (மலேசியா வாழ் ரசிகர்கள்)
- திரைநாயகர் (சேலம் ரசிகர்கள்)

இவரின் பொதுச் சேவையைப் பாராட்டி வழங்கப் பெற்ற பட்டங்கள்

1. கொடுத்துச் சிவந்த கரம் (குடந்தை ரசிகர்கள்)
2. கலியுகக் கடவுள் (பெங்களூர் விழா)
3. நிருத்திய சக்ரவர்த்தி (இலங்கை ரசிகர்கள்)
4. பொன்மனச் செம்மல் (கிருபானந்த வாரியார்)
5. மக்கள் திலகம் (தமிழ்வாணன்)
6. வாத்தியார் (திருநெல்வேலி ரசிகர்கள்)
7. புரட்சித் தலைவர் (கே.ஏ.கிருஷ்ணசாமி)
8. இதய தெய்வம் (தமிழ்நாடு பொதுமக்கள்)
9. மக்கள் மதிவாணர் (இரா. நெடுஞ் செழியன்)
10. ஆளவந்தார் (ம.பொ.சிவஞானம்)

**இதய வீணை**

"இதய வீணை படத்துக்கு ஒரு சிறப்புண்டு. திமுகவின் பொருளாளராக இருந்த எம்.ஜி.ஆர் கட்சி நிர்வாகிகளின் சொத்து விபரம் கேட்டதையடுத்து 1972 ஆம் ஆண்டு திமுகவில் இருந்து நீக்கப்பட்டார். இச்செய்தியைக் கேள்விப்பட்ட எம்.ஜி.ஆர் மனதில் தோன்றிய பாடல் இதுவாகத்தான் இருந்திருக்க வேண்டும் அப்பாடல்,

*"தேடிச் சோறு நிதந்தின்று பல*
*சின்னஞ் சிறுகதைகள் பேசி மனம்*
*வாடித் துன்பமிகு உழன்று பிறர்*
*வாடப் பலசெயல்கள் செய்து நரை*
*கூடிக் கிழப்பருவ மெய்தி கொடுங்*
*கூற்றுக் கிரையெனப்பின் மாயும் பல*
*வேடிக்கை மனிதரைப் போலே நான்*
*வீழ்வே னென்று நினைத் தாயே?*
- (Bharathiyar Kavithaikal, P.131)

தம்மைச் சூழ்ச்சியால் வீழ்த்த நினைத்ததைக் கண்ட எம்.ஜி.ஆர் மனங்கலங்காமல் படப்பிடிப்பில் இருந்தவர் பாயசம் கொண்டுவரச் சொல்லி எல்லோருக்கும் கொடுத்து தானும் குடித்துவிட்டு, "இப்போதுதான் மகிழ்ச்சியாக இருக்கிறேன்" என்றார். திரையில் அவர் பாடிய பாடல் ஒன்றிற்கு திரையரங்கே மகிழ்ச்சி ஆரவாரத்தால் துள்ளிக் குதித்தது. அப்பாடல்,

*"ஒரு வாலும் இல்லே நாலும் காலும் இல்லே:*

*சில மிருகம் இருக்குது ஊருக்குள்ளே"*
(Idhayaveenai film song)

கருத்தாழம் மிக்கதாக அமைந்தது.

*"தண்டிப்பதை விட மன்னிப்பதில் தான் அதிகம் ஆனந்தம் இருக்கிறது"* (காந்தியடிகள்) இவ்வானந்தத்தை ஏகாந்தமாக அனுபவித்த பெருமைக்குரியவர் எம்.ஜி.ஆர்.

வாழ்கின்ற போது உத்தம குணங்;களோடு வாழ்கின்றவர்களின் இறப்பு எதிர்காலத்தில் நினைக்கப்படுவதுடன் ஆசிர்வதிக்கவும் படுகிறது. மக்களின் மனங்களில் நீங்கா இடம் பெற்ற எம்.ஜி.ஆர் திசம்பர்த்திங்கள் 24 ஆம் நாள் 1987 பிறருக்காக சுவாசிக்கும் தம் உயிர்காற்றை நிறுத்துக் கொண்டு கடலன்னையின் மடியில் தமிழகத்தின் கண்ணீர் கடலில் தத்தளிக்கவிட்டு தம் குருவின் அருகிலே நீங்கா உறக்கம் கொள்ளத் தொடங்கினார்.

*"இருப்பேன் பல நாள் என்றானே எம்மை*

*ஏய்த்தது போல் இன்று சென்றானே அவன்*

*சிரிக்கும் அழகைக் பார்ப்பதற்கே அந்த*

*தேவன் அருகினில் அழைத்தானோ?* (Kavingar kannadhasan)

என எண்ணத் தோன்றுகின்ற சகாப்பதமாக வாழ்ந்த பெருமைக்குரியவராக மறைந்து போனார். தாம் வாழ்ந்ததின் தடம் பதித்து சென்ற "பாரதரத்னா"வாக என்றும் ஒளிர்வார்.

**முடிவுரை**

*"நான் நிரந்தரமானவன் அழிவதில்லை - எந்த*

*நிலையிலும் எனக்கு மரணமில்லை"* (Kavingar kannadhasan)

எம்.ஜி.ஆர் தம் செயலால் மற்றவர்களைக் கவனித்ததோடு அவர்களின் துயரினைக் களையவும் முயன்றார். இல்லாதவர்களின் ஏந்தலாக என்றும் நினைக்கப்படுகின்ற உத்தம வாழ்வினை வாழ்ந்து நமக்கு வழிகாட்டிச் சென்றுள்ளார். அப்பாதையில் நாம் நடந்தால் நல்ல ஊர் போய் சேரலாம் என்ற எண்ணத்தை நமக்குள் விதைத்துவிட்டுச் சென்றுள்ளார். அவருடைய கொள்கைகள் ஏட்டில் எழுதும் எழுத்தாக அல்லாமல் மனத்தில் வரித்துக் கொள்ளும் நிலையே அவருக்கான இடத்தை நிறைவுப்படுத்தவதாக அமையும்.

## References

*Agananooru*, N.M.Venkadesami Nattar Urai, First Edition. 2019/8 P.362, 256, 860.

*Bharathiyar Kavithaigal, Complete Collection of Poems*, Poompuhar Pathipagam, First Edition. May 1976 Page.131.

Jegadesan, L.R (2021). *AAlum Aritharam Tamil BBC*, Seaing Date 07.06.2021.

Kaimai Pazhi. (1992). *Bharathidasan Kavithaigal*.

Nadalavantha Janagiyen Kathai, *Devi Weekly Journal* 20.01.1988 Page.4.

*Needhineri Villakkam*, Kumaragurubarrar, Song 53.

*Purananooru*, Puliyur Keziganurai, First Edition2010, 7th Edition 2019/7. Page.200.

*The Hindu Tamil News Paper*. Date, 24.3.2016,

*Tiravida Nadu Journal*, Date 10.08.1952 Page.3.

*Tirukkural*, (2000). Thendral Nelaiyam First Edition.

# மணிமேகலையும், இஸ்லாமும் போதிக்கும் விருந்தோம்பல் அறம் - ஓர் ஒப்பியல் நோக்கு

# Hospitality Virtue as Taught in *Manimekala* and Islam - A Comparative Perspective

முருகையா சதீஸ் / Murukaiya Sathees[1]

## Abstract

Literature and religion play a major role in the teaching of the virtues of human life. These include a Buddhist textbook entitled *Manimekalai*, and the Islamic religion followed by the Muslims. This comparative study aims to examine the virtue of hospitality as portrayed in *Manimegalai* and as preached by the Islamic religion via Quran and Hadith, the biographical forms of the Messenger of God. Hunger is a natural feel invoked in all living beings and the hungry need hospitality to cease this hunger; thus, hospitality is always hailed as the highest virtue one could and should possess. This descriptive paper entails the findings of the comparative study between Quran, Hadith, and *Manimekalai*; other sources such as related essays, journals and electronic commentaries concerning Quran, Hadith, and *Manimekalai* are also incorporated in the research. Both *Manimekalai* and the Islamic religion promote the virtue of hospitality as the quickest route to attain world peace.

Date of submission: 2021-06-05
Date of acceptance: 2021-06-27
Date of Publication: 2021-07-20
Corresponding author's Name: Murukaiya Sathees
Email: satheesmurukaiya@gmail.com

**Key Words:** Manimekalai, Islam, Hospitality, Comparative, Kappiyam.

### அறிமுகம்

உலகளாவிய நோக்கில் இலக்கியப் படைப்புக்களின் பொதுமையை ஒப்பிட்டுக்காண ஒப்பியல் இலக்கியம் முயல்கின்றது. மொழி, நாட்டு எல்லைகளையும் கடந்து 'இலக்கியங்கள் ஒற்றுமைத் தன்மைகளைப் பிரதிபலிக்கின்றன' என்ற கருதுகோளை முன்னிறுத்தி, இவை ஆய்வினை முன்னகர்த்துகின்றன. மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனாரால் படைக்கப்பட்ட மணிமேகலைக் காப்பியம், அறக்கருத்துக்களை வலியுறுத்துவதனூடாகப் பௌத்தமத உண்மைகளையும் போதிக்கிறது. முப்பது காதைகளையும், 4856 அடிகளையும் கொண்டு அமைந்து உயர் அறங்களை நிலைநிறுத்துகின்றது. சாத்தனார் வாழ்ந்த களப்பிரர் ஆட்சிக்காலம்;, செல்வச்சீரழிவு, தார்மீக வீழ்ச்சி, அரசியல் நெறி பிழைத்தல் முதலிய பல சீர்கேடுகள் நிலவிய காலம். அதனால் அவற்றைத் தம் காப்பியத்தில் எடுத்துக் காட்டித் தீர்வு காணவும் முற்பட்டார். மக்கட் சமுதாயத்தைப் பிடித்து வருத்திக் கொண்டிருந்த பசிப்பிணி எனும் கொடிய பிணியை மாற்ற வேண்டும் என்ற உயர்ந்த நோக்குடன் காப்பியத்தினைப் படைத்து மணிமேகலையை அப்பணியில் ஈடுபடுத்தினார்.

இஸ்லாமிய மதப்பண்பாட்டின் படி, உலகில் மனிதன் உயர்ந்த இலக்குக்களுடன் வாழவே அனுப்பப்பட்டதாக் கூறுவர்.

[1] The author is a lecturer in the Department of Tamil, University of Jaffna. satheesmurukaiya@gmail.com

அவ்விலக்குகளைக் கற்றுக்கொடுப்பதற்காகத் தூதர்களையும், அவர்களினூடாக வேதங்களையும் இறைவன் அருளினான். இச்சிறப்புடைய 'இஸ்லாம்' என்ற சொல் 'ஸலாம்' என்ற வினையடியிலிருந்து பிறந்து சாந்தி, சமாதானம் உட்பட்ட பல நல்லறங்களைப் போதிக்கின்றது. அவற்றுள் விருந்தோம்பலும் மிக முக்கிய கடமையாக வலியுறுத்தப்பட்டுள்ளது. "யார் அல்லாஹ்வையும், இறுதிநாளையும் நம்புகிறாரோ, அவர் தனது விருந்தினரைக் கண்ணியப்படுத்தட்டும்" (புகாரி, முஸ்லிம்) என்று நபி (ஸல்) அவர்கள் கூறுகிறார். விருந்தினரை உபசரிக்காதவரிடம் இறை நம்பிக்கையும், மறுமை நம்பிக்கையும் இருக்க முடியாது என்பது இங்கு வெளிப்படுத்தப்படுகின்றது. எனவே விருந்தோம்பல் ஈமானின் ஒரு அங்கம் என்பதை இஸ்லாம் வலியுறுத்துகின்றது.

களப்பிரர் ஆட்சி தமிழகத்தில் நிகழ்ந்த சூழலில் சீரழிந்து கிடந்த தமிழகத்து மக்களை தம் மதக்கருத்தினூடாக நன்னெறிப்படுத்த 'மணிமேகலை' தோன்றிய நிலையில், அறியாமையில் மூழ்கிச் சீரழிந்த அராபியச் சூழலை மேன்நிலைப்படுத்த கி.பி ஏழாம் நூற்றாண்டளவில் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் இறுதித் தூதராக அகிலத்திற்கு அனுப்பப்பட்டார்கள். இவ்விருவரது சமூகச் சூழலும் ஒன்றாக இருந்ததுடன், சமூக நல்வழிப்படுத்தல்களுக்காகத் தம்மை இருவரும் அர்ப்பணித்தனர். எனவே மணிமேகலையும், இஸ்லாமும் மனித வாழ்வை நன்னெறிப்படுத்துவதனூடாக விருந்தோம்பலையும் போற்றுகின்றது. இதனால்; மணிமேகலையும், இஸ்லாமும் கூறும் விருந்தோம்பல் அறத்தினை ஒப்பியல் அணுகுமுறையூடாக இவ்வாய்வு மிகச் சுருக்கமாக ஆராய்கிறது.

## ஆய்வு நோக்கம்

மணிமேகலை கூறுகின்ற விருந்தோம்பல் அறத்தினையும், இஸ்லாம் வலியுறுத்தும் விருந்தோம்பல் கடமையையும் ஒப்பியல் அணுகுமுறை ஊடாக ஆராய்வதை இவ்வாய்வு நோக்காகக் கொண்டுள்ளது.

## ஆய்வு முறையியல்

இவ்வாய்வானது பண்புசார் முறைமையைக் கொண்டமைந்து, விபரணப் பகுப்பாய்வு முறை, ஒப்பியல் முறை, ஆகிய அணுகுமுறைகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்விற்குரிய தரவுகளாக, மணிமேகலை, அல்குர்ஆன், ஹதீஸ் முதலியவை பயன்படுத்தப்பட்டுள்ளதுடன், கட்டுரை நூல்கள், இதழ்கள், மின்னூடகக் கருத்துக்கள் போன்றவையும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

## அறத்தில் சிறந்த அறம்

அறம் என்று சிறப்பித்துச் சொல்லப்படுவது உலகில் உறையும் உயிர்களுக்கெல்லாம் உணவு, உடை, உறையுள் இவைகளைக் கொடுத்து உதவுவதுதான் சிறந்த அறமாகும் என்பதை மணிமேகலைக் காப்பியம் போதிக்கிறது. இவற்றைத்தவிர உயர்ந்த அறம் வேறு இருப்பதாகத் தெரியவில்லை என்பதனையும் வலியுறுத்துகின்றார் சாத்தனார். இதனை,

*"அறம் எனப்படுவது யாது எனக் கேட்பின்*

*மறவாது இதுகேள்: மண் உயிர்க் கெல்லாம்*

*உண்டியும், உடையும், உறையுளும் அல்லது*

*கண்டது இல்"*
*(காதை.25:228 231)*

என்ற செய்யுளடிகள் எடுத்துக் காட்டுகின்றன. இவ்வடிகள் உணவளித்தலே தலைசிறந்த தர்மம் என்று உரைத்தன. உடையற்றோர்க்கு உடையும், இடமில்லாதவர்களுக்கு இடமும் அளிப்பது, உணவளிப்பதுடன் ஒட்டிய அறமாகும் என்றும் வலியுறுத்தப்படுகின்றது.

இஸ்லாத்திலும் விருந்தோம்பல் சிறந்த அறமாகவே கொள்ளப்படுகின்றது. விருந்தினரை உபசரித்தல் என்பது பலவகையான அர்த்தங்களைக் கொண்டதாகும். விருந்தினருக்கு உணவளிப்பது மட்டுமல்லாமல் அவர்களுக்குத் தேவையான வசதிகளையும் செய்து கொடுப்பதும் உபசரிப்பில் அடங்கும். வீட்டிற்கு யாரும் விருந்திற்கு வந்தால் முதலில்

அவர்களுக்கு "ஸலாம்" கூறி வரவேற்க வேண்டும். அவருக்காக இறைவனிடம் நலம் விசாரித்துக் கொள்ள வேண்டும் என்கிறது இஸ்லாம்.; வீட்டிற்கு விருந்தினர் வந்தவுடன் 'நபி இப்ராகீம்', அவர்களுக்குத் தேவையான உணவுகளை ஏற்பாடு செய்தார்கள். ஒரு காளைக்கன்றைப் பொரித்து விருந்தினருக்கு முகம் மலரக் கொடுத்தார்கள். இதனை,

"...அறிமுகம் இல்லாத ஆட்களாக இருக்கிறார்களே என்று எண்ணி, பின்னர் அமைதியாக தம் வீட்டிற்குச் சென்றார். (பொரிக்கப்பட்ட) கொழுத்த காளைக்கன்றைக் கொண்டுவந்து அதை விருந்தினர் முன் வைத்தார்" (51:25) என்று திருமறை கூறுகின்றது. விருந்தினருக்குத் தெரியாமல் தன்னுடைய இல்லத்தாரிடம் விருந்து உபசரிப்பை மறைமுகமாக 'இப்ராகீம் நபி' மேற்கொள்ளச் சொன்னார் என்பது இங்கு முக்கியமான செய்தியாகும். நாம் என்ன செய்யப் போகிறோம் என்பதை அறிந்தால், விருந்தினர்கள் விருந்தை மறுத்துவிடக் கூடும் என்பதால்தான் இந்த இரகசிய ஏற்பாட்டை மேற்கொண்டார் எனலாம்.

"சகோதரர்களே! இவர்கள் என்னுடைய விருந்தாளிகள். என்னை அவமானப்படுத்தி விடாதீர்கள். அல்லாஹ்விற்கு அஞ்சுங்கள். என்னை இழிவுபடுத்தி விடாதீர்கள்" (குர்ஆன். 15: 68) என்ற 'லூத்' அவர்களின் கூற்று இங்கு முக்கியமானதாகும். வீட்டிற்கு வரும் விருந்தினர்களை நாம் கண்ணியப் படுத்த வேண்டும். நீங்கள் அவர்களைக் கண்ணியப்படுத்துவது உண்மையில் நீங்கள் உங்களைக் கண்ணியப்படுத்திக் கொள்வதாகும் என்கிறது திருமறை. அவர்களுக்கு ஏதாவது கண்ணியக் குறை ஏற்பட்டால் அதைக் களையத் துணிவுடன் களம் இறங்க வேண்டும் என்றும் கூறுகிறது. எனவே இத்தகைய கருத்துக்கள் விருந்தோம்பல் அறத்தின் சிறப்பினை எடுத்துக்காட்டுகின்றது.

## உணவளிப்பவர் – உயிர் காப்பவர்

பசித்தோர்க்கு உணவு கொடுக்க வேண்டும் என்னும் நல்லறத்தையே பண்டைய நூல்கள் எல்லாம் வலியுறுத்துகின்றன. மணிமேகலை நூல் இந்த ஒரே கொள்கையைத்தான் எல்லாவற்றிலும் சிறப்பாக எடுத்துரைக்கின்றது. கதாநாயகியான மணிமேகலை பசித்த உயிர்களுக்கெல்லாம் உணவிட்டுக் காப்பதையே கடமையாகக் கொண்டாள். இவ்வுலகில் வாழும் மக்கள் அனைவரும் பட்டினியால் வருந்திச் சாகாமல் உணவளிக்க வேண்டும். இவ்வாறு உணவளிப்பவர்கள் "உயிர் கொடுத்துக் காப்போர்" ஆவார். இதனையே,

*"மண்திணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்*

*உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" (காதை. 11 : 95 96)*

என்று மணிமேகலை கூறுகின்றது.

இஸ்லாத்திலும் உணவு கொடுத்து உயிர் காக்கவேண்டிய கருத்துக்கள் வலியுறுத்தப்பட்டுள்ளன. உலகில் பிறந்த அனைத்து ஜீவராசிகளுக்கும் இறைவனே உணவளிக்கிறான். ஆகவே நாங்களும் கடமைதவறாது அதனைக் கடைப்பிடிக்க வேண்டும். "எந்த உயிரினமும், அதற்கான உணவு அல்லாஹ்வின் மீது (பொறுப்பாக) இருந்ததே தவிர பூமியில் இல்லை. இன்னும் அவை தங்கும் இடத்தையும், அவை அடங்கும் இடத்தையும் அவன் அறிவான்" (குர்ஆன். 11: 6) என்ற திருமறையின் கூற்று போற்றுதற்குரியதாகும். மேலும்,

"வறுமைக்கு அஞ்சி உங்கள் குழந்தைகளைக் கொல்லாதீர்கள், நாமே உங்களுக்கும் உணவு அளிக்கிறோம். அவர்களுக்கும் அளிப்போம்." (குர்ஆன். 6: 151) என்று திருமறையின் இறை வசனம் கூறுகிறது. எனவே உணவைக் கொடுத்து உயிர்களை அல்லாஹ் காப்பாற்றுவதைப் போல நாமும் ஜீவராசிகளுக்கு உணவளித்து உயிர்காக்க வேண்டும் என்ற சிந்தனையை இஸ்லாம் முன்வைக்கிறது எனலாம்.

## பசிப்பிணி மருந்து

மணிமேகலையின் ஆசிரியர் "ஆருயிர் மருந்து" என்று உணவைக் குறிப்பிடுகின்றார். மணிமேகலையில் ஏழு இடங்களில் உணவைக் குறிப்பிடும் போது "ஆருயிர் மருந்து" என்னும்

தொடரால் அழைக்கின்றார். சாத்தனாரும் "ஆதிரை இட்டனள் ஆருயிர் மருந்து" என்றும் "ஊண் உடைய மாக்கட்டு உயிர் மருந்து இது" என்றும் குறிப்பிடுகின்றார். மேலும் இப்பசிப்பிணிக்குரிய உணவுக்கொடையை இரு வழிகளில் விளக்குகின்றார் சாத்தனார். ஆபுத்திரன் கதை மற்றும் மணிமேகலையின் அறப்பணி முதலியவற்றின் மூலம் உணவுக்கொடை விளக்கப்பட்டுள்ளன. மக்கள், தேவர் என்ற இருவருக்கும் ஏற்ற ஒரு முடிவான அறம் உயிர்களின் பசிப்பிணியை நீக்குவதுதான். இதுவே மிகப்பெரிய நல்ல தர்மம் என்று அறவண அடிகள் மூலம் மணிமேகலைக்குக் கூறப்படுகின்றது. இதனை,

*"மக்கள் தேவர் என இரு சார்க்கும்*

*ஒத்த முடிவின் ஓர் அறம் உரைக்கேன்;*

*பசிப்பிணி தீர்த்தல் என்றே அவரும்*

*தவப்பெரு நல்லறம் சாற்றினர்"* (காதை.12 : 115 118) என்ற

பாடலடிகள் மூலம் கண்டு கொள்ளலாம்.

இஸ்லாமும் பசிக்கு மருந்தாகிய உணவின் உபசரிப்பினையும் உணவின் அவசியம் பற்றியும் வலியுறுத்துகின்றதை அவதானிக்க முடிகின்றது. யாரும் வீட்டிற்கு வந்தால் அவர்களை 'நபி (ஸல்)' அவர்களே நேரில் உபசரிப்பது வழக்கமாகும். விருந்தினர் உணவருந்தும் போது தாமும் அவர்களோடு அமர்ந்து கொண்டு 'இன்னும் கொஞ்சம் உண்ணுங்கள்" என்று நபி (ஸல்) கூறிக்கொண்டே இருப்பார்கள்.

விருந்தினர்கள் திருப்தியாகச் சாப்பிட்டு முடித்துவிட்டு எப்போது "போதும்" என்று மறுக்கிறார்களோ அப்போது நபிகளாரும் வற்புறுத்துவதை விட்டுவிடுவார்கள். மேலும் விருந்தினருக்குக் குறிப்பிட்ட நேரத்தில் உணவைப் பரிமாற வேண்டும். விருந்தினரோடு உணவு அருந்தும் போது நாம் அவசர அவசரமாக சாப்பிட்டு முடித்துவிடக்கூடாது. எம்மைப்பார்த்து அவர்கள் அரைகுறையாகச் சாப்பிடக் கூடும். அவர்கள் கை அலம்பிய பிறகே நாம் கை அலம்ப வேண்டும் என்கிறது இஸ்லாமிய தர்மம்.

"உணவுத்தட்டு வைக்கப்பட்டால் அது தூக்கப்படும் வரை எவரும் எழக்கூடாது. தனக்கு வயிறு நிரம்பி விட்டாலும் கூட்டத்தினரின் வயிறு நிரம்பும் வரை தனது கையைத் தட்டிலிருந்து எடுக்கக் கூடாது. ஏனெனில் அவருடன் சாப்பிடுபவருக்கு உணவுத் தேவையிருக்கும். நிலையிலே வெட்கப்பட்டு தனது கையை அவர் எடுத்துவிடக்கூடும்" (இப்னுமாஜா) என்று நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். அதுமட்டுமல்லாது விருந்தினர்களை வீட்டிற்கு வெளியே வந்து வரவேற்று அழைத்துச் செல்வதும், அவர்கள் திரும்பிச் செல்லும் போது வாசல் வரை சென்று வழியனுப்பி வைப்பதும் சிறப்பானதாகும். (இப்னுமாஜா). உணவு என்பது மருந்தாகும். அதனைச் சாப்பிடும் போது அல்லாஹ்வின் பெயரால், வலது கையால் உண்ண வேண்டும். தட்டின் முன்பகுதியில் இருந்து உண்ண வேண்டும். இதனை,

"நான் நபி (ஸல்) அவர்களிடம் சென்றேன். அவர்களிடம் உணவு இருந்தது. அன்பு மகனே! நெருங்கி வா! அல்லாஹ்வின் பெயரைக் கூறு! உன் வலது கையால் சாப்பிடு! உனக்கு முன்னால் உள்ள பகுதியிலிருந்து சாப்பிடு! என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்." (புகாரி, முஸ்லிம்) என்ற திருக்கூற்று உறுதி செய்கிறது. எனவே மனிதனுக்கு பசிப்பிணியை நீக்க நல்மருந்து, அகம்மகிழ்ந்து உண்ணும் விருந்து என்பது இஸ்லாம் போதிக்கும் உயர்ந்த அறமாகும். எனவே எல்லோருக்கும் பகிர்ந்துண்டு வாழவேண்டும்.

### வறியோர்க்கு உதவுதல்

உண்மையில் உணவில்லாமல் தவிக்கும் வறியோர்க்கே உணவளிக்க வேண்டும். வேறு வேலை செய்து பிழைக்க முடியாத நோயாளிகள், அங்கம் பழுதடைந்தோர் போன்றவர்களைக் காப்பதுதான் நல்லறம். நாம் செய்யும் உதவிக்கு மாற்றுதவி செய்யும் ஆற்றல் படைத்தோருக்கு உதவுவது அறம் என்ற துறையில் அடங்காது. இவ் உண்மையை மணிமேகலை எடுத்துக் காட்டுகின்றது. மணிமேகலையிலும் ஆபுத்திரன் வறியோர்க்கு உணவு கொடுப்பது

காட்டப்படுகின்றது.

ஆபுத்திரன், குற்றமற்றோர் வாழும் வீடுகள் தோறும் சுற்றித்திரிந்து பிச்சை எடுப்பான். அதனைப் பரிமாறி உண்ணும் பொருட்டு, "கண்தெரியாதவர்களே! காதுகேட்காதவர்களே! கால் முடம்பட்டு நீண்ட வழி நடக்க முடியாதவர்களே! ஆதரவற்ற அநாதைகளே! பிணியால் வருந்துகின்றவர்களே! அனைவரும் உணவுண்ண வாருங்கள்" என்று கூவி அழைப்பான். அவனிடம் வந்து கூடுகின்றவர்களுக்கெல்லாம் அன்னம் இடுவான். மீதப்பட்ட உணவையே தான் உண்பான். (காதை.13 : 109 113). இதனால் உணவு பெறத்தக்கவர் யார் என்பதை அறியலாம்.

மணிமேகலை அமுதசுரபியைக் கையில் ஏந்தி, எல்லா உயிர்களும் உணவுண்ண வருக என்று அழைப்பாள். கண் தெரியாதவர்கள், காதுகேட்காதவர்கள், கால் நொண்டியானவர்கள், அநாதைகள், ஊமைகள், நோயாளிகள், தவக்கோலமும் விரதமும் உடையவர்கள், பசிநோயால் வருந்தியவர்கள், சோம்பலால் வறுமையுற்றவர்கள் யாவரும் வந்து கூடுவார்கள். நூறாயிரம் விலங்கினமும் வந்து சூழும். ஏனைய உயிர்களும் வந்து சுற்றிக் கொள்ளும். இவர்களுக்கெல்லாம் மணிமேகலை உணவிடுவாள். அவள் கொடுக்கும் உணவை அவர்கள் உண்பார்கள் அவ்வுணவு உயிரைக் காக்கும் மருந்தாக இருந்தது. சோறு கொடுப்பதில் அவள் சோர்வடையவே இல்லை. இச்செய்திகளை,

*"அங்கையின் ஏந்திய அமுதசுரபியை*

*வைத்து நின்று 'எல்லா உயிரும் வருக' என..*

*காணார், கேளார், கால் முடப்பட்டோர்..." (காதை.28 : 218 235)*

என்ற பாடலடிகள் மூலம் சாத்தனார் வெளிப்படுத்துகின்றார்.

இஸ்லாத்திலும் ஏழைகளுக்குக் கொடுக்கும் விருந்தின் அவசியம்; பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. "செல்வந்தர் மட்டும் அழைக்கப்பட்டு ஏழைகள் புறக்கணிக்கப்படும் விருந்துதான் விருந்துகளில் மிகவும் கெட்டதாகும்" (புகாரி, முஸ்லிம்) என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். மேலும் ஒரு குட்டி போட்ட ஆடு நபி (ஸல்) அவர்களுக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

நபி (ஸல்) அவர்கள் அதன் பாலைக் குவளையில் குடித்தார். அவர்களின் வலது புறத்தில் கிராம வாசிகளும், இடது புறத்தில் அபூபக்கர் (ரலி) அவர்களும் அமர்ந்திருந்தனர். அப்போது உமர் (ரலி) அவர்கள் "அல்லாஹ்வின் தூதரே! முதலில் அபூபக்கருக்கு வழங்குங்கள்" என்றார்கள். ஆனால் தன் வலது புறத்திலிருந்த கிராமவாசிகளுக்கு (அந்தக் குவளையை) கொடுத்துவிட்டு "வலது புறம், வலதுபுறமாகவே வழங்க வேண்டும்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (புகாரி, முஸ்லிம்) இங்கு அந்தப் பால் யாருக்கு முதல் கொடுக்கப்பட வேண்டும் என்பதையும் எந்தப் பக்கத்தால் வழங்கப்பட வேண்டும் என்பதையும் நபி (ஸல்) அவர்கள் விளக்கியுள்ளார்கள் எனலாம். மேலும்,

"இறந்தவரின் குடும்பத்தினரிடம் கூட்டமாகக் கூடுவதையும், அடக்கம் செய்யப்பட்டபின் விருந்து தயாரிப்பதையும் ஒப்பாரி வைப்பதன் ஒரு வகையாக நாங்கள் கருதி வந்தோம்" (அஹ்மத்) என்பதன் மூலம் துக்கத்தில் இருப்பவர்களுக்கு நாங்களே விருந்து வழங்க வேண்டும். அவர்கள் துன்பத்தில் ஆழ்ந்து இருப்பதால் அவர்களிடம் நாம் ஒன்றையும் எதிர்பார்க்கக் கூடாது என்பதையும் இஸ்லாம் வலியுறுத்துகின்றது.

"அல்லாஹ்வின் மீதுள்ள அன்பின் காரணமாக ஏழைகளுக்கும் அனாதைகளுக்கும், சிறைப்பட்டவர்களுக்கும் உணவளிப்பார்கள்" (குர்ஆன். 76 : 8) என்ற திருமறையின் கூற்றின்வழி ஏழைகளுக்கும், அனாதைகளுக்கும், சிறையில் வாடுபவர்களுக்கும் உணவளிப்பது அல்லாஹ்வின் மீது காட்டும் கருணைக்குச் சான்றாகும் என்பது புலனாகின்றது. எனவே யார் யாருக்கு விருந்து கொடுப்பது அவசியம் என்பது இதனுடாக விளங்குகின்றது. ஆகவே

நாம் விருந்தோம்பலினூடாக ஏழைகளின் பசித்துயரைத் துடைக்க முன்வர வேண்டும்.

**உணவின் அவசியம்**

உணவின் அவசியத்தினைச் சாத்தனார் "காயச்சண்டிகை"யின் கதைமூலம் எடுத்துக் கூறுவதைக் காணலாம். காயச்சண்டிகையானவள் "யானைத்தீ" என்னும் கொடும்பசியால் துன்புற்றாள். அமுதசுரபியிலிருந்து உணவைப் பெற்று உண்டவுடன் அவளுடைய பசிநோய் தீர்ந்தது. மேலும், மணிமேகலை காயசண்டிகை போல மாற்றுருவம் கொண்டு சிறையில் அனைவருக்கும் உணவளித்தாள். அதனைக் கேள்வியுற்ற சிறைக்காவலர்கள் வியந்து அரசனுக்குத் தெரிவித்தனர். மணிமேகலையும் பாத்திரத்தின் பெருமையை எடுத்துக்கூறினாள்.

*"தெய்வம் தந்தது திப்பியம் ஆயது*
*யானைத் தீ நோய் அரும்பசி கெடுத்தது*
*ஊன் உடைய மாக்கட்கு உயிர் மருந்து இது..."*

என மணிமேகலை கூறக்கேட்டு, அவளின் ஆலோசனையின் படி சிறைக்கோட்டத்தை அறக்கோட்டமாக்கினான், இச்செய்தியானது சமுதாயத்தில் உணவின் அவசியத்தை வலியுறுத்துகின்றது. அத்துடன் 28 தினங்கள் இந்திரவிழா நடக்கவிருக்கிறது. மேற்படி விழாவிற்காக முரசறைபவன் பல வேண்டுகோள்களை விடுத்து இறுதியாக,

*"பசியும் பிணியும் பகையும் நீங்கி*
*வசியும் வளனும் சுரக்கென வாழ்த்தி*
*அணிவிழா அறைந்தனன் அகநகர் மருங்கென்"*

என நிறைவு செய்கிறான். இவ்வேண்டுகோள்கள், அரசன் நிறைவேற்றவேண்டிய கடமைகளாகக் காட்டுகின்றார் சாத்தனார். நாட்டிலே நீக்க வேண்டிய விடயங்களாகப், பசி, பிணி, பகை என்பன கூறப்படுகின்றன. இம் மூன்று விடயங்களிலும் முன்னிற்பது பசி தீர்த்தலாகும். இதை மன்னனின் கட்டாய கடமையாகச் சாத்தனார் வலியுறுத்துவது சமூகத்தில் உணவின் அவசியத்தையும், விருந்தோம்பலின் சிறப்பினையும் எமக்குக் காட்டுகின்றது.

இஸ்லாம், விருந்தழைப்பை மறுப்பவர்கள் அல்லாஹ்விற்கும், தூதருக்கும் கட்டுப்பட்டவர்களாக இருக்கமுடியாது என்கிறது. விருந்திற்குப் பதிலளிப்பதும் கடமை என்று கூறுகின்றது. "யார் விருந்தழைப்பை ஏற்க மறுக்கிறாரோ, அவர் அல்லாஹ்விற்கும், அவனது தூதருக்கும் மாறு செய்து விட்டார்" (புகாரி, முஸ்லிம்) என்ற கூற்று இங்கு நோக்கத்தக்கது. மேலும், "ஒருவர் தனிநபரின் விருந்தினராகச் செல்லாமல் ஒரு கூட்டத்தாரிடம் விருந்தாளியாகச் சென்றால், அவருக்கு ஏதும் கிடைக்கவில்லையானால் அவருக்கு உதவுவது எல்லா முஸ்லிம்களின் மீதும் கடமையாகும்" (அஹமத்) என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

"நபி (ஸல்) அவர்கள் எந்த உணவையும் ஒருபோதும் குறைகாணமாட்டார்கள். அது விருப்பமானதாக இருந்தால் சாப்பிடுவார்கள். விருப்பமில்லையானால் விட்டுவிடுவார்கள்" (புகாரி, முஸ்லிம்) என்பதன் மூலம், விருந்திற்குச் செல்லும் போது குறைகள் இருந்தால் அதைச் சகித்தக்கொள்ள வேண்டும் என்பது விளங்குகின்றது. அத்துடன், "ஒரு அடியான் உணவைச் சாப்பிடும் போது அந்த உணவிற்காக அவனைப் புகழ்வதையும் அல்லாஹ் பொருந்திக் கொள்கிறான்" (முஸ்லிம்) என்பதும் சிறந்த நபி மொழியாகும். முஸ்லிம் அல்லாதவர்களின் வீட்டிற்கு விருந்திற்குச் செல்லும் போது, அவர்கள் கொடுக்கும் பாத்திரங்களில் சாப்பிடுவதும், சமைப்பதும் நபி (ஸல்) அவர்களால் தடுக்கப்படவில்லை என்பதை ஹதீஸ் தெளிவுபடுத்துகின்றது. "நபி (ஸல்) அவர்களோடு நாங்கள் போரிலிருந்த சமயம் இணைவைப்போரின் பாத்திரங்கள் கிடைத்தன. அதைத்தான் நாங்கள் உபயோகித்தோம். அது விஷமாக நபி (ஸல்) அவர்களால் குறை கூறப்படவில்லை" (அபூதாவூத்) எனச் சுத்தமானதாகப் பத்திரங்களைப் பயன்படுத்தி உணவுண்ண வேண்டும் என்று வலியுறுத்தப்படுகின்றது. எனவே இவை யாவும் உணவின் அவசியத்தை பறைசாற்றுகின்றன எனலாம்.

**உணவளிப்பதன் பயன்**

பசித்தோர்க்குச் சோறு கொடுப்பவர்களே

மறுபிறப்பில் நல்லொழுக்கத்தைப் பின்பற்றுவோராகப் பிறப்பார்கள். அவர்கள் எல்லாப் பிறவிகளிலும் நல்லறங்களையே புரிவார்கள். இறுதியில் பிறவா நெறியை அடைவார்கள் என்றும் மணிமேகலை கூறுகின்றது. சென்ற பிறப்பிலே மணிமேகலை இராகுலன் என்பவனுக்கு மனைவியாக இருந்தாள். அப்போது அவள் 'சாதுசக்கரன்' என்னும் முனிவனை உபசரித்து உணவளித்தாள். அப்புண்ணியம் அவளைத் தொடர்ந்து நின்று, இறுதியில் அவள் பிறப்பு இன்றி முத்தி பெறுவதற்கு மூலமாயிற்று என்று உணவு அறம் மேற்கொண்டு பெற்ற பயன் கூறப்பட்டுள்ளது. இது அன்னதானத்தால் அடையும் பயனை வெளிப்படுத்திய கதை ஆகும். காப்பியத்தில் வரும் மற்றொரு உணவுக் கொடையாளனாகிய ஆபுத்திரனூடாகவும் உணவறத்தின் பயன்களைச் சாத்தனார் கூறுகின்றார். ஆபுத்திரனின் உணவுக் கொடையைக் கண்டு வியந்த இந்திரன் வரம் கொடுக்க வந்தபோது. "இந்திரனே நீ தருவதாகக்கூறிய வரங்களின் பயன்களை நான் உணவுத்தானம் செய்தபோதே பெற்றுவிட்டேன் என்கிறான்.

*"வருந்தி வந்தோர் அரும்பசி களைந்து அவர்*

*திருந்து முகம் காட்டும் என தெய்வ கடிகை" (காதை.14: 44 45)*

என்று ஆபுத்திரன் இந்திரனிடம் கூறினான். இவ்வாறு உணவு அறத்தின் பலனைக் கூறுவதனூடாக, உலக உயிர்கள் அனைத்திற்கும் உணவளித்தல் எனும் அறத்தைச் செய்ய வேண்டும் என்றும், குறிப்பாகப் பசிப்பிணியால் வாடுவோருக்கே செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தப்படுகின்றது.

இஸ்லாம் பயனை எதிர்பார்த்து விருந்தோம்பலை வற்புறுத்தவில்லை. விருந்தளித்தல் என்பது பிரதியுபகாரமாகச் செய்யும் ஒன்றல்ல. எமது நற்பண்பை எடுத்துக்காட்டுவதற்காக செய்யப்படுவதாகும். "அல்லாஹ்வின் தூதரே! நான் ஒரு மனஜதரிடம் சென்ற போது, அவர் எனக்கு விருந்தளிக்கவில்லை. அதன் பின்னர், அவர் என்னிடம் வருகிறார். நான் அவருக்கு விருந்தளிக்க வேண்டுமா? அல்லது அவர் என்னிடம் நடந்து கொண்டதைப் போல் நடக்கட்டுமா?" என்று கேட்டேன். அதற்கு நபி (ஸல்) அவர்கள், "அவருக்கு விருந்தளிப்பீராக! என்றார்கள்" (திர்மீதீ) இதிலிருந்து ஒருவர் எப்படி எம்முடன் முன்பு நடந்து கொண்டார் எனப் பார்க்காமல் அவரை உபசரிக்க வேண்டும் என்ற நல்லறம் போதிக்கப்படுகின்றது. மேலும், "நாம் உங்களுக்கு உணவளிப்பதெல்லாம் அல்லாவின் முகத்தை நாடியேயன்றி, உங்களிடம் நாம் யாதொரு கூலியையோ அல்லது நன்றி செலுத்துவதையோ கருதவில்லை" (அல்குர்ஆன். 76 : 9) என்ற திருமறையின் கூற்றும், பயன் எதிர்பார்க்காத விருந்துக் கொடையினையே வலியுறுத்துகின்றமை குளிப்பிடத்தக்கது.

### முடிவுரை

மனித சமுதாயத்தினை நல்வழியின் பக்கம் நெறிப்படுத்தும் பொருட்டு காலத்திற்குக் காலம் செயற்பட்ட தனிமனிதர்களது அர்ப்பணிப்புக்கள் விலைமதிக்க முடியாதவையாகும். அந்த வரிசையில் சாத்தனார் அவர்களும், முஹம்மது நபி (ஸல்) அவர்களும் மிக முக்கியமானவர்கள். சீரழிந்த மனித வாழ்வுப்போக்கைச் சீர்திருத்தி விருந்தோம்பல் அறத்தினைப் போற்றும் நோக்கோடு மணிமேகலை படைக்கப்பட்டுள்ளது. அத்தகைய விருந்தோம்பல் சிந்தனைகள் இஸ்லாத்திலும் மிகுதியாகப் பொதிந்துள்ளன. இந்த நோக்குநிலையில் மணிமேகலையும், இஸ்லாமும் விருந்தோம்பல் அறத்தனூடாக நன்நெறி வாழ்விற்கு என்றும் வழிகாட்டுபவை என்பதை மையப்படுத்தி பஞ்சமற்ற சமூகத்தினைக் கட்டியெழுப்பும் பொருட்டு ஒப்பியல் அணுகுமுறையில் இவ்வாய்வு ஆராயப்பட்டுள்ளது. எனவே இலக்கியங்களிலும், சமயங்களிலும் பொதிந்துள்ள உயர் நீதிக்கருத்துக்கள் ஆய்வாளர்களால் ஆராயப்பட்டு இது போன்ற மேலும் பல ஆய்வுகள் முன்னெடுக்கப் பட வேண்டும் என்பதை இவ்வாய்வு பரிந்துரை செய்கின்றது.

# References

Seyapirakasu, N. (1999). *A new view of the Manimegalai*. Chennai: Vanathi Publishing House.

Varadaraja Iyer. (2007). *Manimegalai Thoughts*. Chennai: Kavya Publishing House.

Pasupathi, M.V. (1981). *Manimegalai Selvam*. Chidambaram: Annapurna Publishing House.

Sami Chidambaranar. (1960). *Manimegalai showing human life*. Chennai: Star Publication House.

Devira. (2007). *Tamil Literary Database*. Chennai: Sri Nandini Publishing House.

Rathinam, P. (1990). *Kaviya Manam*. Chennai: Poongodi Publishing House.

Parthibarajan, K. (2017). *Review Literatures*. Chennai: Parithi Publishing House.

Manikkam, V. (1958). *Double Epics*. Karaikudi: Selvi Publishing House.

Abdurrahman, M. (1998). *Islamic's Human Rights*. Saudi Arabia: Islamic Affairs and Ministry of Wakfu Call Guidance in Islam.

Pavas, Z.A.M. (2014). *Blessings to Allah and Gratitude of Servants*. Al Hasanath Monthly Magazine. Colombo: Alhasanat Publishing House.

Nihaal, M. (2015). *Become a Counselor in Justice*. Al Hasanath Monthly Magazine. Colombo: Alhasanat Publishing House.

jushup, K. (2012). *Islamic Politics*. Colombo: Al-Hasanath Publishing House.

# தமிழர் சமையல்களில் மருத்துவம்
# Medicinal Value in Indian Foods

சங்கீதா த/பெ சந்திரகுமாரன் / Sangeetha D/O Sandrakumaran[1]
மனோஷ் த/பெ இராமா / Mannosh S/O Rama[2]

## Abstract

This article focuses on the remedies found in the Indian cuisine and illustrates the greatness of Indian cuisine and its virtues. Indian cuisine, which refers to the preparation of a variety of dishes with flavour and herbal properties, flourished in a rural environment that blended with nature and time. It is customary in Tamil cuisine to add turmeric, ragi, pepper, curry leaves, ginger, etc. to curries and other dishes. This article explains the benefits of these herbal properties to our body. Indians lived entirely on the principle that food is medicine and medicine is food, which became the foundation of paranormal medicine. Unfortunately, this valuable cuisine has been altered greatly by the contemporary Indian society and the cringe-worthy changes do not yield the similar health advantages provided by the original Indian cuisine. Hence, this article aims to create an awareness among the new generation about the Indian cuisine as it is by exploring the various kind of herbs used in the food preparation.

Date of submission: 2021-01-20
Date of acceptance: 2021-04-12
Date of Publication: 2021-07-20
Corresponding author's Name:
Mannosh S/O Rama
Email: mannosh.mr@gmail.com

**Key Words:** Tamil medicine, Tamil food, Tamil people of Sanggam era, Herbals, food as medicine.

### முன்னுரை

தமிழர் சமையல், பல நூற்றாண்டுகளாகத் தென் இந்தியா, இலங்கை மற்றும் பிற நாடுகளில் வசிக்கும் தமிழர்களால் வளர்த்தெடுக்கப்பட்ட, உலகின் சிறந்த சமையல்களில் ஒன்றாகும் (Baavanar, 2009). பலவகை உணவுகளைச் சுவையுடன் சமைக்கவும் விருந்தோம்பல் செய்யவும் தமிழர் சமையற்கலை வழிசொல்கின்றது. உணவு சார்ந்த கலாச்சாரம் உணவையே மருந்தாக பயன்படுத்திய தன்மை, அதன் பாங்கு எல்லாமே தமிழர்களுடைய வாழ்வியல் முறையில் தான் இருக்கிறது. எல்லாவற்றிலும் பார்க்கும் பொழுது உணவு சார்ந்த மிகப்பெரிய ஆய்வு தமிழர்களுடைய சங்ககால இலக்கியங்களில் இருக்கின்றதை நாம் கண் கூடாகப் பார்க்கலாம். அதற்கான ஆதாரம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, கலித்தொகையில் காணலாம்.. பல்வகை மரக்கறிகள் (காய்கறிகள்), சுவையூட்டும் நறுமணம் தரும் பலசரக்குகள், கடலுணவுகள், மூலிகை நிறைந்த சமையல்கள், தமிழர் சமையலில் இன்றியமையா இடம் பெறுகின்றன.

### முந்தைய ஆய்வுகள்

தமிழர்களின் சமையலில் மருத்துவம் எனுந் தலைப்புத் தொடர்பான முந்தைய ஆய்வுகள் குறைவாகவே காணப்படுகின்றன.

[1] The author is a Tamil Language Student in, Sultan Idris Education University, Perak, Malaysia. sangeethageetha0109@gmail.com

[2] The co-author is a Tamil Language Student, Sultan Idris Education University, Perak, Malaysia. mannosh.mr@gmail.com

அவ்வகையில், K.P. Yuvaraj (2019) ‘Medicinal Value of Ancient Tamil nadu Authentic Food’ எனும் தலைப்பில் ஆய்வு ஒன்றனை மேற்கொண்டுள்ளார். இவ்வாய்வில் ஆய்வளார் தமிழ்ர்களின் பண்டைய சமையலைப் பற்றியும் அதில் இருக்கக்கூடிய மருத்துவத்தைப் பற்றியும் விளக்கியுள்ளார். இதன் வழி தமிழர்களின் பாரம்பரிய மருத்துவச் சமையல்கள் பற்றிய சில தகவல்கள் இவ்வாய்வின் வழி ஆய்வாளர் தெரிந்து கொண்டார். தொடர்ந்து, *‘Curry leaf: A Traditional Indian Plant’* எனும் தலைப்பில் Nandita Kamat, Diana Pearline, Padma Thiagarajan (2015) ஆய்வாளர்கள் ஆய்வினை மேற்கொண்டுள்ளனர். இவ்வாய்வில் ஆய்வாளர்கள் கறிவேப்பிலையின் மருத்துவத் தன்மையைப் பற்றி ஆய்வுச் செய்துள்ளனர். இதன் மூலம் ஆய்வாளருக்குகக் றிவேப்பிலையில் உள்ள அறிவியல் ரீதியான மருத்துவத் தன்மைப் பற்றிய தரவுகள் கிடைக்கப்பெற்றது. அடுத்து, ‘Indian Food - A Natural Medicine’ எனுந் தலைப்பில் Theivachandran (2021) ஆய்வினை மேற்கொண்டுள்ளார். தமிழர்கள் உணவுகளில் காணப்படும் மருத்துவத்தை ஆராய்தலே இவ்வாய்வின் நோக்கமாக ஆய்வாளர் குறிப்பிட்டுள்ளார். இவ்வாய்வில் தொடர்ந்து தமிழர்கள் சமையல்களில் பயன்படுத்தும் ஏலக்காய், மிளகு, மஞ்சள், உசிலை(மசாலா) போன்ற சமையல் பொருள்களின் மருத்துவத்தன்மையைப் பற்றி விரிவாக ஆராய்ந்துள்ளார். இம்முந்தைய ஆய்வின் வழி ஆய்வாளர் தமிழர்களின் சமையலில் காணப்படும் மருத்துவத்தைப் பற்றிய கூடுதல் தகவல்கள் கிடைக்கப்பெற்றன.

## சங்ககாலத் தமிழர்களின் சமையல் முறைகள்

நம் தமிழர்கள் பண்பாடு, நாகரிகம் மட்டுமின்றி சமையலிலும் சிறந்து விளங்கியுள்ளனர் (Bakthavatsala, 2020). அந்தக் காலத்தில் கிடைக்கும் இயற்கையான பொருட்களைக் கொண்டு ஆரோக்கியமாகவும், சுவையாகயும் சமைத்து உண்டு வந்துள்ளனர். இதற்குச் சான்றாகச் சங்க இலக்கியப் பாடல்களும் அமைந்துள்ளன. குறுந்தொகையில் உணவு பரிமாறும் முறையைப் பற்றிக் காண முடிகிறது. எண்ணற்ற பாடல் வரிகளில் நம் தமிழர்கள் வாழ்ந்த முறையும் உணவு உண்ட பழக்க வழக்கங்களையும் கூறுகிறது (Iraiyarasan, 2018).

தற்காலத்தில் நாம் சமையலுக்குப் பயன்படுத்தும் வரகு, கம்பு, ராகி, சோளம், திணை போன்ற சிறுதாணியங்களை நம் முன்னோர்கள் சமையலில் மிகுதியாகப் பயன்படுத்தியுள்ளார்கள். காரத்துக்கு மிளகும் சுவைக்கு உப்பை மட்டுமே பயன்படுத்தினார்கள் (Baskar, *2012).* இதற்குச் சான்றாகக் சங்க காலத்தில் இடம்பெற்றுள்ள சமையல்களையும் அவற்றுள் அவர்கள் பயன்படுத்திய மூலிகைகளின் பயன்பாட்டையும் அறியவுள்ளோம்.

### திணைப்பால் சாதம்

*“நெய் விலைக் கட்டிப் பசும்பொன் கொள்ளாள்,*

*எருமை, நல் ஆன், கரு நாகு, பெறூஉம்*

*மடிவாய்க் கோவலர் குடிவயிற் சேப்பின்*

*பசுந்திணை மூரல் பாலொடும் பெருகுவிர்”.*
*(பெரும்பாணாற்றுப்படை 164168)*

என்ற வரிகள் சங்க இலக்கியமான பதினென் மேற்கணக்கில் உள்ள பத்துப்பாட்டில் நான்காவதாக உள்ள பெரும்பாணாற்றுப்படையிலிருந்து 164168 வரிகளிலிருந்து எடுக்கப்பட்டது. கடியலூர் உருத்திரங்கண்ணனார் என்னும் புலவர் தொண்டைமான் இளந்திரையனைக் சிறப்பித்து 500 அடிகளில் பாடியுள்ளார்.

பெரும்பாணாற்றுப்படையில் மன்னன் இளந்திரையைப் பற்றியும் அவன் நாட்டில் வாழும் மக்களின் வாழ்க்கை நெறிகளைப் பற்றியும் விருந்தோம்பும் பண்பு பற்றியும் விளக்கப்பட்டுள்ளன. இடையர் மகள் தான் விற்ற மோரினால் நெல் பெற்று தனது சுற்றம் அனைத்தையும் உண்ணச் செய்கிறாள். நெய் விற்ற பணத்தில் பசும்பொன் எதையும் பெறாமல், எருமையையும், நல்ல பசுக்களையும் அவற்றின் கன்றுகளோடு வாங்குகிறாள். இத்தகையச் சிறப்புடைய இடையர் மகள்,

இவள் மடிவாய்க் கோவலர் குடியைச் சேர்ந்தவள். இவர்களது குடும்பத்தில் தங்கினால் நண்டுகண் போன்ற பசுமையான தினையரிசியினாலான சோற்றைப் பாலுடன் பெறலாம் என்று புலவர் குறிப்பிடுகிறார். இங்கு 'தினையரிசியினாலான சோறு' என்பது தினைப்பால் சாத்தத்தைக் குறிப்பதை நோக்குக (Saamynathaiyaaral,1967).

பொதுவாக நாம் நமது வீட்டில் பாலுடன் உப்பு சாதத்தைச் சேர்த்துப் பிசைந்து சாப்பிடும் வழக்கமுண்டு. அது நம் உடல் சூட்டைத் தணிக்கும் என்பதை அறிவோம். சங்க காலத்திலும் தமிழர்கள் தினைப்பால் சாதம் உண்டுள்ளனர் என்பதை இப்பாடல் வரிகளின் மூலம் அறியலாம். தினையில் புரதம், மாவுச்சத்து, போதுமான மினரலும் நார்ச்சத்தும் பாலில் கொழுப்பு புரதச்சத்தும் நிறைந்துள்ளது (Kausalya Kumari, 2021).

### பிரியாணி

தமிழர் சமையலில் பிரியாணியும் அடங்கும் (Baktavatsala, 2017). பிரியாணி முதலில் தென்னாட்டிலே (South India) தமிழர்களால் சமைக்கப்பட்ட ஓர் உணவு வகையாகும். பண்டைய போர் காலத்தில் போர் வீரர்களுக்கு ஊன்சோறு நாட்டின் மன்னரால் வழங்கப்படுவதை பதிற்றுப்பத்திலும் மதுரைக்காஞ்சியிலும் புறநானூற்றிலும் நன்கு விளக்கப்பட்டுள்ளன (Yuvaraj, 2019). சான்றாக,

*"சோறு வேறு என்னா ஊன்துவை அடிசில்*

*ஓடாப் பீடர் உள்வழி இறுத்து" (பதிற்றுப்பத்து 45: 1314)*

*"துடித்தோட்கை துடுப்பாக*

*ஆடுற்ற ஊன்சோறு*

*நெறியறிந்த கடிவாலுவன்" (மதுரைக்காஞ்சி 34 - 36)*

என்பதேயாகும். பதிற்றுப்பத்தில் "ஊன்துவை அடிசில்" என்ற சொற்பதத்தைக் காண முடிகிறது. இது பிரியாணியைப் பற்றிய வருணனை. ஊன் என்ற சொல் இறைச்சி என்ற பொருளைக் கொண்டுள்ளது. அடிசில் ஒரு பழஞ்சொல் ஆகும். சங்க இலக்கியங்களில் இதனைப் பற்றிய குறிப்புகள் வெகுவாகக் கிடைக்கின்றன. அடிசில் என்பதற்குக் குழைவாக ஆக்கிய நெல்லரிசிச் சோறு என்பதாகும். இஃது ஒரு பொதுவான பண்பு. பழந்தமிழர்கள் சோறு என்பதற்கு அடிசில், அழினி, கூழ், அவிழ், கொன்றி, நிமிரல், புழுங்கல், பொம்மன், மிதவை எனப் பல்வேறு சொற்களைப் பயன்படுத்தியுள்ளனர் (சரவணன், 2014). சங்க காலத்தில் தமிழர்கள் மீன் பரியாணியையும் ஆட்டிறைச்சிப் பிரியாணியையும் சமைத்துள்ளனர். இவற்றக்கான சான்றுகள் புறநானூற்றில் காணப்படுகின்றன.

*"மட்டுவாய் திறப்பவும், மைவிடை வீழ்ப்பவும்,*

*அட்டுஆன்று ஆனாக் கொழுந்தவை ஊன் சோறும்*

*பெட்டாங்கு ஈயும் பெரு வளம் பழுனி" (புறநானூறு: 113)*

கபிலரால் பாடப்பெற்ற பாடலாகும். கொடைவள்ளல் பாரியின் சிறப்பைக் கூறும் பொழுது பாரி தன்னைத் தேடி வருபவருக்கு ஆட்டுக் கிடாய் இறைச்சி கலந்த கொழுஞ்சோறும், கள்ளும் துவையலையும் வேண்டும் அளவு தம் ஆள்களைக் கொண்டு கொடுக்கச் செய்வானாம் என்று கபிலர் கூறுகிறார். இறைச்சி கலந்த கொழுஞ் சோறு நாம் உண்ணும் பிரியாணியைக் குறிக்கின்றது (Saamynathaiyaaral, 1967). ஆக, இப்புறநானூற்றுப் பாடலில் ஆட்டிறைச்சிப் பிரியாணி இடம்பெற்றுள்ளது என்பதை அறிவது முக்கியமாகும்.

*"ஓங்குசினை மாவின் தீங்கனி நறும்புளி*

*மோட்டிரு வரா அல் கோட்டு மீன் கொழுங்குறை*

*செறுவின் வள்ளை சிறுகொடிப் பாகல்*

*பாதிரி யூழ்முகை அவிழ்விடுத் தன்ன*

*மெய்களைந்து, இனனொடு விரை இ" (புறநானூறு 399: 48)*

ஐயூர் முடவனார் எனும் புலவரால் இப்பாடல் பாடப்பட்டது. 399 ஆவது புறநானூற்றுப் பாடலில் 48 வரிகளில் உள்ளது.

தோன்றிக் கோன் மன்னனிடம் பரிசில் பெற்றுச் செல்பவர், அவன் கொடுக்கும் கொடையையும் உண்ணக் கொடுக்கும் மீன் பிரியாணியையும் உண்ட மயக்கத்தில் உறங்கிய பின்பு மயக்கம் தெளியப் பழைய சோற்றினைத் தருவானாம் மன்னம் என்ற பொருளையுடையது இப்புறநானூற்றுப் பாடல் (Saamynathaiyaaral,1967). ஆக, இப்புறநானூற்றுப் பாடலில் மீன் பிரியாணி இடம்பெற்றுள்ளதை நோக்குக.

பெரும்பாலும் ஆட்டிறைச்சிப் பிரியாணியையும் மீன் பிரியாணியையும் சமைக்கும்பொழுது வள்ளைக்கீரை, பாதீரிப்பூ (மஞ்சள் அரளிப்பூ), மிளகு, ஏலக்காய், கிராம்பு, பட்டை, இஞ்சி, நெய், தேங்காய்த்துருவல், மல்லித்தழை, மஞ்சள் தூள், பாகற்காய் (மீன் பிரியாணி மட்டும்) போன்றவற்றைச் சேர்த்துச் சங்க காலத்தில் பெண்கள் சமைத்தனர் (ப்ரியா பாஸ்கர், 2012). இன்றைய காலத்திலும் பெரும்பாலும் இது போன்ற மூலிகைகளையும் காய்கறிகளையும் இறைச்சிகளையும் சேர்த்தே பிரியாணி சமைக்கின்றனர். இம்மூலிகைகளும் காய்கறிகளும் பல்மருத்துவக் குணங்களை உள்ளடக்கியுள்ளன. அவற்றைப் பின்னர் காண்போம்.

### ஊறுகாய்

தமிழர் சமையலில் ஊறுகாய் இல்லாத விருந்துணவே இல்லை. இன்றும் தமிழர்களாகிய நாம் ஊறுகாயை உட்கொள்கிறோம். உண்மையில், இந்த ஊறுகாய் 2000 ஆண்டுகளுக்கு முன்பே இருந்தது. சங்க காலத்தில் ஊறுகாயை 'காடி' என்றழைத்தனர் (Sunil Kumar, 2013).

*"யார்க்கும் அணங்காதல் சான்றான் என்று ஊர் பெண்டிர்*

*மாங்காய் நறுங்காடி கூட்டுவோம்;*

*எழு நின் கிளையோடு போக என்ற தத்தம்" (முல்லைக்கலி 9:2224)*

இப்பாடல் நான்காம் நல்லுருத்திரனார் என்ற புலவரால் பாடப்பெற்ற முல்லைக்கலியின் 9வது பாடலிலுள்ள 2224 வரிகளாகும் (Ilangovan, 2012). 'மாங்காய் நறுங்காடி' என்பது மாங்காய் ஊறுகாயைக் குறிக்கின்றது. மாங்காய் ஊறுகாயைச் சங்க காலப் பெண்கள் மாங்காய், வெந்தயம், பெருங்காயத்தூள், மிளகுத்தூள், கடுகு, கறிவேப்பிலை, நெய், தோல் உளுந்து போன்றவற்றைக் கலந்து செய்வார்கள். இம்மூலிகைகளும் காய்கறிகளும் பல்மருத்துவக் குணங்களை உள்ளடக்கியுள்ளன. அவற்றைப் பின்னர் காண்போம்.

### புளியோதரை

சங்க கால மக்கள் புளிச்சோற்றை விரும்பி உண்டனர் (Kandasami Mudhaliar, 1947). காட்டில் வாழ்ந்த முல்லை நில மக்களும் இந்தப் புளிச்சோற்றை விரும்பி உண்டனர். இன்றைய வழக்கிலும் தமிழர்கள் திருவிழாக் காலங்களிலும் உகந்த நாள்களிலும் கோயிலில் புளிசோற்றை அன்னதானமாகப் பத்திமார்களுக்குக் கொடுப்பதை நாம் காணலாம்.

*"எயிற்றியவர் அட்ட இன்புளி வெஞ் சோறு*

*தேமா மேனிச் சில்வினை ஆயமொடு*

*ஆமான் சூட்டின் அமைவரப் பெருகுவீர் (சிறுபாணாற்றுப்படை: 175-177)*

இப்பாடலில் 'இன்புளி வெஞ் சோறு' புளிச்சோற்றைக் குறிக்கின்றது (Saamynathaiyaaral, 1967). சங்க காலப் பெண்கள் புளிச்சோற்றைச் சமைப்பதற்குக் கறிவேப்பிலை, புளி, பெருங்காயம், நெய், மிளகு, உளுந்து, மல்லித்தழை போன்றவற்றைச் சேர்த்துச் சமைத்துள்ளனர். இவ்வாறே இன்றைய தமிழர்களும் புளிச்சோற்றைச் சமைக்கின்றனர் என்பதையும் நோக்குக. இப்புளிச்சோற்றில் சேர்க்கப்பட்டிருக்கும் இம்மூலிகைகள் பல்மருத்துவக் குணங்களை உள்ளடக்கியுள்ளன. அவற்றைப் பின்னர் காண்போம்.

### தமிழர் சமையல்களில் மஞ்சளின் பயன்பாடும் அதன் நன்மைகளும்

தமிழர்கள் சமையலில் மஞ்சள் சேர்த்துக் கொள்வது வழக்கம். முன்பு கூறியப்படி

ஆட்டிறைச்சிப் பிரியாணியாகட்டும் மீன் பரியாணியாகட்டும் சங்க காலப் பெண்கள் அவற்றுள் மஞ்சளைச் சேர்த்துச் சமைத்துள்ளனர். அந்த வழக்கு இன்றும் உண்டு. மஞ்சளில் பல மருத்துவக் குணங்கள் உள்ளன. சிறந்த கிருமி நாசினி, நோய் எதிர்ப்புத் திறன், அழகு, புனிதம் எனப் பலவகையாக நமக்கு நன்மையை அளிக்கிறது. சாம்பார், இரசம், பொரியல், கூட்டு என அனைத்திலுமே அளவான மஞ் சளைக் கலப்பதால் சாதாரண சளி முதல் புற்றுநோய்வரை வரும் நோய்கள் நம்மை தீண்ட வாய்ப்புகள் குறைவாக உள்ளது (Thammanna, 2014).

மஞ்சளில் உள்ள குர்குமின் சத்துப் புற்றுநோய் அண்டவிடாமல் தடுக்கும். உடம்பில் புற்றுநோய் ஏற்கனவே இருந்தாலும் அதன் வீரியத்தைக் குறைக்க இக்குர்குமின் வேதிப்பொருள் உதவுகிறது. இது வீக்கத்தை எதிர்த்துப் போராடவும் எதிர்வினை ஆக்சிஜன் சிற்றனங்களைத் துடைத்தழிக்கவும் பயன்படுகிறது. வீட்டுச் சமையலில் புலால் (அசைவ) உணவில் மஞ்சள் சேர்த்துச் சமைத்தால் விரைவில் ஜீரணமாகும். அதோடு வயிற்றில் உள்ள கிருமிகளை அகற்றும். அதைத்தவிர மஞ்சள் கிருமி நாசினி என்பதால் இறைச்சியில் ஏதும் கிருமிகள் இருந்தாலும் அழித்துவிடும் (Duraisingam 1986). தமிழர்கள் இறைச்சிகளைச் சமையலில் சேர்க்கும் முன்னரே மஞ்சளில் ஊறவைத்தப் பின்னர் சமையலுக்குப் பயன்படுத்தும் வழக்கத்தை நாம் இன்றும் காணலாம்.

## தமிழர்கள் சமையல்களில் இரசமும் அதன் மூலிகைத் தன்மையும்

ஒவ்வொரு தமிழர்களின் வீட்டுச் சமையலில் இரசம் என்றால் என்ன என்ற கேள்விக்கே இடம் இல்லாத அளவுக்கு இரசத்தின் மகத்துவத்தை அனைவரும் அறிவர். இரசம் என்றாலே ஆரோக்கியத்தின் அடிவேரான அருமருந்து எனலாம். உணவும் மருந்தும் ஒரு சேர அமைந்தவை மிகச்சில மட்டுமே. அவற்றில் மிகவும் முக்கியமான ஒன்றுதான் நாம் உணவில் அன்றாடம் பயன்படுத்தும் இரசம். மேலும், ஆயுர்வேத மருத்துவர் பாலமுருகன், உடல் நலனில் அக்கறையுள்ள ஒவ்வொருவரும் அவர்களது அன்றாட உணவில் இரசம் சேர்த்துக் கொள்வது அவசியம் எனும் கருத்தை முன்வைக்கின்றார். இரசம் என்பது மூலிகைகளின் கலவை என்பதும் அவர் வலியுருத்தியுள்ளார்.

இரசத்தை உணவில் சேர்த்துக்கொள்வதன் அவசியத்தை ஆராயும் பொழுது ஆய்வாளர் சில காரணங்களைக் கண்டறிந்துள்ளார். அஜீரணம் இருக்கும்போது இரசத்தைப் உண்டு வந்தால் மிக விரைவில் குணம் பெறலாம். இரசத்தில் சேர்க்கப்படும் மூலிகைகள் அதவாது புளிக்கரைசல், வெங்காயம், பூண்டு, சீரகம், மிளகாய் வத்தல், கறிவேப்பிலை, கொத்தமல்லி, உப்பு போன்றவை அனைத்தும் ஜீரண சுரப்பிக்கான நொதியை சுரக்கச் செய்து, உணவை ஜீரணிக்கச் செய்து, உடலுக்குத் தேவையான சக்தியைச் கிரகிக்கச் செய்கிறது என்பதனைக் கண்டறிய முடிந்தது (Amar Nath Garg, 2006). குடலில் மாசுகள் சேராமல் தடுப்பதோடு, மலச்சிக்கல், வயிற்றுப்பொருமல், வலி, கிருமி போன்ற தொந்தரவுகள் ஏற்படாமலும் தடுக்கின்றது என்பதையும் அறிய முடிந்தது (Sukumaran, 2006).

இரசத்தில் சேர்க்கப்படும் மூலிகைக் கலவையில் ஏதேனும் ஒரு பொருள் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டால், அதன் பெயரிலேயே அந்த இரசம் அழைக்கப்படுகிறது (Agilandeswari Devarajan, 2017) அதனைப் பொறுத்து இரசத்தின் செயல்பாடும் மாறுகிறது. உதாரணமாக, வெங்காயம் அதிக அளவில் பயன்படுத்தினால் அதற்கு வெங்காய இரசம் என்று பெயர். இரசம் கொட்டு இரசம், முருங்கைக்காய் இரசம், தொத்தமல்லி இரசம், கறிவேப்பிலை இரசம், துவரப் பருப்பு இரசம் எனப் பலவகையான இரசங்களை நாம் சமைத்துச் சாப்பிடுகிறோம். ஒவ்வொரு இரச வகைகளும் அதனுடைய மகத்துவங்கள் இருக்கின்றன. பலவகையான இரசங்கள் இருப்பின், இங்கு மிகவும் எளிமையாகவும் விரைவாகவும் நாம் வீட்டில் செய்யக்கூடியதாகவும் உடலுக்கு அதிக ஆரோக்கிய தன்மைகளைத் தரக்கூடிய மிளகு இரசத்தைப் பற்றி தொடந்து பார்ப்போம் (Sauntharapandiyan, 2000).

பத்து மிளகு இருந்தால் பகைவன் வீட்டிலையும் சாப்பிடலாம் என்று பழங்கால மக்கள் சொல்வார்கள் (இளங்கோவன், 2012). அந்த அளவுக்கு மிளகில் விஷத்தை முறிக்கக் கூடிய தன்மை இருக்கின்றது. மிளகில் கருப்பு மிளகு, வெள்ளை மிளகு மற்றும் பச்சை மிளகு என மூன்று வகையான மிளகு உள்ளது (Rasaram, 2011). சமையல்களில் அதிகம் பயன்படுத்துவது கருப்பு மிளகாகும். மிளகில் இருக்கும் பிஉயிர்ச் சத்துக்களும் தாதுச் சத்துக்களும் (Minerals) கொழுப்புச் செரிமானத்திற்கு வழி செய்கின்றன. மிளகில் உள்ள தாவரச் சத்துக்கள் (Phytofactors) அசைவ உணவின் விஷத்தன்மையை வெளியேற்ற உதவுகின்றன. பச்சை மிளகாய் உள்ளிட்ட உசிலை அதிகம் சேர்த்த புலால் உணவுகள் செரிக்க சற்றுக் கடினமாக இருக்கும். இத்துனை நன்மை தருகின்ற மிளகை, இரசத்தில் சேர்த்துச் சமைக்கும் பொழுது இன்னும் பல மடங்கு நன்மை தருகின்றது (Masood Sadiq Butt, 2011).

மிளகு இரசம் ஊட்டச்சத்துகளை உறிஞ்சும் தன்மை கொண்டது. உடல் வியர்வையை அதிகரிக்கும். சிறுநீர் சீராக வெளியேற உதவி புரியும். இதனால் உடலில் உள்ள கூடுதல் நீர் மற்றும் நச்சுப் பொருள்களை வெளியேற்றுகிறது. இவைதான் உடல் பருமனைக் குறைப்பதற்கு உதவுகிறது. அதைத்தவிர்த்து, மிளகு இரசம் ஜீரண சக்தியையும் மேம்படுத்தும். மிளகின் காரத்தன்மைக்கு ‘காப்சாய்சின்’ என்ற வேதிப்பொருள் காரணமாக உள்ளது. மிளகின் காரம் கொழுப்பையும் ஜீரணிக்கவைக்கும். இதனால் இரத்தக் குழாய்களில் கொழுப்புப் படியாது. இரத்தக் குழாய் தடிமனாவதும் தவிர்க்கப்படும். உடலில் உள்ள செல்களைப் பாதுகாக்கும் ‘ஆன்டி ஆக்ஸிடண்ட்’ தன்மையும் மிளகிற்கு உள்ளது (Rasaram, 2011).

### தமிழர்களின் சமையலில் ராகியின் பயன்பாடும் அதன் மருத்துவமும்

ராகி இதன் பெயரைக் கேட்டவுடன் ஏழைகளின் உணவு என்று எண்ணி விட வேண்டாம். நம் முன்னோர்கள் ராகி போன்ற சத்துள்ள தானியங்கள் உணவாக உண்டதனால் நீண்ட காலம் நோயற்று வாழ்ந்து வந்தார்கள் (ரிணீஸீஸீவீஹ்ணீனீ, 2018). ஆரோக்கியமான உணவுகளில் இன்றியமையாதது ராகி. சிறு தானிய வகையைச் சேர்ந்த இது கேப்பை மற்றும் கேழ்வரகு என்றும் அழைக்கப்படுகிறது. இதை ஆங்கிலத்தில் ‘பிங்கர் மில்லட்’ என்றும், தமிழில் கிராமங்களில் இப்பயிர் இன்றைக்கும் கேப்பை என்றே அழைக்கப்படுகிறது. இப்பயிர் சுமார் நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இந்தியாவில் புழக்கத்தில் உள்ளது. இந்தியாவில் விளையும் சிறுதானியத்தில் 25 சதவிகிதம் கேழ்வரகு ஆகும்.

அரிசி மற்றும் கோதுமையை விட அதிகளவு ஊட்டசத்து நிறைந்தது. தமிழ்ச் சமூகத்தோடும் தமிழக நிலவியலோடும் நெருக்கமான தொடர்பு உடையது கேழ்வரகு. இங்குப் பல நூற்றாண்டு காலப் பின்னணி கேழ்வரகுக்கு இருக்கிறது. நாட்டுக் கேழ்வரகிலேயே வெண்ணிறக் கேழ்வரகு, கறுப்புக் கேழ்வரகு, நாகமலைக் கேழ்வரகு, மூன்று மாதக் கேழ்வரகு, தேன்கனிக்கோட்டைக் கேழ்வரகு என்று ஏறத்தாழ 60 வகைகள் இருக்கின்றன. ஓசூர், தேன்கனிக்கோட்டை, தளி பகுதிகளில் கேழ்வரகுத் திருவிழா எனும் ஒரு விழாவே கேழ்வரகு அறுவடைத் திருவிழாவாக, பொங்கல்போல் இன்றளவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது” என்று சொல்லப்படுகிறது (Kanniyam, 2018).

இக்காலக்கட்டத்தில் வீட்டுச் சமையலில் கேழ்வரகு பயன்படுத்தி புட்டு, தோசை, இட்லி, அடை போன்ற உணவுகளைச் சமைத்துச் சாப்பிடுகிறோம். அரிசியை விட குறைந்த சர்க்கரைச் சத்து, 18 மடங்கு அதிக நார்ச்சத்து உள்ளதால் ராகி தோசை இட்லி போன்ற உணவுகளை உண்டபின் இரத்தத்தில் சர்க்கரை அளவை ஏற்றாமல் மிக சீராக ஏற்றும் தன்மையுடையது (Low Glycaemic Index Food) ராகி உணவுகள் (Duraisingam, 1986). மேலும் உடலின் தேவையற்ற கொழுப்புக் குறைந்து, நல்ல கொழுப்பின் அளவை சீர் செய்வதால் இரத்தத்தில் கொலுப்பு விகிதம் சமநிலை ஏற்பட உதவிச் செய்கிறது ராகி சமையல்கள்.

இதில் உள்ள நார்ச்சத்து இரைப்பைப் புழுவைத் தடுத்து மலச்சிக்கலைத் தவிர்க்கும் தன்மை கொண்டது. இதில் 'பி' காம்ப்ளக்ஸ் வைட்டமின்கள், மினரல்கள் எனக் கலவையான அத்தியாவசிய சத்துகள் நிறைந்த கேழ்வரகு எளிதில் ஜீரணமாகவும் உதவுகின்றது (Kausalya Kumari, 2021).

## தமிழர் சமையலில் கறிவேப்பிலையின் பயன்பாடும் நன்மையும்

தமிழர் சமையலில் தவிர்க்கவே முடியாதது கறிவேப்பிலையாகும். கறிவேப்பிலை இல்லாத சமையல் முழுமைப் பெறாத சமையலாக கருதப்படுகின்றது. 'கறிவேம்பு இலை' என்ற சொல் தான் பிற்காலத்தில் மருவிக் கறிவேப்பிலை என்று ஆனது. கறிவேப்பிலை உணவில் சேர்க்கப்படுவது வாசனைக்காக மட்டுமல்ல அதில் இருக்கும் சத்துகளைப் பட்டியலிட்டே போகலாம். இந்தக் கறிவேப்பிலை பார்ப்பதற்குச் சிறியத் தோற்றத்தினைக் கொண்டிருந்தாலும் இவற்றில் புதைந்துள்ள நன்மைகள் ஏராளம் (John Molly, 2016).

கறிவேப்பிலையில் வைட்டமின் ஏ, பி, பி2, சி கால்சியம் மற்றும் இருப்புச்சத்து போன்றவை நிறைந்துள்ளன. நீர்ச்சத்து, புரதம், கொழுப்பு, மாவுச்சத்து, நார்ப்பொருள், பாஸ்பரஸ் (Phosphorus), இரும்புச்சத்து போன்ற தாது உப்புகள் என உடல் ஆரோகியத்துக்குத் தேவையான அனைத்துச் சத்துக்களையும் தரக் கூடியது கறிவேப்பிலை (Ravindra Pal Singh, 2017).

கறிவேப்பிலை மாதவிடாய்ச் சிக்கல்கள் மற்றும் கொனோரியா (Gonorrhea) ஆகியவற்றைக் கடந்து, வலிகள், தலைச்சுற்று, வயிற்றுப்போக்கு மற்றும் இரத்தம் தோய்ந்த மலநோய் போன்றவற்றிற்கு சிறந்த நிவாரணமாக விளங்குகின்றது (Theeba, 2015). கறிவேப்பிலை இலைகளின் நன்மைகளும், செயல் திறனும் இரத்த ஓட்டத்திற்கு நன்மை பயக்கின்றன. கறிவேப்பிலை இலைகளில் உயிர்வளியேற்ற எதிர்ப்பொருள் ஆன்டி ஆக்ஸிடண்ட் (Antioxidants), ஆன்டி பாக்டீரியா எதிர்ப்பொருள் (Antibacterial) மற்றும் அழற்சி (Antiinflammatory) போன்ற எதிர்ப்பொருள்கள் நிறைந்துள்ளன. ஆக, கறிவேப்பிலை இலைகள் நோய்த் தொற்றுகளுக்கான மிகப்பெரியத் தீர்வாக அமைகிறது. அதிலும் குறிப்பாகப் பூஞ்சையினால் ஏற்படும் தோல் பிரச்சினைகள், முகப்பரு, கால்களில் ஏற்படும் ஆணி போன்றவற்றைக் குணப்படுத்துவதில் கறிவேப்பிலை முக்கியப் பங்கினை வகிக்கின்றது.

கறிவேப்பிலை நோய்த் தொற்றினைக் தடுப்பதற்குக் காரணம் அதில் உள்ள வைட்டமின் ஈ ஆகும் (Sukumaran, 2006). கறிவேப்பிலையுடன் மிளகு, உப்பு, சீராகம், சுக்கு முதலியனவற்றைத் தூள் செய்து, சாதத்தோடு கூட்டிச் சிறிதளவு நெய்விட்டுக் கலந்து சாப்பிடுவதன் மூலம் மந்தம், மந்த பேதி, மலதோஷம், மலக்கட்டு, பிரமேகம் போன்ற நோய்கள் குணமாகும் (Ilangovan, 2012). ஆக, இப்படிப்பட்ட கறிவேப்பிலையைச் சாம்பார், இரசம், கூட்டு, கறிகள், பொரியல், கார்க்குழப்பு, மொர்க்குழம்பு, அசைவக் கறி போன்றவற்றில் தாளித்து வாசனைக்காக மட்டுமல்லாமல் உணவோடு சேர்த்து உண்பது அவசியம்.

## தமிழர் சமையலில் சீரகத்தின் பயன்பாடும் நன்மையும்

தமிழர்களின் சமையலில் சீரகம் முக்கியமாக இடம்பெறும். வயிற்றுப்புண்ணைத் தீர்ப்பதற்குக் சீரகம் வழிவகுக்கும் (Muhammad Nadeem, 2012). வயிற்றின் மந்த நிலையைப் போக்கி ஜீரிணத்தை அதிகப்படுத்தும் தன்மையுடையது சீரகம். இதைப் பொடித்து வெண்ணெய்யில் கலந்தும் சாப்பிடலாம்.

## முடிவுரை

உணவே மருந்து மருந்தே உணவு என்று இருந்த தமிழ்ச் சமூகம் இன்றைக்கு உணவே மருந்து, உணவே நச்சு என்ற கோட்பாட்டுக்கு ஒப்புக்கொள்ளவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது. ஆக, தமிழர்களாகிய நாம் நம்முடைய பாரம்பரிய சமயலைப்பற்றியும் அதன் மருத்துவத்தையும் தெரிந்து கொள்வது அவசியம். இன்றைய தலைமுறைக்கும் அடுத்து வரும் தலைமுறைக்கும் ஆரோக்கியமான தமிழர்

உணவுகளை சாப்பிடச் சொல்லிப் பழக்கப் படுத்த வேண்டும். இக்காலக்கட்டத்தில் நோய்க்கான மருந்தை வீட்டிலேயே வைத்துக் கொண்டிருந்தாலும் அவற்றைப் பயன்படுத்தாமல் பல செலவுகளைச் செய்து ஒரு நோயைக் குணப்படுத்துகிறோம். தமிழர்களின் சமையல் முறைகளை நாம் அறிந்து கொண்டால் நாமளும் நோய்யைக் குணப்படுத்தும் மருத்துவர்தான் என்று போற்றப்படுவோம்.

## References


Baavanar, N. (2009). *Pandai Thamizhar Nakarigamum Panpaadum*. Chennai: Poompukar Pathipagam.

Baktavatsala, B. (2017). *Tamilar Unavu*. Chennai: Kaalasuvadu Publications.

Bakthavatsala. (2020). *Pandai Thamizh Panpaadu*. Thirucchi: Adaiyaalam.

Baskar, P. (2012). *Sangekaalam Thamizhar Samayal*. Chennai: Kannathasan Pathipagam.

Benefits of curry leaves. (2020). https://www.organicfacts.net/health-benefits/herbs-and-spices/health-benefits-of-curry-leaves.html

Butt, M. S. (2011). *Black Pepper and Health Claims: A Comprehensive Treatise. Critical Reviews in Food Science and Nutrition*. (pp.2-4).

Devarajan, A. (2017). A Comprehensive Review on Rasam: A South Indian Traditional Functional Food. *Journal in the field of Pharmacognosy and Natural Products*. (pp.73- 83).

Garg, A. N. (2007). Analysis of some Indian medicinal herbs by INAA. *Journal of Radioanalytical and Nuclear Chemistry*. (pp.612-619).

Ilangovan, V. (2012). *Thamizhar Maruthuvam Alinthuviduma*. Chennai: Villivaakam.

Kanniyam, A. (2018). *Tamilar Unavu Panpadu*. https://www.vallamai.com/?p=89865

Molly, J. (2016). Effect of Murraya Koenigii (Curry Leaves) Powder on The Liver and Renal Functions. *International Journal of Health Sciences and Research.* (pp.188-192).

Nadeem, M. (2012). Cumin (Cuminum cyminum) as a potential source of antioxidants. *Pakistan Journal of Food Sciences*, (pp.101-107).

P.Iraiyarasan. (2018). *Tamilar Nakarika Varalaru*. Chennai: Poompukar Pathipagam.

P.Saravanan. (2006). *Sanga Kaalam*. Chennai: Kizhakku Pathipagam.

P.Sukumaran. (2006). *Siddha Ragasiyam*. Chennai: Nalam Veliyeedu.

Saamynathaiyaaral, V. (1967). *Pattupaatu Moolamum Uraiyum*. Chennai: Kamarshila Pathipagam.

Sauntharapandiyan, S. (2000). *Tamilar Maruthuvam*. Chennai: Tholliyal Thurai Publication.

Singh, R. P. (2017). Curry leaf (Murraya koenigii): A spice with medicinal property. *MedCrave Online Journal of Biology and Medicine*, (pp.236-256).

T., K. (2019). *Traditional Foods of India. ICAR*-Central Tuber Crops Research Institute.

Thammanna, A. (2014). *Tamilar Kanda Maruthuvam*. Chennai: Bharani Publication.

Theeba, S. (2015). *Siruthaniya Samayal*. Chennai: Kilaku Publication.

V.T.Duraisingam. (1986). *Nooi Neekum Mooligaikal*. Yazhpaanam: Sri Subramaniya Achagam.

# காமராஜரின் அரசியல் பயணமும் சமுதாய வாழ்க்கையும் பற்றி ஒரு ஆய்வு
# A Study of Kamaraj: Political Journey and Social Life

முனைவர்.தி.பாலசுப்பிரமணியன் / Dr.T.Balasubramanian[1]

Date of submission: 2021-04-25
Date of acceptance: 2021-05-27
Date of Publication: 2021-07-20
Corresponding author's Name:
Dr.T.Balasubramanian
Email: balasubramanian834@gmail.com

## Abstract

Kamaraj, who was originally named Kamatchi, was born on 15 July 1903 in Virudhunagar, Tamil Nadu, to Kumaraswami Nadar, a merchant by profession, and Sivakami Ammal. He also had a younger sister named Nagammal. Kamaraj was first enrolled in a traditional school in 1907, and in 1908 he was admitted to Yenadhi Narayana Vidhya Salai. In 1909, he was admitted to Virudupatti High School. When Kamaraj lost his father at the age of six, his mother was forced to support the family. In 1914, Kamaraj dropped out of school to help his mother. As a young boy, he worked at his uncle's provision shop, which was the time when he began attending public meetings and processions about the Indian Home Rule Movement. Kamaraj developed an interest in prevailing political conditions by being an avid reader of newspapers. The Jallianwala Bagh massacre was the decisive turning point in his life - he decided to fight for national freedom and to bring an end to the foreign rule. In 1920, when he was 18, he became active in politics. He joined the Congress as a full-time political worker. In 1921, Kamaraj organised public meetings in Virudhunagar for Congress leaders. He was eager to meet Gandhi, and his fervent wish was fulfilled when Gandhi attended a public meeting on 21 September 1921 during his visit to Madurai. Kamaraj visited the villages to promulgate the Congress' propaganda. In 1922, the Congress boycotted the visit of the Prince of Wales as part of the Non-Cooperation Movement and Kamaraj travelled to Madras to participate in this event. Between 1923 and 1925, Kamaraj took part in the Nagpur Flag Satyagraha. In 1927, Kamaraj started the Sword Satyagraha in Madras and was chosen to lead the Neil Statue Satyagraha, but this was halted later in view of the Simon Commission boycott

**Key Words:** Kamaraj in the freedom struggle, Kamaraj in the Quit India movement, Administration of Kamaraj, Kamaraj as Chief Minister

### முன்னுரை

இந்திய விடுதலைப் போராட்டத்தில் இளமைப் பருவத்திலிருந்தே ஈடுபட்டு தன்னலம் கருதாமல் மக்களின் நல்வாழ்வுக்காகவே இறுதிவரை பாடுபட்டு வந்தவர் பெருந்தலைவர் காமராஜர் ஆவார். ஒரு சாதரணக் குடும்பத்தில் பிறந்தாலும், கல்வி அறிவு அதிகமாகப் பெற்றிருக்கவில்லை என்றாலும் தனது தேச பக்தியாலும், நேர்மை குன்றாத அரசியல் வாழ்க்கையாலும் இந்திய அரசியலில் புகழின் உச்சிக்குச் சென்றார் காமராஜர். இந்தியாவின் பெருமையை உலகிற்கு உணர்த்தினார். சுதந்திரப் போராட்டத்தில் காந்தியடிகளின் சீடராக விளங்கினார். ”நாட்டில் தோன்றிய நெருக்கடி காலங்களில் அமைதியான முறையில் பிரச்சனைகளைத் தீர்த்து வைத்தார்.

[1] The author is a lecturer in the Department of History, Alagappa University, Karaikudi, Tamil Nadu, India. balasubramanian834@gmail.com

பிற்படுத்தப்பட்ட மக்களை தட்டி எழுப்பி அவர்களின் உரிமைகளை உணரச் செய்தார். நாடும் நலம் பெற வேண்டும், மக்கள் வாழ்வு வளம் பெற வெண்டும் என்பதையே உயிர் மூச்சாகக் கொண்டு வாழ்ந்தவர் காமராஜர் ஆவார்" .

### இளமைக் காலம்

தமிழ்நாட்டிலுள்ள விருதுநகரில் 1903, ஜூலை 15ம் தேதி பிறந்தார் காமராஜர். இவரது தந்தை குமாரசாமி நாடார், தாய் சிவகாமி அம்மையார். தனது ஆறாம் வயதிலேயே தந்தையை இழந்தார் காமராஜர். தாயின் பொறுப்பில் வளர்ந்த இவர் ஆறாம் வகுப்போடு பள்ளிப் படிப்பை முடித்துக் கொண்டார். பின்னர் தனது மாமாவின் துணிக்கடையில் வேலை பார்த்தார். இளம் வயதிலேயே தேசிய உணர்வுமிக்க காமராஜர் விருதுநரில் நடக்கும் காங்கிரஸ் பொதுக் கூட்டங்களில் கலந்து கொண்டார். தேசியத் தலைவர்களின் சொற்பொழிவுகளைக் கேட்ட இவரிடம் தேசிய உணர்வு தீவிரமாக வளர்ந்தது. "1919ல் ஜாலியன் வாலாபாக் படுகொலையைக் கண்டித்து நாடு முழுவதும் கண்டனக் கூட்டங்கள் நடைபெற்றன. விருதுநகரில் நடந்த கூட்டத்தில் டாக்டர் வரதராஜூலு நாயுடு நெஞ்சுருகப்பேசினார். இதைக் கேட்டதிலிருந்து காமராஜர் காங்கிரஸ் கட்சியின் தீவரத் தொண்டரானார்" (Crusading Congressman, 2008).

### சுதந்திரப் போராட்டத்தில் காமராஜர்

காங்கிரஸ் கட்சியின் நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டதைக் கண்ட காமராஜரின் மாமா கருப்பையா நாடார் அவரை திருவனந்தபுரத்திலுள்ள தனது தம்பியிடம் அனுப்பினார். காமராஜர் திருவனந்தபுரத்திலிருந்த போது கேரளாவில் தீண்டாமை அதிகமாகக் காணப்பட்டது. தாழ்த்தப்பட்டோர் நிந்திக்கப்பட்டனர். வைக்கம் என்ற இடத்தில் உள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் வழிபாட்டுக்கு கோவிலுக்குள் செல்லத் தடை விதிக்கப்பட்டது. இதை எதிர்த்து நடைபெற்றப் போராட்டத்தில் காமராஜர் கலந்து கொண்டு சத்தியாகிரகத்தில் ஈடுபட்டார். பின்பு "சுசீந்திரத்தில் நடைபெற்ற ஆலய நுழைவுப் போராட்டத்தில் பங்கேற்றார். அதன்பிறகு விருதுநகர் திரும்பிய காமராஜர் நகர மக்களிடம் கட்சியைப் பரப்ப பாடுபட்டார். வீதி வீதியாகச் சென்று காசு திரட்டி, பல தலைவர்களை அழைத்து பொதுக்கூட்டங்கள் நடத்தினார்".

### தீவிரவாத தேசியத் தலைவர் காமராஜ்

காங்கிரசில் தீவிரவாதிகள், மிதவாதிகள் என்ற பிரிவினை ஏற்பட்ட போது சென்னை மாநில தீவிரவாத காங்கிரஸ் தலைவரானார் சத்தியமூர்த்தி. காமராஜர் சத்தியமூர்த்தியின் சீடரானார். சத்திய மூர்த்தியைப் பின்பற்றியே தேசத் தொண்டில் ஈடுபட்டார். காமராஜரின் போராட்ட சகாப்தம் துவங்கியது.

1920ல் காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தைத் துவக்கினார். 1923ல் தமிழ் நாட்டில் நடந்த மறியல் போராட்டத்தில் காமராஜர் கலந்து கொண்டார். நாகபுரியில் கொடிப் போராட்டம் நடந்த போது தமிழ் நாட்டிலிருந்து காமராஜர் தொண்டர்களை அனுப்பினார். தானும் நேரடியாகச் சென்றார். காந்தியடிகள் சட்ட மறுப்பு இயக்கத்தைத் தொடங்கினார். அதன் ஒரு பகுதியாக 1930, மார்ச் மாதம் நாடெங்கும் உப்புச் சத்தியாகிரகம் தொடங்கியது. தமிழ் நாட்டில் காமராஜர் உப்பு சத்தியாகிரகத்தை நடத்தி சிறை சென்றார். இரண்டாண்டு சிறையில் அடைக்கப்பட்டார். இதுவே காமராஜர் சிறை சென்றது முதல் தடவையாகும். 1932ல் மீண்டும் சட்டமறுப்பு இயக்கம் தொடங்கியபோது காமராஜர் கைது செய்யப்பட்டு ஓராண்டு வேலூர் சிறையில் அடைக்கபட்டார். அப்போது 1931, ஜூலையில் காமராசரின் பாட்டி பார்வதியம்மாளின் உடல்நிலை மோசமாகி உயிர் பிரியும் தருவாயில் இருந்தார். அதனை அறிந்த அரசு அவரை பரோலில் விடுவிக்க முன்வந்தது. ஆனால் காமராஜ் பரோலில் வரமறுத்து சிறையில் இருந்தார். "காந்தி இர்வின் ஒப்பந்தப்படி சுதந்திரப் போராட்ட வீரர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்ட போது காமராசரும் விடுதலையாகி வந்து தமது பாட்டியைச் சந்தித்தார்". (The Hindu 2008).

### மதுரையில் கருப்புக் கொடி ஆர்ப்பாட்டம்

1928ல் சர் ஜான் சைமனின் தலைமையில்

ஒரு கமிஷன் இந்தியா வந்தது. எல்லா கட்சிகளும் அதனைப் புறக்கணித்தன. கமிஷன் சென்ற இடமெல்லாம் ‘சைமனே திரும்பிப் போ’ என்று கருப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடத்தினர். ஆனால் அரசு பயங்கரமான அடக்கு முறையைக் கையாண்டது. இப்போராட்டத்தில் தான் நேரு தாக்கப்பட்டார். லாலா லஜபதிராய் குதிரைப்படை வீரர்களால் தாக்கப்பட்டு, சில நாட்களில் மறைந்தார். சைமன் கமிஷன் மதுரை வந்தது. அக்கமிஷனை காமராஜ் தலைமையில் எதிர்க்க காங்கிரஸ் முடிவு செய்தது. தேசபக்தர்கள் கொதித்தெழுந்தனர். ஆயிரக்கணக்கான மக்கள் கையில் கருப்புக் கொடியுடன் ‘சைமனே திரும்பிப் போ’ என்று கோஷமிட்டு திருமலை நாயக்கர் திருமலை நாயக்கர் மகாலை நோக்கிச் சென்றனர். ”காமராஜரும், ஜார்ஜ் ஜோசப்பும் கையில் மூவர்ணக் கொடியேந்தி மகால் நோக்கி வீரநடை போட்டனர். அவர்கள் பின் மக்கள் அணிவகுத்து நின்று கோஷமிட்டனர். போராட்டம் வெற்றியடைந்தது” (Wayback Machine, 2011).

### மீண்டும் சிறைவாசம்

காந்தி இர்வின் ஒப்பந்தத்தின் கீழ் இரண்டாவது வட்ட மேஜை மாநாட்டில் கலந்து கொள்வதற்காக காந்தி இலண்டன் சென்றார். அந்த மாநாட்டில் எந்தப் பயனும் ஏற்படவில்லை என்று காந்தியடிகள் அறிவித்தார். காந்தியடிகள் தாயகம் திரும்பும் முன்னரே காங்கிரஸ் தலைவர்களை ஆங்கில அரசு வேட்டையாடியது. தமிழகத்தில் தீவிரத் தொண்டராக விளங்கிய காமராஜ் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு வேலூர் சிறையில் அடைக்கப்பட்டார். ”அங்கு மாவீரர் பகத்சிங்கின் தோழர்களான ஜெயதேவ்கழுரும், கமல்நாத் திவாரியும் சிறை வைக்கப்பட்டிருந்தனர். காமராஜ் சிறையில் அவர்களைச் சந்தித்துப் பேசினார்”.

இதையே காரணமாகக் கொண்டு வெள்ளை அரசாங்கம் காமராஜ் மீது 1923 ல் அப்போது வங்காள கவர்னராக இருந்த சர்ஜான் ஆன்டர்சன் என்பவர் ஊட்டிக்கு ஓய்வெடுக்க வந்தபோது அவரைக் கொலை செய்வதற்காக அருணாச்சலம் என்பருக்கு இரண்டு துப்பாக்கிகள் வாங்கிக் கொடுத்தார் என்று கொலை வழக்கு ஒன்று போட்டது. இது சென்னை சதி வழக்கு என்றழைக்கப்பட்டது. இது போலீசாரால் போடப்பட்ட பொய் வழக்கு என்று ஆந்திர கேசரி டி.பிரகாசம் அவர்கள் சிறையில் நிரூபித்தார்.

சிறையிலிருந்து விடுதலை பெற்ற காமராஜ் விருதுநகர் திரும்பினார். பொதுமக்கள் வெள்ளமென திரண்டு வந்து காமராஜரை ரயில் நிலையத்தில் வரவேற்றனர். அப்போது கூட்டத்தில் காமராஜர் பேசியது வரலாற்று சிறப்புமிக்கதாகும். நகர் அஞ்சல் நிலையத்தின் மீதும், ஸ்ரீவில்லிபுத்தூர் காவல்நிலையத்தின் மீதும் தனது நண்பர்களான முத்துச்சாமி, மாரியப்பன் என்பவர்களுடன் சேர்ந்து குண்டு வீசியதாக காமராஜ் மீது மற்றொரு வழக்கு போடப்பட்டது. இந்த குண்டு வீச்சுக்கும் காமராஜருக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் பொய் வழக்குப் போட்டு அவரைக் கைது செய்து சிறையிலடைத்தனர். அப்போது தமிழ்நாட்டில் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்து காந்தியடிகள் டி.எஸ். எஸ். ராஜனிடம் இந்த வழக்கைத் தீவிரமாக நடத்தும்படி கூறினார். ”இந்த வழக்கை பிரபல பத்திரிக்கையாளரும் வழக்கறிஞருமான ஜோசப் வாதாடி காமராஜரையும் அவரது நண்பர் முத்துச்சாமியையும் விடுதலை பெறச் செய்தார்”(Padma Awards Directory, 2010)

### தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராக காமராஜ்

1936ம் ஆண்டு பண்டித நேரு தமிழகத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். அவரோடு சத்தியமூர்த்தி, காமராஜ ஆகியோர் சுற்றுப் பயணத்தில் கலந்து கொண்டனர். நேருவின் உறுதுணையாக அந்தப் பயணம் முழுவதும் இருந்தார் காமராஜ். 1937ல் சட்டசபைக்கு பொது தேர்தல் நடைபெற்றது. காமராஜ் விருதுநகர் தொகுதியில் காங்கிரசின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். ”வெற்றி விழா ஊர்வலத்தில் காமராஜ் மீது அக்கினி திராவகம் வீசப்பட்டது. ஆனால் அது குறி தவறி குதிரை மீது விழுந்ததால் காமராஜ் தப்பித்தார்”.

*1940ல் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் பதவிக்கு நடைபெற்ற தேர்தலில் காமராஜரின் பெயரை சத்தியமூர்த்தி முன் மொழிந்தார். ஆனால் இராஜாஜி சி.பி.சுப்பையா என்பவரை நிறுத்தினார். இருவருக்கும் நடைபெற்ற போட்டியில் காமராஜ் வெற்றி பெற்று தமிழ்நாடு காங்கிரசின் தலைவரானார். தனது சீடர் தலைவரானதைக் கண்டு அகம் மகிழ்ந்த சத்தியமூர்த்தி தமிழ்நாடு காங்கிரஸ் செயலாளராக காமராஜருக்கு உதவி புரிந்தார். ”1919ல் காங்கிரசின் சாதாரண தொண்டராக சேர்ந்த காமராஜ் 21 ஆண்டுகள் உழைப்பாலும் தியாகத்தாலும் தொண்டர்கள் உள்ளம் கவர்ந்த தலைவரானார்”.* (Kapur, Raghu Pati, 2014)

## ஒரு நாள் நகர்மன்றத் தலைவர்

*1939ல் வெள்ளை அரசாங்கம் இந்தியத் தலைவர்களைக் கலந்தாலோசிக்காமல் இந்தியாவைப் போரில் புகுத்தியத்தை கண்டித்து மகாத்மா காந்தி தனிநபர் சத்தியாகிரகத்தை எப்படி நடத்தலாம் என்று காந்தியடிகளைக் கலந்து ஆலோசிக்க வார்தா நோக்கிப் புறப்பட்டார் காமராஜ். அவர் சென்ற இரயில் கூடுர் புகைவண்டி நிலையத்தை அடைந்தது. போலிஸ் காமராஜரை இரயிலிலேயே கைது செய்து ஒராண்டு சிறைத் தண்டனை விதித்தது. காமராஜ் சிறையிலிருந்த போது விருதுநகரில் நகராட்சித் தேர்தல் நடைபெற்றது. சிறையிலிருந்தபடி காமராஜ் நகர்மன்றத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1942, மார்ச் முதல் வாரம் காமராஜ் விடுதலை செய்யப்பட்டார். விடுதலை பெற்ற பின் விருதுநகர் வந்து மார்ச் 16ம் தேதி நகர் மன்றத் தலைவர் நாற்காலியில் அமர்ந்தார். நகர் மன்ற கூட்டத்தில் 91வது தீர்மானம் வாசிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டவுடன், காமராஜ் எழுந்து நின்று ‘என்னைத் தலைவராகத் தேர்வு செய்ததற்கு நன்றி. எனக்கு தேசப்பணிகள் நிறைய உள்ளன. எனவே நகர் மன்றப் பணியை திறமையாகப் செய்ய முடியாது. எனவே எனது தலைவர் பதவியை ராஜினாமா செய்கிறேன்’ என்று கூறி பதவி விலகினார்”* (Venkatesan & Sivakumar, 2014).

## வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் காமராஜ்

*இரண்டாம் உலகப்போர் ஆரம்பித்து அதற்கு எந்த வகையிலும் ஆங்கில அரசுக்கு உதவக்கூடாது என்று காந்தியடிகள் அறிவித்தார். காமராஜ் வீடு வீடாகச் சென்று செல்வந்தர்களிடமும், பொது மக்களிடமும் யுத்த நிதி தரவேண்டாம் என்று கேட்டுக் கொண்டார். போர்நிதி வசூலுக்குத் தடையாக இருந்தார் என்று காமராஜரைக் கைது செய்து சிறையில் அடைத்தது அரசு.*

*1942 ஏப்ரலில் கிரிப்ஸ் தெரிவித்த யோசனைகளை நிராகரித்த காங்கிரஸ் காரியக் கமிட்டி, 1942 ஆகஸ்ட் 8ல் பம்பாயில் கூடி ‘வெள்ளையனே வெளியேறு’ போராட்டத்தை அறிவித்தது. இது இந்திய சுதந்திரப் போராட்டத்தின் உச்சகட்டமாகும். ‘செய் அல்லது செத்துமடி’ என்று காந்தி குரல் கொடுத்தார். காந்தியடிகள் மற்றும் முக்கியத் தலைவர்களைக் கைது செய்தது அரசு. பம்பாயிலிருந்து சஞ்சீவிரெட்டியுடன் பயணம் செய்த காமராஜ் தாமும் கைது செய்யப்படுவோம் என்று யூகித்தார். எனவே தனியாகப் பிரிந்து பயணம் செய்தார். ”ராணிப்பேட்டைக்கு வந்து அங்கிருந்து கல்யாண சுந்தரம் ஐயர் என்பவரை அழைத்துக் கொண்டு திருவண்ணாமலை, தஞ்சாவூர், திருச்சி, மதுரை என்று பல ஊர்களுக்கும் போலீசார் கண்ணில் படாமல் சென்றார். அங்கு போராட்டப் பொறுப்புகளை உரியவர்களிடம் ஒப்படைத்து விட்டு விருதுநகர் வந்தார்”11 1942, ஆகஸ்ட் 16ம் தேதி காலை காமராஜ் போலீசுக்குத் தகவல் கொடுத்து தான் இருப்பதைத் தெரிவித்தார். போலீசார் வந்து கைது செய்தனர். முதலில் வேலூர் சிறையிலும், பின்னர் ஆந்திராவிலுள்ள அமராவதி சிறையிலும் அடைக்கப்பட்டார். இவ்வாறு தலைவர் காமராஜ் சுதந்திரப் போராட்டத்தில் பங்கு கொண்டு ஆறுமுறை கைதாகி ஒன்பது ஆண்டுகள் சிறையில் வாழ்ந்தார். ”காமராஜரின் நெஞ்சுணர்வும், தியாக உணர்வும், தேசப் பற்றும் வருங்கால தலைமுறையினருக்கு வழி காட்டுவதாகும்”.* (K.Kamaraj <http://www.virudhunagar.nic.in/

kamaraj.htm>. virudhunagar)

### முதலமைச்சராக காமராஜ்

1952ம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்றது. ஏப்ரல் 10ம் தேதி இராஜாஜியின் தலைமையில் தமிழகத்தில் அமைச்சரவை அமைக்கப்பட்டது.இவர் தனது ஆட்சிக் காலத்தில் அறிமுகப்படுத்திய குலக் கல்வித் திட்டத்திற்கு தமிழ்நாட்டில் கடுமையான எதிர்ப்பு ஏற்பட்டது. இத்திட்டத்தை காமராஜ் ஆதரிக்கவில்லை அதனைக் கைவிடக் கேட்டுக் கொண்டார். ”கட்சியிலிருந்த இராஜாஜி எதிர்ப்பளர்கள் இதை ஒரு கருவியாகப் பயன்படுத்தி அவரை பதவி நீக்கத் திட்டமிட்டனர். கட்சிக்குள் தனது ஆதரவு சரிவதை உணர்ந்த இராஜாஜி பதவி விலகுவதாக அறிவித்தார்”.

இராஜாஜி பதவி விலகிய பின்னர் தனக்குப் பிறகு சி.சுப்பிரமணியத்தை முதலமைச்சராக்க விரும்பினார். ஆனால் கட்சியினரின் பெரும்பான்மை ஆதரவு காமராஜருக்கு இருந்தது. 1954, மார்ச்சு 31ல் நடந்த காங்கிரஸ் சட்டமன்ற தேர்தலில் காமராஜருக்கு 93 வாக்குகளும், அவரை எதிர்த்துப் போட்டியிட்ட சுப்பிரமணியத்திகு 41 வாக்குகளும் கிடைத்தன. 1954, ஏப்ரல் 8ம் தேதி இராஜாஜி பதவி விலகினார். 1954, ஏப்ரல் 13ம் தேதி தமிழ்ப் புத்தாண்டு தினத்தில் காமராஜ் முதல்வராகப் பொறுப்பேற்றார். ஆளுநர் பிரகாசம் காமராஜருக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். மொழிவழி பிரிந்த தமிழ் மாநிலத்தின் முதலாவது முதலமைச்சர் காமராஜர் ஆவார் (Kandaswamy, P. (2001)

### காமராஜரின் அமைச்சரவை

படிப்பறிவில்லாத காமராஜர் முதலமைச்சராகப் பொறுப்பு ஏற்றதும் மிகப் பெரிய சவால்களை சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. எட்டு பேர்களைக் கொண்ட ஒரு சிறிய அமைச்சரவையை அமைத்தார் காமராஜர். அப்படி அமைக்கும் போது காழ்ப்புணர்ச்சி இல்லாமலும், பரந்த மனப்பாண்மையுடனும் செயல்பட்டார். இராமசாமி படையாச்சி, ஹரிஜனத் தலைவர் பி.பரமேஸ்வரன், எம்.பக்தவத்சலம், சி.சுப்பிரமணியம், ஏ.பி.ரெட்டி, எம்.ஏ.மாணிக்கவேலர், ஷண்முக ராஜேஸ்வர சேதுபதி ஆகியோர் காமராஜ் அமைச்சரவையில் பங்கு பெற்றனர். சட்டமன்றக் கட்சித் தலைவராகவும், ”சட்ட மேலவைக் கட்சித் தலைவராகவும் எம்.பக்தவத்சலம் பொறுப்பேற்றார்”

துறைகளைப் பிரித்தளிப்பதில்கூட திறமையுடன் செயல்பட்டார் காமராஜர். பொது நிர்வாகம், காவல் துறை ஆகியவற்றை மட்டும் தான் வைத்துக் கொண்டு, முக்கியத் துறைகளான விவசாயம், சமூக நலத்திட்டங்கள், தொழிற்துறை போன்றவற்றை சி.சுப்பிரமணியத்துக்கு ஒதுக்கினார் காமராஜர். தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட சுப்பிரமணியத்துக்கும் முக்கிய துறைகளை ஒதுக்கியது காமராஜரின் பரந்த மனப்பான்மையைக் காட்டுகிறது. ஹரிஜன சமுதாயத்தைச் சேர்ந்த பி.பரமேஸ்வரனுக்கு இந்து அறநிலையத்துறையை ஒதுக்கியது காமராஜரின் மிகப் பெரிய துணிச்சலான நடவடிக்கையாகும். கோவில்களில் எல்லோரும் சமம் என்பதைக் காட்டவே காமராஜ் இவ்வாறு ஒரு ஹரிஜனத் தலைவரை நியமித்தார். காமராஜ் முதல்வராகப் பதவியேற்கும் போது ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி பாராளுமன்ற உறுப்பினராக இருந்தார். எனவே 1954 ஆகஸ்டு மாதம் குடியாத்தம் இடைத் தேர்தலில் நின்று வெற்றி பெற்று சட்டமன்ற உறுப்பினர் ஆனார். இந்தத் தேர்தலில் பெரியாரும். அன்னாவும் காமராஜருக்கு ஆதரவளித்தனர். கம்யூனிஸ்ட் கட்சி மட்டுமே எதிர்த்துப் போட்டியிட்டது (ñிலீணீ□ஸீணீரீணீகூீ, 2009).

1957ல் நடைபெற்ற பொதுத் தேர்தலிலும், 1962ல் நடைபெற்ற பொதுத் தேர்தலிலும் வென்று அமைச்சரவை அமைத்தார் காமராஜ் தனது அமைச்சரவை மீது முழு நம்பிக்கை வைத்தார் காமராஜ். அவர்களது நிர்வாகத்தில் தலையிடவில்லை. அதே சமயம் தனது அமைச்சரவை எத்திசையில் செல்கிறது என்பதைக் கூர்ந்து கவனித்து வந்தார். எந்தப் பிரச்சனையாக இருந்தாலும் நன்கு ஆராய்ந்த பின்னரே தீர்மனங்கள் செய்வதை காமராஜ்

தனது அணுகுமுறையாகக் கொண்டிருந்தார். நல்ல திறமையான ஆட்சியாளர் என்ற பெயர் எடுப்பதில் இந்தப் போக்கு அவருக்கு உதவியது. ஒரு சுத்தமான நிர்வாகத்தை வழங்கக்கூடிய மனவலிமை காமராஜருக்கு இருந்தது ("K Kamaraj, 2019).

### தமிழக எல்லைப் பிரச்சனையைத் தீர்த்து வைத்தல்

இந்திய சுதந்திரம் அடைந்த பிறகு மொழிவாரி மாநிலக் கோரிக்கைகள் ஆங்காங்கே எழுந்தன. ஆந்திர மாநிலம் தனியாப் பிரிந்தது. சிவஞானம் போன்றவர்கள் சென்னை நகரத்துக்காகவும், தமிழ் மாநிலத்திற்காகவும் 1953, 1956ம் ஆண்டுகளில் இயக்கம் நடத்தினார்கள். தமிழ் நாட்டின் முதலமைச்சராக காமராஜர் பதவியேற்ற பிறகு எல்லைப் பிரச்சனை விசுவரூபம் எடுத்தது. தமிழ் நாட்டுக்கும் ஆந்திரத்துக்கும் தமிழ்நாட்டுக்கும் கேராளவுக்கும் எல்லைப் பிரச்சனைகள் தோன்றின. இதனைத் தீர்க்க எலலைக் கமிஷன்கள் அமைக்கப்பட்டன. ”கேரளத்தில் இருந்த நாஞ்சில் நாட்டுப் பகுதிகள் தமிழ்கத்துடன் சேர்ந்தன. மதுரை மாவட்டத்தை ஒட்டிய தேவிகுளம் பீர்மேடு பகுதிகள் கேரளத்துடன் சேர்ந்தன.

இந்தத் தமிழக எல்லைப் பிரச்சனையில் காமராஜ் முதல்வர் என்ற முறையில் நடுநிலை, மவுனம் என்ற யுக்திகளைக் கையாண்டார். அப்போதைய கேரள முதல்வர் பனம்பள்ளி கோவிந்த மேனனுடன் பேச்சுவார்த்தை நடத்தி பரம்பிக்குளம் ஆழியாறு அணை ஒப்பந்தம் கோவையில் செய்து கொண்டார் காமராஜ் ஆந்திர முதல்வர் சஞ்சீவ ரெட்டியுடன் பேச்சுவார்த்தை நடத்தி வடக்கு எல்லையில் திருத்தணி போன்ற பகுதிகள் தமிழ்நாட்டுடன் சேர்க்கப்பட்டன. இப்படி பக்கத்து மாநிலங்களுடன் நல்லுறவு கொண்டு தனது தலைமைத் தகுதியாலும் தொலைநோக்காலும் தமிழ்நாட்டுக்கு நிலையான லாபங்களைப் பெற்றுத் தந்தது காமராஜ் ஆட்சியின் மகத்தான சாதனையாகும்.காமராஜ் என்ற கம்பீரமான தலைமை நிகழ்த்திய அற்புதங்கள் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை ஆகும் (Stepan, Alfred, Linz, Juan, 2011).

### கல்விக்கு கண் தந்த காமராஜர்

சுதந்திரம் எப்படி நாட்டு மக்களின் பிறப்புரிமையோ அதே போல கல்வி பெறுவதும் நாட்டு மக்களின் பிறப்புரிமையாகும் என்பதை உணர்ந்தவர் காமராஜர். ‘எல்லா அறங்களிலும் புண்ணியங்கோடி தருவது ஒரு ஏழைக்கு எழுத்து அறிவித்தல்’ என்ற பாரதியாரின் வரிகளுக்கு செயல்வடிவம் கொடுத்தவர் காமராஜர். ஏழ்மைக் குடும்பத்தில் பிறந்து, வறுமையில் சிக்கி ஆறாவது வகுப்பு வரை மட்டும் கல்வி பயின்று, தொண்டராக காங்கிரசில் நுழைந்து, தலைவராகி, முதல்வராகப் பொறுப்பேற்ற காமராஜர் எல்லோருக்கும் கல்வி அளிக்க வேண்டும் என்பதை தனது ஆட்சியின் மிகப் பெரிய லட்சியமாகக் கருதிச் செயல்பட்டார்.

முதல்வராகப் பொறுப்பேற்றவடன் இராஜாஜி ஆட்சிக் காலத்தில் மூடப்பட்ட ஆறாயிரம் ஆரம்பப் பள்ளிகளைத் திறக்க ஆணையிட்டார். மாணவர்கள் பாதி நாள் படிப்பும், மீதிநாள் குலத் தொழில் செய்ய வகை செய்யும் இராஜாஜியின் குலக் கல்வித் திட்டத்தை ஒழித்தார். பள்ளிகள் இல்லாத கிராமம் என்ற நிலை மாறி தமிழ்நாட்டில் முன்னூறுக்கும் மேல் மக்கள் தொகை கொண்ட எல்லா கிராமங்களிலும் பள்ளிக் கூடங்கள் ஏற்படுத்தப்பட்டன. 1954ல் 18 லட்சம் சிறுவர்கள் மட்டும் படித்த நிலை மாறி 1961ல் 34 லட்சம் சிறுவர்கள் படிக்கும் நிலை ஏற்பட்டது (A Review of the Madras Legislative Assembly, 2011).

கல்வி வளர்ச்சிக்காக புரட்சிகரமான புதிய திட்டம் ஒன்று காமராஜரால் தமிழகத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்படி பள்ளி வசதிகளைப் பெருக்கம் பணியில் உள்ளூர் மக்களின் ஒத்துழைப்பினைப் பெறுவதற்காக பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் நாடு முழுவதும் நடத்த முடிவு செய்யப்பட்டது. இந்த மாநாடுகள் மூலமாக பள்ளிகளில் வசதிகளைப் பெருக்கும் முயற்சிக்கு தமிழகமெங்கும் நல்ல வரவேற்பு இருந்தது. முதல் பள்ளி சீரமைப்பு

மாநாடு 1958 பிப்ரவி 20ல் கடம்பத்தூரில் நடைபெற்றது இத்தகைய மாநாடுகளில் காமராஜர், கல்வி அமைச்சராக இருந்த சுப்பிரமணியம், பொதுக் கல்வி இயக்குநராக இருந்த நெ.து.சுந்தர வடிவேலு ஆகியோர் கலந்து கொண்டு ஊக்கம் அளித்தனர். "1958 முதல் 1963 வரை 150 பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் மூலம் பொது மக்கள் மனமுவந்து அளித்த உதவிகளால் சிறுவர், சிறுமியர்களுக்கு இலவச உடை, உணவு மற்றும் கல்வி உபகரணங்கள் வழங்கப்பட்டன". எல்லோருக்கும் இலவசக் கல்வி அளிக்க வேண்டும் என்பதே காமராஜரின் லட்சியம். எனவே 1955, 1956ம் ஆண்டு முதல் எல்லா ஏழைச் சிறுவர் சிறுமியர்களுக்கும் இலவசக் கல்வியளிக்க உத்தரவிட்டார்.

1960 ம் ஆண்டில் 11ம் வகுப்பு வரை அனைவருக்கும் இலவசக் கல்வி அளிக்கபட்டது. உயர்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை 471 லிருந்து 1961ல் 1361 ஆக உயர்ந்தது. மேலும் மருத்துவக் கல்லூரிகள், கால்நடை மருத்துவக் கல்லூரிகள், ஆசிரியர் பயிற்சி கல்லூரிகள், திக எண்ணிக்கையில் தொடங்கப்பட்டன. இந்தியாவிலேயே முதல் முதலாக தமிழ்நாட்டில் தான் பொது நூலச் சட்டம் இயற்றப்பட்டது. 1953ல் ஒரே கிளை நூலகம் மட்டும் இருந்தது. அது 1961ல் 454 ஆக உயர்ந்தது. "1947, 1948 ல் சென்னை மாகாண அரசு கல்விக்காக 704 லட்சம் ரூபாய் செலவு செய்தது. ஆனால் அது 1963 ல் 134 கோடி ரூபாயாக உயர்ந்தது. அதாவது மாநிலத்தின் மொத்த வருமானத்தில் 4ல் 1 பாகம் கல்விக்காகச் செலவிடப்பட்டது (The Madras Legislative Assembly, Third Assembly II Session.2011).

இவ்வாறு காமராஜர் ஆட்சிக் காலத்தில் கல்வி வளர்ச்சி ஏற்பட்டு மக்களிடையே எதிர்காலத்தின் மீது மிகப் பெரிய நம்பிக்கை ஒளி வீசியது.

## காமராஜர் அறிமுகப்படுத்திய மதிய உணவுத் திட்டம்

வறுமையில் உழன்று சிக்கித் தவிக்கும் நாட்டு மக்களின் நாடித் துடிப்பை நன்கறிந்தவர் காமராஜர். எனவே பள்ளிகளுக்கு வரும் பிள்ளைகளுக்கு மதிய உணவு வழங்கும் திட்டத்தை 1955, மார்ச் 27ல் சென்னை பூங்கா நகர் மெமோரியல் மண்டபத்தில் நடந்த தொடக்கப்பள்ளி ஆசியர்கள் மாநாட்டில் அறிவித்தார் காமராஜர் 'வயிற்குச் சோறிடல் வேண்டும் இங்கு வாழும் மனிதருக்கெல்லாம்' என்று பாடிய பாரதி பிறந்த எட்டயபுத்தில் மதிய உணவுத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார் காமராஜர். மூவாயிரம் ஊர்களில் இத்திட்டம் தொடங்கப்படடது. 1957, 1958ம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில மதிய உணவுத்திட்டம் இடம் பெற்றது. அதற்காக நிதி ஒதுக்கப்பட்டது.

"1957 நவம்பர் 1ம் தேதி முதல் காமராஜரின் மதிய உணவுத்திட்டம் அரசின் ஒப்புதல் பெற்ற அரசு நிதி உதவி பெரும் திட்டமாக மாறியது"27இந்த பதிய திட்டத்தின்படி முதல் கட்டமாக 4200 மையங்களில் 1,20,000 மாணவர்களுக்கு பகல் உணவு அளிக்கபட்டது. இதன் மூலம் கிரமப்புறங்களில் அனைத்து சாதியைச் சேர்ந்த சிறுவர், சிறுமியர் சமமாக அமர்ந்து உணவு அருந்தக்கூடிய சமத்துவ சூழ்நிலை ஏற்பட்டது. மேலும் பள்ளி செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்தது. இடையிலேயே பள்ளிப் படிப்பை விட்டுவிடும் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்தது. காமராஜரின் இந்த மதிய உணவுத்திட்டம் வரலாற்றுச் சிறப்புமிக்கத் திட்டமாகும் (Khan, Farhat Basir, 16 September 2019).

## காமராஜரின் ஆட்சிக் காலத்தில் தொழில் வளர்ச்சி

காமராஜர் ஆட்சி கல்வியில் புரட்சி செய்து சாதனை படைத்ததைப் போல தொழிற் துறையிலும் புரட்சி செய்து வரலாறு படைத்து. தமிழகத்தை வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்ல காமராஜர் ஆட்சியில் எண்ணற்ற முயற்சியில் செயல்வடிவம் பெற்றன. காமராஜர் ஆட்சிக் காலத்தில் தமிழகம் முழுவதும் பல தொழில்சாலைகள் தொடங்கப்பட்டன. இதனால் வேலை வாய்ப்புகள் அதிகரித்தன.

## மத்திய அரசுத்துறை

காமராஜர் ஆட்சிக் காலத்தில்

துவக்கப்பட்ட மிகப் பெரிய மத்திய அரசின் திட்டம் நெய்வேலி பழுப்பு நிலக்கரி' திட்டமாகும். தென் ஆற்காடு மாவட்டத்தில் இருக்கும் சுமார் 200 கோடி டன் பழுப்பு நிலக்கரியை வெட்டிப் பயன்படுத்துவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். இந்தப் பழுப்பு நிலக்கரி மின்சார உற்பத்திக்குப் பயன்படுவதாகும். இந்தத் திட்டம் 86 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்பட்டது. நெய்வேலியில் 2லு லட்சம் கிலோ வாட் உற்பத்தித் திறனுள்ள அனல் மின்சார நிலையம் ரஷ்ய நாட்டு உதவியுடன் தொடங்கப்பட்டது (Gopal, Madan, 1990).

சென்னை பெரம்பூரில் ரயில் பெட்டிப் தொழில்சாலை ஸ்விட்சர்லாந்து நாட்டு உதவியுடன் தொடங்கப்பட்டது. இதன் மூலம் ரயில் பெட்டிகள் உற்பத்தி செய்யப்பட்டதுடன் பல துணைத் தொழில்கள் பெருகவும் வாய்ப்பு அளித்தது. மத்திய அரசின் முதலீட்டில் சென்னை கிண்டிக்கு அருகில் ஆலிவெட்டி என்ற இத்தாலிய நிறுவன ஒத்துழைப்புடன் இந்துஸ்தான் டெலிபிரிண்டர் தொழிற்சாலை நிறுவப்பட்டது. பிரெஞ்சு தொழில் நுட்ப நிறுவனத்தின் உதவியுடன் நீலகிரியில் கச்சா பிலிம் உற்பத்தித் தொழிற்சாலை அமைக்கப்பட்டது. திருச்சிக்கு அருகில் திருவெறும்பூரில் கனரக கொதிகலன் தொழிற்சாலையும், ”ஆவடியில் ராணுவத் தளவாட தொழிற்சாலையும் கிண்டிக்கு அருகில் நத்தப்பாக்கத்தில் அறுவவை சிகிச்சைக் கருவிகள் செய்யும் தொழிற்சாலையும் ஆரம்பிக்கப்பட்டன (Pioneer, 1975).

### மாநில அரசுத் துறை தொழில்கள்

மாநில அரசின் முதலீட்டில் சிறு தொழில்கள் வளர்ச்சிக்கான கிண்டியிலும், விருதுநகரிலும் தொழிற்பேட்டைகள் அமைக்கப்பட்டன. இதேபோல ஈரோடு, தஞ்சாவூர், திருச்சி, மதுரை, நெல்லை, மார்த்தாண்டம் ஆகிய ஊர்களிலும் தொழிற்பேட்டைகள் நிறுவப்பட்டன. இந்தத் தொழிற்பேட்டைகளில் பெரிய தொழில்களுக்கும், நடுத்தரத் தொழில்களுக்கும் தேவைப்படும் உபகருவிகள் உற்பத்தி செய்யப்பட்டன. இந்தச் சிறுதொழில் பிரிவுகள் மூலம் 500 சிறுதொழில் முனைவோர் பயனடைந்தனர்.

மேலும் தனியார் துறையில் பொறியியல் தொழில், துணி உற்பத்தி, சிமிண்ட் ஆகியவைகளின் உற்பத்தியில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டது. காமராஜ் ஆட்சியின் போது தான் ராஜபாளையம் ராம்கோ சிமிண்ட் தொழிற்சாலை தொடங்கப்பட்டது. துணி உற்பத்தி ஆலைத் தொழிலினால் 1961ல் 1,20,000பேர் வேலைக்கு செல்லும் நிலை ஏற்பட்டது. காமராஜர் ஆட்ச்சிக் காலத்தில் வடபாதி மங்கலம், பேட்டை வாய்த்தலை ஆகிய இடங்களில் சர்க்கரை ஆலைகள் அமைக்கப்பட்டன. 1961 ல் மேலும் ஒன்பது சர்க்கரை ஆலைகளுக்கு அனுமதி தரப்பட்டது. பொறியியல் தொழிலும் கணிசமான வளர்ச்சி பெற்றன. ”வண்டலூரில் ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிற்சாலை, திருவெற்றியூரில் ராயல் என்பீல்ட் மோட்டார் தொழிற்சாலை, எண்ணூர் அசோக் லேலேண்ட் ஆகியவை தொடங்க அரசு பல்வேறு உதவிகளைச் செய்தது”. சேஷாயி நிறுவனத்தாரின் காகிதத் தொழிற்சாலையும் காமராஜ் ஆட்சிக் காலத்தில் தான் தொடங்கப்பட்டது. மேட்டுப்பாளையம் அருகில் விஸ்கோஸ் நிறுவனத்தின் செயற்க்கைப் பட்டு தொழிற்சாலை தொடங்கப்பட்டது. இவ்வாறு காமராஜ் ஆட்சிக் காலத்தில் தமிழ்நாடு தொழில் வளம் பெற்றது. தமிழ்நாட்டில் இந்தக் தொழிற்புரட்சி ஏற்பட காமராஜருக்குப் பெரிதும் துணை நின்ற தொழில் அமைச்சர் ஆர்.வெங்கட்ராமன் ஆவார் (Kumaraswami, 2020).

### காமராஜரின் நீர்ப்பாசனத் திட்டங்கள் மற்றும் அணைகள்

தாமிரபரணி ஆற்றின் குறுக்கே மணிமுத்தாறு அணை கட்டப்பட்டது. இதனால் 20 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது. மேட்டூர் அணையில் ரூபாய் 2.5 கோடியில் பாசன கால்வாய்கள் அமைக்கப்பட்டன. இதனால் 45 ஆயிரம் ஏக்கர் நிலம் பயன்பெறுகிறது. அமராவதி அணை 3 கோடி ரூபாய் செலவில்

கட்டப்பட்டது.இதனால் 47 ஆயிரம் ஏக்கர் நிலம் பயனடைகின்றன. 2.5 கோடி ரூபாய் செலவில் வைகை அணை கட்டப்பட்டது. இதனால் 20 ஆயிரம் ஏக்கர் நிலம் பயன்பெறுகிறது. 2.5 கோடி ரூபாய் செலவில்சாத்தனூர் அணை கட்டப்பட்டது. இதனால் 20 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பயன்பெறுகிறது.

* வாலையாறு அணை 1 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டது.இதனால் 6,500 ஏக்கர் நிலம்பயன் பெறுகிறது.
* மங்கலம் அணை 50 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டது.இதனால் 6 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது.
* ஆரணி அணை, 1 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டது. இதனால் 1,100 ஏக்கர் நிலங்கள் பயன் பெறுகிறது.
* காவிரி டெல்டா பகுதியில் 30 லட்சம் ரூபாய் செலவில் கால்வாய்கள் புதுப்பிக்கப்பட்டன.
* கிருஷ்ணகிரி அணை, 2 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டது. இதனால் 7,500 ஏக்கர் நிலங்கள் பயன் பெறுகின்றன.
* 10 கோடி ரூபாய் செலவில் கீழ்பவானித் திட்டம் ஏற்படுத்தப்பட்டது. இதனால் 2 லட்சம் ஏக்கர் நிலம் பயன் பெறுகின்றன.
* புள்ளம்பாடி திட்டம் 1.5 கோடிரூபாயில் உருவாக்கப்பட்டது. இதனால் 22 ஆயிரம் ஏக்கர்நிலங்கள் பயனடைகின்றன.
* கோமுகி ஆற்றுத்திட்டம், 75 லட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்பட்டது. இதனால் 8 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பயன் பெற்றன.
* பேச்சிப்பாறை, அழியாறு, பரம்பிக்குளம் மற்றும் குந்தா ஆகிய அணைகள் காமராஜர் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டன. தொழிற்சாலைகள்அவரது ஆட்சிக் காலத்தில் சென்னை கிண்டியிலுள்ள தொழிற்பேட்டைகள், நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன், எண்ணூர் அனல் மின் நிலையம், தூத்துக்குடி துறைமுகம் ஆகியவை முக்கியமானவை.

சிமென்ட் ஆலைகள், காகித உற்பத்தி ஆலைகள், அலுமினிய உற்பத்தி நிறுவனங்கள், மாக்னசைட்,சுண்ணாப்பு சுரங்கங்கள், ரப்பர் தொழிற்சாலைகள் ஆகியவற்றையும் காமராஜர் ஏற்படுத்தினார். நூல் நூற்பு, கார் உற்பத்தி, கார் உதிரிபாகம், சைக்கிள், என்ஜின், மோட்டார் வாகனம், தட்டச்சு பொறிகள், சுவிட்சு கியர்கள், எலக்ட்ரிக் கேபிள்கள், மருத்துவ அறுவை சிகிச்சை கருவிகள், தொடர்வண்டிப் பெட்டிகள், ராணுவவாகனங்கள் ஆகியவைதயாரிக்கும் தொழிற்சாலைகளையும் காமராஜர் நிறுவினார் (Devanesan.(2003).

1952 பொதுத்தேர்தலில் காமராஜர், ஸ்ரீவில்லிபுத்தூர் லோக்சபா தேர்தலில் நின்றபோது அவரை எதிர்த்துப் போட்டியிட்டவர்களுள் விஞ்ஞானி என்ற புகழ்பெற்ற ஜி.டி.நாயுடு. அதே ஜி.டி.நாயுடு, காமராஜர் முதல்வரான பின், அவர் புரிந்த சாதனைகளை வியந்து, காமராஜர் தான் என்றென்றும் தமிழக முதல்வராக இருக்க வேண்டும்என்றார்.

காமராஜரையும், காங்கிரசையும் கடுமையாகத் தாக்கிய ஈ.வே.ரா., “பச்சைத் தமிழன்’ என காமராஜரைப் பாராட்டினார். அவரது சாதனைகளை காங்கிரஸ்காரர்களைவிட அதிகம் போற்றினார். காமராஜர், ரஷ்யாவுக்கு செல்லும் போது அணிய கோட் தைத்திருந்தார். ஆனால் நான் கதர் சட்டை கதர் வேட்டியுடன் தான் சென்று வருவேன் எனக் கூறி சென்று வந்தார். “தியாக உணர்வுடன், தேசப்பணியில் ஈடுபட்ட காமராஜர், 1975 அக்.2ல், மறைந்தார். மறைந்த போது, இவரிடம் சிறிதளவு பணம் மட்டுமே இருந்தது. வங்கிக் கணக்கோ, சொத்தோ அவர் பெயரில் இல்லை. இறுதி வரை வாடகை வீட்டிலேயே வசித்தார். இவரது சேவைகளை பாராட்டி, மறைவுக்குபின்

*1976ல், நாட்டின் மிக உயரிய "பாரத ரத்னா' விருது காமராஜருக்கு வழங்கப்பட்டது (றிவீறீரீணீவீ, 1979).*

புனிதமான, எளிமையான வாழ்க்கையை வாழ்ந்த காமராஜருக்கு மக்கள், படிக்காத மேதை, ஏழைப்பங்காளன், கர்ம வீரர், தென்னாட்டு காந்தி, கிங் மேக்கர், பெருந்தலைவர் என்ற பட்டங்களை சூட்டி அவரை போற்றி வருகின்றனர்."காமராஜர் ஆட்சியில் கல்விப் புரட்சி, தொழில் புரட்சியைப் போல் பாசனப் புரட்சியும் நடைபெற்றது. உணவுப் பற்றாக்குறையைப் ஆறுகளின் குறுக்கே நீண்ட, வலிமையான அணைகள் கட்டப்பட்டன.அணைக்கட்டுத் திட்டங்களில் மிகப் பெரியது கீழ்பாவனி திட்டமாகும். கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் அருகே பவானி ஆற்றின் குறுக்கே இந்த அணை அமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கோவை, திருச்சி மாவட்டங்களில் 2,50,000 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற்றன. மேலும் மேட்டூர் நீர்த்தேக்கத்திலிருந்து ஐந்து மைல் நீளமுள்ள கால்வாய் வெட்டப்பட்டது.கீழ் பவானிக்கு அடுத்த பெரிய வட்டம் மணிமுத்தாறு ஆகும் (Thangavelu, 2008).

தாமிரபரணி ஆற்றின் கிளை ஆறாகிய மணிமுத்தாற்றின் குறுக்கே ஒரு அணை கட்டப்பட்டது. இதன் மூலம் ஒரு லட்சம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற்றன. மேலும் அமராவதி அணைக்கட்டும், வைகை அணைக்கட்டும் காமராஜ் ஆட்சிக் காலத்தில் என் அமைக்கப்பட்டன. பெண்ணையாற்றின் குறுக்கே கட்டப்பட்ட சாத்தனூர் அணைக்கட்டினால் தென் ஆற்காடு மாவட்டம் நீர்ப்பாசன வசதி பெற்றது (Chandra, Bipan, 11 February 2008).

சேலம் மாவட்டம் கிருஷ்ணகிரியில் ஒரு அணைக்கட்டும், செங்கற்பட்டு மாவட்டம் பிசாத்தூரில் ஆரணியாற்றின் குறுக்கே ஒரு அணைக்கட்டும் கட்டி முடிக்கப்பட்டது. காவிரியின் வலக்கரையில் புதிய கட்டனை உயர்மட்டக் கால்வாயும் காவிரியின் இடக்கரையில் புள்ளம்பாடி கால்வாயும் வெட்டப்பட்டன."தென்ஆற்காடு மாவட்டம் வீடுரின் அருகே வராக நதியின் குறுக்கே ஒரு அணையும், அதன் இடப்பக்கத்தில் கால்வாயும் கட்டி முடிக்கப்பட்டன. பரம்பிக்குளம் ஆழியார் திட்டம் 1961 ம் நேருவினால் தொடங்கப்பட்டது" இவ்வாறு காமராஜர் ஆட்சியில் பாசனத்துக்குரிய பேராறுகள் அனைத்தும் பயன்படுத்தப்பட்டன. இதன் மூலம் வறண்ட நிலங்கள் வளம் கொழிக்கும் நிலங்களாக மாற்றப்பட்டன. பருவத்தில் மழை இல்லாமல் போய் விளைச்சல் குன்றிவிடுமோ என்ற அச்சம் நீக்கப்பட்டது. இத்திட்டங்கள் நீரைத் தேக்கி வைத்து பயனளித்துடன் ஆறுகளில் வெள்ளப் பெருக்கெடுத்து ஓடாதாவாறும் பாதுகாக்கின்றன. இவ்வாறு காமராஜ் ஆட்சிக் காலத்தில் விவசாயம் செய்யப்படும் மொத்தம் 150 லட்சம் ஏக்கரில் 56 லட்சம் ஏக்கர் நிலங்கள் நிலையான நீர்ப்பாசன வசதி பெற்றன (Chandra, Bipan, 2021).

**காமராஜரின் பஞ்சாயத்து சீர் திருத்தங்கள்**

கிராமப்புற மக்களின் வாழ்வை மேம்படுத்துவதற்காக பஞ்சாயத்து: முறை காமராஜர் ஆட்சிக் காலத்தில் மிகவும் சிறப்பாகச் செயல்பட்டது. 1958ல் காமராஜர் காலத்தில் 'தமிழ்நாடு பஞ்சாயத்து சட்டம்' இயற்றபட்டபட்டது. காந்தி ஜெயந்தி விழாவை பஞ்சாயத்து ஆட்சி ஆரம்பமாகும் நாளாகக் கொண்டாப்பட்டது. 1960 ம் வருட காந்தி ஜெயந்தி விழாவின் போது தமிழ் நாட்டில் 75 பஞ்சாயத்து யூனியன்களும், 1961ல் 129 யூனியன்களும் ஆரம்பமாயின. இவ்வாறு தமிழ்நாடு முழுவதும் காமராஜர் ஆட்சியில் 33 பஞ்சாயத்து யூனியன்களும் சுமார் 12,000 பஞ்சாயத்துக்களும் பணியாற்ற ஆரம்பித்தன.

இந்தப் புதிய பஞ்சாயத்து ஆட்சி தமிழ் நாட்டில் நன்கு வேரூன்றி செல்பட்டது. கிராம நல வேலைகளை பஞ்சாயத்துக்களே ஏற்று நடத்தும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. விவசாயம், கல்வி, மருத்துவம், குடி தண்ணீர், சாலை வசதி, கைத்தொழில், மாதர் நலம், குழந்தைப் பராமரிப்பு முதலிய பல்வேறு பொறுப்புகளை கிராம பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களுமே மேற்கொண்டு சிறப்பாகச் செயல்பட்டன. இவ்வாறு கிராமப்புற வளர்ச்சியை தனது லட்சியமாகக் கொண்டு செயல்பட்டவர் காமராஜர் ஆவர்

(George Joseph, 2016).

### காமராஜர் காலத்தில் தமிழ் வளர்ச்சி

தமிழன்னையை முதன் முதலில் அரியாசனத்தில் ஏற்றி வைத்த பெருமை காமராஜருக்குத் தான் உண்டு. தமிழ் வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டு காமராஜர் ஆட்சியில் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. 1956, டிசம்பர் 18 ம்தேதி 1957, 1958ம் வருடத்திற்கான வரவு செலவு திட்டத்தை தமிழில் சமர்ப்பித்து சாதனை படைத்தர் சி.சுப்பிரமணியம். 1956 டிசம்பர் 27ல் தமிழ் ஆட்சி மொழி மசோதா சி.சுப்பிரமணியத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டது. 1959 ஜனவரியில் தமிழ் அறிஞர்களை உறுப்பினர்களாக் கொண்ட ‘ தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம்’ அமைக்கப்பட்டது. இதற்கு கல்வியமைச்சரே தலைவர் ஆவார்.

கல்லூரிகளில் பாடங்களை கற்பிக்கும் மொழியாகத் தழிழைக் கொண்டு வரவும், தமிழில் மலிவான விலையில் உயர் கல்விக்கான பாட நூல்களை வெளியிடவும் இந்த மன்றம் செயல்பட்டது. 1959 ஜனவரி 26ல் தமிழ் நூல் வெளியீட்டுக் கழகமும் தோற்றுவிக்கப்பட்டது. தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம் தமிழைப் பயிற்சி மொழியாக்குவதற்கான திட்டம் வகுத்தது. முதன்முதலாக கோவை அரசினர் கல்லூரியில் 1960, 1961 ல் பி.ஏ வகுப்புக்கு மட்டும் தமிழை பயிற்று மொழியாக்குவது என்று தீர்மானித்தது. இத்திட்டம் பின்னர் 1963, 1964ல் அனைத்து கல்லூரிகளுக்கம் விரிவுப்படுத்த முடிவு செய்யப்பட்டது.

தமிழைப் பயிற்று மொழியகப் படிப்பவர்களுக்கு மாத ஊக்கத்தொகையும், அரசு வேலைவாய்ப்புகளில் முன்னுரிமையும் வழங்கப்பட்டன. தரமான ஆங்கிலப் பாட நூல்கள் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடப்படடது. காமராஜர் ஆட்சியில் காலைச்சொல் அகராதி கொண்டு வருவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அதன்படி 1960ல் வேதியில் உளவியல், புள்ளியில் வானியல் போன்ற பல்வேறு பாடங்களுக்கான காலைச் சொல் அகராதி தயரிக்கப்பட்டு மலிவு விலையில் விற்கப்பட்டன.

மொழிவழி மாநிலம் அமைக்கப்பட்ட பின்பு மெட்ராஸ் ஸ்டேட் என்ற பெயரை தமிழ்நாடு என்று மாற்ற கோரிக்கை எழுந்தது. காமராஜர் ஆட்சி இதனைப் பரிவுடன் பரிசீலித்து 1961, பிப்ரவரி 24ல் ஒரு அறிக்கையை சட்டப் பேரவையில் சி.சுப்பிரமணியம் சமர்ப்பித்தர். மெட்ராஸ் ஸ்டேட் என்பதை தமிழில் எழுதும் போது இனி ‘தமிழ் நாடு’ என்று எழுத அரசு முடிவெடுத்தது. அரசாங்க நிர்வாகக் கடிதப் போக்குவர்த்தில் இனி தமிழ்நாடு என்று தான் எழுத்தப்படும் என்று அரசு அறிவித்தது. இதன்படி தமிழகமெங்கும் பெயர் பலகைளில் ‘தமிழ்நாடு’ என்றே பொறிக்கப்பட்டது 1962, டிசம்பரில் காமராஜரின் ஆட்சிக் காலத்தில் பாரதியாரின் 81வது பிறந்த நாள் சென்னை நகரில் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. தமிழ் கவிஞர் ஒருவருக்கு அரசு அதிகாரப்பூர்வமாக விழா எடுத்து சாதனையை நிகழ்த்திக் காட்டியது காமராஜர் ஆட்சியாகும் (Balasubramanian, Venkatraman, 2020).

### முடிவுரை

பெரியார் நற்சான்றிதழ் வழங்கிய காமாராஜரின் ஆட்சி தமிழகத்தின் பொற்காலமாக கருதப்படுகிறது. காமராஜ் ஆட்சி என்றால் எளிமை, வாய்மை, தூய்மை, நேர்மை, திறமை என்று பொருளாகும். ஏளிமையான ஆட்சியை ஊழல், பகட்டு, ஆரவாரம் இல்லாத, ஒளிவு மறைவற்ற வெளிப்படையான ஆட்சியை அமைத்தவர் காமராஜர் தான் ஆட்சி செய்த ஒன்பது ஆண்டுகளில் தமிழக நலனே அவர் முன் நின்றது. தமிழ் நாட்டின் ரட்சகர் என்றும் கல்வி வள்ளல் என்றும் பெரியாரால் போற்றப்பட்ட காமராஜர் 1975, அக்டோபர் 2 ல் இறந்த போது அவருக்கு சொந்தமாக இருந்தவை பத்து கதர் சட்டைகளும், வேஷ்டிகளும், ஒரு நூறு ரூபாய் நோட்டு மட்டுமே ஆகும். கருமைவீரர் காமராஜரின் ஆட்சி ஒரு சிறப்பான ஆட்சியாகும். உலகநாடுகள் திரும்பிபர்க்கும் விதமாக ஆட்சியமைத்த பெறுமைக்குரிய கல்வித்தந்தை காமாராஜர் ஆவார்.

## References

*A Review of the Madras Legislative Assembly (1952–1957)* Archived 17 October 2013 at the Wayback Machine.

Balasubramanian, T., Venkatraman, V. (2021). "V.O.Chidambaram Pillai:The Vision and Mission of Swadeshi Nationalist of Tamilnadu", *Kala:The Journal of Indian Art History Congress*.(Vol.27, No. 1 (XII): PP 33-41).

Bhatnagar, R., K. (13 October 2009). *Tributes To Kamaraj*. Asian Tribune. Archived from the original on 21 February 2014. Retrieved 3 February 2014.

Chandra, Bipan. (2008). *India Science Independence.* Penguin UK.

Chhibber, Manesh. (2018). K.kamaraj *The Southern Stalwart Who Gave India* twopms The print .Retrieved 11 march 2021.

*Crusading Congressman, Frontline Magazine Archived* . (15 September 2008). he Way back Machine, hinduonnet.com. (15–28 September 2001).

Devanesan. (2003). *A History of Tamil Nadu Upro -1995.* A.D.Marthanda.

George Joseph. (2016). *A True Champion of Subaltern.* Archived 26 January 2016 at the wayback Machine.

Gopal, Madan. (1990). *India through the ages*. K.S. Gautam (ed.) Publication Division, Ministry of Information and Broadcasting, Government of India.

He raised the bar with simplicity. *The Hindu*. (16 July 2008). Archivedat the Wayback Machine.

Kamaraj 116th birth Anniv: Rare pics of 'Kingmaker'". Deccan Herald. (15 July 2019). Retrieved 22 May 2020.

Kandaswamy, P. (2001). *The Political Career of K. Kamaraj*. Concept Publishing Company.

Kandaswamy, P. (2001). *The Political Career of K. Kamaraj.* Concept Publishing Company. pp. 62–64. Archived from the original on 31 July 2017.

Kapur., Raghu Pati. (1966). *Kamaraj, The Iron Man*. Archived from the original on 16 November 2014.

Khan, Farhat Basir. (2019). The Game of Votes: Visual Media Politics and Elections in the Digital Era. SAGE Publishing.

Kumaraswami Kamaraj. (2020). Dead; Power Broker in Indian Politics". *The New York Times*.

*Padma Awards Directory1954–2007.*(2009). Ministry of Home Affairs. Archived fromtheoriginalon. Retrieved 7 December 2010.

Pillai K.K. (1979). *Studies in the History of India with special Reference to Tamilnadu*, *Madras*. MJP Publisher.

Pioneer, The. “To regain lost glory, Congress needs a Kamaraj as its leader”. *The Pioneer* Times, Kasturi Rangan Special to The New York (3 October 1975).

*Revised edition of book on Kamaraj to be launched Archived*. (10 May 2011). the Wayback Machine. (8 July 2009). *The Hindu*.

Stepan, Alfred; Linz, Juan J.; Yadav, Yogendra. (2011). *Crafting State-Nations: India and Other Multinational Democracies*. JHU Press.

Thangavelu, K. (2008). *Tamilaga Varalaru Varisai -12 Tamilaga Samuga Panpattu Varalaru-2 Tamil*. Amizhtham Pathipakam,Chennai.

*The commonsense politician, Frontline Magazine*. 17–30 August 2002 Archived (28 July 2011), at the Wayback Machine.

*The Madras Legislative Assembly, Third Assembly I Session*. Archived 14 May 2011 at the Wayback Machine.

*The Madras Legislative Assembly, Third Assembly II Session*. Archived 14 May 2011 at the Wayback Machine.

Venkatesan, P. and Sivakumar, N. (2012). “Freedom Movement in Madras Presidency with Special Reference to The Role of Kamaraj (1920–1945)”. *Indian Streams Research Journal*. (Vol.2 (7):1).

Virudhunagar. (2014). *K.Kamaraj*. Wayback Machine.

# தற்கால தமிழ் இலக்கிய வளர்ச்சியின் மலேசிய இளைஞர்களின் பங்களிப்பு: ஒரு பார்வை

# Contribution of Malaysian Youths in the Development of Modern Tamil Literature: A Review

முனைவர் ரவிந்திரன் மாரையா / Dr. Ravindaran Maraya[1]

கஸ்தூரி ரவிந்திரன் / Kasturi Raveendran[2]

Date of submission: 2021-05-15
Date of acceptance: 2021-06-30
Date of Publication: 2021-07-20
Corresponding author's Name: Kasturi Raveendran
Email: Kasturi.raveendran@gmail.com

## Abstract

In this new era, a lot of Malaysian youngsters are showing their attraction towards Tamil Modern Literature via conducting events and competitions. For example, the recent activities of Malaysian undergraduates from national universities (University of Malaya, University of Science Malaysia, National University of Malaysia, etc.) forming Tamil associations such as Tamil Writer Association, Tamil Ilainjar and Manimandram resonates the Malaysian youths' fiery passion in advancing modern Tamil literature. Literary competitions conducted in Tamil such as story writing, poetry recital, public speaking and debates are good platforms to introduce the importance of Tamil Modern Literature among Malaysian Tamil youngsters while creating their interest in the field. Nowadays, our youngsters' efforts on modern Tamil literatures are more noticeable and it is indeed a great motivation in bringing such an interest of future generation to this literary field.

**Key Words:** Malaysian, Malaysian Tamil Youth, Tamil Modern Literature, Malaysian Tamil Literature, Short Story.

### முன்னுரை

தமிழ் குறைந்தது 2000 வருடங்கள் இலக்கிய வளமும் தொடர்ச்சியும் கொண்ட ஒரு மொழியாகும். எனினும், தமிழ் இலக்கியங்களில் பெரும்பாலானவை, இன்பியல் இலக்கியங்களே. இது, "இலக்கிய வளர்ச்சி, அரசர்களையும் குறுநில மன்னர்களையும் சுற்றி வந்ததால்" ஏற்பட்டிருக்கலாம் (Ilakkuvanar, 2011, p.34). அதன் விளைவாக இலக்கியம் என்ற சொல் தமிழில் இன்பியல் இலக்கியத்தையே பெரும்பாலும் குறித்து நிற்கின்றது. சிறுகதை, நாவல், கவிதை, நாடகம் ஆகிய எழுத்துக் கலை வடிவங்களே இன்று தமிழ் இலக்கியம் என பொதுவாகக் கருதப்படுகின்றது (Vallikannan, 1977, p.12). இலக்கியம், இலக்கியத்துக்காக என்பதை விட, இலக்கியம், மக்களின் பயன்பாட்டுக்கு என்பதே தமிழின் ஒரு முக்கிய விழுமியம் எனலாம். எனவே, தற்கால தமிழ் இலக்கியம், நமது நாட்டில் இளைஞர்களுக்கு மத்தியில் எப்படி இருக்கிறது? இளைஞர்களே களம் இறங்கி பல இலக்கிய சம்மந்தமான நிகழ்ச்சிகளை முன்னெடுத்து செய்கிறார்கள்.

### ஆய்வின் நோக்கம்

தற்கால தமிழ் இலக்கிய வளர்ச்சியில் மலேசிய இளைஞர்கள் எத்தகைய

[1] The author is a Senior Lecturer at Department of Indian Studies,Faculty of Arts and Social Science. ravindaranm@um.edu.my

[2] The author is a undergraduate at Department of Indian Studies,Faculty of Arts and Social Science. Kasturi.raveendran@gmail.com

பங்களிப்பைக் கொடுத்திருக்கிறார்கள் என்பதைக் கண்டறியவே இந்த ஆய்வுக்கட்டுரையின் முதன்மை நோக்கமாகும்.

## ஆய்வு முன்னோடிகள்

இந்த ஆய்வுக்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்த பல நூல்களுள் தலையாயதாக விளங்குவது 20002009 ஆம் ஆண்டுகளில் வெளிவந்த மலேசிய சிங்கப்பூர் சிறுகதைகளில் கையாளப்பட்ட பின்னோக்கு, நனவோடை, கடித உத்திகள் என்ற தலைப்பில் வீரப்புத்திரன் 2000ஆம் ஆண்டில் எழுதிய ஆய்வுக்கட்டுரை. சிங்கப்பூர் இளம் எழுத்தாளர்களை அடையாளம் காட்டுவதோடு அவர்கள் கையாண்ட உத்திமுறைகளையும் வெளிக்கொணர இக்கட்டுரை வழிவகுக்கிறது. 2000 முதல் 2009 வரை குறிப்பாக இந்த பத்து ஆண்டுகளில் வெளிவந்த சிங்கப்பூர் மலேசிய தமிழ்ச் சிறுகதைகளைப் பகுப்பாய்வு அணுகுமுறையில் ஆராய்ந்து இக்கட்டுரை வடிவமைக்கப்பட்டதோடு இளம் தலைமுறையினர்கள் தற்கால தமிழ் இலக்கியத்திற்காக என்னென்ன முன்னெடுப்புகளை எடுத்திருக்கிறார்கள் என்பதைப் பற்றியும் இக்கட்டுரை அமைந்துள்ளது.

இதனை தொடர்ந்து, நவீன தமிழ்க்கவிதை வளர்ச்சியில் பாரதியின் செல்வாக்கு என்ற தலைப்பில் திரு.தம்பிபிள்ளை 2019 ஆம் ஆண்டில் எழுதியஆய்வுக்கட்டுரையாகும். தமிழில் நவீன கவிதையின் முன்னோடியாகத் திகழ்பவர் பாரதி. புதிய பல வடிவங்களைக் கையாண்ட வகையிலும் பின்னர் வந்த கவிஞர்களில் செல்வாக்கை ஏற்படுத்திய வகையிலும் நவீன கவிதை வளர்ச்சியில் இவரது தாக்கம் கனதியானது. நவீன கவிதை வளர்ச்சியில் பாரதியின் செல்வாக்கைப் பலவிதங்களில் ஆராயமுடியுமாயினும் இக்கட்டுரை பாரதி கையாண்ட இலக்கிய வடிவங்கள் பற்றியும் அந்த இலக்கிய வடிவங்கள் நவீன கவிதை வளர்ச்சியில் ஏற்படுத்திய தாக்கங்கள் பற்றியதுமாகவே அமைகின்றது.

தொடர்ந்து, இணைபேராசிரியர் முனைவர் கிருஷ்ணன் மணியம் 1993ஆம் ஆண்டில் தேசிய இலக்கிய வளர்ச்சிக்கு இந்திய எழுத்தாளர்களின் பங்களிப்பு என்ற தலைப்பில் ஓர் ஆய்வுகட்டுரையை எழுதி இருக்கிறார். தேசிய இலக்கிய வளர்ச்சிக்கு நமது நாட்டில் இளம் இந்திய எழுத்தாளர்கள் என்னென்ன பங்களிப்பைக் கொடுத்திருக்கிறார்கள் என்பதைப் பற்றி அவர் இந்த ஆய்வுக்கட்டுரையில் எழுதியுள்ளார்.

## ஆய்வு நெறி

இவ்வாய்வுக் கட்டுரை தரப்பகுப்பாய்வு (qualitative) நெறியை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. தரப்பகுப்பாய்வு ஆய்வுமுறையானது விளக்கமுறைக்கு (interpretation) ஏதுவாகின்றது. விளக்கமுறையின் வழி சேகரிக்கப்படும் தரவுகள் யாவும் சூழல், கருபொருள், நோக்கம், ஆகிய முக்கூறுகளின் அடிப்படையில் ஆராயப்பட்டுள்ளது. இந்தத் தரப்பகுப்பாய்வு நான்கு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. அவை ஆராய்ச்சி ஆவணங்களை அடையாளம் காணல் (identification and documentation), தரவுகளை ஆராய்ந்து பகுத்தாய்தல் (investigation and compartmentalization), செயல்முறை விளக்கத்துடன் பகுத்தாய்தல் (interpretation and analysis), மற்றும் தரவுகளை ஒருங்கிணைத்து ஆய்வின் முடிவுகளைக் காணல் (integration and conclusion) (Lawrence Neuman, 2007, p.102). கீழ் தரவுகளைச் சேகரித்து கட்டுரை எழுதப்பட்டது.

## இலக்கியம்

தமிழ் இலக்கியம் என்பது மிகவும் தொன்மையானது, பண்பற்றது மற்றும் வரலாற்று சிறப்புடையது. பிற நாட்டினர் நாகரிக நிலையை எட்டாத காலத்திலேயே, தனக்கே உரிய கலப்பற்ற தூய இலக்கியப் போக்கினைக் கொண்டு இலங்கியது. எனவே, தமிழில் காணக்கிடக்கும் பழம்பாடல்களில் அக்கால இயற்கை அழகின் இனிமையும் மக்கள் வாழ்க்கைநெறியின் செம்மையும் புலப்படுகின்றன (மிறீணீஸீளீஷீ, 2017, ஜீ.23). தமிழ் இலக்கியத்தைப் பற்றி

குறிப்பிட வந்த பெஸ்கி பாதிரியார் 'தமிழ்ப்புலவர் ஆற்றல்சான்ற மொழியினைக் கையாண்டனர்; தமிழ்க் கவிதையில் சிறந்த பாட்டுகள் இறையுணர்வு பற்றியும் இயற்கையருள் பற்றியும் காணப்படுகின்றன என்று கூறியுள்ளார் (Thandaayutham 2000, p.28).

### தற்கால தமிழ் இலக்கியம்

தற்கால தமிழ் இலக்கியம் என்றாலே நமது நினைவிற்கு வருவது, பாரதிதான். பாரதியே தமிழின் தற்கால இலக்கியத்தின் தொடக்கப் புள்ளி. தன் கவிதையைப் பாரதி நவகவிதை என்றே எப்போதும் சொல்கிறார். புதியன வேண்டும் என்ற குரலை நாம் பாரதியிடம் மீண்டும் மீண்டும் கேட்கிறோம். 'புத்தம்புதிய கலைகள் மெத்த வளருது மேற்கேஞ் அத்தனையும் கொணர்ந்திங்கு சேர்ப்போம்' என்ற அறைகூவலை அவரது கவிதைகளும் கட்டுரைகளும் எழுப்பிக்கொண்டே இருந்தன (Vaiyapuri, 1969). ஆகவேதான் பாரதி நவீன இலக்கியத்தின் எல்லா துறைகளிலும் புதிய அலை உருவாக முதற்புள்ளியாக அமைந்தார். தமிழின் தற்கால உரைநடையின் தொடக்கம் அவரே. தமிழ் இதழியலும் அவனிடமிருந்தே ஆரம்பிக்கிறது. தமிழ்க்கலைச்சொல்லாக்கம் அவரால் தொடங்கி வைக்கப்பட்டது. தமிழ்ச் சிறுகதையும் தமிழ் நாவலும் அவர் விதையிட்டவை. தமிழ்ப்புதுக்கவிதைக்கும் அவரே பிதா. பாரதி தொடங்கிவைத்ததே தமிழ் தற்கால இலக்கியம். அவருக்குப் பிறகு, இப்போதும் தற்கால தமிழ் இலக்கியத்தில் பலர் வெளுத்து வாங்கி கொண்டு தான் இருக்கிறார்கள். அதில் முக்கியமாக இளம் தலைமுறையினர்கள் பலர் பல இலக்கிய தொடர்பான நிகழ்ச்சிகளைச் செய்துக் கொண்டு தற்கால தமிழ் இலக்கியத்தை வளர்த்து கொண்டு தான் வருகிறார்கள்.

### மலேசியாவில் தற்கால தமிழ் இலக்கியம்

இலக்கியங்கள் என்று எடுத்துக்கொண்டால் தமிழகம் மட்டும் அல்ல மலேசியாவிலும் செம்மையாக விளங்குகிறது என்றால் அது மிகையாகாது. மலேசியத் தமிழ் இலக்கியத்திற்கு ஏறக் குறைய 130 ஆண்டுகள் வரலாறு இருப்பது நமக்கெல்லாம் பெருமை தரும் செய்தி. மலேசியாவில், பினாங்கில் 1876இல் "தங்கை நேசன்" என்னும் பத்திரிகை அச்சிடப்பட்டு வெளிவந்துள்ள செய்தி மலேசிய இலக்கிய வரலாற்றாசிரியர்களால் குறிக்கப் பட்டுள்ளது (Ramaiya, 1996). சிங்கப்பூரில் 1887இல் சி.ந.சதாசிவப் பண்டிதரின் "வண்ணையந்தாதி" முதலிய நூல்கள் தொடக்கமாக அமைந்தன. இந்தத் தொடக்கங்களிலிருந்து இலக்கிய வரலாறு எழுச்சியும் தளர்ச்சியும் கண்டு தொடர்ந்து வளர்ந்திருக்கிறது. அச்சு வசதியும் ஊடக வளர்ச்சியும், அவற்றைப் பெறவும் பெருக்கவும் நிதி வசதியும் உள்ள இந்த நவீன கால கட்டத்தில் வாழும் நாம், இவையெல்லாம் மிக அரிதாக இருந்த ஒரு மங்கிய தொடக்க காலத்தில் உண்மையான தமிழ் மொழி பண்பாட்டு அர்ப்பணிப்பு உணர்வுடன், இந்த இலக்கிய வளர்ச்சிக்கு வித்திட்ட வித்தகர்களான நம் முன்னோடிகளை மானசீகமாகப் போற்றி வணங்குதல் வேண்டும். மலேசியாவில் தற்கால தமிழ் இலக்கியத்தின் மறுவுயிர்ப்புக் காலமாக 1946 ஐ ஓர் எல்லைக் கோடாகக் காட்டுகிறார் மா.இராமையா.

இரண்டாம் உலகப் போரில் ஜப்பானியர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் மத்தியில் சிக்கிச் சீரழிந்த மலேசியாவில் அன்றாட வாழ்க்கையின் அவலங்களுக்கிடையில் குறிப்பிட்டுச் சொல்லத் தக்க இலக்கியங்கள் ஏதும் தோன்றவில்லை. 1946க்குப் பிந்திய இலக்கிய வரலாறு சி.வீ. குப்புசாமி எழுதிய "ஜப்பானியர் லாக்கப்பில் ஏழு நாட்கள்", "யுத்தத்தால் வந்த யுத்தம்", (இரண்டும் 1946) என்ற நூல்களுடன் தொடங்குவதும் பொருத்தம் (Kuppusamy, 1998). சி.வீ.குப்புசாமி இவற்றைத் தொடர்ந்து மலேசியத் தமிழ் இலக்கியத்தின் கிரியா ஊக்கியாகவும், எழுத்தாளர் இயக்கங்களின் நடத்துநராகவும் (மலாயாத் தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைமைப் பதவி உட்பட) நெடுநாட்கள் இருந்து மறைந்தார்.

இம்மாதிரியான இலக்கியங்கள் இவர்களோடு மட்டும் நின்றுவிடாமல் இன்றும் இளம் இளைஞர்களுக்கு மத்தியில் தற்கால தமிழ் இலக்கியம் தலை தூக்கி கம்பீரமாக நடந்து கொண்டு தான் இருக்கிறது. தற்கால இலக்கியமான நாவல், சிறுகதை,

புதுக்கவிதையை எழுதுவதில் இன்றும் இளைஞர்களுக்கு அதிக ஆர்வம் இருப்பதை நாம் கூடாக காண்கிறோம். அரசாங்க பல்கலைக்கழகம், தனியார் பல்கலைக்கழகம், இயக்கங்கள் போன்றவையின் வழி பல இலக்கிய சம்மந்தமான போட்டிகள் நிகழ்ச்சிகள் நடந்து கொண்டு தான் இருக்கிறது. இதில் வியப்பான செய்தி என்னவென்றால் இதுப்போன்ற இயக்கங்கள் மற்றும் பல்கலைக்கழத்தில் நடத்தப்படும் இலக்கிய நிகழ்ச்சி அனைத்தையும் இளைஞர்களே முன்னெடுத்து நடத்துகிறார்கள்.

### பல்கலைக்கழகத்தில் தற்கால தமிழ் இலக்கியம் நிகழ்ச்சிகளில் மாணவர்களின் பங்கு

### i. மலாயாப் பல்கலைக்கழகம்

இன்று மலேசிய திருநாட்டின் முதல் நிலைப் பல்கலைக்கழகமாகத் திகழும் மலாயாப் பல்கலைக்கழக, 1948 ஆம் ஆண்டு முதல் 1958 ஆம் ஆண்டு வரையில் சிங்கப்பூரில் இயங்கி வந்தது. இந்திய ஆய்வியல் துறை அமரர் தமிழவேள் கோ. சாரங்கபாணி அவர்களின் தூண்டுதலின் பயனாக, மலாயாசிங்கப்பூர் வாழ் தமிழ்ப் பெருமக்களின் நீண்ட கால அன்பு வேண்டுகோளினை நிறைவேற்றும் வகையில், மலாயாப் பல்கலைக்கழகம் வளாகத்தில் கலைப் புலத்தின் ஓர் அங்கமாக 1956 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது (Muthukrishnan, 1996). அப்போது, மலாயாப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றுவந்த இந்திய வம்சாவளி மாணவர்களுக்கென்று ‘இந்திய கலாச்சார சங்கம்’ என்னும் அமைப்பு இயங்கி வந்தது. ஆயினும், தமிழ் மொழி, தமிழ் இலக்கியம், தமிழர் பண்பாடு ஆகிய பாடங்களை இந்திய ஆய்வியல் துறையில் பயின்று வந்த மாணவர்கள், தமிழ்ப் பேரவை என்னும் மாணவர் அமைப்பினை நிறுவும் முயற்சியிலும் மிகுந்த ஆர்வம் காட்டி வந்தனர். 1960 ஆம் ஆண்டு, இந்திய ஆய்வியல் துறையின் இரண்டாம் தலைமுறையைச் சேர்ந்த மாணவர்களுள் ஒருவரான திரு. இராம சுப்பையா தமிழ்ப் பேரவையின் தலைவராகப் பொறுப்பேற்றார் (Singgaravelu, 2019).

அவருக்குப் பிறகு, இது வரையில் சுமார் அறுபத்து நான்கு பேர் தமிழ்ப் பேரவையின் தலைவர்களாகத் தொண்டாற்றியுள்ளதோடு, பல இலக்கிய தொடர்பான போட்டிகளும் நிகழ்ச்சிகளும் நடந்து கொண்டு வருகிறது. அதில் ஒரு புகழ்ப்பெற்ற போட்டி தான் பேரவை கதைகள் என சொல்லப்படும் சிறுகதை எழுதும் போட்டி. மலேசியத் தமிழ் எழுத்தாளர்கள், தமிழ்ப்பள்ளி மாணவர்கள், பல்கலைக்கழகம் மற்றும் கல்லூரி மாணவர்கள் ஆகியோரிடையே தமிழ் இலக்கியம் மென்மேலும்

வளர்ச்சியடையச் செய்யும் நோக்கத்தோடு தமிழ்ச் சிறுகதை எழுதும் போட்டியைக் கடந்த 1982 ஆம் ஆண்டுத் தொடங்கி ஆண்டுதோறும் ஏற்பாடு செய்து வருகிறது (Singgaravelu, 2019). சிறந்த கதையாசிரியர்களுக்கு பணப்பரிசுகளை வழங்கி வருவதோடு பரிசுப் பெற்ற மணிக்கதைகள் அடங்கிய தொகுதிகளையும் நூலாக வெளியிடும் அரும் பணியையும் மலாயாப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரவை ஆற்றிவருகிறது. குறிப்பாக, இம்மலேசிய நாட்டில் சிறுகதைப் போட்டியினை நடத்தி வரும் தமிழ்ப் பேரவை உலகிலேயே எந்தவொரு இந்திய மாணவர் இயக்கம் செய்திடாத இலக்கியத் திட்டத்தினைச் செம்மையாகச் செய்து 34 ஆண்டுகளாக வெற்றிநடைப்போடுகிறது. இதனால் பல மாணவர்களுக்கு மத்தியில் இலக்கிய ஆர்வத்தைத் தூண்டுகிறது.

இச்சூழலில் மாணவர்கள் இவர்களே நாட்டின் இளைஞர்கள் என்ற பார்வையில் மலேசிய இலக்கியத்தில் அவர்களின் பங்கை அதிகமாக செலுத்தி வருவதில் ஆர்வம் காட்டியுள்ளனர. மாணவர் பருவத்திலேயே இலக்கிய படைப்புகளில் தங்களின் முயற்சிகளை காட்ட வேண்டும் என்பதில் பல்கலைக்கழக மாணவர்கள் முற்பட்டுள்ளது பல்கலைக்கழக நிகழ்ச்சிகளின் வழி அறிய வருகின்றது.

### ii. மலேசிய தேசியப் பல்கலைக்கழகத்தில் (UKM) தற்கால தமிழ் இலக்கிய நிகழ்ச்சிகள்

மலாயாப் பல்கலைகழகமின்றி, மலேசிய தேசிய பல்கலைக்கழத்திலும் மக்கள் மத்தியில்

இலக்கிய உணர்வைக் கொண்டு வருவதற்குப் பல போட்டிகளும் நிகழ்ச்சிகளும் நடத்தி கொண்டு வருகிறார்கள். இந்த இலக்கியப் பயணம் 1997இல் தொடங்கி இன்று வரை சுமார் 24 ஆண்டுகளாக நடத்தி வருகிறார்கள். இதன் முதல் தலைவர் திருமதி.இராஜலெட்சுமி சுப்பையா ஆவார். சிறுகதை, கட்டுரை, கவிதை போட்டிகளை நடத்தி வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசுத்தொகைகளைக் கொடுப்பது மட்டுமின்றி அவர்களை ஊக்குவித்தும் வருகிறார்கள் (கிரீஷ்ஷீணீ, 2018,ஜீ4). மேலும், எழுத்தாளர்கள் எழுதிய எழுத்துபடிவங்களை ஒரு புத்தகமாக தொகுத்தும் வருகிறார்கள். இதனால் எழுத்து துறைகளிலும் இலக்கியத்திலும் இளைஞர்கள் நன்கு ஆர்வத்தைக் காட்டி வருகிறார்கள். இதன் மூலம், இளைஞர்களுக்கு மத்தியில் இலக்கிய மீதான காதல் அதிகமாக இருப்பதை நம்மால் உணர முடிகிறது.

### iii. மலேசிய அறிவியல் பல்கலைக்கழகம்

தொடர்ந்து, மலேசிய அறிவியல் பல்கலைக்கழகம் (University of Science, Malaysia) என்பது மலேசியாவில் அரசு சார்ந்த ஒரு பொதுப் பல்கலைக்கழகமாகும். இதற்கு பினாங்கில் (முதன்மை வளாகம்), கிளாந்தானில் (சுகாதார வளாகம்), நிபோங் திபாலில் (பொறியியல் வளாகம்) என மூன்று வளாகங்கள் உள்ளன. இந்தியாவின் ரிலிணி பல்கலைக்கழகத்தின் ஓர் உடன்பாட்டு இணக்கத்துடன் ஒரு மருத்துவத் துறையும் இங்கு இயங்கி வருகிறது. இப்பல்கலைக்கழகத்திலும் இந்திய மாணவர்கள் என்று எடுத்துக் கொண்டால் சற்று அதிகமாகவே இருக்கிறார்கள். இவர்களின் முயற்சியால் தமிழுக்கான இயக்கமும் இப்பல்கலைக்கழத்தில் உருவானது. எடுத்துக்காட்டு பல வருடங்களாக ‘இந்திய பண்பாடு’ என்ற ஒரு கழகம் இருந்து வருகிறது. இக்கழகத்தில் பல தற்கால தமிழ் இலக்கிய சம்மந்தமான நிகழ்ச்சிகள் இளம் தலைமுறையினர்களே களம் இறங்கி நடத்தி வருகிறார்கள். எடுத்துக்காட்டாக, கவிபாடும் தென்றல், அக்னி சிறகு என பல கவிதை சிறுகதை எழுதும் போட்டி என நடத்திக் கொண்டு வருகிறார்கள். இதனால் மலேசியாவில் இருக்கும் பல மாணவர்கள் இப்போட்டிகளில் கலந்துக் கொண்டு தங்களின் திறமையை வெளிக்கொணர்ந்து வருகிறார்கள்.

## இயக்கங்களின் வழி இளம் தலைமுறையினர்கள் எடுத்து நடத்தும் தற்காலத் தமிழ் இலக்கிய நிகழ்ச்சிகள்

### i. தமிழ் இளைஞர் மணிமன்றம்

தற்கால தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சியும், இளைஞர்களுக்கு மத்தியில் இருக்கும் ஈடுபாடும் வெறும் பல்கலைக்கழகத்தில் மட்டுமின்றி பல இயக்கங்கள் மூலமும் தற்கால இலக்கியம் வளர்ந்து கொண்டு வருவதை நாம் கண்கூடாக காண்கிறோம். எடுத்துக்காட்டாக, தமிழ் இளைஞர் மணிமன்றம் என சொல்லக் கூடிய ஓர் இயக்கம். கடந்த 1950களில் மலாயா நாட்டில் தமிழ் மணம் வீசிய காலத்தில்நு தமிழுக்காகத் தியாகம் செய்யும் பல நல்ல உள்ளங்கள் ஒன்றுகூடி கலந்துரையாடிய நேரத்தில் ஓர் இயக்கத்தை அமைக்கும் முயற்சிதான் திருவினையானது.

சிங்கையிலிருந்து வெளி வந்து கொண்டிருந்த தமிழ் முரசு என்ற நாளிதழின் வார இணைப்பான மாணவர் மணிமன்ற மலர் பல மாணவர்களை கலை இலக்கியத் துறைகளில் பிரகாசிக்கச் செய்தது உண்மை என்பதை நாம் உணர வேண்டும். தமிழ்வேல் கோ.சாவால் தோன்றிய இந்த மணிமன்றம் இன்றும் மிக சிறப்பாக இயங்கி கொண்டு வருகிறது. தமிழ்வேல் கோசாவால் உருவான இந்த இயக்கம் அவரோடு நின்றுவிடாமல் இன்று மலேசியாவில் இருக்கும் பல இளம் தலைமுறையினர்களால் பல இலக்கிய சம்மந்தமான போட்டிகள் நடந்துக் கொண்டு இருக்கிறது. சிறுகதை, புதுக்கவிதை என பல போட்டிகளை நடத்தி புதிய எழுத்தாளர்களை வளர்த்து வருவதோடு மட்டும் அல்லாமல் நமது தற்கால தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சியையும் இந்த இயங்கங்களின் வழி காண முடிகிறது.

### ii. மலேசிய தமிழ் எழுத்தாளர் சங்கம்

அதோடு மட்டும் அல்லாமல் இப்போது வெளியிடுகின்ற தமிழ் நாழிதல்களான

மக்கள் ஓசை, நண்பன், தமிழ் நேசன் போன்ற நாழிதலில் சிறுகதை, தொடர்கதை, புதுக்கவிதை எழுதும் பிரிவுகளும் இருக்கின்றன. அந்தப் பிரிவிலும் இன்றைய இளைஞர்கள் பல படைப்புகளை எழுதி அனுப்புகிறார்கள். அதிக படைப்புகளை எழுதி அனுப்பியவர்களுக்கு தமிழ் எழுத்தாளர் சங்கத்திலும் இளைஞர்களை மேலும் ஊக்குவிக்க பல விருதுகளும் கொடுக்கிறார்கள். இதனால் நமது தமிழ் இலக்கியம் மிக சிறப்பாக வளர்ந்து கொண்டு வருகிறது. மேலும் இளைஞர்களுக்கு மத்தியிலும் தற்கால தமிழ் இலக்கியத்தின் மீது இருக்கும் பற்று அதிகரித்து வருகிறது. இவ்வாறு இம்மாதிரியான இயக்கங்களின் மூலம் வளர்ந்து வந்த இளைஞர்கள், அவர்களே முன்வந்து இலக்கியம் சம்மந்தமான பல நிகழ்ச்சிகளை நடத்திக் கொண்டு வருகிறார்கள். எடுத்துக்காட்டாக, மலேசியாவில் மேடையெங்கும் ஓங்கி ஒலித்தப் பாவலர் தீப்பொறி பொன்னுசாமி அவர்களின் கடைமகளான பொன் கோகிலம் அவர்கள் இன்று இயங்கலை வாயிலாகவே பல இலக்கியம் சம்மந்தமான போட்டிகளையும் நிகழ்ச்சிகளையும் நடத்திக் கொண்டு வருகிறார்.

‘இயல்’ பதிப்பகத்தின் தோற்றுனராக விளங்கும் இவர், இந்தப் பதிப்பகம் முழுக்க முழுக்க இளைஞர்களுக்காகவே உருவாக்கப்பட்ட பதிப்பகம் என்று அவர் எடுத்துரைக்கிறார் (Thendral, 2020, p.29). மலேசியச் சூழலில், ஆரம்பத்தமிழ்ப்பள்ளி முதல் பல்கலைக்கழக தமிழ் துறை வரை மாணவர்கள் தங்களை ஈடுபடுத்தி வருகிறார்கள். ஆனால் அதனைத் தொடர்ந்து தனிப்பட்ட முறையில் அவர்களின் படைப்புகளை நூலாக்க வேண்டும் என்றால் பொருளாதாரச் சுமை அவர்களுக்கு இருக்கிறது. இளம் படைப்பாளர்களின் படைப்பு அதிகம் மலேசியாவில் இடம்பெற வேண்டும் என்பதற்காகவே இயல் பதிப்பகத்தை உருவாக்கினார் இவர். இதனால் பல இளம் படைப்பாளர்கள் தங்களின் திறமையை வெளிக்கொணர செய்கிறார்கள்.

### பெர்னாமா

தொடர்ந்து, வாசிப்பு என்பது ஒரு மனிதனுக்கு மிகவும் முக்கியமான ஒன்று. புத்தகம் ஒரு சிறந்த நண்பன் என்றால் அது மிகையாகாது. காரணம், மனித நண்பன் நேரத்திற்கு ஏற்றார்போல் தன்னுடைய கருத்தை மாற்றிக் கொள்வான். ஆனால், ஒரு புத்தகம் எக்காலத்திலும் தன்னுடைய கருத்தில் மாறுவதில்லை. ஒரு கல்லை உளி செதுக்கிச் செதுக்கி அழகிய சிற்பமாக மாற்றுவதைப் போல். புத்தகம், வாசிக்க வாசிக்க நம்மை அறிவுள்ள, பண்புள்ள மனிதனாக மாற்றுகின்றது. நமக்குத் தேவையான விசயஞானம் பெற நாம் புத்தகங்களை வாசிக்க வேண்டும். புத்தக வாசிப்பின் மூலம் கிடைத்த அறிவை நாம் வாழ்நாளில் தேவையான போது பயன்படுத்திக்கொள்ள முடியும். உலகில் நாம் பார்த்த பார்க்கின்ற தலைவர்கள், அறிஞர்கள், விஞ்ஞானிகள், அனைவரும் புத்தகம் வாசிக்கும் பழக்கத்தைக்கொண்டவர்களே. அதன் மூலம் பெற்ற அறிவைக் கொண்டே சிந்தித்தும், செயல்பட்டும், நம்மிடையே பிரபலமானார்கள் (Venkadeshwaran, 2017).

இன்றைய இளம்தலைமுறையினர்கள் வாசிப்பு மீது ஆர்வத்தைக் காட்ட வேண்டும் என்பதற்காக பெர்னாமா செய்தியில் ‘வாசிப்போம் நேசிப்போம்’ என்ற ஒரு நிகழ்ச்சியை நடத்துகிறார்கள். இந்த நிகழ்ச்சியை இளம்தலைமுறையினரான குமாரி ஜமுனா மற்றும் குமாரி கார்த்திகா அவர்கள் அதிகாரப்பூர்வமாக வழிநடத்துகிறார்கள். பிரபல எழுத்தாளர்கள் எழுதியிருக்கும் நாவலைப் படித்துவிட்டு அந்நாவலைப் பற்றி பேட்டியின் மூலம் மக்களுக்கு விமர்சிப்பதே இந்த நிகழ்ச்சியின் முக்கிய நோக்கமாகும். இந்தப் புத்தக விமர்சன பேட்டியை மக்கள் காண்பதன் மூலம் அவர்களும் ஆர்வத்தோடு அப்புத்தகத்தைப் படிக்க தொடங்குகிறார்கள். எனவே, இளைஞர்களே முன் வந்து வாசிப்பு தொடர்பான இந்நிகழ்ச்சியை மிக சிறப்பான முறையில் வழிநடத்தி மக்களுக்கு மத்தியில் வாசிப்பு பழக்கத்தை வளர்க்கிறார்கள்.

### முடிவுரை

எனவே, இலக்கியம் என்பது மனிதர்கள்

தங்களுக்கு நிகழும் வாழ்க்கைக்கு மேலதிகமாக விரிந்த வாழ்க்கையை மொழியினூடாக கற்பனை செய்து அறிவது. ஒருவரின் வாழ்க்கை அளிக்கும் அனுபவங்கள் எல்லைக்குட்பட்டவை, இலக்கியம் பல்லாயிரம் பேரின் அனுபவங்களை ஒருவர் அடைய வழிவகுக்கிறது. காலத்தால் கடந்துபோன வாழ்க்கையை நாம் வாழவும் நாளை நிகழவிருக்கும் வாழ்க்கையைச் சென்றடைந்துவிடவும் உதவுகிறது. இப்படிப்பட்ட இலக்கியம் இன்றும் இளைஞர்களுக்கு மத்தியில் மிக சிறப்பாக வளர்ந்து வருவது மிகவும் பெருமை பட வேண்டிய விஷியமாகும். இந்த வளர்ச்சி இதோடு நின்றுவிடாமல் இன்னும் வளர்ந்து கொண்டே போக வேண்டும்.

# References


Agaram. (2018). “ilakkiya Payana Ninaivalaigal” Kuala Lumpur, Vijay Printers.

Ilakkuvanar, Ci. (2011). *Ilakkiyam Kurum Tamilar Vaalviyal (Sanga Kaalam).* Chennai: Ilkkuvanar Ilakkiya Inaiyam.

Ilanko, pulavar. (2017). *“Eelathil siruvar ilakkiyam anrum inrum”* jeevanathi jurnal (Vol. 108, pp.3-10)

Kuppusamy, R (1998). *Tamil Ilakkiyamum Naamum.* Madurai : Madurai Tamizhaalaji Publishers. First Edition.

Lawrence Neuman. (2007). Basics of Social Research Qualitative And Quantitative Approches. USA: Pearson.

Maniam, K. (1993). *Theesiya Ilakkiya Valarchikku eluththaalargalin pangalippu Journal of Indian Studies (india aaivithazh)*, *5*, 143-149.

Megarajah, T. (2019). *Naveena tamil kavithai valarchiyil barathiyin selvaakku (baarathiyin ilakkiya padivangalai munvaiththal) Journal of Tamil Peraivu (Tamil Peravai aaivithazh)*, *8*(2), 127-137.

Ramaiya, M . (1996). *Tamilar Naagarikamum Panpaadum.* Chennai : Aintinaip Pathippagam.

Singaravelu.S (2019). Malaya Palkalaikazhagam Tamil Peravai Varalaaru, http://tls.my/our-story/

Thendral. (2020). *“Iyalin Thodarpaathai”* Jeevanathi jurnal. (Vol. 20, pp.29)

Thandaayutham, R. (2017). *Tharkaala Tamil Ilakkiyam*. Chennai: PaariNilayam

Vallikannan. (1977). *Puthukavithaiyin Thottramum Valarchiyum.* Medras: Ezhuthu Prasuram.

Vaiyaapuri.S. (1969). *Tamil Ilakkiyam.* Chennai *:* Aintinaip Pathippagam

Veeraputhran, V., & Mani, M. (2020). 2000-2009*–aam aadugalil velivantha malaysia Singapore siru-kathaigalil kaiyaalappatta pinnokku, nanavoodai, kaditha utthigal oru paarvai* .(The writing techniques employed in selected short stories in Malaysia and Singapore from years 2000 to 2009: A Review). *Journal of Tamil Peraivu (Tamil Peravai aaivithazh)*, *9*(2), 24-30.

Venkadeshwaran, S (2017). *Tamilargalum Naanum.* Madurai : Madurai Tamizhaalaji Publishers. First Edition

# கல்வி எனது உரிமை
# Education is My Right

அ. கார்ட்டர் ஆரோக்கியராஜ் / A. Kartter Arokiaraj[1]

**Abstract**

In the words of our ancestral son of soil, Mr.Muthiah," Students who handle books today are the rulers of our nation tomorrow". The world always values the educated community. However, education, which is capable of eradicating the fear of individuals, has been chained and suppressed by selfish miscreants; it has become an exclusively accessible asset to the rich and partiality prevails everywhere. Commercialism of education has changed the scenario to the point of denoting education as an unattainable dream for the poor. The transparent truth is that the talented and potential youths, who are the rays of the future, face many hurdles and they struggle for their survival. They are in desperate need of education to elevate their social status and hinder discrimination. Education should not be a commodity to be purchased but a right to be cherished and used in social progression since the ultimate consequence of acquiring education is to have a strong and nurtured self-confidence. These issues about education have been enlightened in the poems published in SARPRASATHA THOOTHAN, a weekly magazine. This research aims to analyse these poems in detail.

Date of submission: 2020-09-26
Date of acceptance: 2020-12-20
Date of Publication: 2021-07-20
Corresponding author's Name: A. Kartter Arokiaraj
Email: jibinjzy@gmail.com

**Key Words:** ancestral son, selfish miscreants, commercialism of education, talented and potential youth, strengthen self-confidence.

## முன்னுரை

இன்றைய சூழ்நிலையில் கல்வி இளைஞர்களைக் கடனாளியாக்குகிறதே தவிர முதலாளியாக்குவதில்லை. அந்தக் கடன் சுமை அவர்களிடத்தில் ஒரு குற்ற உணர்வை ஏற்படுத்துகிறது என்பது ஒரு சமூக யதார்த்தமாகிறது. இதற்கு இன்றைய கல்வி முறையில் காசுபுகுந்தது மிகப்பெரிய காரணமாக அமைகின்றது. அரசின் சட்டங்கள் இங்கு மறைக்கப்படுகின்றனவா? அல்லது ஏட்டளவில் தான் சட்டங்களா? என்ற கேள்வியும் எழுகின்றது. சமூகத்தில் நடக்கும் இத்தகு நிலைகளைக் கண்டறிந்து குறைபாடுகளைக் களைந்திடுதல் ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு வலு சேர்க்கும். அனைவருக்கும் கல்வி பொது; என்றும் கல்வி ஒருவரின் உரிமை என்றும் சட்டத்தின் வழி நிறுவிடக் கடமைப்பட்டவர்களாகின்றோம். வானம் போன்ற வாழ்வில் வானவில்லாய் வந்து போகின்ற வாலிபப் பருவம், எதிர்காலத்தை நிர்ணயிக்கும் 'வலிமைமிக்க பருவம்' என்பதை அழுத்தமாகப் பதியச் செய்வதில் சமூகத்திற்குத் தலையாய கடமை உள்ளது.

## ஆய்வு நெறிமுறை

இவ்வாய்வானது அறிவியல் ஆய்வு நெறிமுறை (Scientific Method) அடிப்படையில் அமைந்துள்ளது. இங்ஙனம் கூர்ந்து நோக்குவதும், அதனால் நாம் கண்ட தகவற் புள்ளிகளைத் தொகுப்பதும் அவையனைத்தினூடே மறைந்திருக்கும் ஒரு பொதுமையைக் (generalization)

[1] The author is a Teacher at St.Michael's HSS, Coimbatore, TN, Inida. jibinjzy@gmail.com

காண்பதும் அதனால் ஒரு விதியினை (நீணீஷ்) நாம் பெறுவதும் அறிவியலாய்வின் வளர்ச்சிப்படிகளாகும்.

அறிவியல் முறையே எல்லோராலும் பின்பற்றப்படுகிறது. எனவே செய்முறைக்குறிப்பு (skeleton of procedure) ஒன்று ஒவ்வோராய்விலும் இருந்தாக வேண்டும். அக்குறிப்பு ஆய்வாளன் நன்கு செயல்படுவதற்கு உதவும். பிற ஆய்வாளர்கள் தொட்டுத் தொடங்குவதற்கு வழிகாட்டும். அப்படிப்பட்ட செய்முறை கீழ்க்கண்ட படிநிலைகளைக் கொண்டதென்பர்.

1. ஆய்விற்குத் தேவையான கருதுகோளை (hypothesis) முறைப்படுத்திக் கூறுதல் (formulation).
2. நன்றாகக் கவனித்துத் தொகுக்கப்பட்ட மெய்ம்மைகளைப் பதிவு செய்தல் (collection and recording facts of observation).
3. மேற்கண்ட மெய்ம்மைகளைப் பகுப்பாய்தல் (classification).
4. அவ்விதிகளைப் பொதுமைப்படுத்திப் பார்த்துக் கிடைக்கும் முடிபுகளைக் கூறுதல் (generalization).

இலக்கியத்திலும் அறிவியலாய்வு முறையைப் பின்பற்றிப் பல புதுமைகளைச் செய்து வருவதை ஒப்பீட்டுத் துறையில் இன்று காண்கிறோம்.

### கல்வி குறித்து மகாத்மா காந்தியின் கூற்று

சரியான கல்வி என்பது என்ன என்று மக்கள் அறியாது இருப்பதுதான் உண்மையான இடர்பாடு. நாம் நிலத்தை மதிப்பிடுவது போலவும், பங்குச்சந்தையில் உள்ள பங்குகளைக் கணக்கிடுவது போலவும்தான் கல்வியையும் மதிப்பிடுகிறோம். மாணவன் கூடுதலாகப் பொருளீட்டக் கூடிய ஒரு வகைக் கல்வியை மட்டும்தான் கொடுக்க விரும்புகிறோம். கற்றவர்களின் நடத்தையை உயர்த்தும் வகையை நாம் ஒருபோதும் சிந்திப்பது இல்லை என்று கூறியுள்ளார்.

### கல்வி குறித்துப் பெரியாரின் கூற்று

பெற்றோர்களும் தங்கள் குழந்தைகளைக் கல்வி கற்க வைப்பதன் காரணம், தன் பிள்ளை புத்திசாலி ஆகவேண்டும், அறிவாளியாக வேண்டும் என்று வெளியில் மட்டும் கூறுவார்களே தவிர, உள்நோக்கமெல்லாம் பையன் உத்தியோகத்திற்குப் போய்ச் சம்பாதித்தால் நம் வாழ்க்கையைக் கஷ்டமன்றிக் கழிக்கலாம் என்பதற்குத்தான்." (தொ.2, பக்.1170)

கல்வி பொருளீட்டுதல் என்ற வகையிலேயே பெரும்பாலும் போதிக்கலாகின்றது. அதனால் கல்விச் சந்தையில் முதலீடு செய்துவிட்டு, கற்ற கல்விக்கேற்ற வேலையை எதிர்நோக்கி இளைய தலைமுறையினர் ஏங்கித் தவிப்பது காணலாம். கல்வியறிவு மட்டுமல்ல; பகுத்தறிவும், பிறருக்கு ஊறு விளைவிக்காத நல்லறிவும் மனிதனின் நல்வாழ்வுக்குத் தேவை என்பதும் நாம் இளையோர்க்குக் கற்பிக்க வேண்டியனவாகும். அவ்வக்காலங்களில் சமூகத்தில் புரையோடிக் கொண்டிருக்கும் இத்தகைய அவலநிலைகளைக் கவிஞர்கள் தங்களின் கவிதைகளின் மூலம் இடித்துரைக்கின்றனர். அங்ஙனம் கோவை மறைமாவட்டக் கத்தோலிக்க வார இதழான சற்பிரசாத தூதனில் வெளிவந்த கவிதைகள் சமூக அவலநிலையைச் சுட்டிக் காண்பித்து அவற்றை எவ்வாறு களைந்திடலாம் என்றும் இளையோர்க்கு தன்னம்பிக்கையைத் தூண்டுவதாகவும் இவ்வாய்வு அமைகின்றது.

### ஓசையில்லாத ஒரு புரட்சி :

*அறுவடைக்காலம்*

*"பட்டதாரியாய்*

*உலாவரும் பசுமைக் காட்சி காண*

*தேய்கின்ற நிலவாய்*

*விலா எலும்பு புடைக்க*

*எத்தனை வயிறுகள்*

*பட்டினி கிடக்க*

*எத்தனை விழிகள் இரத்தம் சிந்த?...*

*ஓ..! அறுவடைக்காலம் நடக்கிறது*

*நடக்கட்டும்"*

(மரியவிசுவாசம், 1986, றி.4)

சுதந்திர இந்தியாவில் பெற்றோர் தம் தலைமுறையில் முதல் பட்டதாரியை உருவாக்கிட, தம் தாழ்நிலை உயர்ந்திட பிள்ளைகளைப் பள்ளி, கல்லூரிகளுக்கு அனுப்பிட முனைகின்றனர். வயிற்றுப் பிழைப்புக்கே அல்லாடும் ஏழைகளுக்கு கனவிலேயே கல்வி முடிந்துவிடுகிறது. எல்.கே.ஜி முதல் உயர்கல்வி வரை கல்வி இன்று வணிகமயமாக்கப்பட்டுக் கிடக்கிறது.

கல்வி கற்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்த அதிவீரராம பாண்டியர் பிச்சையெடுத்தேனும் கற்க வேண்டுமென்கிறார்.

*"கற்கை நன்றே கற்கை நன்றே*

*பிச்சை புகினும் கற்கை நன்றே" (வேற்கை 35)*

என்ற வரிகள் வறுமையில் வாடினாலும் கல்வி கற்பதை விடுதல் கூடாது, பிச்சை எடுத்தாவது நற்கல்வியை அடைதல் வேண்டும் என்று கூறுவது நோக்கத்தக்கது.

தனியார் பள்ளி, கல்லூரிகள் மக்களிடம் பணம் பறிக்கும் செயலிலேயே பல நேரங்களில் ஈடுபடுகின்றனர். இதற்கு அரசுப் பள்ளிக்கல்வியின் திருப்தியற்ற தரமே முதற்காரணியாக அமைகின்றது. இதனால் ஏழைகளின் கல்வி பாதியிலேயே நின்றுவிடுகின்றது. தங்களின் நிலை மாறிட ஏதேனும் வழி பிறந்திடாதோ என்ற பெற்றோரின் வேதனையைக் கவிஞர் தம் வரிகளில் கொட்டித்தீர்க்கிறார்.

**பள்ளிக்கல்வியின் திருப்தியற்ற தரத்திற்கு பல காரணிகள்**

1. அதிக அளவிலான பள்ளிகள், பள்ளிக்கென பரிந்துரைக்கப்பட்டிருக்கின்ற விதிகளையும், தரத்தையும் பின்பற்றாமல் இருத்தல்.
2. மாணவர், ஆசிரியர் வராதிருத்தல்.
3. ஆசிரியரின் தூண்டுதலுக்கும் பயிற்சிக்குமான அதிக இடைவெளி.
4. ஆசிரியரின் தரம் மற்றும் செயல்பாடுகளில் குறைகளை உண்டு பண்ணுகிறது.
5. கல்வியில் செய்தி மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதில் உள்ள நிதானமான முன்னேற்றம்.
6. செயல்பாடுகளைக் கட்டுப்படுத்துவதிலும் மேற்பார்வையிடுவதிலும் போதிய கவனம் செலுத்தாமை.

நல்ல கல்வியினை வழங்குவதில் அரசு அமைப்பில் உள்ள பள்ளிகள் தோல்வியடைந்திருக்கிறது என்ற எண்ணம் அதிக அளவிலான தனியார் பள்ளிகளின் நுழைவை அதிகரித்திருக்கிறது. அவற்றில் பல பள்ளிகளில் போதிய அளவு அகக்கட்டமைப்புகள், கற்றல் சூழ்நிலை மற்றும் திறன்வாய்ந்த ஆசிரியர்கள் இல்லை. (வரைவு NEP 2016 உள்ளீடுகள் P.14)

**கல்வி உரிமைச் சட்டம்**

ஓசையில்லாத ஒரு புரட்சிக்கு உதவிக்கரம் நீட்டியுள்ளது உச்சநீதிமன்றம். கல்வி உரிமைச் சட்டம் செல்லும் என்று அது அண்மையில் தீர்ப்பளித்திருக்கிறது. அதன் மூலம் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள பிரிவினருக்கு 25 சதவிகித இடங்களை அவர்களிடம் கட்டணம் பெறாமல் ஒதுக்க வேண்டும் என்றும் அறிவித்திருக்கிறது. இது மத்திய, மாநில மற்றும் எல்லாக் கல்வி அமைப்புகளுக்கும் கீழ் அங்கீகாரம் பெற்ற பள்ளிகளுக்கும் பொருந்தும் எனவும் அது தெரிவிக்கிறது. இதன் காரணமாக சமூகத்தில் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள மாணவர்கள், வசதிமிக்க மாணவர்கள் பெறும் கல்வியை அதே வகுப்பறையில் அவர்களோடு சரிநிகர் சமானமாக அமர்ந்து பெற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. காசுக்கேற்ற சரக்கல்ல கல்வி அது வாழ்வதற்கான உரிமை என்பதை அழுத்தம் திருத்தமாக உறுதி செய்திருக்கிறது உச்சநீதிமன்றம்.

(புதிய தலைமுறை இதழ், 26.04.2012, P.3)

**தடங்களே! வெற்றித்தடங்கள்**

**சோதனையாளர்கள்**

*"கோவிலான*

*கல்லூரிதனை*

*சந்தைக் காடாக்கி விட்டு*

*வயதுகளை வளர வைத்து*

*பட்டமெனும்*

*பரிவட்டத்தோடு*

*பவனி வருகிறோம்*

*நாங்கள் யார்?*

*ஏதாவது சாதனையாளர்களா?*
*(கோட்டை ஜேசீஸ், 1996, P.4)*

கல்லூரிக்குச் செல்வதை இலட்சியமாகக் கொண்டு, கோவிலாக நினைத்த கல்லூரிக்குச் சென்றால் அங்கு கல்வி சந்தைப்படுத்தப்பட்டுக் கிடக்கின்றது. கல்வியானது விலைபேசி விற்கப்படுகிறது. யார் அதிகம் காசு கொடுக்கிறார்களோ அவர்களுக்கே முன்னுரிமை என்ற நிலை இன்று நிதர்சன உண்மையே. இவற்றையெல்லாம் மீறி கல்வி கிடைத்தாலும் பட்டம் என்னவோ பரிவட்டமே ! ஆனால் படிப்பிற்கு ஏற்ற வேலை கிடைத்ததா என்றால் இல்லை. தவறு எங்கு நடந்தது என்று யார் கண்டுபிடிப்பது. காசுக்கேற்ற கல்வி, விழிப்புணர்வு இல்லாத கல்வி, கற்கும் கல்விக்கும் நிகழ்கால வேலைவாய்ப்புகளுக்கும் தொடர்பின்மை, தன் நாட்டுக் குடிமக்களுக்கு உத்திரவாதமான அடிப்படை உரிமை போன்ற காரணிகளுக்குத் தெளிவு கொடுக்கவேண்டியது நல்லரசின் கடமையல்லவோ. அரசு தன் கடமையில் தவறினாலும் சாமானிய மக்கள் தம் வாழ்வில் என்றேனும் ஒளி பிறக்காதா என்று சாதிக்கக் காத்து நிற்கின்றனர். தகுதி, திறமை இருக்கும் இளைய தலைமுறையினருக்கு வேலைவாய்ப்பினை வழங்குவது நல் அரசின் கடமையே! என்ற ஏக்க வரிகள் கவிதையில் வெளிப்படுவது காணலாம்.

*“வேலை கொடு*

*அல்லது*

*நிவாரணம் கொடு*

*என்று*

*வீதியெல்லாம் முழங்கி வரும்*

*இளைஞர்களுக்கு*

*அவர்கள்*

*பதில் சொல்ல வேண்டியிருக்கும்”*
*(அந்தோணி செல்வக்குமார், 2013, P.8)*

வேலையில்லா இந்த இளைஞர்கள் சிம்மாசனம் கேட்கவில்லை. வேலை என்ற ஊன்றுகோல் கேட்டுத்தான் ஓலமிடுகிறார்கள். அவர்கள் இப்போது வாழ்வதெல்லாம் வாக்காளர் பட்டியலில் மட்டும் தான். அதிலும் சிலர் விடுபடப்போகிறார்கள். இத்தகைய நிலைமைக்கெல்லாம் காரணமாக இருக்கக்கூடியவர்கள் ஆட்சியாளர்களே என்று எச்சரிக்கை விடுப்பதாய் அமைவது காணலாம்.

*“நம்பிக்கை நார்மட்டும்*

*நம் கையில் இருந்துவிட்டால்*

*உதிர்ந்த பூக்களெல்லாம்*

*ஒவ்வொன்றாய் வந்து*

*ஒட்டிக் கொள்ளும்!*

*கழுத்தில் வெற்றி*

*மாலையாகவும்*

*சுற்றிக் கொள்ளும் (இறையன்பு I.A.S., 2016, P.67)*

தடைகளைத் தகர்த்தெறிந்து வெற்றிப்படிக்கற்களாக மாற்றுவதற்கும்; தடங்கல்களை வெற்றித்தடங்களாக மாற்றுவதற்கும் தன்னம்பிக்கை ஒன்றே போதும் என்று இறையன்பு அவர்கள் தன் வார்த்தைகளில் வலுவூட்டுகிறார்.

**மனது வைத்தால் மலையும் நகரும்**

**பட்டதாரி ஏழைகள்**

*“இவர்கள்*

*இல்லாத ஊருக்குப்*

*போகாத பேருந்தில் ஏறிக்கொண்டு*

*இறங்கவா? இறங்கவா?*

*என்று யோசித்துக் கொண்டிருக்கும்*

*பேதைகளாகிப் போனவர்கள்*

*இவர்கள்*

*பல்கலைக்கழகங்கள்*

*வேண்டாம் என்று துப்பிய எச்சில்களானார்கள்*

*இவர்களின் இலக்குகள் இடம் தெரியாமலேயே*

*இல்லாது போய்விட்டது." (கோவை நிலவன், 1989, றி.5)*

இன்றைய படித்த இளைஞர்களின் வாழ்க்கை துன்ப துயரம் நிறைந்ததாக இருக்கக் காரணம் வேலைவாய்ப்பின்மையே. இதனால் சிலர் இச்சமூகத்தின் மீது கோபமும், சீற்றமும் உடையவர்களாக மாறிவிடுகின்றனர். இந்தியாவின் எந்த ஓரத்திலும் இவர்களை எப்பொழுதும் சந்திக்கலாம். வறட்சி மிகுந்த முகம், வெறிச்சோடிய விழிகள், நம்பிக்கையிழந்த நடை என இலக்குகள் தெரியாமல் அலைபவர்கள் என இவர்களைக் கவிஞர் இனம் காட்டுகிறார்.

மனிதன் சுதந்திரமாக வாழ்வதற்குப் படைக்கப்பட்டுள்ளான். இந்த நிலையில் ஒரு மனிதன் இன்னொரு மனிதனையோ, ஒரு அரசு குடிமக்களையோ, ஒரு இனம் இன்னொரு இனத்தையோ, ஒரு நாடு இன்னொரு நாட்டையோ ஒடுக்குவதற்கு எந்தவிதமான உரிமையும் வழங்கப்படவில்லை. எனவே அவ்வாறு ஒடுக்க முனைந்தால் அதனை எதிர்த்துப் போராடும் உரிமையும் ஒடுக்கப்படுவோருக்கு உண்டு. (தேவசகாயம், 2000, றி.3)

"வேகத்தடைகள் ஓட்டத்தை மட்டுப்படுத்துகின்றன; மனத்தடைகளோ வெற்றியைக் கட்டுப்படுத்துகின்றன".

"தன்னினும் வலிய யானையைப் பாகன் வழிநடத்துவது போல, நம்மினும் பெரிய தடைகளை நாம் நகர்த்த முடியும்".

என்ற வரிகளில் இளைஞர்கள் செல்ல வேண்டிய பாதையைச் சீரமைக்கின்றார்; அத்துடன் மனது வைத்தால் மலையைக் கூட நகர்த்தலாம் என்றும் மரபின் மைந்தன் முத்தையா கூறுவது இளைஞர்களுக்க வெளிச்சம் காட்டுவதாய் அமைவது காணமுடிகிறது (முத்தையா, 2011, P.58).

**நம்பிக்கை உரம் :**

**கண்ணில் தெரியுது புதுயுகம்**

*"போகட்டும் விடு*
*கண்ணீரில் கரைந்து போன*
*நேற்றைய காலத்தின்*
*நிழற் கனவுகளை*
*நாளைய விடியலுக்கு*
*நம்பிக்கை உரமாக்குவோம்!*
*சுகங்களைச் சுமந்து கொண்டு*
*எதிரே நின்று முறுவலிக்கும்*
*புன்னகை வினாடிகளின்*
*கரம் பற்றிக்*
*கை குலுக்குவோம்!*
*அலட்சியங்களால்*
*அஸ்தமனமாகிப் போன*
*இளைய மனங்களை*
*உதய நிலவுகளின்*
*தர்சனைப் பூமியாக்குவோம்!*
*சரித்திரங்களைப்*
*படிப்பது மட்டுமல்ல*
*படைக்கவும் முடியுமென்பதைச்*
*சாதித்துக் காட்டுவோம்!*
*நம்பிக்கையின் அடையாளமாய்*
*உயர வேண்டிய கைகள்*
*நடுக்கத்தோடு*
*மரணத்தின் வாசலைத்*
*தட்டிக் கொண்டு இருப்பதா? (கிளேடர் கென்னடி, 1989, P.7275)*

மலேரியா, டெங்கு போன்ற நோய்கள் உடலைப் பாதிக்கும். ஆனால், மதுவும், கஞ் சாவும் உடலோடு சேர்ந்து ஆன்மாவையும் பாதிக்கும் என்று கூறிய காந்தியடிகள், "நான் இந்திய நாட்டில் ஒரு மணி நேரமாவது சர்வாதிகாரியாக வாய்ப்புக் கிடைத்தால் அந்த நேரத்திற்குள் நாடு முழுவதிலும் மதுவிலக்கை அமலுக்குக் கொண்டு வந்துவிடுவேன்" என்றார் (ஜான் பெல்லார்மின், 2000, P.189)

"மண்ணில் புதைக்கப்பட்ட விதைகள் தான் முளைக்கும். எண்ணங்களும் விதைகளைப் போன்றவை தான். அவை உள்ளம் என்ற மண்ணில் நட்டு, ஊக்கம் என்ற உரமிட்டு, செய்கை என்ற நீரை ஊற்றி வந்தால் அவை

*சாதனைகள் என்ற பெரிய செடிகளாக உருவெடுக்கும் என்று வெற்றிநோக்கின் வழி பி.எஸ்.ஆர்.ராவ் நெஞ்சில் உரமிடுவது நோக்கத்தக்கது.*

**தொலைநோக்கு இலக்குகளும் நோக்கங்களும்**

*தரமான மற்றும் பொருத்தமான கல்வியைப் பேணி வளர்ப்பதுதான் ஒட்டுமொத்த இலக்காக இருக்கிறது. இதில் இந்தியக் கல்வி அமைப்பின் நம்பகத் தன்மையை அதிகரிப்பதும், பள்ளி மற்றும் உயர் கல்வி பயின்ற மாணவர்களிடையே பணிக்குச் செல்வதற்கான தகுதியை மேம்படுத்துவதும், கல்வியை அனைவருக்கும், அதாவது குழந்தைப்பருவக் கல்வியிலிருந்து கல்லூரிக்கல்வி வரை, சமநிலையில் எளிதில் கிடைப்பதை உறுதிசெய்வதும், அதில் தொழில்நுட்ப மற்றும் தொழிற்படிப்பும் பயிற்சியும் மேலும் அவர்களுக்கு வாழ்நாள் முழுவதற்குமான கற்றல் வாய்ப்புகளை வழங்குதலும், சமூகத்தின் அனைத்து பிரிவினருக்கும் கல்விக்கான வாய்ப்புகளைக் கிடைக்கச் செய்வதை உறுதி செய்வதும் அடங்கும் (வரைவு* NEP *2016 உள்ளீடுகள்,* P.*29).*

**முடிவுரை**

*கல்வியறிவானது நுண்ணறிவு பெறுவதற்கு மட்டுமல்லாது இப்பிறவிக்கு நன்மை சேர்க்கும் செல்வத்தினைப் பெறுவதற்கும், மறுபிறவிக்கு இன்பத்தினைச் சேர்க்கும் அறத்தினைச் செய்வதற்கும் தேவையாகின்றது. "ஒவ்வொரு தோல்வியும் ஒவ்வொரு பின்னடைவும் அதற்கு இணையானது அல்லது அதைவிடவும்*

*அதிகமான ஆதாயத்தின் விதையாகத்தான் விழுகிறது" (நெப்போலியன் ஹில்,* P.*70) என்பதை இளைஞர்கள் அறிந்து, இன்றைய சமுதாயத்திற்குத் தேவையான பொறுப்பினை உணர்ந்து வாழ்க்கையை வாழ்ந்து தான் பார்ப்போமே! என்ற தன்னம்பிக்கையோடு விடாமுயற்சி செய்தால் கல்விக்குத் தடையேதும் இல்லை. உலகமே உன் வசம் என்பதில் வியப்பேதுமில்லை இளைஞனே!*

## References


Antony Selvakumar, S, (2013). *Geetham Paadiya Vanampadikkuyil*). Madurai: Tamiliyarpuzham.

Devasagayam, E. (2002). *Manitha Urimaik Kalvi Manavar Kaiyeedu.* Manitha Urimaikkalvi Nilayam.

Draft NEP. *Ullidukal* (2016). Indian Govt.: Human Resources Department.

Draft NEP. *Ullidukal* (2016). Indian Govt.: Human Resources Department.

Erode Maria Visuvasam. *Aaruvadaikkalam* (1986). Coimbatore: St. Joseph's Press.

Gleder Kennady, K. (1989). *Kannil Theriyuthu Pudhu Yugam*. Coimbatore: St. Joseph's Press.

Irai Anbu, V. I.A.S. (2016). *Vazhkaiye Oru Vazhipadu.* Coimbatore: Vijaya Pathippagam.

John Bellourmin. (2000). *Idithu Thagarkkave*.

Kottai Jesis. *Sodhanaiyalargal* (1980). Coimbatore: St. Joseph's Press.

Kovai Nilavan. (1986). *Pattathari Yezhaika.l* Coimbatore: St. Joseph's Press.

Marabin Maindan Muthaiah. (2011). *Manathu Vaithal Malaiyai Nagarthalam.* Coimbatore: Vijaya Pathippagam.

Neppoliyan Hill. *Vazhkai Yenna Vallnthuparkkalam*.

*Puthia Thalaimurai Ithal* (2012).

Rao, P.S.R., *Vettri Nokku*.

# மலேசிய இந்தியத் தொன்மைத் தொடர்புகளும் தற்கால அடையாளங்களும்

# Early Contacts between Malaysia & India and Malaysian Indians' Contemporary Identities

பேராசிரியர் முனைவர் மு.இராசேந்திரன் / Professor Dr. M. Rajantheran[1]

முனைவர் க.சில்லாழி / Dr K.Silllalee[2]

க.மதனா / K.Matana[3]

Date of submission: 2021-05-2
Date of acceptance: 2021-05-20
Date of Publication: 2021-07-20
Corresponding author's Name:
Dr. K.Silllalee
Email: silllalee@um.edu.my

## Abstract

Archaeologists claim that the cultural relationship between Southeast Asia and Indian Subcontinent had existed in times even before Christ. Through the process known as Indianization, the Southeast Asians adopted selective elements of the Indian culture that could be infused into their lifestyle. The pre-historic Indian-Malaya cultural relation had its roots in sailors who came to Malaya. India shared a dominant commercial link with the Graeco-Roman Empire and when the trade needs of this empire could not be met by the Indian traders due to the lack of goods on their part, they started procuring the commodities required by the Graeco-Roman Empire from Southeast Asian countries, especially from Malaya. *Kuala Merbok* in Kedah was the entry route to Malaya for many South Indian traders, and they widened their trade activities all over the country, which paved the way for the Indian cultural elements to penetrate into the Malayan population. In addition, the Buddhist monks and *Brahmins* who served the ancient Malayan kings aided the spread of Indian cultural aspects into the local societies as well. The influence of Indian and Buddhist religious teachings and beliefs structured the government policies of the fledgling Malaya. However, these oldest cultural relations should not be used as the identity markers of the contemporary Malaysian Tamils. The present Malaysian Tamil community started their historical root in the country as immigrants in the late 18th and the early 19th centuries, who served as labourers in rubber plantations, government staff, and businessmen during the British colonization in Malaya. Still, the prominent role of Tamil-Indian civilization in the cultural advancement of early Malayans could not be denied or avoided.

**Key Words:** Indianization, Malaysian Indians, Indian early trade, South East Asia, Hindu-Buddha

## முன்னுரை

கிருத்துவுக்கு சில நூற்றாண்டுகளுக்கு முன்பே தென்கிழக்காசியாவிற்கும் இந்தியத் துணைக்கண்டத்திற்கும் இடையே பண்பாட்டுத் தொடர்புகள் ஏற்பட்டிருக்க வேண்டும் என்பது தொல்லியல் ஆய்வாளர்களின் கருத்தாக உள்ளது (Hall, 1968, p.12). தென்கிழக்காசிய மக்கள் தங்களின்

[1] The author is a Professor in the Department of Indian Studies, University of Malaya, Kuala Lumpur, Malaysia. rajantheran@um.edu.my

[2] The author is a Senior Lecturer in the Department of Indian Studies, University of Malaya, Kuala Lumpur, Malaysia. silllalee@um.edu.my

[3]The author is a Teacher in Sekolah Jenis Kebangsaan Tamil Taman Tun Aminah, Johor, Malaysia. matana_k@yahoo.com

வாழ்வியல் முறைக்கு ஏற்ப இந்தியர்களின் தேர்ந்தெடுக்கப்பட்டப் பண்பாட்டுக் கூறுகளை ஏற்றுக் கொண்டுள்ளமையைப் பொதுவில் இந்தியமயமாக்குதல் (Indianization) எனக் குறிப்பிடுவர் (Coedes, 1968, pp.14-35). இக்கட்டுரையில் மலாயா இந்தியத் தொண்மைத் தொடர்புகளும், மலேசிய இந்தியர்களின் தற்கால அடையாளங்களும் மட்டுமே ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றன.

## தொடக்க காலத் தொடர்புகள்

கடலோடிகளின் வாயிலாகவே இந்திய மலாயாவிற்குமான வரலாற்றுக்கு முந்தைய (Pre-History) தொடர்புகள் தொடங்கியது என அறியப்படுகின்றது. இந்தியாவிற்கும் கிரேக்கரோமபுரிப் பேரரசுக்கும் (Graeco-Roman Empire) இடையே வலுபெற்றிருந்த வியாபாரத் தொடர்பே இந்திய மலாயாவிற்குமான வியாபாரத் தொடர்புகள் ஏற்பட அடிப்படைக் காரணமாக அமைந்தது (Basham, 2002, pp.226-230 & Subramaniam, 1966, pp.235-236).

ரோமாபுரியின் மேட்டுக்குடி மக்கள் இந்தியப் பொருள்களின் மீது பெருமோகம் கொண்டு அதற்காக மிக அதிகமான விலையையும் கொடுத்தனர் (Pliny, 1960, 14: 28-29). இவற்றுள் வாசனைத் திரவியங்கள், நவரத்திணக்கற்கள், கைவினைப்பொருள்கள், யானைத் தந்தம், மிருகங்கள், பறவைகள், நூல் ஆடைகள் எனப் பலதரப்பட்ட பொருட்களும் அடங்கும் (Smith, 1924, pp.400; Kanagasabhai, 1956, pp.34-35 & Subramanian, 1966, pp.235-236). கிரேக்க ரோமானியர்கள் தங்கம், வெள்ளி மற்றும் செப்பு நாணயங்களை அதற்கான பணமாகச் செலுத்தியுள்ளனர். எனவே இந்தியாவிற்கு அதிகமான அந்நியச் செலாவணியாக ரோமானியத் தங்க நாணயங்கள் கிடைத்தன. இது ரோமாபுரியின் பொருளாதார வீழ்ச்சிக்கு வித்திட்ட காரணத்தால் கி.பி.79ஆம் ஆண்டு ரோமப் பேரரசர் வெஸ்பாசியன் (Vespasian) இந்திய வியாபாரிகளுடன் தங்க நாணயத்தில் அந்நிய செலாவணி கூடாது எனத் தடை விதித்தார் (Coedes, 1968, pp.19-20).

சுவர்ணதுவீபா மற்றும் சுவர்ணபூமி எனும் குறிப்பு பழைய இந்திய இலக்கியங்களில் வருகிறது. 'சுவர்ண' என்பது தங்கத்தைக் குறிக்கும்; 'துவீபா' என்பது தீபகற்பத்தைக் குறிக்கும்; 'பூமி' என்பது நிலப்பகுதி அல்லது நாட்டைக் குறிக்கும். எனவே 'சுவர்ணதுவீபா' என்பது 'தங்க தீபகற்பம்' என்றும் 'சுவர்ணபூமி' என்பது தங்க நிலபப்பகுதி / நாடு என்றும் பொருள் கொள்ள வேண்டும் (Nilakanta Sastri, 1949, pp.12 & Wheatley, 1966, pp.179). இதே கருத்தைக் கொண்ட Khryse Khersones எனும் யுனானி மொழிச்சொல் கி.பி.2ஆம் நூற்றாண்டின் தாளமியின் (Ptolemy) பூகோள நூலிலும், பிலினியின் (Pliny) Natural History எனும் நூலிலும் பொம்போனியஸ் மேலா எனும் ரோமானிய வரலாற்று அறிஞர் தமது De Choragraphia எனும் நூலிலும், The Periplus எனும் நூலும் கூட 'Chryse' என்ற இக்குறிப்பு வருகிறது (Mccrindle, 1885, p.197; Subramanian, 1966, p.2 & Wheatley, 1966, p177). இதனால் இங்குத் தங்கம் மட்டுமே கிடைத்தது என்பது பொருளாகாது; மாறாக தங்கத்திற்கு நிகரான மதிப்புடைய வாசனைத் திரவியங்கள் மற்றும் பிற பொருள்களும் இவ்விடம் கிடைத்தன என்பதே குறிப்பாகும். இந்த வர்த்தக மேம்பாட்டில் கிரேக்க ரோமானியர்களுடனான வர்த்தகத் தேவைகளை ஈடுகட்டப் போதுமான சரக்குகள் இல்லாமையால் இந்திய வியாபாரிகள் தென்கிழக்காசியாவில் குறிப்பாக மலாயாவின் பக்கம் தங்கள் கவனத்தைத் திருப்பினர்.

## தமிழ் வணிகர்களின் பங்களிப்பு

கிரேக்கரோமானியப் பேரரசுக்கும் தென்கிழக்காசியாவிற்கும் மத்தியில் இடைத்தரகர்களைப் போல இந்திய வர்த்தகர்கள் செயல்பட்டுப் பெரும் பொருள் ஈட்டினர் (Rajantheran, 1999, pp.37-41). தென்கிழக்காசியாவின் பல பகுதிகளுக்கு அங்கிருந்து பெறப்படும் பொருட்களின் அடிப்படையிலேயே பெயர் சூட்டப்பட்டுள்ளது. உதாரணமாக கற்பூரம் கிடைக்கும் இடம் 'கற்பூரதுவீபா' (போர்னியோவைக் குறிப்பது), 'யாவதுவீபா' பார்லி எனப்படும் ஒருவகைத் தானியம் கிடைக்கும் இடம் (ஜாவா பகுதியைக்

குறித்தது), ஸ்வர்ணதுவீபா / ஸ்வர்ணபூமி தங்கம் மற்றும் தங்கத்திற்கு ஈடான வாசனைத் திரவியங்கள் கிடைக்கும் இடம் (சுமத்திரா மற்றும் தீபகற்ப மலாயாவைக் குறித்தது) (Wheatley, 1966, pp.179-184).

**இந்த வியாபாரத் தொடர்பு குறித்த தடயங்கள் கீழ்வருமாறு:**

- கி.பி.2 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சங்க இலக்கிய நூலான பட்டிணப்பலையில் (191 வரி), "ஈழத்து உணவும் காலகத்து ஆக்கமும்" என்று வருகிறது. இதன் வழி கடாரத்தில் இருந்து செய்யப்பட்ட பொருள்கள் துறைமுகப்பட்டிணமான காவிரிப்பூம்பட்டிணத்தில் இருந்தது என்பது தெரிய வருகிறது. எனவே கடாரம் என்று சொல்லக்கூடிய கெடாவிற்கும் தமிழகக் கிழக்குக்கரைக்கும் வியாபாரத் தொடர்புகள் வலுப்பெற்றிருந்தமையை உணர முடிகின்றது.
- தென்னிந்திய வணிகர்கள் கெடா மாநிலத்தின் குவாலா மெர்போக்கை நுழைவாயிலாகக் கொண்டுதான் மலாயாவின் பல இடங்களுக்குச் சென்றுள்ளனர். ஜேம்ஸ் லோ (James Low) என்பார் தமது ஆய்வின் வழி கூனோங் ஜெராய் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் கண்டெடுக்கப்பட்ட தொல்லியல் பொருள்களின் அடிப்படையில், தொடக்க காலத்தில் கூனோங் ஜெராய் மலைச்சரிவுப் பகுதிகளில் இந்துக்களின் குடியிருப்பும் கோயில்களும் இருந்திருக்க வேண்டும் என்பதற்கான ஆதாரங்களை முன் வைக்கின்றார் (1848,pp.62-66). இவர் புக்கிட் மெரியாம் என்ற இடத்தில் கண்டுபிடித்த கி.பி.4 5 ஆம் நூற்றாண்டின் கல்வெட்டு முக்கியமானது. இக்கல்வெட்டு, கர்மவினைக் கோட்பாட்டினை விளக்குவதாக உள்ளது (Chhabra, 1965, p.19). இக்கல்வெட்டு பௌத்த மதத்தினைப் போற்றித் தொடங்குவதாக உள்ளது.
- தொடக்கத்தில் (கி.பி.4 5 ஆம் நூற்றாண்டு) புத்த மதத் தாக்கம் கண்டிருந்த கெடாவில் பின்னர் சைவ மதத் தாக்கம் வலுப்பெற்றது. குவாலா மெர்போக்கிற்குக் கப்பல் வழி வந்த தமிழர்கள் அங்கிருந்து வடக்கே காணப்பெற்ற கூனோங் ஜெராயின் சிகரத்தை லிங்க வடிவமாகவே கண்டனர் என்று போல் வீத்லி கருத்துரைக்கின்றார் (1966, pp.275). வேல்ஸ் (H.G.Q.Wales) எனும் தொல்லியல் அறிஞரும் கெடாவின் பூஜாங் நதிக்கரையிலும், மெர்போக் பல்லத்தாக்கிலும், கூனோங் ஜெராய் மலை உச்சியிலும், சுங்கை பத்து பாஹாட்டிலும் சைவ மதம் குறித்த நிறைய தொல்லியல் பொருள்கள் (துர்கை, நந்தி, மகிசாசுரன், லிங்கம் பொன்ற சிற்பங்கள்) காண்டெடுக்கப்பட்டதை உறுதிபடுத்துகின்றார் (Winstedt, 1935, pp.21 & Wales, 1976, pp.70-80).
- இதனைத் தவிர்த்து அலஸ்டைர் லெம் (Alastair Lamb) எனும் ஆய்வாளர் புக்கிட் பத்து பாகாட் சண்டியில் தங்கம், வெள்ளி, வெண்கலம் ஆகிய உலோகங்களில் வெட்டப்பட்ட நிலையில் சைவத்தைக் குறிக்கும் லிங்கம், நந்தி ஆகியவற்றையும் வைணவ சமயத்தைச் சேர்ந்த ஆமை வடிவமும், தாந்திரீகத்தைக் குறிக்கும் ஒரே வடிவிலான 8 பெண் சிலைகளையும் கண்டெடுத்துள்ளார் (1960, pp.86-88).
- 2010 ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 57 தேதிகளில் குவாலாலம்பூரில் நடைபெற்ற பூஜாங் பல்லத்தாக்கின் சமீப காலத் தொல்லியல் ஆய்வு பற்றிய மாநாடு உணர்த்தும் செய்தியாவது, கி.பி முதலாம் நூற்றாண்டிலேயே தாதுப் பொருள்களைக்கொண்டு இரும்பினை உற்பத்தி செய்யும் தொழில் மையமாக 'சுங்கை பாத்து' (Sungai Batu) விளங்கியதோடு, அந்த மையத்தின் அருகில் துறைமுகமும்

ஆன்மீக நம்பிக்கையை உணர்த்தும் கட்டடங்களும் செங்கற்களால் கட்டப்பட்டிருந்தன என்பதாகும்" ஆவர்கள் குறிப்பிடுகிறார்கள் (சிங்காரவேலு, செப்டம்பர் 2010, ஜீஜீ.14 16). மேற்சொன்ன இடம் தமிழில் 'காழகம்' எனக் குறிக்கப்படும் கெடா மாநிலத்தில் உள்ளது. இந்தக் காழகத்தோடு தமிழகத்திற்குக் குறிப்பாக காவிரிப்பூம்பட்டிணத்திற்கு உள்ள வியாபாரத் தொடர்பைப் பட்டிணப்பாலையில் காணலாம். இச்சங்க இலக்கிய நூல் காழகத்தில் உற்பத்தியான பொருள்கள் காவிரிப்பூம்பட்டிணத் துறைமுகத்தில் இருந்ததைத் தெளிவாகச் சொல்கிறது (191 அடி). பெருங்கதையில் கூட கடாரத்து இரும்பு பற்றிய குறிப்பு வருகிறது (1958, p.39). 'காழ்' எனும் தமிழ்ச் சொல் இரும்பினைக் குறிப்பதாகவும் அதனால் 'காழகம்' எனும் சொல் இரும்பு கிடைக்கப்பெற்ற பூஜாங் வெளியைச் சேர்ந்த ஊரினையும் குறிக்கப் பயன்பட்டிருக்க வேண்டும் என்ற நிறைநிலைப் பேராசிரியர் முனைவர் ச.சிங்காரவேலு அவர்களின் கருத்தும் இவ்விடம் உணரத்தக்கது (மயில், தொகுதி 9, செப்டம்பர் 2010, p.15). எனவே கடாரத்திற்கும் தமிழகத்திற்கும் இடையிலான பண்பாட்டுத் தொடர்புகள் குறைந்தது கி.பி முதலாம் நூற்றாண்டு தொடக்கம் ஏற்பட்டிருக்க வேண்டும் என கொள்வது பிழையாகாது.

- தென்கிழக்காசியாவில், குறிப்பாக மலாயாவைத் தங்களின் வர்த்தகத் தளமாக இந்திய வர்த்தகர்கள் கொண்டிருந்தனர் என அறியப்படுகின்றது. மலாயாவின் மேற்குக் கரையில் தாக்குவாப்பா (Takuapa), கி.பி.9 ஆம் நூற்றாண்டு (Nilakanta Sastri, 1949, p.29) மற்றும் சுமத்திரா தீவின் லாபு துவா (Labu Tuwa-A.H.1088) ஆகிய பகுதிகளில் இந்திய வர்த்தகர்களின் ஆதிக்கம் இருந்திருப்பதாகக் கல்வெட்டுக் குறிப்புகள் காட்டுகின்றன (Wheatley, 1966, pp.196&203). தாக்குவாப்பாவில் கிடைக்கபெற்ற தமிழ்க் கல்வெட்டுக்கு அருகிலேயே விஷ்னுவின் சிலைகள் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன. இக்கல்வெட்டு, அவ்விடத்தில் நங்கூர் உடையான் என்பவரால் 'ஆவணி நாரணம்' எனும் கிணறு நிருவப்பட்டு அது 'மணிக்கிரமத்தார்', எனும் தமிழ் வர்த்தகக் கூட்டுறவு சங்கத்தாரால் பராமரிக்கப்பட்டதாகவும் குறிப்பிடுகின்றது. நீலகண்ட சாஸ்திரிகள் ஆவணி நாரணம் என்பது ஆவணி நாராயணா என்பதன் திரிபு என்றும், அது மூன்றாம் நந்திவர்மப் பல்லவனின் (கி.பி.826850) குலப்பெயர் எனவும் கூறுகின்றார் (1949, p.29). மேலும் லாபு தூவாவில் கண்டெடுக்கப்பட்ட கி.பி.11 ஆம் நூற்றாண்டுத் (கி.பி.1088) தமிழ்க் கல்வெட்டு அவ்விடம் 'திசை ஆயிரத்து ஐநூற்றுவர்' எனும் வர்த்தக் கூட்டுறவு இருந்தமையையும் உறுதிபடுத்துகின்றது (Rajantheran, 1999, pp.54-55).

இதன் வழி, தென்கிழக்காசியாவிற்குக் குறிப்பாக மலாயாவிற்கு வந்த இந்தியர்கள் அங்குள்ள நாடுகள் எதையும் ஆக்கிரமிக்கும் எண்ணம் கொண்டிருக்கவில்லை என்பது தெரிகிறது.

மலாயாவின் தொடக்க கால மன்னர்களின் ஆட்சியின் கீழ் காலம் காலமாகப் புத்த பிக்குகளும் பிராமணர்களும் அவர்களுக்குச் சேவையாற்றினர் என்பதற்குரிய ஆதாரங்கள் இருப்பதால், இவர்கள் வாயிலாகவும் இந்தியப் பண்பாட்டுக் கூறுகள் பரவின. உதாரணமாக தீபகற்ப மலாயாவின் கிழக்குக்கரையில் அமைந்திருந்த துன்சுன் அரசில் (கி.பி.3ஆம் நூற்றாண்டு / தற்போதைய கிளாந்தான் மாநிலப் பகுதி) 1000 இந்தியப் பிராமணர்கள் இருந்ததாகவும் இவர்கள் இந்துமத முறைப்படி இரவும் பகலும் புனித நீராடி, வேதங்களை ஓதித் தூய்மையான வாழ்வை மேற்கொண்டதாகவும்; இவர்களுக்கு உள்நாட்டவர்கள் தங்கள் பெண் பிள்ளைகளைத் திருமணம் செய்து கொடுத்து

அங்கேயே இருக்கும்படி செய்ததாகவும் Liang Annals எனும் சீன வரலாற்றுக் குறிப்பு காட்டுகிறது (Wheatley, 1966, pp.17, 28-29 & 286-289).

**ஆட்சியாளர் மற்றும் பிராமணர்கள் பங்களிப்பு**

மலாயாவில் அனைத்துலக வாணிபம் மேலோங்கத் தொடங்கியதால் லங்காசுக்கா (Langkasuka), கடாஹா (Kedah), துன் சுன் (Tun Sun), தீபகற்ப மலாயாவின் தம்பரலிங்க (Semenanjung Tanah Malayu Tambralinga), கிழக்கு தீமோர் தீவுகளில் கலிமந்தானின் குதேய் (Kutei), கங்கா நகாரா (Gangga Negara) ஆகியவை முக்கிய நகரங்களாக உருவெடுத்தன.. இவற்றுள் மலாக்கா பிற்காலத்தில் பெரும் புகழ் அடைந்தது.

சீன தேசக் குறிப்பின் அடிப்படையில் தொடக்க காலத்தில் இந்தியா மற்றும் சீன தேச வர்த்தகர்கள் மலாயாவில் அமைதியாகவும் சிறந்த முறையிலும் தமது வாணிபத்தை மேற்கொண்டுவந்துள்ளனர். ஆனால் கி.பி.11 ஆம் நூற்றாண்டில் மலாயாவை உள்ளடக்கிய ஶ்ரீவிஜயப் பேரரசின் மீது முதலாம் இராசேந்திர சோழனின் படையெடுபு இவ்வாணிபத்தில் சிறிது தோய்வு நிலையை உருவாக்கியது. ஆயினும் அது மிகப்பெரிய பாதிப்பாக இல்லாமல் பின்னன் இரு பேரரசுகளுக்கும் இடையில் நல்லுறவு ஏற்பட்டது. இந்த நல்லுறவின் அடையாளமாக முதலாம் இராஜராஜ சோழன், ஶ்ரீவிஜயா பேரரசுக்காக நாகப்பட்டிணத்தில் புத்தவிகாரம் ஒன்றை எழுப்பியதாகக் குறிப்பு உள்ளது.

கங்கா நகாரா (கி.பி 214) மறைந்த ஒரு இந்து மலாய் அரசாக செஜாரா மேலாயு எனும் நூல் சுட்டுகிறது. இன்றைய பேராக் மாநிலத்தின் பெருவாஸ் டிட்டிங் மஞ்சுங்கில் இருந்தது. இராசேந்திர சோழனின் படையெடுப்பால் அது வீழ்ச்சி கண்டதாகக் கூறப்படுகின்றது. இங்கு 56ஆம் நூற்றாண்டு புத்தர் சிலைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ராஜா கஞ்சில் சர்ஜூனா இந்த அரசை நுறுவியதாகக் கூறப்படுகின்றது. இதனைக் கம்போடிய அரசர்கள் நிறுவியதாகவும் கூறப்படுகின்றது (Laman Rasmi Negeri perak & Osman bin Mohammad Yatim at.all, 1994, p.153).

தொடக்க காலத் மலாயாவில், அரச கொள்கை உருவாக்கத்திற்கு இந்து மற்றும் பௌத்த சமய போதனைகளும் நம்பிக்கைகளும் அடிப்படையாக அமைந்திருந்தன (Wheatley, 1971, p.241; Heine-Geldern, 1942, pp.15-30). பண்டைய இந்திய மன்னர்கள் இறையின் அம்சமாகக் காருதப்பட்ட காரணத்தால் அவர்களிடம் மக்கள் பெருமதிப்பும், அன்பும், விசுவாசமும் கொண்டு போற்றினர். இது போன்ற ஒரு நிலையில் தங்கள் மக்களும் தங்களைப் போற்ற வேண்டும் எனும் எண்ணத்தின் அடிப்படையில் மலாயாவின் தொடக்க கால மன்னர்கள்; குறிப்பாகப் பிராமணர்களை விரும்பி வரவழைத்ததாகக் குறிப்பு உள்ளது (Wheatley, 1966, 185-186). இப்படி வரவழைக்கப்பட்டவர்கள் ‘தேவராஜா’, எனும் ஒரு சடங்கினைச் செய்து இங்குள்ள மன்னர்களை இறையம்சம் பொருந்திய மன்னர்களாகப் பிரகடனப்படுத்திய குறிப்புகள் நிறையவே கிடைக்கின்றன (Heine Geldern, 1942, pp.15-30).

இந்து சமயப் புராணங்களின் அடிப்படையில் மகாமேரு மலை புனிதமானதாகவும், அங்கிருந்தே இறைவன் அகில அண்டங்களையும் ஆள்வதாகவும் ஒரு பேரண்டக் கொள்கை (Macro Cosmos) இருக்கிறது. எனவே பிராமணர்கள் இறை நிலைக்கு அரசர்களை உயர்த்த வேண்டிப் பேரண்டக் கொள்கையின் சாயலை (Micro Cosmos) பூமியில் உருவாக்கி அதன் வழி தேவராஜச் சடங்கை நிகழ்த்தினார்கள். பேரண்டச் சாயலை உருவாக்குவதற்கு உள்ளூரில் இருக்கின்ற மலை ஒன்றையோ அல்லது அடுக்கடுக்கான கட்டடத்தையோ அல்லது அப்பட்டணத்தையே மலையைப்போல வடிவமைத்தோ வெற்றி கண்டனர் (Coedes, 1968, pp.27-28).

**தேவராஜ சடங்கின் உதாரணங்களும் ஆதாரங்களும்:**

- கி.பி.6 ஆம் நூற்றாண்டு சீனக் குறிப்பு தீபகற்ப மலாயாவின் கிழக்குக் கரையில் அமைந்திருந்த பான் பான் (றிணீஸீ

றிணீஸீ) என்னும் அரசைப்பற்றி விளக்குகிறது. இவ்விடம் மக்கள் புத்த மதத்தினராக இருந்த போதும் பிராமணரக்ளுக்கு அதிகப்படியான மதிப்பு கொடுத்ததாகத் தெரிகிறது. வடக்கு தீபகற்ப மலாயாவின் கிழக்குக் கரையில் அமைந்திருந்த தான் தான் (Tan Tan) எனும் அரசவையில் கூட Pa Tso எனும் எட்டு பிரமுகர்கள் இருந்ததாகவும் அவர்கள் அனைவரும் பிராமணர்கள் என்ற குறிப்பும் வருகிறது (Wheatley, 1966, pp.51-53 & Winstedt, 1961, pp.68-69).

- ‘தேவராஜா’ வழிபாட்டின் ஒரு சில அம்சங்களை இன்றும் தீபகற்ப மலேசியாவில் பேராக் மாநிலத்தில் மேன்மைதங்கிய பேராக் சுல்தான் அவர்களின் முடிசூட்டு விழாவில் காணலாம். எடுத்துக்காட்டாக ‘மகாமேரு’ என்னும் புனித மலையின் சின்னமாக ஐந்து சிகரங்களையுடைய ‘பஞ்ச பிரசாதா’ (Panca Persada) என்னும் ஓர் அமைப்பு அரன்மணை வளாகத்தில் நிறுவப்பட்டதோடு, அங்கு நிகழும் முடிசூட்டு விழாவின் போது ‘தேவராஜா’ மங்கள வாழ்த்து போன்ற குறிப்பு அடங்கிய ‘சூராட் சீரி’ (Surat Chiri) ஓதப்படுகின்றது. இம்மரபு செஜாரா மெலாயு எனும் மலாய் அரசர் வரலாற்று நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது, ‘பலெம்பாங்’ மலாய் அரசின் முதலாம் ‘திரிபுவன’ மன்னரின் முடிசூட்டு விழாவைச் சார்ந்த மரபேயாகும் (சிங்காரவேலு சச்சிதானந்தம், 2009, pp.1518).

### இலக்கியம் & கலைகள் (13ஆம் நூற்றாண்டுக்குப் பின்)

மலாயாவைப் பொருத்த வரையில் இந்திய இலக்கியத் தாக்கத்தை இரண்டு பெரும் பிரிவுகளில் அடக்கலாம். ஒன்று இராமாயணம் மகாபாரதம் போன்ற இதிகாசங்களின் தழுவல்களாகத் தோன்றிய இலக்கியம். ஹிக்காயாட் ஸ்ரீராமா, ஹிக்காயாட் லாங் லாங் புவானா, ஹிக்காயாட் பாண்டவா லீமா, ஹிக்காயாட் சங் போமா, ஹிக்காயாட் பாண்டவா ஜாயா, ஹிக்காயாட் மஹாராஜா ராவணா போன்றவற்றைக் குறிப்பிடலாம் (Khalid Hussain, 1964, Raghavan, 1975, Sahai, 1976, Singaravelu, 2004 - Rajantheran, 1999). அடுத்த நிலையில், இந்திய இலக்கிய மற்றும் பண்பாட்டு அடிப்படையிலான பல செய்திகளை தென்கிழக்காசிய மக்கள் தங்கள் இலக்கிய வளமைக்குப் பயன்படுத்திக் கொண்டுள்ளமையும் இவ்விடம் குறிப்பிடத்தக்கது. அவ்வகையில் புராண இதிகாசச் செய்திகளை சில இடங்களில் நேரடியாகவும், மேலும் பல இடங்களில் அவற்றின் சாராம்சத்தை மட்டும் தங்களின் தேவைக்கேற்ப பயன்படுத்திக்கொண்டுள்ளனர். இது குறித்த விரிவான விபரங்களைப் பெற கட்டுரையாளரின் ஆய்வு நூலைக் காண்க (Rajantheran, 1994). மலாய்ப்பாரம்பரிய தோல்பொம்மலாட்டம் (Wayang Siam) இராமாயண, மகாபாரதக் கதைகளை அடிப்படையாகக் கொண்டவை (Sutjipto Wijossuparto, 1968). இராமாயணமகாபாரதக் கதைகள் கூத்துக் கலைகளை, குறிப்பாக தோற்பாவைக் கூத்து, வாயாங் கூலிட் (Wayang Kulit) மற்றும் தெருக்கூத்து அடிப்படயிலான வாயாங் ஓராங் (Wayang Orang) போன்ற கலைகளை மேலும் செம்மைப்படுத்தியது. இக்கலைகள் குறித்த தகவல்கள் அதிகம் இருப்பினும் சுறுக்கம் கருதி இவ்விடம் தவிர்க்கப்பட்டுள்ளது. மேற்படி விபரம் பெற விரும்புபவர்கள் பேராசிரியர் சர்கார் அவர்களின் நூலை காணலாம் (Sarkar, 1985).

### மலேசியத் தமிழரின் தற்கால அடையாளம்

மலேசிய மக்கள் தொகையில் (32,042,458 2018) (www.worldometers.info/world-population/malaysia-population) ஏறக்குறைய 7 விழுக்காடு இந்தியர்கள் ஆவர். அவர்களுள் 85 விழுக்கடு தென்னிந்தியர்கள். எஞ்சியவர்கள் வட இந்திய வம்சாவழியினர். தென்னிந்திய வம்பாவழியினருள் 80 விழுக்காட்டினர் தமிழர். மொத்தத்தில் மலேசியத் தமிழர்களுள் 85 விழுக்காட்டினர் இந்துக்கள். மற்றவர் சீக்கியம், கிருஸ்தவம், இஸ்லாம், பகாய் போன்ற பிற மதத்தைச் சார்ந்தவர்களாக

உள்ளனர். எனவே மலேசியாவைப் பொருத்த வரையில் இந்தியர்கள் என்பது பொதுவில் தமிழர்களையும் இந்துக்களையுமே குறிப்பதாகக் கொள்ளலாம்.

இந்திய மலேயத் தொன்மைத் தொடர்புகளின் தொடர்ச்சியாகத் தற்போதைய மலேசியத் தமிழர்களைக் காண்பது பொருந்தாது. ஆயினும் மேற்சொன்ன தொடர்புகளின் எச்சமாக ஏறக்குறைய 1,000 மக்கள் தொகையைக் கொண்ட மலாக்கா செட்டிகள் என்றழைக்கப்படும் தமிழ்ச் சமூகம் ஒன்று இன்னமும் மலேசியாவில் இருக்கிறது (www.pmr.penerangan.gov.my). தற்போதைய மலேசியத் தமிழர்கள் பிரிட்டீசார் காலத்தில் தோட்டத்தொழிலாளர்களாகவும், அரசாங்க ஊழியர்களாகவும், வியாபாரிகளாகவும் 18 ஆம் நூற்றாண்டின் இறுதியிலும், 19 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் மலாயாவிற்குப் புலம்பெயர்ந்தவர்களாவர்.

மலேசியத் தமிழர்களின் மிக முக்கியமான பண்பாட்டு அடையாளமாகத் தமிழ் மொழி விளங்குகிறது. தமிழ்க்கல்விக்கு ஏறக்குறைய 200 ஆண்டு கால வரலாறு உள்ளது. இது 21/10/1816இல் தொடங்குகிறது. பினாங்கு ஃரீ ஸ்கூலில் (Penang Free School) தொடங்கப்பட்ட தமிழ் வகுப்பே இன்றளவும் தமிழ்க்கல்வியின் தொடக்கமாகக் கருதப்படுகின்றது (இராம.சுப்பையா, 1959, 25 - பரமேஸ்வரி கிருஷ்ணன், 2017, 163). மலாக்காவின் அங்லோ தமிழ்ப் பள்ளிக்கூடம் 1850 இல் தொடங்கப்பட்டது. இதைத் தொடர்ந்து தோட்டத்தொழிளாலர்களின் பிள்ளைகளின் கல்வித் தேவை கருதி பெருவாரியாகத் தமிழ்ப்பள்ளிகள் நாடு முழுவதும் அமைக்கப்பட்டன. தற்சமயம் 526 தமிழ்ப்பள்ளிகள் உள்ளன. 89,013 மாணவர்கள், 5998 ஆசிரியர்கள் இருக்கிறார்கள் (ஜானகிராமன், 2006, 278). இடைநிலை மேல்நிலைத் தமிழ்ப்பள்ளிகள் கிடையாது, ஆனால் தமிழ் ஒரு பாடமாக கற்பிக்கப்படுகிறது. பல்கலைக்கழக அளவில் மலாயாப் பல்கலைக்கழகத்தில் இந்திய ஆய்வியல் துறையிலும், மலாயாப் பல்கலைக்கழக மொழிப்புலத்திலும் தமிழ் பட்டப்படிப்பாகப் போதிக்கப்படுகிறது. சுல்தான் இட்ரீஸ் கல்வியியல் பல்கலைக்கழகத்தில் தமிழ் ஆசிரியர்களுக்கான பட்டப்படிப்பு உள்ளது. புத்ரா பல்கலைக்கழகத்திலும் தமிழ் மொழி போதிக்கப்படுகிறது.

சமய அடிப்படையில் மலேசியாவில் தீபாவளி, தைபூசம் ஆகிய இரண்டு பண்டிகைகள் அரசாங்க விடுமுறைப் பண்டிகைகளாக அங்கிகரிக்கப்பட்டுள்ளன. இது தவிற ஆலயங்கள் தோரும், இல்லங்கள் தோரும் நிறைய பண்டிகைகள் கொண்டாடப்படுகின்றன. இதனை ஒட்டியே தமிழரின் நடனம், இசை, கட்டிடக்கலை போன்ற இதர கலைகளும் வளர்க்கப்படுகின்றன. மலேசியாவில் 2000கும் மேற்பட்ட இந்து ஆலயங்கள் செயல்படுகின்றன. இது தவிற ஏறக்குறைய 1500 பதிவு செய்யப்பட்ட இந்தியர்தமிழர் சார்ந்த பல்வேறு இயக்கங்கள் மலேசியாவில் உள்ளன.

ஊடகத்துறையில் வானொலி, தொலைக்காட்சி, வார, மாத, நாள் இதழ்கள் வெளியீடு காண்கின்றன. மலேசியாவில் 1930 தொடங்கியே தமிழ் இலக்கியப் படைப்புகள் வெளியீடு கண்டு வருகின்றன. தமிழருக்கென்று ஒரு மிகப்பரிய அரசியல் கட்சியாக ம.இ.கா 1946 தொடங்கி செயல்படுகிறது. இது தவிர்த்து Indian Progressive Front (IPF), People Progressive Party (PPP), மலேசிய மக்கள் சக்தி கட்சி இப்படி ஒரு சில கட்சிகளும் இயங்குகின்றன.

பொதுவாக, மலாய்க்காரர், சீனர் ஆகிய இனங்களுக்கு அடுத்து மலேசியத் தமிழரின் பொருளாதாரம் உள்ளது. தற்போதைய நிலையில் தமிழர்களின் சொத்துரிமை ஒரு விழுக்காட்டு அளவிலேயே உள்ளது. தமிழர்களுள் பெரும்பான்மையினர் இன்னமும் உழைப்பாளர் வர்க்கமாகவே இருக்கின்றனர். ஒரு சிறு பிரிவினர் மட்டுமே வியாபாரம், தொழிற்துறை போன்றவற்றில் ஈடுபட்டுள்ளனர். இதுவே அவர்களது சொத்துடைமை குறைவாக இருப்பதற்கு முதன்மைக் காரணம் எனப்படுகிறது (ஜானகிராமன், 2006, 350).

மலேசியாவில் எந்தப் பகுதிக்குச் சென்றாலும், குறிப்பாக தீபகற்ப மலேசியாவில் தமிழ் மற்றும் வட இந்திய உணவு வகைகள் கிடைக்கும். மலேசியாவின் முக்கிய நகரங்களில் இந்திய உணவகங்கள் பலவற்றையும் காணலாம். பாரம்பரிய உடையைப் பொருத்த வரையில் பெண்கள் சேலை அணிவதைக் காணலாம். ஆண்கள் விழாக்காலங்களிலும் கோவில்களுக்குச் செல்லும் போதும் வேட்டி சட்டை அணிவதைக் காணலாம். சுடிதார் வகை ஆடை அணிவதை மலேசியத் தமிழ்ப் பெண்களுள் பெருவாரியோர் விரும்புவதாகத் தெரிகிறது.

கலைகள் அடிப்படையில் நடனம், (பரதம், நாட்டுப்புற நடனம்) இசை (கர்நாடக இசை, நாட்டுப்புற இசை), யோகம், தற்காப்பு (சிலம்பம், கலரிபயாட்), பாரம்பரிய விளையாட்டுகள் (கபடி) இப்படிப் பல்வகைக் கலைகளை மலேசியத் தமிழர்கள் போற்றி வளர்க்கின்றனர். இதற்காக பல இயக்கங்களும் செயல்படுகின்றன.

மலேசியாவில் மேடைநாடகங்கள் 1910 முதலே தொடங்கி இன்றளவும் நிலைபெற்றுள்ளது. இது தவிர்த்து மலேசியாவில் தமிழ்த் திரைப்படத் தயாரிப்பு முயற்சி 1968இல் தொடங்கியது. இன்றுவரை இத்துறை மிகச்சிறந்த வளர்ச்சியை எட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது. இதுவல்லாது மலேசிய நவீன இசைத்துறையில் மலேசியத் தமிழ்ப்பாடல்கள் பலவும் உருவாகி இத்துறையும் நல்ல வளர்ச்சியைக் கண்டு வருகிறது (Silllalee, 2015, 215).

### முடிவுரை

கிருத்துவுக்கு முன்பிருந்தே கடலோடிகளின் தொடர்பில் உருவான இந்தியமலேய (தென்கிழக்காசிய) உறவுகள் பின்னர் வணிகத்தால் வலுபெற்றது. இதற்கு ஆதாரமாக இந்திய ரோமாணியப் பேராரசுக்கு இடையில் ஏற்பட்ட வியாபாரத் தொடர்பு அமைந்தது. மலேய மக்கிளிடையே ஏற்பட்ட இவ்வுறவின் விளைவாக பண்பாட்டுப் பரிமாற்றமும் ஏற்பட்டது. அதன் விளைவாக இந்தியப் பண்பாட்டுக் கூறுகள் பெறுவாரியாகத் மலேய மக்களைப் பாதித்தன. இப்பண்பாட்டுத் தாக்கங்கள் அரசியல், ஆட்சியமைப்பு, சமயம், மொழி, இலக்கியம், சட்டம், கலைகள் போன்ற பல துறைகளிலும் ஏற்பட்டன. இதனைத் மலேய மக்களும் ஆட்சியாளர்களும் விரும்பியே ஏற்றனர் என்பதுவும் தெளிவு. இதன் வழி தொடக்ககாலத் மலேய மக்களின் பண்பாட்டு வளர்ச்சிக்கு ஒரு சிறந்த பண்பாட்டுப் பங்களிப்பை தமிழ் இந்திய நாகரீகம் செய்துள்ளது என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

## References


Alastair Lamb. (1960). *Candi Bukit Batu Pahat*. Singapore: Eastern Universities Press Ltd.

Basham, A.,L. (2002). *The Wonder That Was India*. New Delhi: Rupa & Co. Thirty-eighth impression. First bublished by Macmiian Publishers Ltd London in 1954.

Chhabra, B.,CH. (1965). *Expansion of Indo-Aryan Culture During Pallava Rule (As avidenced by Inscriptions)*. New Delhi: Munshi Ram Mohan Lal.

Coedes, G. (1968). *The Indianization States of Southeast Asia. Translated by Susan Brown Cowing*. Kuala Lumpur: University of Malaya Press.

Heine-Geldern, R. (1942). “Conception of State and Kingship in Southeast Asia”, *Far Eastern Quarterly*. (Vol.2, pp.15-30).

James Low. (1848). “An account of several inscriptions found in Province Wellesley, on the Peninsular

of Malacca", *Miscellaneous Papers Relating to Indo-China*. London: Truner & Co. Reprinted in (1848) *Journal of the Asiatic Society of Bengal*. (Vol. XVII, Bil.II).

Janakiraman. (2006). *Malaysia Inthiyargalin Ikkaddana Nilai*. Kuala Lumpur: Aswin Trading.

Kanagasabhai, V. (1956). *The Tamils eighteen hundred years ago*. Madras: The South India Saiva Siddhantha Works Publishing Society.

*Mayil Magazine*. (September 2019).

Mccrindle, J.,W. (1885). *Ancient India as described by Ptolemy.* New Delhi: Today & Tomorrow's Printers & Publishers.

Nilakanta Sastri, K.,A. (1937). *The Cholas*. Madras. 2 Vols.

Nilakanta Sastri, K.,A. (1949). "Takuapa and its Tamil Inscription", *JMBRAS*, Vol. xxii, part 1, pp.25-30.

Nilakanta Sastri. K.A. (1949). *History of Sri Vijaya.* Madras: University of Madras.

Osman bin Mohammad Yatim at.all, 1994). *Beruas: Kerajaan Melayu Kuno di Perak*. Kuala Lumpur: Persatuan Musium Malaysia.

Parameswary Krishnan. (2017). "Malayavil Thamizhargalin Kudiyetramum Vazhviyalum 1800-1900", *Thavathiru Thaninayaga Adigalar Nutrandu Aaivadangal*. (Pp.151-166). Kuala Lumpur: Universiti Malaya.

Pliny. (1960). Natural History. *Translated by H.Rackham*. London: William Heinemann Ltd.

Rajantheran, M. (1999). *Sejarah Melayu-Kesan Hubungan Kebudayaan Melayu dan India.* Kuala Lumpur: Dewan Bahasa dan Pustaka.

Sarkar, H.,B. (1985). *Cultural relations between India and Southeast Asian Countries*. Delhi: Motilal Banarsidass.

Silllalee, K. (2015). *Filem-Filem Tamil Di Malaysia: Suatu Pemerhatian Terhadap Ketaksamaan Sosial*. (Unpublished Thesis, University Malaya).

Singaravelu, S. (2004). *The Ramayana Tradition in Southeast Asia*. Kuala Lumpur: University of Malaya Press.

Singaravelu, S. (September, 2009). "Malay Mannar Mudisuddu Vizhavil Othappaddu Varum Punitha Vasagathil Thamiz Pakthi Padalgalin Selvakku", *Senthamizh Selvi*. (Vol.8, No.1, Pp.133-138).

Smith,V.,A. (1924). *Early History of India.* Oxford University Press, 4th impression.

Subramanian, N. (1966). *Sangam Polity: The Administration and Social Life of The Sangam Tamils.* Bombay: Asia Publishing House.

Suppiah, Rama. (1959). "Malaya Tamizh Kalviyin Thodakka Kala Nilai", *Tamizh Oli.* Kuala Lumpur: Universiti Malaya.

Wales, H.,G.,Q. (1976). *The Malay Peninsular in Hindu Times*. London: Bernard Qaritch Ltd.

Warmington, Eric Herbertn. 1974. *The Commerce Between the Roman Empire and India.* London: Curzon Press. 2nd revise and enlarged edition.

Wheatley, P. (1966). *The Golden Khersonese. Studies in the Historical Geography of the Malay*

*Peninsula before A.D. 1500*. Kuala Lumpur: University of Malaya Press. Reprinted 1966 by Pustaka Ilmu.

Wheatley, P. (1971). *The Pivot of the four quarters. A preliminary enquiry into the origin and character of the ancient Chinese City*. Chicago: Aldine Publishing Company.

Winstedt, R.,O. (1935). "A history of Malaya", *JMBRAS*, Vol. XIII, No. I, pp.19-25.

Winstedt, R.,O. (1961). *The Malays: A Cultural History.* London: Routledge & Kegan Paul).

www.worldometers.info/world-population/malaysia-population

www.pmr.penerangan.gov.my